# அசோகவனம்

இந்துமதி

பூஞ்சோலைப் பதிப்பகம்
58, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-600005

அசோகவனம் (குறுநாவல்கள்)
முதற் பதிப்பு : நவம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 1994
விலை : ரூ. 25-00

ASOKAVANAM
tamil social novel
by INDUMATHI
(C) Indumathi
184 pages
10 pt. letters
18 × 12.5 cms
10.5 Kg. white printing
box board binding
wrapper design : MANIAM SELVAN
POONCHOLAI PATHIPPAGAM
58, T. P. Koil Street
Triplicane, Madras-5
Price: Rs. 25-00

18641
3479156

அச்சிட்டோர் :
சின்ன நிலா அச்சகம்
மயிலாப்பூர்
சென்னை-600 004

# முன்னுரை

'அசோக வன'த்தில் பெண்ணின் நல்ல வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு செய்து கொடுக்கப் படுகிற கல்யாணம் என்பது பெற்றோர்களின் பொறுப்பற்றதனத்தினாலும், தீர விசாரிக்காத தவற்றினாலும் எவ்வாறு சீர் கெட்டுப் போகிறது என்பதுதான் நான் சொல்ல வந்த விஷயம்.

'கனகாம்பரப் பூக்கள்' என்ற இரண்டாவது நாவலும் பெண்ணை அதிலும் வலிப்பு நோய்க்கு ஆளாகி அடிக்கடிக் கீழே விழுந்து மணிக் கணக்கில் நினைவற்றுக் கிடக்கும் பெண்ணை கல்யாணமோ, தாம்பத்திய உறவோ கூடாது என்கிற டாக்டரின் எச்சரிக்கையை மீறி, தங்களின் பாரத்தையும், பொறுப்பையும், கழித்துக் கொள்ள உண்மையை மறைத்து மணமுடித்துக் கொடுத்து விடும் மனசாட்சியை அடகுவைத்த பெற்றோர்களின் பாதகத்தைச் சொல்வது.

இவை இரண்டிலும் வெளிப்படுபவை நம் தேசத்தின் சாதாரண வர்க்கத்து, பெற்றோரைச் சார்ந்து நிற்கிற தைரியமற்ற பெண்களின் நிலை. பொருளாதாரத்தில் மேம்பாடடைந்த பெண்களுக்கு அனேகமாக இக்கதி ஏற்படுவதில்லை. பொருளாதார சுதந்திரம் நிறைய விஷயங்களில் அடிமைக் கதவுகளைத் திறந்து விடுதலையை ஏற்படுத்துகிறது. பொருளாதாரத்தினால் நெருக்கப்பட்டு, பெற்றோர்களாலும் ஒடுக்கப்பட்டு, சமூகத்து நான்கு பேரின் எட்டுக் கண்களுக்கும் நான்கு வாய்களுக்கும் பயப்படும் அவல நிலையில் திருமணம் என்கிற சிறைக் கூடத்திலும் மாட்டிக் கொண்டு தவிக்கிற இன்றைய பெண்களின் கதியை வெளிப்படுத்துகிற நோக்கத்தில் எழுதப்பட்டவை. வயது வந்த பெண் பாரமாகக் கருதப்படுகிற காரணத்தினால் 'ஏதோ கல்யாணம் என்று ஒன்று நடந்தால் போதும்' என்கிற மனப்பான்மையில் பெண்ணைக் கைகழுவிவிட நினைக்கிற பெற்றோரின் எண்ணத்தில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்கிற ஆதங்கத்திலும் எழுந்தவையே அசோகவனமும், அவற்றோடு பூத்திருக்கும் கனகாம்பரப் பூக்களும்.

இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லப் பட்டிருப்பதே 'திசை தேடும்...' நாவல் ஜோதி என்கிற அந்தப் பெண் பெற்றோரின் இந்த வற்புறுத்தல்களுக்குப் பணிபவள் இல்லை. தன் தகுதிக்கும், எண்ணத்திற்கும், கற்பனைக்கும், ஏற்ற ஒருவனைக் கணவனாக அடைகிற முயற்சியின் தேடலில் கல்யாணம் என்பது தள்ளித் தள்ளிப் போடப்பட்டு கடைசியில் உடன் பிறந்தவர்களோ, பெற்றோரோ இவளது கல்யாணத்தைப் பற்றிப் படும் கவலையைக் கைவிட்ட நிலைமையில் இவள் விழித்துக் கொள்கிறாள். கல்யாண விதிக்கான திசையைத் தேடத் தொடங்குகிறாள்.........

மறுக்கிற காரணத்தினாலேயே இந்த ஜோதி மறுதளிக்கப்படுகிறாள். தன் மனத்திற்கு ஏற்ற விதத்தில் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற நினைப்பே இங்கு குற்றமாக்கப்படுகிறது. அதுவே அடியாக விழுந்து எழ முடியாமல் செய்து விடுகிறது.

கல்யாணம் என்பதே நடுத்தரவர்க்கத்துப் பெண்களின் அவலமாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டிப் படம் பிடித்து வாசகர்களின் முன் வைக்கிற ஒரே நோக்கம் தவிர இம்மூன்று நாவல்களின் ஜனனத்திற்கு வேறு காரணமில்லை. இக்காரணம் நியாயமான உத்வேகக் காரியங்களைச் செய்யத் தூண்டுமானால் எழுத்தினால் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் ஏற்படும்.

சென்னை—14
18-11-85

அன்புடன்
இந்துமதி

---

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அசோகவனம் | 5 |
| 2. | கனகாம்பரப் பூக்கள் | 85 |
| 3. | திசை தேடும்... | 148 |


□

18641
347915

# அசோகவனம்

---

## 1. காணாமல் போன கன்னுக்குட்டி!

கன்றுக் குட்டி தும்பை அறுந்துக் கொண்டு ஓடிற்று. குடிசையின் பின் பக்கம் வரட்டி தட்டிக் கொண்டிருந்த யசோதம்மா மணிச் சத்தம் கேட்டு குரல் கொடுத்தாள்.

''லட்சுமி...ஏ லட்சுமி...கன்னுக்குட்டி அறுத்துக்கிட்டு ஓடுது போல இருக்கு. ஊட்டிடப் போவுதுடி. அப்புறம் சாயந்திரம் வாடிக்கைகாரங்களுக்குப் பால் ஊத்த முடியாது. ஓடுடி...''

அடுப்பில் சோறுபொங்கி காரக் குழம்பிற்கு வெண்டைக் காயும், வெங்காயமும் அரிந்து கொண்டிருந்த அந்தப் பதினெட்டு வயது லட்சுமிகரம் கால் கொலுசு சப்திக்க எழுந்து வந்து வெளியில் எட்டிப் பார்த்துக் கேட்டது.

''என்னம்மா...?''

''நான் பாட்டுக்குக் கத்தறேன், நீ என்னடான்னா நிதானமா வந்து என்னம்மான்னு எட்டிப் பார்ககறே...? கன்னுக்குட்டி தும்பை அறுத்துக்கிட்டு மேயப் போன பசு மாட்டைத் தேடி ஓடிச்சுதுடி...ஊட்டிடுச்சானால் சாயந்திரம் முதலியாரம்மாவுக்குப் பால் ஊத்த முடியாது. அந்தம்மா கத்தும்...''

''போம்மா... தினமும் தான் மனுசங்க பால் குடிக்கிறாங்க. ஒரு நாள் கன்னுகுட்டிதான் குடிச்சுட்டுப் போகட்டுமே.'' அவள் அலட்சியமாகப் பதில் சொல்ல யசோதம்மாவிற்குச் ''சுள்''ளென்று கோபம் வந்தது.

இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லப் பட்டிருப்பதே 'திசை தேடும்...' நாவல் ஜோதி என்கிற அந்தப் பெண் பெற்றோரின் இந்த வற்புறுத்தல்களுக்குப் பணிபவள் இல்லை. தன் தகுதிக்கும், எண்ணத்திற்கும், கற்பனைக்கும், ஏற்ற ஒருவனைக் கணவனாக அடைகிற முயற்சியின் தேடலில் கல்யாணம் என்பது தள்ளித் தள்ளிப் போடப்பட்டு கடைசியில் உடன் பிறந்தவர்களோ, பெற்றோரோ இவளது கல்யாணத்தைப் பற்றிப் படும் கவலையைக் கைவிட்ட நிலைமையில் இவள் விழித்துக் கொள்கிறாள். கல்யாண விதிக்கான திசையைத் தேடத் தொடங்குகிறாள்.........

மறுக்கிற காரணத்தினாலேயே இந்த ஜோதி மறுதளிக்கப்படுகிறாள். தன் மனத்திற்கு ஏற்ற விதத்தில் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற நினைப்பே இங்கு குற்றமாக்கப்படுகிறது. அதுவே அடியாக விழுந்து எழ முடியாமல் செய்து விடுகிறது.

கல்யாணம் என்பதே நடுத்தரவர்க்கத்துப் பெண்களின் அவலமாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டிப் படம் பிடித்து வாசகர்களின் முன் வைக்கிற ஒரே நோக்கம் தவிர இம்மூன்று நாவல்களின் ஜனனத்திற்கு வேறு காரணமில்லை. இக்காரணம் நியாயமான உத்வேகக் காரியங்களைச் செய்யத் தூண்டுமானால் எழுத்தினால் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் ஏற்படும்.

சென்னை—14
18-11-85

அன்புடன்
இந்துமதி

---

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அசோகவனம் | 5 |
| 2. | கனகாம்பரப் பூக்கள் | 85 |
| 3. | திசை தேடும்... | 148 |


□

18641
347915

# அசோகவனம்

---

## 1. காணாமல் போன கன்னுக்குட்டி!

கன்றுக் குட்டி தும்பை அறுத்துக் கொண்டு ஓடிற்று. குடிசையின் பின் பக்கம் வரட்டி தட்டிக் கொண்டிருந்த யசோதம்மா மணிச் சத்தம் கேட்டு குரல் கொடுத்தாள்.

''லட்சுமி...ஏ லட்சுமி...கன்னுக்குட்டி அறுத்துக்கிட்டு ஓடுது போல இருக்கு. ஊட்டிடப் போவுதுடி. அப்புறம் சாயந்திரம் வாடிக்கைகாரங்களுக்குப் பால் ஊத்த முடியாது. ஓடுடி...''

அடுப்பில் சோறுபொங்கி காரக் குழம்பிற்கு வெண்டைக் காயும், வெங்காயமும் அரிந்து கொண்டிருந்த அந்தப் பதினெட்டு வயது லட்சுமிகரம் கால் கொலுசு சப்திக்க எழுந்து வந்து வெளில் எட்டிப் பார்த்துக் கேட்டது.

''என்னம்மா...?''

''நான் பாட்டுக்குக் கத்தறேன், நீ என்னடான்னா நிதானமா வந்து என்னம்மான்னு எட்டிப் பார்க்கறே...? கன்னுக்குட்டி தும்பை அறுத்துகிட்டு மேயப் போன பசு மாட்டைத் தேடி ஓடிச்சுதுடி...ஊட்டிடுச்சானால் சாயந்திரம் முதலியாரம்மாவுக்குப் பால் ஊத்த முடியாது. அந்தம்மா கத்தும்...''

''போம்மா... தினமும் தான் மனுசங்க பால குடிக்கிறாங்க. ஒரு நாள் கன்னுகுட்டிதான் குடிச்சுட்டுப் போகட்டுமே.'' அவள் அலட்சியமாகப் பதில் சொல்ல யசோதம்மாவிற்குச் ''சுள்''ளென்று கோபம் வந்தது.

''கன்னுக்குட்டி குடிச்சுட்டுப் போனா எனக்கொண்ணும் இல்லைடி...நாளைக்கு அடுப்புல உலை வேகணும். நாலஞ்சு வயிறு கஞ்சி குடிக்கணும். அது தவிர உங்கப்பன் வந்து சாராயக் கடைக்குப் போக காசு கேட்டு மல்லுக்கு நிற்கும். இல்லைன்னு சொன்னால் பொத்து, பொத்துன்னு போடும். இத்தனை நான் தாங்கிக்கிட உடம்புல சக்தி இருந்துச்சு. தாங்கிக் கிட்டேன். இனிமேல் சக்தியில்லடியம்மா...நம்ம வயிறு காஞ்சாலும் உங்கப்பனுக்கு தண்ணி தாகம் அடங்கிடணும், ஓடிடியம்மா... பால் இல்லேன்னா இன்னிக் காசு நிராசாப் போயிடும்மா.... போயி, கன்னுக்குட்டிய பிடிச்சாந்து கட்டுடி...என் கண்ணு இல்லே...ராசாத்தி இல்லே...''

''போம்மா நீ... அடுப்புல சோறு வேகுது...வெங்காயம் வதக்க கடாய் போட்டிருக்கேன்...''

''நெருப்பைத் தணிச்சுட்டுப்போ...நான் பார்த்துக்கறேன்.''

''ஆமா...நீ பார்த்துப்ப...சாணியில கையை வச்சுட்டிருக்கியே... கடாயை இறக்கிட்டுப் போறேன்...சோத்தை மட்டும் பதம் பார்த்து வடிச்சுடு என்ன...?''

''ராசாத்தி...ஓடிடியம்மா!''

''ஆமா...பசுமாடு எங்க மேயுதோ...இது எங்க ஓடுச்சோ...? என்னைப் பார்க்கிற போதே இன்னும் துள்ளிக்கிட்டு ஓடப்போவுது...நல்ல வேலைம்மா...கயிற்றை இழுத்து நல்லா முடி போடுறதுக்கென்ன...?''

''நல்லாத்தாண்டி முடிபோட்டேன். ஆனா கயிறு நஞ்சு போயிருச்சு. பேசிட்டு நிக்காம சீக்கிரம் ஓடுடி...''

''இதோ அடுப்பைத் தணிச்சு கடாயை இறக்கிட்டுப் போறேன்...''

இரண்டே நிமிடங்களில் குடிசையை விட்டு வெளியில் வந்தாள் லட்சுமி. வெய்யிலில் அந்த முகமும் கைகளும் மின்னின. பளபளவென்று தேய்த்து வைத்த வெண்கலக் குத்துவிளக்கு மாதிரி இருந்தாள். நல்ல உயரம். ஒடிசலாய்



வாகான உடம்பு. நிகுநிகுவென்றநிறம். தொட்டால் வழுக்கிக் கொண்டு போகிற மழமழப்பு. நேர்மையாய் கத்தியால் அளந்து பொருத்தின மாதிரி மூக்கு, பெரிய அழகான கண்கள், சின்ன வாய், கீறிப் பள்ளம் பண்ணின முகவாய், நீளமாய் முட்டியைத் தொட்ட கூந்தலைப் பின்னி நுனியில் ரிப்பன் வைத்திருந்தாள். வலது பக்கம் மூக்குத்திக்குப் பதிலாகப் பூந் துடைப்பக்குச்சி செருகியிருந்தாள். காதில் சந்தையில் வாங்கின எட்டணா கம்மல். கையில் ரப்பர் வளையல்கள்....

கலகலவென்று சத்தம் போடுகிற கண்ணாடி வளையல்கள் தான் லட்சுமிக்குப் பிடிக்கும். நீலமும் பச்சையும் சிகப்பும் காப்பு வளையல்களுமாக வாங்கிக் கை நிறைய அடுக்கிக் கொள்வதில் கொள்ளை ஆசை. வேலை செய்கிற போதெல்லாம் ''ஜிலிங் ஜிலிங்'' என்று அவை ஏற்படுத்துகிற சத்தத்தில் குளிர்ந்து போவாள். ஆனால் அம்மா கண்ணாடி வளையல்களை வாங்கித் தருவதை நிறுத்திக் கொண்டு விட்டாள்.

''டசன் மூணு ரூபாய் கொடுத்து வாங்கிப் போட்டகல் மூணு நாள் கூட வச்சுக்க மாட்டேன்ற...சாமான்கள் துலக்கறப்ப, துணி துவைக்கறப்ப பட்டுப் பட்டுனு உடைஞ்சுப் போவுது. பேசாம ரப்பர் வளையல் மாட்டிக்க, வருஷமானாலும் அப்படியே கெடக்கும்'' என்று சொல்லி கைக்கு ஆறாக பொன்னிற ரப்பர் வளையல்களைப் போட்டு விட்டாள். கிட்டத்தட்ட ஏழெட்டு மாதமாகியும் அப்படியே இருக்கின்றன. வெறும் ரப்பர் வளையல்களிலும் சாயம் போய்க் கிழித்து தைத்த சீட்டிப் பாவாடையிலும், அம்மாவின் பழைய நூல் புடவைத் தாவணியிலும் கூட அவள் அழகு பளிச்சென்று தெரிந்தது.

அப்படியே அப்பாவைக் கொண்டிருந்தாள் அவள். இத்தனை வயதிற்கும் இந்தக் குடிக்குப் பின்னரும் வரதன் நிறமாகத்தான் இருந்தான். நல்ல உயரமும், வாளிப்புமாக இருந்தான். அதே உயரத்தைத்தான் லட்சுமியும் கொண்டிருந்தாள். உயரத்திற்கும் நிறத்திற்கும் அப்பாவையும், முக

லட்சணத்திற்கு அம்மாளையும் கொண்டு பிறந்திருந்தாள். கறுப்பானாலும் யசோதம்மாளிற்கு நல்ல களையான முகம். அகல அகலமாய்க் கண்கள். சின்ன வயதில் யசோதம்மா நல்ல அழகாக இருந்திருக்க வேண்டும். இப்போது மூன்று குழந்தைகளுக்கும், இரண்டு கருச் சிதைவிற்கும் பின்னரும் நன்றாகத்தான் இருந்தாள். வரதன் மொடாக் குடியனாகிக் குடும்ப பாரம் முழுவதும் தலையில் விழ—காலையில் நான்கு மணிக்கு எழுந்தால் ராத்திரி 10 மணிக்கு படுக்கப் போகிற வரை தரிக்காமல் உழைத்து தான் ஓய்ந்து போய் விட்டாள். போதாதற்கு குடிக்க காசு கேட்டு நச்சரித்து வரதன் உதைக்கும் உதையில் இன்னமும் ஒடுங்கிப் போனாள். உடம்பு மெலிந்து அந்த பெரிய அகலமான கண்கள், கன்ன எலும்புகளுக்கு மேல் குழியில் ஒளிந்து கொண்டு எட்டிப் பார்க்கப் பரிதாபமாகத் தெரிந்தாள். சிரித்து வருடக்கணக்காகி விட்டதால் முகம் இன்னமும் இறுகி அதிகம் அனுதாபப் பட வைத்தது.

எல்லா வருத்தங்களையும் விட இமாலய வருத்தமாக லட்சுமியின் கல்யாணம் கவலை அவளை அழுத்திக் கொண்டிருந்தது. எப்படியும் ஒரு இரண்டாயிரம் ரூபாயாவது சேர்த்து, கையில் இருக்கிற நகைகளைப் போட்டு ஒப்பேற்றி கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்று அவளும் மூன்று வருடங்களாக லட்சுமி பெரியவளானதிலிருந்து பிரயத்தனப்படுகிறாள். ஆனால் முடியவில்லை.

முதல் காரணமாக யாரும் லட்சுமியைப் பெண் கேட்டு வரவில்லை. அவர்கள் சம்பிரதாயப்படி அவர்களாகவும் மாப்பிள்ளை தேடிப்போக முடியாது. ஊர் இளைஞர்களுக்கு லக்ஷ்மியின் அழகில் ஒரு கண். இருந்தாலும் வரதனின் போக்கு தயங்க வைத்தது. மனைவியையும் மகளையும் மூளியாக்கி, மூக்குத்தி கம்மல் என்று எல்லாவற்றையும் விற்று வீட்டில் ஒரு பித்தளைப் பாத்திரம் விடாமல் அடகு வைத்துக் குடித்து ஒழித்து விட்டிருந்த அவனது பழக்கம் பயமுறுத்தியது. இப்போதைய நிலைமை



யில் போய் பெண் கேட்டால் ''கன்னிகா தானமாகச் செய்து கொண்டு போங்கள்'' என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்று பயந்து பேசாமல் இருந்துவிட்டனர்.

அதையும் மீறி லட்சுமியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையை வெளிப்படுத்தின சுந்தரம், கோபால், நாகராஜ இவர்களின் வாய்களை அவரவர்களின் அம்மாக்கள் அடைத்து விட்டனர்.

''என்டா டேய், வெறும் அழகு சோறு போடுமாடா!''

''கல்யாணம் பேச சரிப்பட்டு வருவானா வரதன்...?''

''முதல்ல எந்த சாராயக் கடைக்குன்னு அவனைத் தேடிட்டுப் போறது? அப்படியே போனாலும் பேசற நிலைமையில் இருப்பானா...? இருந்தாலும் என்னசொல்லப் போறான். ''என் பொண்ணைத் தாராளமா கட்டிக்கிடுங்க, தாலி, கூறை எல்லாம் வாங்கி காதுல, மூக்குல நகை போட்டு வரவங்களுக்கெல்லாம் சாப்பாடும் போட்டு, எனக்கும் குடிக்கக் கொஞ்சம் பணம் கொடுத்திட்டு கட்டிட்டுப்போங்க''ன்னு பதில் சொல்வான். நம்ம குடும்பத்துல சம்பந்தம் பண்ணனும்னால் கொறைந்த பட்சம் நாலஞ்சு சவரன் நகையாவது போட வேணாமா...? அது கூட இல்லாமலா கட்டிட்டு வருவாங்க...? சொல்லுடா...?''

''அதில்லேம்மா... பொண்ணு பார்க்க நல்லா இருக்கு. அடக்கமான பொண்ணு. குனிஞ்ச தலை நிமிர்த்ததில்லை—''

''அது சரிடா... தூர நின்னு பார்க்க அதெல்லாம் போதும். கல்யாணம்னு வர்றப்ப போதாதுடா. பத்தல்ல நாலு ஜனங்க எதிர்ல கௌரவம் குறையாம செய்துகொடுத்தால்தான் நல்லா இருக்கும். கன்னிகாதானமா செய்திட்டு வர்றது நல்லாஇருக்காது. வெறும் லட்சணம் மட்டும் வாழ்க்கைக்கு உதவாது. நாலு பணம் காசும் சேர்த்து வரணும்... அந்த மாதிரி நல்ல பொண்ணாப் பார்த்து நாங்களே தேடித் தறோம். விடுடா...''

இப்படி அடித்துப் பேசி அந்த இளைஞர்களுக்கெல்லாம் வேறு இடங்களில் கல்யாணமும் பண்ணிவிட்டார்கள். லட்சுமியின் தோழிகளும், ஒவ்வொருவராகத் தங்களின் கணவன்மார்களுடன் பக்கத்து ஊர்களுக்கும் எதிர் ஊர்களுக்கும் குடித்தனம் நடத்தப்போய்விட்டனர்.

பெரியவளாகி ஆறேழு மாதங்களுக்கு மேல் பெண்ணை வீட்டில் வைத்துக் கொள்ளாத அந்த கிராமத்தினரின் வழக்கத்தை மீறி லட்சுமி மட்டும் மூன்று. நான்கு வருஷங்களாக வீட்டில்தான் இருந்தாள். அத்தனை அழகும் வீணாய்ப் போக அமைதியாகக் காத்திருந்தாள். அம்மா மாட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள இவள் சமையல் வேலைகளைச் செய்தாள். தம்பியையும் தங்கையையும் குளிப்பாட்டி, சாப்பாடுபோட்டு பஞ்சாயத்து போர்டு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாள். அம்மாவிற்கும் அப்பாவிற்கும் பேச்சற்றுப் போன காரணத்தினால் அப்பாவந்தால் குளிக்கத் தண்ணீர்க் காய்ச்சிக் கொடுத்து, சோறு போடுவாள். அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற யசோதம்மா கத்துவாள்:

''ஆமா...உன்னை இப்படி உட்கார்த்தி வச்சிருக்கிற அப்பனுக்கு சோறு வேற பொங்கிப் போடு...'' என்று சிடுசிடுப்பாள். அதோடு விடமாட்டாள். மாட்டைக் குளிப்பாட்டிக்கொண்டே, சாணமள்ளிக் கொட்டிக்கொண்டே, வரட்டி தட்டிக் கொண்டே புலம்புவாள். ''பாவி...பாவி...'' என்று கணவனைச் சபிப்பாள். ''கால் காசு சேர்க்கவுடாமல் கொண்டுபோயி குடிச்சிட்டு வந்துடறியே...எங்க போட்டு வச்சாலும் கண்டுபிடிச்சுடறியே...ஏதாவது பொறுப்பிருக்கா உனக்கு? வயசுக்கு வந்த பொண்ணு இருக்கேன்ற கவலை இருக்கா...? கல்யாணம் பண்ணலையேன்ற கஷ்டமிருக்கா? சாராய நினைப்பைத் தவிர வேற என்ன நினைப்பிருக்கு...? குடிகாரப் பாவி...!''

பணமில்லாத ஒரே காரணத்தினால் நடக்காமல் இருக்கும் மகளின் கல்யாணத்தை எப்படியாவது நடத்தி விடவேண்டு மென்று மூன்று வருடங்களாக அவளும்



பிரயத்தனப்படுகிறாள், முடியவில்லை. ஏதோ ஒரு செலவு வந்து அடித்துக் கொண்டு போய்விடுகிறது. அல்லது அடித்து உதைத்து வரதன் பிடுங்கிக் கொண்டு விடுகிறான். மூன்றாம் வருடம் ஒரு ஐநூறு ரூபாய் சேர்ந்திருந்தாள். இரண்டு பசு மாடுகளில் ஒன்று நோய்வாய்ப்பட்டு வைத்தியம் பார்த்ததில் அந்தப்பணம் கரைந்து மாடும் செத்துப்போய் விட்டது. போன வருடம் மழையில் வீடு இடிந்து விழுந்து மீண்டும் சுவர் எழுப்பி கூரை போடவே பணம் கடன் வாங்க வேண்டியதாயிற்று. முதலியாரம்மாதான் எழுநூறு ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்து உதவியிருக்கிறாள்.

அதனால் யசோதம்மா தற்காலிகமாக லட்சுமியின் கல்யாணக் கவலையை மறந்து முதலியாரம்மாவிடம் வாங்கின கடனை அடைப்பதில் முனைந்தாள். எந்தக் காரணத்தினாலும் அந்த அம்மாவிற்குப் பால் ஊற்றுவது நின்றுவிடக் கூடாது என்கிற பயத்தில்தான், லட்சுமியைக் கன்றுக்குட்டியைப் பிடித்துவரச்சொல்லி விரட்டி அனுப்பினாள்.

வெளியில் வந்த லட்சுமி வீட்டைச் சுற்றிக்கொண்டு, கடலை கொல்லையைத் தாண்டி, கன்றுக்குட்டிக்காக ''கௌரி'' என்று நளினமாகக் குரல் கொடுத்தபடி, துள்ளலான ஒரு சின்ன ஓட்டத்தில் மாந்தோப்பை நெருங்கின போது—

உள்ளே மாந்தோப்பு நிழலுக்கும், காற்றுக்கும் இதமாக கயிற்றுக் கட்டிலை இழுத்துப் போட்டுக் கொண்டு படுத்திருந்த அந்த இளைஞன் லட்சுமியின் மென்மையான குரலைக் கேட்டுத் திரும்பினவன் பிரமித்துப் போனான்.

இந்தப் பட்டிக்காட்டில் இப்படி ஓர் அழகா...! என்ற ஆச்சரியத்தில் அவளை அப்படியே பார்த்துக்கொண்டிருக்க லட்சுமி மெதுவாக அவனை நெருங்கினாள்....

# 2. சம்மதமா?

"ஏங்க...கழுத்துல மணி கட்டிக்கிட்டு வெள்ளையா, அழகா ஒரு கன்னுக்குட்டி இந்தப்பக்கம் ஓடி வந்துச்சுங்களா?'' லட்சுமி தன் இயல்பான வெள்ளை மனத்துடன் கேட்க, அவன்—தங்கராசு—இன்னமும் குழந்தைத்தனம் மீதமிருந்த அவளது முகத்தைப்பார்த்துச் சிரித்தான். பின்னர் வம்பிற்கு இழுக்கிற நோக்கத்தோடு கேட்டான்.

''வெள்ளையாகவா...?''

''ஆமாங்க...'' வெகுளித்தனம் மாறாமல் பதில் சொன்னாள், அவள்.

''அழகாகவா...?''

''ஆமாங்க. நல்ல அழகுங்க.''

''துள்ளித் துள்ளி ஓடி வந்ததே...அதுவா...?''

''அதேதாங்க...நீங்க பார்த்தீங்களா...?''

''ம்...பார்த்தேனே...''

''இந்தப் பக்கம் வந்துச்சுங்களா...?''

''வந்துச்சே...''

''இப்ப எங்கே போச்சுங்க?''

''எங்கேயும் போகலை...இங்கதான் இருக்கு...''

''இங்கயா...எங்க இருக்குங்க...?''

''என் எதிர்ல்தான்...''

''எதிர்லயா...?'' அவள் திரும்பித் தன் பின்னாலும், பக்கங்களிலும் பார்த்து விட்டு ஏமாந்த பாவனையில் மீண்டும் அவனை ஏறிட்டுக்கேட்டாள்.

''எங்க, காணமே...''

''காணமா...? கழுத்துல மணி கட்டிக்கிட்டுன்னு சொன்னீங்க. கருகுமணி கட்டிட்டிருக்கு. வெள்ளையா' அழகான்னு சொன்னீங்க, இதோ வெள்ளையா, அழகா நிக்கலியா...?'' அவன் அவளையே சுட்டிக் காட்டியதும் சிரித்துக் கொண்டே தலைகுனிந்தாள், அவள்.



''போங்க.... நீங்க என்னைச் சொல்றீங்க. நான் கன்னுக் குட்டிய இல்லே கேட்டேன்...''

''உங்க மருண்ட பார்வையும் துள்ளி ஓடிவந்த விதமும், எனக்கென்னவோ கன்னுக்குட்டி மாதிரித்தான் தெரிஞ்சுது...''

''போங்க...சினிமாவுல பேசற மாதிரிப் பேசறீங்க... நீங்க ஊருக்குப் புதுசா...''

''பார்த்தா அப்படித் தெரியுதா...?''

''ஆமாம்...''

''எப்படி...?''

''முதல்ல உங்க சட்டை, டிரவுசரு, ரெண்டாவது உங்க பேச்சு. மூணாவது கிராப்பு, நாலாவதா...''

''போதும், போதும். அடுக்கிக்கிட்டே போகாதீங்க. ஆமாம் உங்க ஊர்க்காரங்க கிராப்பு வெட்டிக்க மாட்டாங்களா....? பாண்டுக்கு என்ன பேரு சொன்ன... டிரவுசரு.... போட்டுக்க மாட்டாங்களா...?''

''ம்ஹூம். மாட்டாங்க. வேட்டிதான். எங்காச்சும் வெளியில போனா சலவை வேட்டி...''

''சட்டை...?''

''அதுவும் போட மாட்டாங்க. கழனி வேலைக்கு எதுக்குங்க சட்டை...? பக்கத்தூருக்கு, சந்தைக்கு, சினிமாவுக்கெல்லாம் போனாத்தான் சட்டை வேணும்...''

''அப்படியா....!'' என்று ஆச்சரியப் பட்டவனாகக் கண்களை அகல விரித்து லட்சுமியைப் பார்த்து வசீகரமாகச் சிரித்தான் தங்கராசு.

''இந்த ஊர்ல சினிமா கொட்டாய் இருக்குதா...?'' என்று கேட்டான்.

''ம்ஹூம். இல்லீங்க. பக்கத்தூருக்குத்தான் போகணும். நீங்க பட்டணத்திலேருந்து வந்திருக்கீங்களா...?''

''பார்த்தா பட்டணத்து ஆளு மாதிரியா தெரியுது...?

''என்ன நீங்க... எல்லாத்துக்கும் எதிர்க் கேள்வி கேட்கறீங்க வாத்தியாருங்களா...''

''ஏன், வாத்தியாரு மாதிரியா இருக்கேன்...?''

''போச்சுடா...திரும்பி எதிர்க் கேள்வியா...? நான் வரேங்க...'' என்று லட்சுமி திரும்பி ஒடமுயற்சிக்க குறுக்கில் கைநீட்டி வழி மறித்தான் தங்கராசு.

''இரு. போகலாம்...'' என்று அவளை ஒருமைக்கு மாற்றிக் கொண்டான். அதைக் கவனிக்காமல் மெல்லச் சிணுங்கினாள் அவள்.

''போவணுங்க, கன்னுக் குட்டியைப் பிடிச்சு இழுத்திட்டுப் போய்க் கட்டணும். இல்லாட்டி ஊட்டிருச்சானால் சாயந்திரம் முதலியார் வூட்டுக்குப் பால் ஊத்த முடியாது. அம்மா திட்டும்.''

''நீங்க பால் வியாபாரம் செய்யறீங்களா...?''

''அம்மா செய்யுது. வியாபாரம்னு பெரிசா ஒண்ணும் இல்லீங்க. ஒரே ஒரு பசுமாடுதான். அந்தப் பாலை வித்து ஜீவனம் நடக்குது...''

''உங்கப்பா இல்லையா...?''

''இருக்காரு...''

''அவரு என்ன செய்யறாரு?''

''அவரு ஏதாவது செய்தா எங்களுக்கு ஏங்க இந்தக் கஷ்டம்...? வேலைவெட்டி ஏதுவும் செய்யாம எப்பவும் குடிச்சுட்டு எங்கயாச்சும் விழுந்து கிடக்குங்க....'' அவள் படபடவென்று அந்நிய மனிதன் என்பதைக் கூடப்பாராமல் ஒரு அனுதாபத்தை எதிர்பார்த்துச் சொல்ல அவன் சற்று யோசித்துப் பின் நிதானமாகக் கேட்டான்.

''குடிப்பழக்கம் ரொம்பக் கெட்டது இல்லையா...? குடியையே அது கெடுக்காதா...?''

''கெடுத்துடுச்சுங்களே...? எங்கக் காது மூக்கு எல்லாம் மூளியாயிடுச்சுங்களே...வீட்டுல ஒரு பித்தளைப் பாத்திரம் தங்காம வித்து சாராயமாயிடுச்சுங்களே...''

''ச்சுச்சு...'' என்று சூள் கொட்டின தங்கராசு வருத்தத்தோடு அவள் முகத்தைப் பார்த்தான்.



''கேட்கவே ரொம்ப விசனமாயிருக்கு. பாவம் உங்கம்மா, அது சம்பாதிச்சா குடும்பம் ஓடுது...?''

''ஆமாங்க. கால் வயிறும், அரை வயிறுமா ரொம்புதுங்க...''

''ஐயோ பாவம். நீ ஒரே பொண்ணுதானா...''

''இல்லீங்க...ஒரு தம்பியும் தங்கச்சியும்இருக்காங்க...''

''என்ன செய்யறாங்க...''

''இஸ்கோலுக்குப் போறாங்க.''

''அவங்களையாவது நல்லா படிக்கச் சொல்லு. படிச்சால்தான் இந்தக்காலத்துல முன்னுக்கு வரமுடியும்...''

''அதுகளுக்கு அது எங்கேங்க தெரியுது. பாதி நாள் இஸ்கோலுக்குப் போகாம ஆட்டம் போடுதுங்க...''

''ச்சோ...சோ...கேட்கவே கஷ்டமாயிருக்கு. ஆமா, நீ படிச்சிருக்கியா?''

''ம்ஹூம்.''

''ஒரு கிளாஸ்கூட...?''

''இல்லீங்க...''

''அ. ஆ. இ ஈ. கூடத் தெரியாதா...?''

''தெரியாதுங்க. எழுதப் படிக்க தெரிஞ்சா ஏன் இந்தக் கஷ்டம்...''

''படிச்சிருக்கணும்மா. இந்தக் காலத்துல படிக்காத பொம்பளைங்களே இல்லையே,பொம்பளைங்க,ஆம்பிளைங்களுக்கு சமானமா எத்தினி வேலை செய்யறாங்க தெரியுமா...? டாக்டரா இருக்காங்க, இஞ்சினியரா இருக்காங்க, வக்கீலா, வாத்தியாரம்மாவா...எல்லாமாவும் இருக்காங்க. இவ்வளவு ஏன் இந்திரா காந்தி அம்மாவைத் தெரியுமா...?''

''தெரியுங்க. இப்போ கொஞ்ச நாள் முன்னால செத்துப் போயிட்டாங்களே, அவங்க தானே?''

''வெரிகுட், அவங்க செத்துப் போன விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?''

''பஞ்சாயத்துபோர்டு ரேடியோவில சொன்னாங்களே.. ஒரு வாரமா சினிமாப் பாட்டு வராம அழற வாத்திய மாகவே வாசிச்சாங்களே...''

''ஓ...அதனாலதான் தெரியுமா.. ?'' அவங்க எப்படிச் செத்துப் போனாங்க தெரியுமா...?''

''யாரோ ரெண்டு பேர் துப்பாக்கியால சுட்டுட்டாங்களாமே...''

''வெரிகுட், வெரிகுட். இத்தனை விஷயம் தெரிஞ்சு வச்சிருக்கியே...படிப்பில்லாது போனாலும் புத்திசாலியா இருப்பாய் போலிருக்குதே...ஆமா, அவங்க என்னவாக இருந்தாங்கன்றது தெரியுமா...''

''ஓ...ராணியா இருந்தாங்க.''

''ராணியா...?''

''ஆமா, இந்த ராஜ்ஜியத்தை ஆண்டாங்க இல்லே...''

''அம்மாடி! இத்தனை விஷயம் தெரியுது உனக்கு... ஆமா, உன் பேரு என்னன்னே சொல்லலியே...''

''லட்சுமி...''

''அடே, பேருக்கேத்த மாதிரி மூஞ்சி லட்சுமிகரமா அமைஞ்சதா...? இல்லே, மூஞ்சி லட்சணத்தைப் பார்த்துத் தான் பேரு வச்சாங்களான்னு தெரியலியே...?

''போ...ங்...க...'' என்று லட்சுமி மீண்டும் சிணுங்கி,

''வரட்டுங்களா...?'' என்று மனசு வராமலேயே அவன் முகத்தைப் பார்த்தாள்.

''இரு போகலாம். என்னைப்பத்தி ஒன்றும் தெரிஞ்சுக்க வாணாமா...?''

''வேணுங்க...சொல்லுங்க...?''

''என்ன சொல்லணும்...''

''நீங்க யாரு...? எங்கேயிருந்து வரீங்க. என்ன வேலை பார்க்கிறீங்க, இங்க யார் விட்டுல தங்கியிருக்கீங்க, என்ன காரியமா வந்தீங்க...?''



''அடேங்கப்பா...! நான் ஒவ்வொரு கேள்வியா நிதானமா கேட்டால் நீ ஒட்டு மொத்தமா ஒரே மூச்சல அத்தனையும் கேட்டு முடிச்சட்டியே... அதே மாதிரி ஒட்டு மொத்தமா பதில் சொல்லிடட்டுமா...? நான் ஒரு ஆணு, மதறாஸ்—இல்லே உன் பாஷைல சொல்லணுமின்னா—பட்டணத்துலேருந்து வரேன். பி. ஏ. படிச்ச பெரிய ஆபீஸரா வேலை பார்க்கறேன். இங்க தாமோதரன் விட்ல தங்கியிருக்கேன். எதுக்காக வந்திருக்கேன்னு கேட்டால் வெள்ளையா, அழகா, லட்சுமி மாதிரி இருக்கிற ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கேன்...பேரும் லட்சுமின்னே இருக் கணும்னு இப்போ நினைக்கிறேன்...''

அவளுக்குக் குபீரென்று உடம்பில் மின்சாரம் பாய்ந்து முகம் சிவந்து போயிற்று. கைகளிலும், கால்களிலும் லேசாய் நடுக்கம் ஏற்பட்டது. பயத்தினாலும், பதட்டத்தி னாலும் வியர்த்து கொட்ட மேலே என்ன பேசுவது என்கிற தடுமாற்றத்துடன்—

''நான் வரேங்க...'' என்று புறப்பட்டவளின் கையைச் சடாரென்று பற்றினான் அவன்.

''ஏன் லட்சுமி... நான் சொன்னது பிடிக்கலியா... இல்லை, என்னையே பிடிக்கலையா...?''

அவன் தன் கையைப் பற்றுவான் என்பதை எதிர் பார்க்காத லட்சுமி நடுங்கிப் போய் பேசாமல் இன்னமும் தலைகுனிய அவனும் விடாமல் குரலைத் தழைத்து கொஞ்சலாகக் கேட்டான்.

''ம்...சொல்லு லட்சுமி...நான் பேசினது பிடிக்கலியா?''

அவள் தன் கையை விடுவிக்க முயன்றபடி தலையாட்ட அவன், ''நான் ஒண்ணும் செய்ய மாட்டேன் லட்சுமி. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிடு. வாயைத் திறந்து சொல்லு கையை விட்டுடறேன் என்ன?'' என்று கேட்டான்.

அவள் பரிதாபமாக ''என்ன சொல்லணும்நீங்க?'' என்று கேட்ட போது கண் கலங்கி நீர் தளும்பியது.

''என்னை உனக்குப் பிடிக்கலியா?''

அவள் 'பிடித்திருக்கிறது' என்று தலையாட்ட ''ம்ஹூம். இப்படித் தலையாட்டினால் ஒத்துக்க மாட்டேன். வாயைத் திறந்து சொன்னால் தான் ஒத்துக்கு வேன்...'' என்றான்.

''பிடிச்சிருக்கு...'' சங்கடமாகச் சொன்னாள்.

''நிஜம்மாவே பிடிச்சிருக்கா?''

''நிஜம்மா பிடிச்சிருக்கு!...!''

''கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமா...?''

''அதெல்லாம் அப்பாரு கிட்ட கேளுங்க...''

''கேக்கறேன், உனக்குச் சம்மதமானாத்தானே அப்பாருகிட்ட கேக்க முடியும்...''

''......''

''என்ன, பதில் சொல்லு... சம்மதம் தானே...''

''ச...ம்...ம...த...ம்''

''அப்பாடி...இதுக்கா இப்படிப் பயந்து நடுங்கறே... நாளைக்கு தாமோதரனைக் கூட்டிட்டு உங்க வீட்டுக்கு வரேன், என்ன...? சிரி, பார்க்கலாம். சிரிச்சுட்டே சரி சொல்லு...''

''கையை வுடுங்க. சிரிக்கிறேன்.''

அவன் அவளது கரத்தை விடுவிக்க புன்னகையோடு ''நாளைக்கு வந்து அப்பா, அம்மா கிட்ட பேசிக்குங்க. நேரமாயிடுச்சு...இப்போ நான் வரேங்...அம்மா தேடும்...'' என்று மீண்டும் துள்ளி ஓடத் தயாரானவளை,

''லட்சுமி, ஒரு நிமிடம்...''

''சொல்லுங்க... நேரமாயிடுச்சு. அப்புறம் அம்மா தேடிக்கிட்டு வந்துடும்...''

''உங்க அப்பா பேரு என்ன...''

''வரதன்...''

''என் பேரை நீ கேக்கவே இல்லையே...?'

''சொல்லுங்க...''

''தங்கராசு...''



''உங்க பேரு மட்டும் என்னவாம், குணத்தைப் பார்த்துவச்ச மாதிரித்தான் இருக்கு...என்று சொல்லி விட்டு சிரித்துக் கொண்டே கன்றுக் குட்டியைத் தேடி ஓடினவளைப் பார்த்தபடி தீவிரமாக யோசனை செய்ய ஆரம்பித்தான் தங்கராசு...

## 3. அவசரம்!

தங்கராசு நிறைய யோசித்துத் தீர்மானம் பண்ணிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது தாமோதரன் தோளில் துண்டை உதறிப் போட்டு எங்கோ கிளம்பத் தயாராக இருந்தார். நடையில் தங்கராசுவைப் பார்த்ததும் ஒரு வினாடி தயங்கினார். பின்,

''வாங்க தம்பி...'' என்று முறுவலித்தார்.

தங்கராசுவும் பதிலுக்குப் புன்னகைத்துக் கேட்டான், ''எங்க மாமா...வெளிய கிளம்பிட்டீங்க போல இருக்கு...?''

''வெளிய போக எங்கப்பா இடம் இருக்கு...? வயக் காட்டுப் பக்கம் ஒரு நடை போயிட்டு வந்துடலாம்னு கிளம்பினேன்...''

''அப்போ போயிட்டு வாங்க, அப்புறம்பேசிக்கலாம்...''

அவனது முகமும் வார்த்தைகளும் அவரது ஆர்வத்தைக் கிளப்ப சட்டென்று துண்டைத் தரையில் விரித்து முற்றத் தின் ஓரமாக உட்கார்ந்து விட்டார்.

''சொல்லுப்பா...என்ன விஷயம்...?''

''நீங்க வயக்காட்டுக்குப் போயிட்டு வந்துடுங்களேன்... அப்புறம் சொல்றேன்...''

''உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ முக்கியமான விஷயம் மாதிரி தோணுது. அதனால இதைக் கேட்டுட்டு அப்புறம் போய்க்கறேன். இல்லாட்டி நாளைக் காலைகூட

போய்க்கலாம். அதுஒண்ணும் அவ்வளவுஅவசரமில்லை...'' என்றவர் உள்ளே திரும்பி ''சிவகாமி...சிவகாமி...'' என்று மனைவிக்குக் குரல் கொடுத்தார். அடுக்களைக் கதவோரமாக ஒடுங்கி நின்ற அந்த அம்மாள், ''என்னங்க...'' என்று மெலிசான குரலில் கேட்க, ''பட்டணத்துத் தம்பி வந்திருக்குது பாரு. குடிக்க ஏதாச்சும் கொண்டு வந்து கொடு...'' என்றவர் உடனே,

''நீ பாட்டுக்கு கேவுருகஞ்சி கொண்டாந்துடப்போற... தம்பி பட்டணத்து ஆளு. ஆபீஸரா இருக்குது. அதுக்கு காபி டீ ஏதாச்சும் கோபாலன் கடையிலேருந்தாவது வாங்கிட்டு வந்து தா...''

''வேணாங்க...எனக்குக் காபி,டீ எதுவும் வேணாம்...''

''அட நீ சும்மாயிரு தம்பி...'' என்றவர், ''அப்படியே எனக்கும் ஒரு கால் கிளாசு காட்டு...'' என்று சொல்லிவிட்டு தங்கராசுவை அசட்டுச் சிரிப்புடன் பார்த்தார். ''இந்த சாக்குல எனக்குக் காபி டீ ஏதாச்சும் கிடைச்சால்தான் உண்டு தம்பி...''

''ஏங்க...நீங்க... தினமும் என்கூட வாங்க—நிறைய காபி டீ வாங்கித்தரேன். இல்லாட்டி போனால் கோபாலனையே வீட்டுக்கு அனுப்பி வச்சுடச் சொல்றேன்...''

''ஐயையோ...அதெல்லாம் வாணாம். அனாவசியமா துட்டு செலவு...''

''துட்டு என்னங்க துட்டு... நாம சம்பாதிக்கிறது தானே... செலவுக்குத்தானே சம்பாதிக்கிறோம்.... வேற எதுக்குங்க....''

''தம்பி... பேசுவீங்க...கை நிறைய காசு வருது... அப்பா, அம்மா, தம்பி, தங்கைன்னு பிக்கல் பிடுங்கல் இல்லே... குடும்பம்னும் ஒண்ணுமில்லே... அதனால பேசறீங்க... ஒரு கல்யாணம் கட்டிப்பாருங்க... அப்புறம் தெரியும்...''

''அட...எத்தனை ஒற்றுமை பாருங்க...அதைப் பத்தித் தான் பேசணும்னே வந்தேன். மாமாவும் அதையே சொல்றீங்க...''



''கல்யாணமா...கட்டிக்கிற முடிவுக்கு வந்துட்டீங்களா...? ரொம்ப சந்தோசம் தம்பி...நானும் நீங்க வந்ததுலேருந்து இந்தப் பத்துநாளா சொல்லிட்டிருக்கேன்...இப்பதான் தம்பிக்குத் தோணிச்சுப் போல இருக்கு...அப்ப, பொண்ணு பார்த்துடலாமா—?''

''அதையும் பார்த்துட்டேன் மாமா...''

''அட! நெசமாவா சொல்றீங்க....அமைதியா இருந்துட்டே நிறைய வேலை செய்திட்டு வரீங்கபோல இருக்கு. பொண்ணுபார்க்கிற சிரமம் கூட எங்களுக்கு வைக்கலை... அதான் பட்டணத்துக் காரங்கன்றது...சத்தமில்லாம வேலை பார்ப்பாங்க...எங்களை மாதிரி கிராமத்து ஆளுங்களா இருந்தா இத்நேரம் ஊரைக்கூட்டி தண்டோரா போடற மாதிரி செய்திருப்போம்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமா...காத்து வருதேன்னு கயித்துக்கட்டிலைப் போட்டுட்டு மாந்தோப்புல படுத்திட்டிருந்தப்ப எதேச்சையா அந்தப் பொண்ணு கன்னுக்குட்டியத் தேடி வந்திச்சு...பார்த்தேன்...''

''நம்ம ஊரு பொண்ணா...? யாருப்பா...''

''லட்சுமின்னு பேரு சொல்லிச்சு...''

''லட்சுமியா...?'' என்று நெற்றியைச் சுருக்கினார் அவர்.

''எந்த லட்சுமி...''

''உயரமா, சிவப்பா பொண்ணு நல்லா இருக்கு மாமா...''

''உயரமா...சிவப்பா...ஓஹோ...நீ வரதன் பொண்ணை சொல்றியா?''

''அவங்க அப்பா பேரு வரதனா...?'' வேண்டுமென்றே தெரியாதவனைப் போல் கேட்டான் தங்கராசு.

''ஆமாம்பா...சுத்த குடிகாரன். ஒரு வேலைவெட்டிக்கு துப்பில்லை. சாராயக் கடையே கதின்னு கிடப்பான். பொண்டாட்டி பேரு யசோதம்மா...ஒரு பசுமாட்டை

வச்சிட்டு பால் வியாபாரம் பண்ணி புள்ளைங்களுக்குக் கஞ்சி ஊத்திட்டிருக்கு...எம்ப்பா...அந்தப் பொண்ணுதானா கிடைச்சது உனக்கு...?''

''ஏன் மாமா...?''

''ப்சு...போப்பா...எம்பையன்கூட அதைக் கட்டிக்கிடணும்னு கேட்டுப் பார்த்தான். நான்தான் ஒத்துக்கிடலை. வேற எடம் பார்த்துக் கட்டி வச்சிட்டேன்...''

''ஏன் மாமா...?''

''பின்னே...வரதன் வீட்ல பொண்ணு எடுப்பாங்களா யாராச்சும்...? பொண்ணுக்கு தாலி, கூறை எடுத்து வரவங்களுக்கு சாப்பாட்டு முதற் கொண்டு போட்டு நாமளே செலவழிச்சு கல்யாணம் கட்டிக்கிடணும். சரி, அதான் போகட்டும்னு பார்த்தாலும் இந்த வரதன் சும்மா இருக்க மாட்டாம்ப்பா...குடிக்கக் காசு கேட்டு நம்ம வீட்டுக்கே வந்து நிப்பான்.''

''உள்ளூருன்னால் வந்து நிக்க முடியும்...? என்னைத் தேடிட்டு பட்டணத்துக்கா வரமுடியும்—?''

''அது சரி...ஆனாலும் எங்க பையனுக்கே வாணாம்னை போது உனக்கு எதுக்கப்பா அந்தப் பொண்ணு...?''

''ஏன் மாமா அப்படிச் சொல்றீங்க...?''

''பின்னே என்னப்பா...பட்டணத்து ஆசாமி. நல்ல படிப்பு. ஆபீசு உத்தியோகம். பார்க்கவும் வாட்ட சாட்டமா நல்லா இருக்கே...உனக்கு பொண்ணு கொடுக்கறதுன்னால் இந்த ஊரு பணக்காரங்க நான், நீன்னு போட்டி போட்டுட்டு வரமாட்டாங்களா?''

''வருவாங்க; இல்லேன்னு சொல்லலை. ஆனால் இந்தப் பொண்ணு ரொம்ப நல்லா இருக்கு மாமா...''— அவன் யோசித்துத் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

''பொண்ணு ரொம்ப லட்சணமான பொண்ணுதான். அதுல எந்த சந்தேகமும் இல்லே...லட்சணம் மட்டு



மில்லே அடக்கமான பொண்ணு அமைதியான பொண்ணு. ஒரு பேச்சு அதிரப் பேசாது! குனிஞ்ச தலை நிமிராது! ரொம்ப நல்ல பொண்ணு...''

''யாருங்க...?'' என்று கேட்டபடி இரண்டு டம்ளர்களில் காபியைக் கொண்டு வந்து ஒன்றைத் தங்கராசுவிடம் கொடுத்து விட்டு, இன்னொன்றைக் கணவனின் எதிரில் வைத்தபடி கேட்டாள் தங்கம்மாள். தன் டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்ட தாமோதரன் ''குடி தம்பி'' என்று சொல்லி விட்டு மனைவியைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். ''...இல்லே தங்கம். தம்பி, வரதன் பொண்ணு லட்சுமியை எதேச்சையா நம்ம மாந்தோப்பிலே பார்த்ததாம். பொண்ணு லட்சணமாயிருக்குன்னு அதையே கட்டிக்கறேன்னுது...''

''அப்படியா!'' என்று முகமலர்ந்தாள் அந்த அம்மாள். பின், தொடர்ந்து தங்கராசுவைப் பார்த்துச் சொன்னாள். ''ரொம்ப சந்தோஷங்க. அந்தப் பொண்ணுக்கும் விடியுதேன்னு நினைச்சா சந்தோசமாயிருக்கு. பொண்ணு! தங்கமான பொண்ணுங்க...''

''யார்ரீ...இவ...'' என்று சிடுசிடுத்தார் தாமோதரன். ''பொண்ணு தங்கம் தான். யார் இல்லேன்னது...? ஆனால் காலணாக்காசு பெயராதே...தம்பியே எல்லாச் செலவும் பண்ணி கன்னிகாதானமா செய்திட்டுப் போக வேண்டியது தான்!...''

''அது வாஸ்தவம் தான்'' என்று ஆமோதிக்க அந்த அம்மாள் கூடவே சொன்னாள்,

''என்னங்க நீங்க...தம்பிக்கு இருக்கிற நல்ல மனசுக்கு அப்படித்தான் செய்திட்டுப் போகட்டுமே... ஒரு நல்ல பொண்ணுக்கு வாழ்க்கை கிடைக்கட்டுமே... தம்பி கைல பணமிருக்கு. ஏன் இப்படி செய்தேன்னு தட்டிக் கேட்க ஆள் இல்லே... அம்மா அப்பான்னு இருந்தா ஒருவேளை சம்மதிக்காமப் போகலாம். ஆனால் தம்பிக்குத்தான் அப்படி யாருமில்லையே...பணம் என்னங்க பணம்...

தம்பியோட நல்ல மனசுக்கும், புத்திசாலித்தனத்துக்கும் நிறைய சம்பாதிக்குங்க...''

தங்கராசு முகம் மலர அவளைப் பார்த்து புன்னகைத்தான். ''அதான் அத்தை நானும் நினைக்கிறேன். பொண்ணு லட்சணமா, பதவிசா இருக்கேன்னு ஆசைப்படறேன். பட்டணத்துப் பொண்ணுங்கன்னா இப்படி இருக்க மாட்டாங்க. இந்தப் பெண்ணைக் கட்டிக்கிட்டா எதிர்த்து பேசாது. நம்ம சொல்ற பேச்சைக் கேட்கும்...''

தங்கம்மாள் சிரித்தாள். ''பட்டணத்துக்காரங்க மட்டும் வித்தியாசமாகவா நினைக்கிறாங்க. எல்லா ஆம்பிள்ளைகளைப் போலவேதான் பொண்ணுன்னால் அடிமையா கிடக்கணும்னுதான் எதிபார்க்கிறாங்க...''

''பின்னே...என்னடி? பொண்ணுங்க பேச ஆரம்பிச்சா அந்தக் குடும்பம் எப்படி உருப்படும்...?'' என்று தாமோதரன் பெரிதாய் குரல் எழுப்ப அந்த அம்மாள் அடங்கி அவரையும் அடக்கினாள்.

''சரி...இப்போ எதுக்கு அந்தப் பிரச்சினையெல்லாம்... தம்பி உனக்கு லட்சுமிப் பொண்ணை பிடிச்சிருக்கு இல்லையா....''

''ஆமாம்'' என்று தலையாட்டினான் அவன்.

''நீயே கைக்காசை போட்டு செலவு பண்ணிக் கல்யாணம் கட்டிக்கத் தயாரா இருக்கே?''

''ஆமாங்க...''

''அப்புறம் அப்படி, இப்படின்னு ஒரு பேச்சு பேசக் கூடாது...''

''என்னங்க நீங்க...நான் அப்படியெல்லாம் பேசற ஆசாமி இல்லீங்க...பணம் காசை மதிக்கிறவன் இல்லை... அப்படி இருந்திருந்தால் பட்டணத்துலேயே ஒரு பெண்ணைப் பார்த்து கட்டிட்டிருப்பேன். என் வேலைக்கும், மதிப்பிற்கும் கிடைக்காமற்போயிருக்க மாட்டாங்க... ஆனால் நான் அதெல்லாம வேணாம், அடக்கமான நல்ல பெண்ணா வேணும்னு தானே இந்த கிராமத்தைத் தேடி, உங்களைத்



தேடி வந்திருக்கேன்... அது தெரிஞ்சும் நீங்களே இப்படிப் பேசலாமா...?''

''அது சரிப்பா...வரதன் ஒரு மொடாக் குடியனாச்சே. பொண்ணைக் கொடுத்துட்டு நாளைக்கே அந்த சாக்கை வச்சிட்டு உன்கிட்ட வந்து குடிக்கக் காசு கேட்டு ரகளை பண்ணினால்....?''

''அது எப்படி செய்வாரு...கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் இங்கே இருந்தால்தானே...? மறுநாளே பொண்ணைக் கூட்டிட்டு பட்டணத்துக்குக் கிளம்பிடமாட்டேனா...?''

''பின்னே என்னங்க....தம்பி ஆசைப்படற மாதிரியே பேசி முடிச்சுடுங்க...''

''சரி. தம்பி, நாளைக்கு என்கூட நீயும் வா. வரதன் வீட்டுக்குப்போய் பேசி நிச்சயம் பண்ணிடலாம்...''

ஒரு வினாடி மௌனித்து தங்கராசு சொன்னான். ''நிச்சயம் மட்டுமில்லீங்க. கையோட கல்யாணத்தையும் முடிச்சு அவளையும் அழைச்சிட்டு கிளம்பிடணுங்க...''

''அட...அவசரத்தைப் பாரேன்...'' என்று சிரித்தாள் தங்கம்மாள். ''அவசரம் ஒண்ணுமில்லே அத்தை. இதுக்கு மேலே லீவு இல்லை...''

''எல்லாம் புரியுதுப்பா...நாங்களும் உன் வயசுல இருந்தவங்கதான்...'' என்றவள் கணவனைப் பார்த்து, ''நாளைக்கே போய் நாள் குறிச்சு ஏற்பாடு பண்ணிட்டு வந்துடலாங்க...'' என்றாள்.

## 4. என் மனசு அங்கேதான்!

யசோதம்மாவிற்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டிற்கு வந்திருந்தவர்களைப் பார்த்து அரண்டு போனாள் அவள். சாதாரணமாக தாமோதரன் யார் வீட்டிற்கும் போகிறவர் இல்லை. அதுவும் நிச்சயம் அவள் குடிசையைத் தேடி வரு

இறவர் இல்லை. சொந்த வீடும், ஐந்து ஏக்கர் நன்செய் நிலமும், பம்பு செட்டுமாக இருப்பவர். எதற்காகத் தன் மனைவியும், கூட இன்னொரு பிள்ளையும் அழைத்துக் கொண்டு வரவேண்டும்...?

எத்தனை யோசித்தும் பிடிபடாமல் அப்படியே நின்றிருந்தவளை தாமோதரனின் குரல் கலைத்தது.

''என்ன யசோதம்மா...உள்ள கூப்பிட மாட்டியா...?''

''ஐயோ வாங்கய்யா...உங்களையெல்லாம் பார்த்ததும் ஒண்ணும் புரியலீங்க.. உள்ள வாங்க...''

அவள் எலிகடித்த பாயை எடுத்து விரிக்க அதில் உட்காரப் பிரியப்படாத தாமோதரன்,

''பரவாயில்லே....இருக்கட்டும்...'' என்றார்.

அவர் உட்காராததால் மற்றவர்களும் நின்றுகொண்டே இருந்தார்கள். தங்கராசுவின் கண்கள் லட்சுமியைத் தேடுவதைப் புரிந்து கொண்ட தங்கம்மாள் கேட்டாள்.

''எங்க, உன் மக இல்லே...''

''இருக்குதுங்க. பின்னால மாட்டுக்குத் தண்ணி காட்டுதுங்க; கூப்பிடட்டுமா...?''

''கூப்பிடு பார்க்கலாம்...''

''லட்சுமி...ஏய் லட்...'' என்று குரல் கொடுத்த யசோதம்மா ''என்னங்க விசயம்...?'' என்று பயத்துடனும், கவலையுடனும் கேட்க, ''எல்லாம் நல்ல சமாச்சாரம் தான்... உன் மக வரட்டும் சொல்றேன்...'' என்றார் தாமோதரன் கனிரென்ற குரலில். அடுத்த வினாடி கை ஈரத்தைத் தாவணித் தலைப்பில் துடைத்துக் கொண்டே ''என்னம்மா...'' என்று உள்ளே நுழைந்த லட்சுமி வந்திருந்தவர்களைப் பார்த்துக் கால் சரேலென்று அழுத்திக் கொள்ள நின்றாள். தங்கராசுவைக் கண்டதும் முகத்தில் சிவப்பு ஏறிற்று. தலை தழைந்தது. என்ன இவர்... நிஜமாகப் பெண் கேட்க வீடுதேடி வந்திருக்கிறாரா...? ஏதோ விளையாட்டுக்குச் சொல்கிறார் என்றல்லவா நினைத்தோம்...



அவள் தலைகுனிந்து தாவணித் தலைப்பை சுருட்டியபடி குரல் அதிகம் எழும்பாமல் ''என்னம்மா...?'' என்று மீண்டும் கேட்டதும் யசோதம்மா மகளை திரும்பிப் பார்த்துச் சொன்னாள்.

''அய்யாவும், அம்மாவும் வீடுதேடி வந்திருக்காங்க பாரு...கும்பிட்டுக்க...''

எல்லோருக்கும் பொதுவாக லட்சுமி வணங்கி எழுந்ததும் ஒரு வினாடி அவளைத் திருப்தியாய் பார்த்த தாமோதரன் பேச ஆரம்பித்தார்.

''இவரு பட்டணத்துலேருந்து வந்திருக்காரு. ஆபீஸரா இருக்காரு, நல்லா சம்பாதிக்கறாரு...அம்மா, அப்பா, கூடப் பொறந்தவங்கன்னு யாருமில்லை. தெரிஞ்சவங்கன்னு நாங்கதான் இருக்கோம். உம் பொண்ணு லட்சுமியை நேற்று மாந்தோப்பில் பார்த்தாராம்.

—''மனசுக்குப் பிடிச்சிருக்கு. அந்தப் பொண்ணையே கட்டிக்கறேன்னு'' சொன்னார். அதான் பொண்ணு கேட்டு வந்திருக்கோம்...''

லட்சுமி சடாரென்று உள்ளே ஓடிப்போய் சந்தோஷம் தாங்காமல் கன்றுகுட்டியின் கழுத்தைக் கட்டிக் கொள்ள—

யசோதம்மா அவர்கள் சொன்னதை நம்ப முடியாதவளாக அதிர்ந்து ''என்ன...? என்ன...?'' என்று நின்றாள்.

''என்ன அப்படி நின்னுட்ட யசோதம்மா...?''

அவள் கண்களில் குபீரென்று நீர் துளித்தது. குரல் உணர்ச்சி வசத்தால் நடுங்கிற்று...

''ஐயா நெசம்மாவா சொல்றீங்க...?''

''வீடு தேடி இத்தனை பேரா ஓடிவந்து பொய்யா சொல்லப் போறோம்...?''

''அதில்லீங்க. அய்யா எத்தினி நேரம் நின்னுட்டே பேசுவீங்க...? உட்காருங்கய்யா... பாயில உட்கார சங்கடமாயிருந்தா இதோ இந்த பெஞ்சை நகர்த்திப் போடறேன் உட்காருங்க...''

பழைய கால் ஆடிப்போன மாம்பலகை பெஞ்சை நகர்த்திப் போட்டு தூசு தட்டித் துடைத்து விட அதில் வேறு வழியின்றி உட்கார்ந்தனர்.

''என்ன சாப்புடறீங்கய்யா சோடா, கலர் ஏதாச்சும் வாங்கியாறச் சொல்லட்டுமா...?''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். சீக்கிரமா விஷயத்தை முடிச்சு எங்களை அனுப்பு. வரதன் எங்கே.... வழக்கப்படியா...?''

''உங்களுக்குத் தெரியாதா அய்யா...பட்டணத்துக் காரரு படிச்சவரு...ஆபீஸரா இருக்காருன்னு சொல்றீங்க. அவர் மரியாதைக்கு செய்ய எங்ககிட்டே என்ன இருக் குங்க...? குந்துமணி சவரன்கூட கிடையாதுங்க...''

''இதப்பாரு இதெல்லாம் தெரியாத மாதிரிப் புதுசாச் சொல்றே...எல்லா விஷயத்தையும் நாங்க தம்பிகிட்டே சொல்லியாச்சு... பணத்துக்கு ஆசைப்படற ஆசாமி இல்லை அவரு...அந்த மாதிரி ஒரு தங்கமான குணம் கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும். அவரே அத்தனை செலவையும் பண்ணி கட்டிக்கிட்டுப் போறேன்றாரு...உம் பொண்ணு லட்சணமா இருக்குதுன்னு ஆசைப்படறாரே தவிர வேற எதுக்கும் இல்லே...அவருடைய படிப்புக்கும், வேலைக்கும் ஆயிரம் பட்டணத்துப் பொண்ணுங்க கிடைக்கும். ஆனால் தம்பி அடக்கமான, அழகான இராமத்துப் பொண்ணு வேணும்னு நினைக்கிறாரு...''

''அப்படியா...?'' என்ற யசோதா சந்தோஷ மிகுதியை எப்படிக் காட்டுவது என்று தெரியாமல் அழுதே விட்டாள். பின்னர் புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்து மூக்கை உறிஞ்சியபடி பேசினாள்.

''என்ன சொல்றதுன்னே தெரியலீங்க அய்யா... இத்தனை நாள் காத்துக்கிட்டிருந்ததுக்கு லட்சுமிக்கு இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் அடிக்கும்னு நினைக்கலை...''

''அதான் அடிச்சிருக்கே...இதற்கு மேல மசமசன்னு இருக்காம வரதனை நாளைக்கே வீட்டுக்கு வந்து பார்க்கச்



சொல்லு...தம்பி சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சு அழைச் சுட்டுப் போகணும்னு இருக்கு. இதுக்குமேல லீவு இல்லியாம், டெட்டிலே ஜாயின் பண்ணணுமாம்...''

''சரிங்க... நாளைக்கே அவரை இட்டுக்கிட்டு நானே வரேங்க.''

''குடிக்காம நிதானத்துல வரச் சொல்லு...''

''ச...ரிங்க.''

''எங்க, உம் பொண்ணைக் கூப்பிடு. சொல்லிக் கறோம்...''

லட்சுமி வெளிப்பட்டு மீண்டும் தரையில் விழுந்து வணங்கி எழ—

''அப்ப வரோம்...நாளைக் காலைல வந்துடுங்க...'' என்று கிளம்பினார்கள் அவர்கள்...

அன்று மாலை. குடத்தை எடுத்துக் கொண்டு குளத்தி லிருந்து நீர் மொண்டு வரப் புறப்பட்டாள் லட்சுமி. மகளுக்குப் புத்தி சொல்லி அனுப்பினாள் யசோதம்மா.

''சீக்கிரம் வந்துடு லட்சுமி...நிதம்போல பராக்கு பார்த்துக்கிட்டு நிக்காதே. கல்யாணம் பேச ஆள்வந்திட்டுப் போயிருக்குன்றது ஞாபகமிருக்கட்டும்...''

''சரிம்மா...''

மாந்தோப்பைக் கடந்த போது பார்வை தானாக உள்ளே நுழைந்து தங்கராசுவைத்தேட, அவனும் அவளுக் காகவே காத்திருந்தவனாகக் கையசைத்து மரத்தின்பின்னா லிருந்து வெளிப்பட்டு அவளை அருகில் கூப்பிட்டான். லட்சுமி ஒரு வினாடி தயங்கினாள். பின் சுற்றி யாரும் இருக்கிறார்களா என்று கவனித்து விட்டு மாந்தோப்பிற்குள் நுழைந்தாள். நுழைகிறபோதே மனது படபடத்தது. எந்தத் தவறும் செய்யாத போதும் உள்ளுக்குள் குறு குறுப்பு ஏற்பட்டது. யாராவது பார்த்தால் தப்பாகப் பேசு வார்களே என்கிற பயம் வந்தது. நேற்று அவனுடன் பேச நேர்ந்தபோது இந்த பயம் இல்லை. உள்ளுக்குள் படபடப்பும், குறுகுறுப்பும் இல்லை, இன்று மட்டும் எப்படி

வந்தது இந்த உணர்வு...? காரணம்—நேற்று அவன் மனத்தில் தங்கராசு ஒரு சாதாரண ஆள், பட்டணத்திலிருந்து வந்திருக்கிற யாரோ ஒரு மனிதன். அவ்வளவுதானே தவிர வேறு எந்தத் தொடர்பும் இல்லை.

ஆனால் இன்று—இவன் தன்னைப் பெண் கேட்டு வந்தவன். கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன். மனதிற்குள் மிக ஆழமாகப் பதிந்து போனவன். அதனால் தான் இந்தக் கள்ளம் தோன்றுகிறது. கள்ளம் இருப்பதால் பயம் உண்டாகிறது. மற்றவர்களைப் பற்றின கவலை ஏற்படுகிறது...

அவள் அவனை நெருங்கி, எதிரில் போய் நின்று தலை குனிந்து, "என்னங்க?" என்று கேட்பதற்குள்ளாக வியர்த்துப் போனாள். கை, கால்களில் நடுக்கம் ஆரம்பித்தது. அதைப் புரிந்து கொள்ளாத அவன் அவள் முகத்தைத் தன் ஆள்காட்டி விரலால் நிமிர்த்தி கண்களுக்குள் மிக ஆழமாகப் பார்த்துக் கொண்டே கேட்டான்:

"என்ன, இப்படித் தலையைக் குனிஞ்சுட்டு நிக்கற...? என்னைப் பார்க்கப் பிடிக்கலியா?,'

"ஐயயோ இல்லிங்க."

"ம்ஹூம். நீ பொய் சொல்ற. நான் நம்ப மாட்டேன், என்னை உனக்குப் பிடிக்கத்தான் இல்லை."

"இல்லிங்க...நிஜமா அப்படி இல்லை..."

"எங்க உன் மனசைத் தொட்டுச் சொல்லு?"

அவள் சடாரென்று எதிரில் நின்றிருந்த அவன் நெஞ்சில் ஆள்காட்டி விரலால் தொட்டாள்.

"ஹேய். என்ன நீ. உன் மனசைத் தொட்டுச் சொல்லுன்னா, என் மனசைத் தொடற...?"

"என் மனசு அங்கதானே இருக்கு...?"

கவிதை மயமான அந்த வார்த்தைகள் நெஞ்சைத் தொட ஒரு வினாடி அதிர்ந்து போனான் அவன்.

"என்ன...? என்ன...? இன்னொரு தரம் சொல்லு...?"

"போங்க..." என்று வெட்கப்பட்டாள் அவள்.



வெட்கப்படும் போது மிக அழகாக இருந்தாள். கன்னங்களும், மூக்கு நுனியும் சிவக்க உதட்டைக் குவித்து முறுவலித்தபோது அது அற்புதமான ஓவியமாகத் தெரிய அவளைச் சந்திக்க நேர்ந்த அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தான் தங்கராசு. இவளை அழைத்துக்கொண்டு போய்க் காட்டினால் எல்லோரும் எப்படிப் பார்ப்பார்கள் என்பதை கற்பனை பண்ணினான். அதில் அவன் லயித்துக் கிடக்க—நேரமானதை உணர்ந்த லட்சுமி—

"அப்போ நான் வரட்டுங்களா?" என்று மெலிதான குரலில் கேட்டதும் சட்டென்று சுய உணர்வு பெற்ற தங்கராசு, "என்ன அவசரம்... இரு. போகலாம்..." என்றான்.

"ம்ஹூம், போகணுங்க. யாராச்சும் பார்த்தால் தப்பாப் பேசுவாங்க..."

"யார் பார்க்கப் போறாங்க?"

"இந்தப் பக்கமாத்தானே குளத்துக்குப் போயாகணும். தண்ணி எடுக்கப்போற பொம்பளைங்க பார்க்க மாட்டாங்களா...?"

"சரி...அப்படி யாரும் பார்க்கிறதுக்கு முன்னாடி ஒன்னே ஒன்னு கொடு..." என்று அவன் தன் கன்னத்தைக் காட்ட—

அவள் அதைத் தவிர்த்து விலகி ஓட முயல சடாரென்று அவள் கையைப் பற்றினான் அவன். அவள் அவனுக்குப் பின்னால் தூரத்தில் பார்த்து,

"ஐயோ...அம்மா...அம்மா வருது..." என்று பதட்டத்தோடு சொல்ல— பயத்தில் சட்டென்று அவன் கையை விட்டு விட்டுத் திரும்பிப் பார்த்த போது அந்த நேரத்தில் கீழே வைத்த குடத்தை எடுத்து இடுப்பில் இருத்திக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினாள் லட்சுமி.

"ஏய்... நாளைக்காலைல உங்க அப்பா, அம்மாவை அனுப்ப மறக்காதே..." என்று தங்கராசு கத்தினதும் நின்று திரும்பிக் கையாட்டிவிட்டுப் போக—

தான் நினைத்த மாதிரி பெண் அத்தனை ஒண்ணும் வெகுளி இல்லை என்கிற நினைப்பில் தீவிர யோசனையில் ஆழ்ந்தான் தங்கராசு...

## 5. மாமாவும் மருமகனும்

அன்றிரவு வரதன் வீடு திரும்பவில்லை. யசோதம்மா வாசலிலேயே காத்திருந்து பார்த்துச் சலித்துப் போய் உள்ளே வந்தாள்.

''லட்சுமி! கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்க. நான் போய் உங்கப்பன் எங்க இருக்குன்னு பார்த்து கூட்டி யாரேன். காலைல தாமோதரய்யா வீட்டுக்குப் போய் கல்யாணம் நிச்சயம் பண்ண வேணாம்...?''

''அது சரிம்மா...இப்ப எங்க போயி அப்பாவைத் தேடுவ...?''

''ஆமாண்டி ரொம்பப் பெரிய ஊரு இது...இதுல உங்கப்பனைத் தேடறதா கஷ்டம். இருக்கிற ரெண்டு சாராயக்கடையிலே எங்கயாவது விழுந்து கிடக்கும். இழுத்துக்கிட்டு வரேன். காலைல எழுப்பி தலைல தண்ணியக் கொட்டி சுத்தமா உடுத்த வச்சு ஒரு நாளாவது சாராய நாத்தம் இல்லாம இட்டுட்டுப் போகலாம். அது வரைக்கும் நீ வீட்டைப் பூட்டிக்கிட்டு ஜாக்கிரதையா இரு. என்ன?''

''சரிம்மா...''

யசோதம்மா பின்னால் தனக்குக் குடிசைக் கதவு சாத்தப்படுகிற சத்தத்தைக் கேட்டுக் கொண்டு அந்த இருட்டில் பழக்கப்பட்ட பாதையானதால் விறுவிறுவென்று நடந்தாள். அவளை அடையாளம் கண்டு கொள்ளாத தெரு நாய்கள் ஒன்று மாற்றி ஒன்று குரைக்க ''சீ சும்மாக் கிடங்க பொணங்களா... ஊர் மனுஷி தெரியாம குரைச்சுக் கிட்டு'' என்று அதட்டி நடையை எட்டிப்போட்டு முதல் சாராயக் கடைக்குப் போனதும் அதன் முதலாளி



பொன்னுரங்கம் அவளைப் பார்த்த உடனே வரதன் அங்கு வரவில்லை என்று சொல்லி விட்டார். அவள் முணு முணுத்துக் கொண்டே இன்னொரு கடைக்குத் திரும்பி நடந்தாள்.

சாராயக்கடை வரை போக வேண்டிய அவசியமற்று வழியிலேயே அவன் விழுந்து கிடந்தான். விளக்குக் கம்பத்தினடியில் கிடந்ததால் இவளால் சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது. அருகில் போய் ''பாவி... பாவி...!'' என்று திட்டிக் கொண்டே அவனைப் புரட்டி எழுப்ப முயன்றாள்.

''ஏய்...எழுந்திரய்யா....ஒரு நல்லது கெட்டது இல்லாம இப்படி செய்யறியே...இது உனக்கே நல்லாயிருக்கா...? எழுந்திரய்யா...?''

அவன் சுய நினைவின்றி ஒரு முனகலுடன் புரண்டு படுக்க யசோதம்மா ஆத்திரத்தோடு உலுக்கினாள். அவன் மெல்ல கண் விழித்துப் பார்க்க முயன்று ''யாரு...?'' என்று உளற,

''ம் யாரு...சீ... எழுந்து எங்கூட வீட்டுக்கு வா... காலைல பொண்ணு கல்யாணத்தை நிச்சயம் பண்ணப் போறாங்க....நீ இங்கே இப்படி விழுந்து கிடக்கிறதை அந்தப் பையன் பார்த்தால் கல்யாணம்கூட வேணாம்னு ஓடிப்போயிடுவான் போல இருக்கு. எழுந்திரய்யா...''

அவள் அவன் கைகளைப் பிடித்திழுத்து உட்கார்த்தி வைக்க முயல அவன் அப்படியே மீண்டும் மண் தரையில் சரிந்ததும் அவளுக்குள் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. கூடவே அழுகை நெஞ்சை அடைத்தது.

''சீ... நீ ஒரு மனுஷனா....?'' பக்கத்துப் புதரில் காரித்துப்பிவிட்டு வீடு வந்து சேர மகள் கேட்டாள்.

''ஏம்மா... அப்பா வரலை...?''

'' என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாம சும்மா படுடி...'' என்று அதட்டிவிட்டு புடவைத் தலைப்பை விரித்துப் படுத்தபடி நீண்டநேரம் யோசித்தாள்.

வரதன் இருக்கிற நிலைமையில் மகளுக்கு எதுவும் செய்யப் போவதில்லை. என்னதான் அந்தப் பட்டணத்துப் பிள்ளை நல்லவன் என்றாலும் எதுவும் வேண்டாமென்றாலும் வெறுமனே கட்டின புடவையுடன் பெண்ணை அனுப்ப இவளுக்கு மனசு வரவில்லை.

இப்போது அப்படித்தான் பேசுவான் அந்தப் பையன். படித்த பையன், பெரிய ஆபீசர். கைநிறைய சம்பாதிக்கிறான். லட்சுமியின் அழகிற்கு ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணிக் கொண்டு போகிறான். எல்லாம் வாஸ்தவம்தான். பின்னால்—கல்யாணமாகி இரண்டு மூன்று வருஷம் போய் இந்த மோகம் குறைந்து குழந்தை பெற்றதும் ஏதாவது ஒரு பேச்சில் அவனே ''நீ என்ன கொண்டு வந்தே உங்க அம்மா வீட்லேருந்து...? கட்டின புடவையோடு வந்தவதானே. அதனால சும்மா இட...'' என்று சொல்லுவான். அந்தச் சொல்லுக்கு இடம் கொடுக்காமல் ஏதாவது செய்து போடவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

அதையெல்லாம் பற்றிக் கணவனிடம் பேசி முடிவு செய்யலாம் என்றால் அவன் அப்படி விழுந்து கிடந்தது மிகவும் வேதனையைக் கொடுத்தது. எப்போதும் குடி மயக்கத்தில் இருக்கிறவனிடம் என்ன பேச முடியும்? அப்படியே பேசினாலும் பெரிதாய் எந்த உதவி கிடைத்து விடப் போகிறது? அதைவிடத் தானே முயன்று ஏதாவது செய்வதுதான் சரி.

முதலியாரம்மாவிடம் கேட்டு அரைப் பவுனில் காதுத் தோடும், அரைப் பவுன் ஜிமிக்கியும் வாங்கிப் போட்டு, தாலியும், கயிற்றில் கோர்க்க இரண்டு குண்டுகளும், சின்னதாய் ஒரே ஒரு சரிகைக்கோடுபோட்ட பட்டுப்புடவையாவது எடுத்தே ஆக வேண்டும். இவை அத்தனைக்கும் மூவாயிரம் ரூபாயாவது வேண்டும். பக்கத்தூர் மார்வாடிக் கடைக்குப் போனால் அடகு வைத்து மூழ்கிப்போகிற தோடு ஜிமிக்கி ஏதாவது கிடைக்கும். வாங்கி விடலாம். அங்கேயே பட்டுப்புடவை ஒன்றும் எடுத்து விடலாம். தாலியும்



குண்டும் புதிதாகத்தான் வாங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் பணம் வேண்டும். முதலியாரம்மா கொடுத்தால் தான் உண்டு. காலில் விழுந்து எப்படியாவது கெஞ்சிக் கேட்டு வாங்கிவிட வேண்டியதுதான். வேறு வழியில்லை. லட்சுமியை அனுப்பிவிட்டு அப்புறம் கடனை அடைப்பது பற்றி யோசிக்கலாம்...

புரண்டு புரண்டுப் படுத்து அந்த இரவைத் தூக்கமற்றுக் கழித்தாள். மறுநாள் காலையில் எழுந்து வேகமாக வேலைகளை முடித்துக் கொண்டு குளித்து சுத்தமாய் நூல் புடவை ஒன்றை உடுத்தித் தலைவாரி, பெரிதாய் குங்குமப் பொட்டு ஒன்றை வைத்துக் கொண்டு லட்சுமியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

''லட்சுமி...நா அவுக வீட்டுக்குப் போறேன். உங்கப்பன் வந்தால் வரச்சொல்லு...''

தாமோதரன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்க மீண்டும் மனசு கேட்காமல் நேற்றிரவு வரதன் விழுந்து கிடந்த இடத்தை நோக்கிப் போனாள். இன்னமும் மயக்கம் தெளியாமல் அவன் அப்படியே கிடப்பதைப் பார்த்தாள். அவனை எழுப்பலாமா வேண்டாமா என்று யோசித்து, பின்னர் வேண்டாம் என்கிற முடிவுடன் தாமோதரன் வீட்டை அடைந்தாள்.

காலையிலிருந்தே அவர்களுக்காக தாமோதரனும், அவர் மனைவியும் தங்கராசுவும் காத்துக்கொண்டிருந்தனர். அவள் படியேறி உள்ளே வந்ததும் தாமோதரன் கேட்டார்.

''எங்கே வரதன் வரலே...?''

''இல்லீங்கப்பா...'' என்று தயங்கினாள் அவள்.

''ஏன் என்ன ஆச்சு...?''

அவள் அவன் விழுந்து கிடக்கும் நிலைமையைச் சொன்னதும் தாமோதரன் பேசினார்.

''கல்யாணம் நிச்சயம் பண்றபோது அவனும் இருக்கிறதுதாம்மா நல்லது. நாளைக்கு அவனைக் கேட்காமல்

நிச்சயம் பண்ணிட்டோம்னு தகராறு பண்ணக்கூடாது பாரு...''

யசோதம்மா தலைகுனிந்து மவுனமாய் நிற்க தங்கராசு எழுந்து வந்தான்.

''அத்தை, மாமா எங்கே படுத்துக் கிடக்காருன்னு சொல்லுங்க, நான் போயி அழைச்சிட்டு வந்து சம்மதிக்க வைக்கிறேன்.''

''நீங்களா....'' என்று அவள் சந்தோஷமான அதிர்ச்சியில் கேட்கவும்,

''இனிமே நான் வேற, நீங்க வேற இல்லை அத்தை. அதனால தயங்காமல் சொல்லுங்க. நமக்குக் காரியம் முக்கியம். அது கெட்டுப் போயிடக் கூடாது பாருங்க...''

''அது சரி யசோதம்மா. தம்பி சொல்றதும் சரி.... இன்னும் கொஞ்ச நேரத்துல ஊர்க்காரங்க... எல்லோரும் வந்துடுவாங்க. அதுக்குள்ள தம்பி போய் வரதனைக் கூட்டிட்டு வந்துடட்டும், அந்த இடத்தைச் சொல்லு....''

யசோதம்மாவிடம் இடத்தைக் கேட்டுக் கொண்ட தங்கராசு வீட்டினுள் போய் தன் பெட்டியைத் திறந்து காகிதப் பையில் சுற்றின எதையோ எடுத்துக் கொண்டு கிளம்பினான். வரதன் படுத்துக் கிடந்த இடம் வந்ததும் இப்போது மயக்கம் தெளிந்து அவன் எழுந்து உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான். அவனிடம் பேச வேண்டியதை முடிவு பண்ணிக் கொண்டு, அருகில் போய் ''வணக்கம் மாமா'' என்றான்.

கூசுகிற கண்களால் அவனை நிமிர்ந்து பார்த்த வரதன் ''யாரு நீங்க...?'' என்று கேட்டான், தன் உணர்வு வரப் பெற்றவனாக.

''மாமான்னு உங்களைக் கூப்பிடறபோதே நான் யாருன்னு புரியலையா உங்களுக்கு...?'' தங்கராசு சொல்லி விட்டுப் புன்னகைக்க,

வரதன் கண்களை இடுக்கிக் கொண்டு, ''புரியலையே'' என்று தலையாட்டினான்.



''என் பேரு தங்கராசு. பட்டணத்திலேருந்து வந்திருக்கேன். உங்க மகளைக் கட்டிக்கப் போறேன்...''

''என் மகளைக் கட்டிக்கப் போறியா...? அதுக்கு என் சம்மதம் வேணாமா...? ஏதோ பட்டணத்துலேருந்து வந்திருக்கிறதா சொன்னால் சரியாய்ப்போயிடுமா...? நீ யாரு, யார் வீட்டுப்பிள்ளை, சாதி என்ன, அம்மா அப்பா யாரு, எப்படிப்பட்டவன்றதெல்லாம் விசாரிக்காமல் பொண்ணைக் கொடுக்க முடியுமா...''—வரதன் முற்றிலும் சுய உணர்வு பெற்ற பொறுப்பு மிகுந்தவனாக கடுமையாகப் பேச—

தங்கராசு முகத்தின் புன்னகை மாறாமல் சொன்னான்.

''அதெல்லாம் விசாரிக்க என்ன செய்யப் போறீங்க...? அதைவிட இந்த பாட்டில் என்ன விலைன்னு விசாரிங்க... இதுக்கு விலை சொல்லக்கூட உங்க ஊரு ஆளுங்களுக்குத் தெரியாது. ஒஸ்தி சரக்கு...நீங்க குடிக்கிற சாராயமில்லை மாமா. இது விஸ்கி... வெளி நாட்டுலேருந்து கொண்டாந்தது... இந்த மாதிரி எத்தனை புட்டி வேணும்னாலும் உங்களுக்கு என்னால தரமுடியும். இப்போ சொல்லுங்க... உங்களுக்கு இது வேணுமா வேணாமா...?''

''எங்க எங்க, புட்டியைக் காட்டு...?''— வரதன் ரொட்டித் துண்டு நாயாக விருட்டென்று எழுந்து கொள்ள, தங்கராசு காகிதப் பையிலிருந்து விஸ்கி பாட்டிலை எடுத்துக் கையில் வைத்துக் காட்டி வரதனின் தாகத்தை அதிகப்படுத்தினான்.

''எவ்வளவு ஒஸ்தி சரக்கு பாருங்க! வேணும்னால் கொஞ்சம் வாயில் ஊத்தட்டுமா....? ருசி, பார்க்க நீங்களா?''

''எங்க... என் கைல தா பார்க்கலாம்...?''

''ம்ஹூம், கைல தர மாட்டேன். தந்தால் என்ன ஆகும்னு தெரியாதா...? வாயைத் திறங்க கொஞ்சம் ஊத்தறேன், அப்புறம் பார்த்துட்டு சொல்லுங்க...''

வரதன் வாயைத் திறந்து அவன் எதிரில் உட்கார இவன் இரண்டு மிடறு ருசி காட்டி பாட்டிலை மூடி மீண்டும்

காகிதப் பையில் வைத்து கருட்டி பத்திரப்படுத்த முனி கண்ட வரதன் கெஞ்சினான்.

''தம்பி...தம்பி....அதை என்கிட்டே தந்துரு தம்பி...''

''தரேன், இந்த ஒரு பாட்டில் மட்டுமில்லை. இன்னும் மூணு பாட்டில் வச்சிருக்கேன். எல்லாத்தையும் தந்திட்டுப் போறேன். ஆனால் ஒரு கண்டிஷன்...''

''என்ன தம்பி...?''

''லட்சுமியை எனக்குக் கட்டித் தர சம்மதிக்கணும்...''

வரதன் அதைக் கேட்டு சிறிது தயங்கி யோசிக்க—தங்கராசு, ''சரி... அப்படின்னால் விஸ்கி குடிக்க நீ கொடுத்து வைக்கலை'' என்று திரும்ப முயல—

வரதன் கை நீட்டி அவனைத் தடுத்தான்.

''சரி தம்பி, லட்சுமியை நீயே கட்டிக்க...''

''ம்ஹூம். இங்க சொன்னால் போதாது. தாமோதரன் வீட்டில் ஊர் கூடியிருக்கு. உங்க சம்சாரமும் அங்கதான் இருக்கு. அங்கு வந்து ஊர் ஜனங்க எதிர்ல சொல்லணும்... இன்னும் ஒரே வாரம்—அடுத்த புதன்கிழமை முருகன் கோவில்ல கல்யாணம் முன்ன நின்னு நடத்தி வைக்கணும். என்ன சரியா?''

''சரி தம்பி...'' என்று இழுத்த வரதன் ''கல்யாணத்துக்கு என் கிட்ட காலணா காசு இல்லியே...?'' என்று முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு சொன்னான்.

''ம்ஹூம், காலணாக் காசு கூட வேணாம். எல்லாம் நானே செலவழிச்சு கட்டிக்கறேன்...''

''ஏன் தம்பி அப்படி.. நீயே செவழிச்சு எதுக்காகக் கட்டிட்டுப் போகணும்...?''

''உன் மக அழகாயிருக்கிறது தான் காரணம்...''

''அதுவா காரணம்...?'' என்று வரதன் யோசிக்க,

''இதப்பாரு, சும்மா இப்படி கேள்வி கேட்டுட்டிருந்தே, விஸ்கி பாட்டிலைத் தூக்கிட்டு நான் போறேன். அப்புறம் உன்பாடு உன்மக பாடு...எனக்குப் பொண்ணா கிடைக்காது...''



''அட! என்ன தம்பி நீ...சரி; நானே முன்ன நின்னு கல்யாணத்தையும் நடத்தித் தாரேன். அந்த புட்டியை இப்படி கொடு...''

''ம்ஹூ...இப்ப தர மாட்டேன், முதல்ல வீட்டுக்கு வந்து ஊர் ஜனங்க எதிர்ல சம்மதம்னு சொல்லு...அப்போ தான் இந்த புட்டி வரும். அப்புறம் கல்யாணத்துக்கு பின்னால தான் மீதி புட்டிங்க கிடைக்கும்...''

''சரி வா போகலாம். இப்ப கொஞ்சம் தாகத்துக்கு ஊற்று; அந்த சுகத்துல நிச்சயம் பண்ணுவோம்.''

விஸ்கியின் வாசனையும் இதமும் நெஞ்சை நிறைக்க அந்த பாட்டிலை சீக்கிரம் கைப்பற்றுகிற தவிப்புடன் தாமோதரனின் வீட்டிற்கு வந்து கல்யாணத்திற்கு சம்மதம் தெரிவித்து பத்திரிகை எழுதி, கையொப்பமிட்டு விட்டு தங்கராசுவைத் தனியாகச் சந்தித்து பாட்டிலை வாங்கிக் கொண்டதும் வரதனின் முகத்தில் சொல்ல இயலாத சந்தோஷம் படர்ந்தது.

வரதனை வெற்றி கொண்ட நிம்மதியில் தங்கராசு உள்ளே போக இவை எதையும் அறியாத யசோதம்மா முதலியாரம்மாவை சந்தித்துக் கடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

## 6. இப்போது வேண்டாம்!

ஆர்ப்பாட்டம் எதுவும் இன்றி ஊரார்கள் முன்னிலை யில் கல்யாணம் அமைதியாக நடந்தது. தாலி கட்டி முடிக் கிற வரை காத்திருந்த வரதன் மணையை விட்டு தங்கராசு எழுந்த உடனே தனியாக அழைத்துப் போய்க் கேட்டான்:

''இது வரைக்கும் ரெண்டு புட்டிதானே தந்தே...நாலு புட்டி தரதா சொன்னியே, எங்கே மீதி ரெண்டு புட்டி...?''

தன் வேலை முடிந்ததும் தங்கராசு சிடுசிடுத்தான்,

"எப்பவும் அது மேலயே இரு..." என்று கத்திவிட்டு தான் கொண்டு வந்திருந்த மற்ற இரண்டு பாட்டில்களையும் எடுத்துக் கொடுத்த பின்னர்,

"இதோடு ஆளை விடு..." என்றான்.

அதற்கு மேல் வரதனும் அவனைப் பற்றிக் கவலைப் படுபவனாக இல்லை. அந்த இரண்டு பாட்டில்களையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

அதன் பின் நலங்கு என்றார்கள், மருவு என்றார்கள். இன்னும் ஏதேதோ சொன்னார்கள். அவை எதிலும் ஈடுபாடு அற்றவனாகத் தங்கராசு ஊருக்குக் கிளம்புவதில் குறியாய் இருக்க தாமோதரன் கடிந்து கொண்டார்.

"என்னப்பா இது...? தாலி கட்டின கையோட யாராச்சும் கிளம்புவாங்களா....? ராத்திரிக்கு உங்களுக்கு என் வீட்டில தனி அறை ஏற்பாடு பண்ணியிருக்கு. அது கூட முடியாமலா கிளம்புவாங்க...?"

அதற்குப் பின்னர் அவன் ஒன்றும் பேசவில்லை. பேச தாமோதரனும் இடம் கொடுக்கவில்லை.

அன்றிரவு தனி அறையில் கட்டில், மெத்தை எதுவு மின்றி தரையில் இரண்டு பாய்கள் விரித்துத் தலையணை மட்டும் போட்டிருந்தார்கள். அதுவும் தாமோதரன் வீட்டு தலையணைகள். பாயில் தங்கராசு ஆழ்ந்த யோசனையில் ட்கார்ந்திருந்த போது அறைக்கதவு திறக்கப் பட்டு லட்சுமி கொலுசு சப்திக்க உள்ளே வந்தாள். மஞ்சள் நிற பட்டுப்புடவை. தலைநிறையக் கதம்பம். காதில் சின்ன தங்கத்தோடு. கீழே குடை ஜிமிக்கி. கழுத்தில் கைவிரல் ருமனில் காலையில் தங்கராசு கட்டின தாலிக்கயிறு. துமணப் பெண்ணின் அலங்காரமும், களையும் அவளை ன்னமும் அழகாய்க் காட்ட, அதில் எந்தவிதக் ளர்ச்சியும் அடையாமல் அவளைப் பார்த்தபடி தங்கராசு ட்கார்ந்திருக்க, அருகில் வந்த லட்சுமி பால் டம்ளரை



அவனிடம் கொடுத்து விட்டு தரையில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அதை மறுக்கிற பாவனையில் தங்கராசு பேசத் துவங்கினான்:

"இந்த மாதிரி கும்பிடெல்லாம் இனிமே எனக்கு வேணாம். இந்த கிராமத்தோடு இந்த வழக்கமெல்லாம் போகட்டும். இனி நீ பட்டணத்துப் பொண்ணா நடந்துக் கணும். என்ன...?"

அவன் குரலில் பழைய குழைவும், மென்மையும் இல்லாமலிருப்பதைக் கவனித்த லட்சுமி மெல்லத் தலை நிமிர்ந்து பார்த்தாள். எது இவனை இவ்வளவு கோபப் படுத்தி இருக்கிறது என்பது புரியாமல் விழித்தாள். 'ஒரு வேளை கல்யாணத்தில் ஏதும் தப்பு நடந்து போச்சோ...? யாரும் ஏதும் சொன்னாங்களோ...? இல்லே அப்பா, அம்மா யாராவது சரியா நடந்துக்கலியோ...?'

அவள் கவலையை முகத்தில் காட்டாமல் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே கேட்டாள்:

"ஏங்க...பட்டணத்துப் பொண்ணுங்க பிடிக்கலைன்னு பட்டிக் காட்டுக்கு வந்து கல்யாணம் கட்டிக்கிட்டு அவளை இப்போ பட்டணத்துப் பொண்ணா மாறச் சொல்றீங்களே. அது ஏங்க...?"

அந்தக்கேள்வியில் அவன் அதிக எரிச்சல் அடைந்தாலும் அதை வெளிக்காட்டாமல் இன்னும்கொஞ்சம் அழுத்தமாகச் சொன்னான்.

"இதப்பாரு லட்சுமி நான் சொல்றதுக்கெல்லாம் ஏது, என்னா என்று எதிர்க்கேள்வி கேட்டால் எனக்குப்பிடிக்காது. எது சொன்னாலும் உடனே சரின்னு தலையாட்டணும். அப்போதான் பிடிக்கும்..."

அவனது மனநிலை வித்தியாசப் பட்டிருப்பதைப் புரிந்து கொண்ட லட்சுமி, மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் உடனே "சரிங்க..." என்றாள்.

"ஊட்..." என்று சிரிப்பை வரவழைத்துக் கொண்ட அவன் "உட்காரு. ஏன் நிக்கறே...?" என்றான்.

சட்டென்று அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட லட்சுமி, அன்று மாந்தோப்பில் பேசின மாதிரி அன்பாகக் காதல் ததும்பப் பேசுவான் என்று எதிர்பார்த்தாள். தோள் மீது கை போட்டுத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்வான் என்று நினைத்தாள். தலையை மென்மையாய் வருடி, கன்னங்களை லேசாய்க் கிள்ளி, முன் வகிட்டில் முத்தமிட்டு, பின்பு...பின்பு...

ஆனால் தங்கராசு அவை எதையும் செய்யவில்லை; அவள் அருகில் உட்கார்ந்ததில் எந்தவித சிலிர்ப்பும் அடையாதவனாக அவள் முகத்தைப் பார்த்தபடி இயந்திரமாகச் சொன்னான்.

"இந்த உடையில நீ ரொம்ப அழகா இருக்கே லட்சுமி..."

அந்த வார்த்தைகளிலேயே திருப்தியும், சந்தோஷமும் அடைந்த லட்சுமி பழைய லட்சுமியாக, பத்து நாட்களுக்கு முன் முதல் முதலாகச் சந்தித்த போதிருந்த லட்சுமியாக மாறி அதே வெகுளித்தனத்துடன் கள்ளம் கபடமற்றுப் பேசத் துவங்கினாள்.

"இந்த ஜிமிக்கி, கம்மல் ரெண்டும் நல்லா இருக்குங்களா...?"

"ஓ...ரொம்ப நல்லா இருக்கு; ரம்பை, ஊர்வசி மாதிரி இருக்கு..."

"அது யாருங்க ரம்பையும், ஊர்வசியும்...?"

"எல்லாம் தேவலோகத்துல நாட்டியமாடற பொம்பளைங்க..."

"சீ! நாட்டியமாடற பொம்பளைங்க கூடவா என்னை சேர்க்கணும்...? ஏங்க, லட்சுமி, சரஸ்வதி மாதிரி இருக்குனு சொல்லக்கூடாதா...? சீதாப் பிராட்டி மாதிரி இருக்கேன்னு சொல்லியிருந்தா எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பேன்?..."



அந்தப் பதில் அவனை சட்டென்று கோபப்படுத்தியது. சரேலென்று தலையை உயர்த்தி ஏதோ கேட்க வாயெடுத்தவன் தன்னை அடக்கிக் கொண்டு ஏளனமாகச் சிரித்தபடி சொன்னான்!

"ஏன் லட்சுமி...உனக்கு ரம்பை, ஊர்வசின்னால் பிடிக்காதா...? எனக்கு ரொம்பப் பிடிக்கும். மெட்றாஸ் போனதும் லட்சுமிங்கற இந்த கர்நாடக பெயரை எடுத்திட்டு மேனகான்னு பேர் வைக்கப் போறேன்..."

அவன் விளையாட்டுக்குச் சொல்வதாக நினைத்து அவள் செல்லமாகச் சிணுங்கினாள்.

"ஐய வேணாங்க...அந்த மாதிரிப் பேரெல்லாம் எனக்குப் புடிக்காது."

"எந்த மாதிரி பேர் அதெல்லாம்...!"

"ஒரு மாதிரியானவங்க வச்சுக்கற பேரு..."

"ஒரு மாதிரியான வங்கன்னா...?"

"போங்க....அந்தப் பேச்செல்லாம் வேணாங்க...நல்லதாப் பேசலாங்க. கல்யாணமான உடனே என்ன பேச்சுங்க...ஏங்க, இந்த ஜிமிக்கி கம்மல் எல்லாம் ஏதுன்னு கேக்கலியே நீங்க...?"

"சொல்லு..."

"அம்மா வாங்கித் தந்துச்சு. இந்தப் புடவைகூட அதான் எடுத்துச்சு, பால் ஊத்தற முதலியாரம்மா கிட்ட கெஞ்சி ஆயிரம் ரூபாயும், உங்க தாமோதரய்யா கிட்ட ஆயிரம் ரூபாயும் கடனா வாங்கி மார்வாடிக்கடையில வாங்கிச்சு. பாருங்க...எப்படி அந்தக் கடனையெல்லாம் அடைக்கப் போகுதோ தெரியலீங்க..."

"கவலைப்படாதே...உங்கம்மா பட்ட கடனை நீயே அடைச்சிடலாம்..."

"நானா...? நான் எப்படிங்க அடைப்பேன், என்கிட்ட ஏது காசு...?"

"நீ சம்பாதிக்கிறதில் கொஞ்சம் ஊருக்கு அனுப்பினால் கடன் தீர்ந்திடும்..."

''நான் எங்கேங்க சம்பாதிக்கிறேன்...?''

''இனிமேல சம்பாதிக்கலாம்...''

''இனிமேலன்னா...பட்டணத்துக்குப் போயா?''

''ம்...''

''எனக்கு என்னங்க தெரியும் சம்பாதிக்க...?''

''ஒண்ணும் தெரிய வேணாம்; நான் சொல்றபடிகேட்டு நடந்தியானால் போதும்...என்ன...நடப்பியா...?''

''சரிங்க...''

''எது சொன்னாலும் செய்வியா...?''

''செய்யறேங்க...''

''இப்போதான் உன்னை எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு...'' என்று அவள் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டதும், அந்த ஸ்பரிசம் ஏற்படுத்திய மின்சார அலைகளில் கட்டுப்பட்ட லட்சுமி உணர்ச்சி வசப்பட்டவளாக மெதுவாகச் சொன்னாள்.

''பால் குடிங்க...ஆறிடப் போவுது...''

''நீ குடிச்சியா லட்சுமி...?''

''ம்ஹூம்...நீங்களே இன்னும் குடிக்கலை...அதுக்குள்ள நான் எப்படிங்க குடிப்பேன்...?''

''என்னங்க நீங்க...'' என்று செல்லமாய் கொஞ்சலாய் கெஞ்சலாய் சிணுங்கிய லட்சுமி பாதி குடித்து டம்ளரை அவனிடம் நீட்டினாள். முகம் முழுதும் சிவந்து போனவளாகத் தலையை இன்னமும் தழைத்துக் கொண்டாள்.

மீதிப் பாலை ஒரே வாயாகக் குடித்து முடித்த தங்கராசு வாயைத் துடைத்துக் கொண்டு ஒரு யோசனையுடன் அவளைப் பார்த்துச் சிறிது தயங்கிப் பின் பேச ஆரம்பித்தான்.



''லட்சுமி...நான் ஒண்ணு சொல்வேன், கேப்பியா...?''

''என்னங்க...சொல்லுங்க...''

''இன்னிக்கு எதுவும் வேணாம். என்ன...?''

''அப்படின்னா...''

''ஐயோ மக்கு...எதுக்காக நம்மை இப்போ தனி ரூமுல உட்டு சாத்தியிருக்காங்க...?''

சடாரென்று ஏற்பட்ட வெட்கத்தில் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள். உடலின் ரத்தம் முழுதும் முகத்திற்கு ஏறிக் கொண்ட மாதிரி குபீரென்று முகம் சிவந்தது. தலையைக் கவிழ்ந்து, கிசுகிசுத்த குரலில்,

''அம்மா சொல்லி அனுப்பிச்சாங்க...'' என்றாள்.

''அம்மா சொல்லி அனுப்பிச்சிச்சு இல்லே...?''

''ஆமாங்க...''

''அதெல்லாம் தான் இன்னிக்கு வேணாம்னு சொன்னேன்...''

சட்டென்று அந்த வெட்கம், ஆர்வம், எதிர்பார்ப்பு அத்தனையும் அணைந்து போனவளாகத் தலையை உயர்த்தி வெறும் பார்வையால் ''ஏன்'' என்று கேட்டாள். அவளின் பார்வையைப் புரிந்து கொண்டு தங்கராசுவே பதில் சொன்னான்.

''இங்க வேணாம் லட்சுமி. பட்டணத்துல போயி நம்ம வீட்ல வச்சுப்போம். ஒரு நல்ல அழகான பொண்ணு கிடைச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டா அங்கதான் சாந்தி கல்யாணம் செய்துக்கிறதா குல தெய்வத்துகிட்ட வேண்டிட்டிருக்கேன். முதல்ல வேண்டுதலை முடிச்சுட்டு அப்புறம் வச்சுக்கலாம். என்ன...?''

தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தலையாட்டினாள் அவள்.

''சரிங்க...''

''கோவமா என் மேலே...?''

"சேச்சே...இல்லீங்க..."

"வருத்தமா இருக்கா...?"

"ஐயோ...ஒரு வருத்தமும் இல்லீங்க..."

"அப்படின்னா பட்டணத்துக்கு போய் வச்சுக்கலாம் இல்லே..."

"சரிங்க..."

"நாளைக்கே புறப்பட்டுடலாம்..."

"நாளைக்கு வேணாங்க. நாளன்னைக்குக் கிளம்பலாமே..."

"ஏன்..."

"நாளைக்கு அம்மா விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கு நம்ம வீட்ல..."

"அப்படியா...?"

"ஆமாங்க..."

"சரி அப்படியானால் உன் விருப்பப்படி நாளன்னைக்கே கிளம்பலாம்..."

## 7. புதிய உலகம்

இரண்டு நாள் ரயில் பிரயாணம் சலித்துப் போயிற்று லட்சுமிக்கு. ஊரில் இருந்தவரையில் ரயில் பிரயாணம் என்பது ஒரு இனிய கனவாக இருந்தது. ரயிலில் ஏறி ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து வெளியில் பார்த்துக் கொண்டே வர வேண்டும் என்று நினைத்திருக்கிறாள். நீண்ட தூரம்போக ஆசைப்பட்டிருக்கிறாள். தோழிகளுடன் ரயில் விளையாட்டு கூட விளையாடியிருக்கிறாள். ரயிலைப் பார்த்தேயிராத போது பிரமிப்பாகத் தோன்றிய விஷயம் இரண்டு நாட்களுக்குள் அலுத்துப் போயிற்று. ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து வெளியில் பார்ப்பது அப்படி ஒன்றும்



சுவாரசியமான விஷயமில்லை என்று பட்டது. எத்தனை நேரம்தான் தூரத்து மலைகளையும், தந்திக் கம்பங்களையும், வேகமாக எதிர்ப்பக்கம் ஓடி மறைகிற மரங்களையும் பார்ப்பது என்கிற சலிப்பு உண்டாயிற்று. பெட்டிக்குள்ளும் யாரிடமும் அவளால் பேச முடியவில்லை. உள்ளே இருந்தவர்கள் அவளுக்குப் புரியாத ஏதோ மொழியில் பேசினார்கள். அது என்ன பாஷை என்றுகூட அவளால் அனுமானிக்க முடியவில்லை.

ஆனால் அவர்களிடமெல்லாம் அந்த பாஷையில் தங்கராச மிகச் சுலபமாக உரையாடியதைப் பார்க்க அவளுக்குப் பெருமையாக இருந்தது. அது ஆங்கில மொழி என்கிற நினைப்பில் அந்த மொழியில் இவ்வளவு சரளமாக உரையாடுகிற தன் கணவன் நிறையப் படித்தவனாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அதில் ஒரு வித சந்தோஷம் ஏற்பட்டது. தன் சிநேகிதிகள் யாருக்கும் அமையாத விதத்தில் தனக்குக் கணவன் அமைந்தது குறித்துப் பெருமையும் உண்டாயிற்று. பொன்னி, மல்லா, திலகா, காமாட்சி இவர்கள் எல்லோரும் பக்கத்து பக்கத்து ஊர்களிலேயே கல்யாணம் பண்ணிக் கொண்டவர்கள். திரும்பத் திரும்ப ஏர் உழுவதும், களை எடுப்பதும், அறுப்பு அறுப்பதும், கட்டு சுமப்பதும், போர் அடிப்பதும் தான் வேலை. பேனா பிடித்து ஒரு வரி எழுத வராது. பட்டணத்துப் பக்கம் திரும்பக்கூட முடியாது.

ஆனால் தங்கராச அப்படி இல்லை. அவர்களைப் போல் வேஷ்டி கட்டாமல் "டவுசர்" போட்டுக் கொள்கிறான். மேலே சட்டை, காலுக்குச் செருப்பு கையில் வாட்ச் கட்டுகிறான். சட்டைப் பையில் எப்போதும் பேனா செருகிக் கிடக்கிறது. மிக அலட்சியமாக எடுத்து அதில் ஏதேதோ எழுதுகிறான்.

கல்யாணத்திற்கு வந்த தன் தோழிகள் ஒருத்தி விடாமல் சொல்லிவிட்டார்கள்.

''லட்சுமி...நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிடி. இத்தனை வருசம் காத்துக்கிட்டுக் கெடந்தாலும் எத்தினி நல்ல மாப்பிள்ளை கெடச்சிருக்காரு...''

''என் லட்சுமி, பட்டணத்துக்குப் போனா எங்களையெல்லாம் மறந்துடுவே இல்லே...இந்தப் பட்டிக்காட்டுப் பக்கம் திரும்பவே மாட்டே, இல்லே...?''

''சீ!சீ...'' என்று சிரித்தாள் லட்சுமி.

''வருசம் ஒரு தரம் வருவேன். இஸ்கோலுக்கு லீவு விட்டுச்சின்னா தம்பி தங்கையை இட்டுக்கிட்டுப் போவேன்...அங்க போயி பீச்சு, சினிமா, சர்க்கசு எல்லாம் காட்டமாட்டேன்...?''

''அப்படின்னா எங்களை இட்டுக்கிட்டுப் போக மாட்டியா...?''

''ஏன் மாட்டேன், நீங்களும் வாங்க. எல்லாம் பார்க்கலாம்...''

இப்படி எல்லார் கனவிலும் விதம்விதமாக, வர்ண ஜாலங்களுடன் மிதந்த அந்தப் பட்டணம் இத்தனை தூரத்திலா இருக்கிறது...? இரண்டு நாட்களுக்கு மேலா பிரயாணப்பட வேண்டும்...? அப்படியானால் தாமோதரன் மாமா, அவருடைய மகன் எல்லாரும் பட்டணத்துக்குப் போவதாய் சொல்லிவிட்டு இரண்டு நாட்களில் திரும்பி வந்துவிடுகிறார்களே...அது எப்படி...?

அவளுக்குப் புரியவில்லை. ஒருவேளை அவர்கள் போன பட்டணம் வேறாக இருக்குமோ...? ஊரிலிருந்து கிளம்பி பஸ்ஸில் வந்து இறங்கின அந்த ஊர் தான் பட்டணமோ...? அம்மாடி! எத்தனி பஸ்சு எத்தினி காரு. எத்தினி ஜனங்க...எத்தினி கட்டிடங்க... அது பட்டணமாக இருந்தால் திரும்ப ஏன் ரயில் பிடிச்சு போயிட்டு இருக்கணும்...? ம்ஹூம்...அது பட்டணமாக இருக்காது. அது ஏதோ சின்னப் பட்டணமாக இருக்கும். சின்னப்பட்டணமே



அத்தினி பெரிசாக இருந்தால் பட்டணம்கிறது இன்னும் எப்படி இருக்குமோ...?

நினைவை சட்டென்று அடக்கி பக்கத்தில் உட்கார்ந்திருந்த தங்கராசுவைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்:

''எங்க...ரெண்டு நாளா இப்படி ரயில்லயே போறமே பட்டணம் அவ்வளவு தூரத்துலயா இருக்கு...?''

''பின்னே, உங்க கிராமத்துக் கொல்லையில இருக்குன்னா நினைச்சே?''-தங்கராசு கன்னென்று முகத்தை வைத்துக் கொண்டு எரிச்சலுடன் பதிலளித்ததைப் பார்த்துப் பயந்து போனாள் லட்சுமி. இப்படி அவன் எரிந்து விழுவது முதல் முறையாக அல்ல. ஊரிலிருந்து கிளம்பிய வினாடியிலிருந்தே இதே மாதிரி கோபமாகத்தான் இருந்தான். சிடுசிடுவென்று விழுந்தான். எது கேட்டாலும் இடக்காகவே பதில் சொன்னான். இதற்கு முன் இறங்கிய ஊரில் அவள் கேட்டாள்,

''எங்க, இங்கயா நாம் இறங்கப் போறோம்...?''

''இல்லேன்னு சொன்னால் என்ன செய்யப்போற...?

''இதப்பாரு, நான் எங்க போறேனோ அங்க என் பின்னால வா. எங்க இருக்கச் சொல்றேனோ அங்க கம்முனு கெட. என்ன புரியுதா...?''

அவள் அமைதியாகத் தலையாட்டிவிட்டு மௌனமானாள். கல்யாணத்திற்கு முன் வரை சிரித்துப் பேசிப் பழகியவன் ஏன் இப்படி மாறிப்போனான் என்பது புரியாமல் தடுமாறினாள். அதுவும் ஊரிலிருந்து கிளம்பி பஸ்ஏறின வினாடியிலிருந்து மிகமிக அந்நியமாக நடந்துகொண்டான். கேவலமான ஒரு வேலைக்காரியை விரட்டுவது போல் விரட்டினான். அப்பா, அம்மா, தங்கை, தம்பி, பழகிய மனிதர்கள், பிறந்து வளர்ந்த ஊர் இத்தனையும் விட்டு, பத்து நாட்களுக்கு முன் சந்தித்த ஒரு மனிதனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, அவனுடன் பரிச்சயமற்றதோர் புது இடத்திற்குக் கிளம்ப நேரிட்டதில் இருக்கக்

கூடிய பயத்தையும், பிரிவுத் துயரையும், மருட்சியையும் புரிந்து கொள்ளாதவனாக அவள் அழுவதைப் பார்த்து ஆத்திரத்துடன் கேட்டான்:

''அழுது முடிச்சிட்டியா, இல்லே இன்னும் பாக்கி இருக்குதா...''

அழுத்தமான அந்தக் குரலை எதிர்பார்க்காதவளாக மிரண்டு போய் நிமிர்ந்து பார்த்தாள் லட்சுமி.

''இல்லீங்க...அம்மா...அப்பாவை விட்டுப் பிரிஞ்சு வர்றது கஷ்டமா இருக்குங்க...''

''ஆமாம். உலகத்துலேயே நீ ஒருத்திதான் பிரிஞ்சு வரியா...? எல்லாப் பொண்ணுங்களும்தான் பிரிஞ்சு வராங்க...''

''இருக்கலாங்க. ஆனா எங்க கிராமத்துலேருந்து நான் ஒருத்திதாங்க இவ்வளவு தூரம் வரேன்...''

''எவ்வளவு தூரம்...? அமெரிக்காவுக்கு வரியா, இல்லே லண்டனுக்கு வரியா...? இங்க இருக்கிற பம்பாய்க்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்...'' வாய் தவறி ஊர்பெயரைச் சொன்னவன் சட்டென்று தன் தவறு புரிய உதட்டைக் கடித்துக் கொள்ள அவள் மேலும் மருண்டு போய்க் கேட்டாள்:

''ஏங்க...ஏதோ பேரு சொல்றீங்க. ஊர்ல பட்டணத்துக்குத் தானே கூட்டிப்போறதாச் சொன்னீங்க...?''

உண்மை தெரிந்து அவள் ஓடுகிற இரயிலில் கத்திக் கூட்டம் கூட்டிவிடப் போகிறாளே என்ற பயத்தில் முன் யோசனையுடன் செயல்பட்டான் தங்கராசு.

''பட்டணம்னா மெட்ராஸ் ஒன்னுதானா...? பம்பாய் பட்டணம் இல்லியா..? உனக்கு தெரிஞ்சதெல்லாம் மெட்ராஸ்தான். உங்க ஊர்க்காரங்களுக்கும் அதான் தெரியும். பம்பாய்ன்ற பேரைக்கூட அவங்க கேள்விப்பட்டிருக்கமாட்டாங்க. அது ரொம்பப்பெரிசு. பிரம்மாண்டமா



இருக்கும். அங்க போறதுக்கு அவனவன் காத்துக்கிட்டிருக்கான். ஏதோ அழகாயிருக்கிறதால, வெள்ளைத் தோல் போட்டுக் கிட்டிருக்கிறதால உனக்கு என் ரூபத்துல இந்த அதிர்ஷ்டம் அடிச்சிருக்கு. அதை நினைச்சு சந்தோஷப் படாம அழுதுக்கிட்டு வந்தால் எனக்கு ரொம்பக் கோவம் வரும். அப்பறம் உங்க ஊருக்கே கொண்டுபோய் விட்டுட்டு வந்துடுவேன்....தெரிஞ்சுக்க....''

அதன் பின் ரயிலை விட்டு இறங்குகிறவரை அவள் ஒன்றும் கேட்கவில்லை. சந்தடி மிகுந்த கார்களும் பஸ்களும் ஓடின ஓர் இடத்தில் அவளை இறக்கி வேறு ஒரு வண்டியில் ஏற்றி, சின்ன சந்தில் இருந்த வீடு ஒன்றிற்கு அழைத்துப் போனான். அந்த இடம் வீடானாலும், வீடு மாதிரி இல்லை. பெண்கள் வசிக்கிறமாதிரிப் படவில்லை. குப்பையும், தூசியும், சிகரெட் துண்டுகளும், காலியான பாட்டில்களும் இறைபட்டுக் கிடந்தன. அவன் நுழைந்த அறை இருட்டாக இருந்தது. தலை கலைந்து, விரலிடுக்கில் சிகரெட் புகைய, பார்க்க பயத்தையும் அருவெறுப்பையும் ஏற்படுத்திய அங்கிருந்த ஒருவன் தன் கரைபடிந்த பற்களைக் காட்டிச் சிரித்தவாறு லட்சுமியை தலையிலிருந்து கால்வரை வெறித்துப் பார்த்தான். பின் அவளுக்குப் புரியாத பாஷையில் தங்கராசுவிடம் ஏதோ சொல்ல இரண்டு பேரும் பெரிதாய்ச் சிரித்தார்கள். அவன் பார்வையும், அந்த இடமும், அவர்களின் சிரிப்பும் அவள் வயிற்றில் பகீரென்று பயத்தை ஏற்படுத்த இந்த மாதிரி இடத்திற்கெல்லாம் தன்னை ஏன் அழைத்து வரவேண்டும் என்று தங்கராசு மேல் உள்ளுக்குள் கோபப்பட்டபோது அவனே பேசினான்?

''லட்சுமி....இவரு என்கூட வேலை பார்க்கிறவரு. சிங்காரம்னு பேரு வணக்கம் சொல்லு....''

வேண்டா வெறுப்பாய் அவள் கை குவிக்க சிங்காரம் தமிழில் சொன்னான்.

''ரயிலில் வந்தது களைப்பாக இருக்கும். ஏதாவது சாப்பிடு தங்கச்சி முதல்ல....''

18647 ....
3479156

லட்சுமி பதில் சொல்லாமல் தலை குனிந்து நிற்க அவன் தங்கராசுவைப் பார்த்தான்.

''இதப்பாரு தங்கராசு. காதுல இத்தனாம் பெரிய கம்மலும், ஜிமிக்கியும் போட்டு இப்படியா தங்கச்சியைக் கூட்டிட்டு வருவே....?

நம்ம ஊரைப்பத்தி தங்கச்சிக்குத் தெரியாது. உனக்குக் கூடவா தெரியாது....? ராத்திரி ரயிலுக்கு வேற போவணும். காதோட சேர்த்து அறுத்துக்கிட்டு போயிட மாட்டாங்களா....? முதல்ல கம்மலையும், ஜிமிக்கியையும் கழட்டி வாங்கி வச்சிக்க. நான்போயி பிரியாணி, டீ எல்லாம் வாங்கிட்டு வரேன். சாப்பிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு கிளம்ப வசதியா இருக்கும்....''

சிங்காரம் போனதும் தங்கராசு அவளது பொன் நகைகளைக் கழற்றி வாங்கிக் கொள்ள லட்சுமி தயங்கியபடி சொன்னாள்:

'நகைங்க ஜாக்கிரதைங்க. அம்மா பாவம், கடன்பட்டு வாங்கிக் கொடுத்திருக்கு. கடன் அடைக்க அதுக்கு மூணு நாலு வருஷமாயிடும்....''

சடாரென்று திரும்பிய தங்கராசு முகமும், கண்களும் ஜிவுஜிவுக்க அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''பொல்லாத நகை போட்டுட்டா உங்கம்மா... ஒண்ணுமில்லாத ஒரு சவரனுக்கே இந்தப் பேச்சு பேசற...என் படிப்புக்கும், வேலைக்கும், தகுதிக்கும் முப்பது நாப்பது பவுன் போட்டு பொண்ணு கொடுத்திருப்பாங்க....ஏதோ அழகா இருக்கிற காரணத்துனால ஒண்ணுமில்லாம கட்டிக்கிட்டு வந்தா இந்தப் பேச்சா பேசற நீ....?''

அவனது கண்களின் சிவப்பையும், கோபத்தையும் பார்த்துப் பதறிப்போன லட்சுமி—

''நான் இப்போ என்னங்க சொல்லிட்டேன்...?'' என்று தடுமாற—



''இன்னும் சொல்ல என்ன பாக்கி இருக்கு...? பம்பாய் போனதும் முதல் காரியமா இந்த நகைகளை உன் மூஞ்சியில விட்டு எறியறேன்...'' என்றான் தங்கராசு.

அதன் பின் அன்றிரவு ரயிலேறுகிற வரை லட்சுமி ஒன்றுமே பேசவில்லை. சிங்காரமும், தங்கராசுவுமே புரியாத பாஷையில் பேசிக் கொண்டார்கள் இடையிடையே வெளிப்பட்ட ஓரிரு தமிழ் வார்த்தைகளிலிருந்தும் லட்சுமியால் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ சரக்கு என்றார்கள். கைபடாதது என்றார்கள். புத்தம் புதுசு என்றார்கள். தாராளமாய் பத்தாயிரம் போகும் என்றார்கள். அதற்கப்புறம் நீளமான புட்டியைத் திறந்து நுரைததும்ப எதையோ ஊற்றிக் குடித்ததைப் பார்த்த போது தான் லட்சுமிக்குப் பகீரென்றது. தங்கராசு குடிப்பான் என்பது தெரியவர எந்தக் குடி அப்பாவை அழித்ததோ அதே குடி இவனையும் பற்றிக் கொண்டிருப்பதை நினைத்து மௌனமாக வருத்தமும்-வேதனையும் பட்டாள். அதை விட இவன் மாந்தோப்பில் தன்னைச் சந்தித்த அந்த தங்கராசு இல்லை, முற்றிலும் மாறிப் போய் சிடு சிடுப்பும், கோபமும் கடுகடுப்பென்ற பேச்சுமாக இருக்கிற தங்கராசு என்பதில் ஏற்பட்ட வேதனையும், வருத்தமும் அதிகமாகத் தெரிய அவை எதையும் வெளிக் காட்டிக் கொள்ள இயலாத மௌனமான சங்கடத்துடனே அன்றிரவு அவனுடன் மீண்டும் ரயிலேறினாள் அவள்...

## 8. வீடு பார்க்கலாம்!

மறு நாள். அதிகாலையில் பம்பாய் ரயில் நிலையத்தில் ரயில் நின்றதும் கீழே இறங்கச் சொன்னான் தங்கராசு. லட்சுமி அதே மௌனத்தில் கீழே இறங்கினாள். பக்கத்தில் இருந்த டீ ஸ்டாலிலிருந்து இரண்டு கப் டீ வாங்கி ஒன்றை

அவளிடம் கொடுத்து, இன்னொன்றைத் தான் குடித்து விட்டுச் சொன்னான்,

''கொஞ்சம் இங்கேயே இரு. நான் போயி ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன்...''

''ஐயயோ...வேணாங்க...'' என்று பதறினாள் லட்சுமி. ''எனக்குப் பயமா இருக்குங்க...''

இங்க என்ன பயம்...' உன்னை யாரும் பிடிச்சுட்டுப் போயிட மாட்டாங்க. இதோ எதிர்ல தெரியற பூத்துல போயி ஒருத்தர் கிட்ட பேசணும். பேசிட்டு வந்துடறேன்...''

''வேணாங்க, நானும் கூடவே வந்துடறேங்க...'' என்று கையோடு கொண்டு வந்திருந்த, கல்யாணத்திற்கு அம்மா வாங்கித்தந்த டிரங்குப் பெட்டியையும், தங்கராசுவின் தோல் பெட்டியையும் இரண்டு கைகளிலும் தூக்கிக் கொண்டு அவனுடன் நடக்க, அவன் ''கருமம், கருமம்'' என்று தலையில் அடித்துக் கொண்டான். பின்னர் அவளை டெலிபோன் பூத்தின் வாசலில் நிற்கவைத்து கூண்டினுள் போய் கதவை சாத்திக் கொண்டு காசைத் தயாராக எடுத்து வைத்து எண்களைச் சுழற்றினான். மறுபக்கத்திலிருந்து வந்த பெண் குரலுடன் மிகச் சரளமாக இந்தியில் பேசத் துவங்கினான்.

''விமலா நீதி, நான் ராஜு பேசறேன்...''

''ராஜு...?'' என்று யோசித்தாள் அவள். ''கௌன்ஸெ ராஜு...?''

''ராஜு...தங்கராசு...மதராசி வாலா... புது சரக்கு கொண்டு வரதா சொல்லிட்டுப் போனேனே...''

''ஓ...நீயா...''- அவள் குரலில் அலட்சியம் தொனித்தது.

''உருப்படியா எந்த சரக்கு கொண்டு வந்திருக்கே, இது வரை...?''

''இந்தத் தரம் கொண்டு வந்திருக்கிற சரக்கை நேர்ல பார்த்தே, நீயே மயக்கம் போட்டு விழுந்துடுவே...''



''அப்படி என்னய்யா பூமியில் இல்லாத அபூர்வ சரக்கு...''

''பூமியில் இல்லாததில்லே...ஆனால் உன் வீட்ல இல்லாதது. பதினெட்டு வயசு. புத்தம் புது ரோஜா மாதிரி இருக்கு. கள்ளம் கபடம் தெரியாதது, ஒண்ணுமே அறியாதது.''

''அப்படியா...புதுசுன்னு சொல்றே... தொழிலுக்குப் புதுசா...?''

''தொழிலுக்கு மட்டுமில்லே....அப்படியே கன்னித் தனம் மாறாமல் இருக்கு. இது மாதிரி ஒரு தொழில் இருக்குங்கிறதே தெரியாதது...''

''அப்படி ஒண்ணை எங்கிருந்து பிடிச்சே...?''

''மதராஸ் பக்கம் ஒரு பட்டிக்காட்டுல...''

''எப்படி உன்னை நம்பிக் கூடவந்தா...?''

''நம்பும்படி ஒரு காரியம் செய்தேன்...''

''என்ன செய்தே...''

''கல்யாணம் பண்ணிக்கிட்டேன்...''

''அடப்பாவி!'' என்று பதறினாள் அவள்.

''கல்யாணம் பண்ணிக்கிட்ட பெண்டாட்டியையா இதுக்கு விடற...?''

''இதுக்கு விடணும் என்பதற்காகத்தானே கல்யாணம். பப்பாயை விட்டுக் கிளம்பின போது நீ என்ன சொல்லி அனுப்பிசே...பழைய மூஞ்சிகளையே பார்த்துப் பார்த்து கஸ்டமர்ஸ் சலிச்சுப் போயிட்டாங்க. புதுசா, இளமையா, அழகா, ஒண்ணுமே தெரியாத இன்னொசெண்ட் பொண்ணா கிடைச்சுச்சுன்னா நல்லா தொழில் நடக்குமனு சொல்லலே...அந்த மாதிரி ஒண்ணைத் தேடிக்கிட்டு இருந்தப்ப இது தானா வந்து சிக்கிச்சு. கிராமத்துப் பொண்ணு. கல்யாணத்தைத் தவிர வேற என்ன சொல்லியும் கூட்டிட்டு வர முடியாது. அதனால கல்யாணம் பண்ணி முறையா இட்டுட்டு வந்துட்டேன்...''

அவள் சில வினாடிகள் யோசித்துப் பின் கேட்டாள்:

"என்ன இருந்தாலும் பெண்டாட்டியையா இதுல ஈடுபடுத்தப் போறே...?"

"இந்தத் தொழில்ல பெண்டாட்டி, பிள்ளை குட்டின்ற உறவு முறையெல்லாம் ஏது..? நீ உன் சொந்தப் பெண்ணை இதுல உடலையா என்ன...?"

அதன் பின்னர் அவள் அதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. கேட்க முடியாத நிலையில் ஒரே கேள்வியில் கொண்டு போய் நிறுத்தி விட்டான். அதனால் அதைத் தவிர்த்து அவனை மடக்க எண்ணிப் பேச்சை ஆரம்பித்தாள்.

"ஆமாம், அழகான பதினெட்டு வயசுப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒரு வாரமாகப் போவுது. இப்போ வந்து கன்னிப் பொண்ணுன்னு சொல்றே, கை படாததுன்னு சொல்ற.. ஒரு வாரமா நீ சும்மாவா இருந்திருப்ப...?"

"இதப்பாரு... அப்படியே புதுசா உன் கிட்ட ஒப்படைச்சு முழுசா பணம் பார்க்கணும்னு முதல் ராத்திரியில் கூட கைவிரல் நகம் படாமல் காப்பாத்தி அழைச்சிட்டு வந்திருக்கேன். குலதெய்வம், பிரார்த்தனைன்னு ஏதேதோ சொல்லி தள்ளிப் போட்டு கூட்டிட்டு வந்தால் இப்படியா பேசறது...?"

"சரி நம்பறேன்..."

"நம்பறேன்னு இழுக்க வேணாம். நிஜம் நிஜம்மாகத் தான் இருக்கும். இன்னும் சந்தேகம்னால் பரிசோதனை செய்து பார்த்துக்கலாம்..."

"சரி...போதும், ரேட் என்னன்னு சொல்லு...?"

"முழுசா பத்தாயிரம் கொடுத்துடு..."

"ஐயே பாப்ரே...பத்தாயிரமா!"

"சரக்குக்கு அதுவே குறைச்சல். நேர்ல பார்த்தால் நீயே ஒத்துக்குவே...."



"எங்க பார்க்கிறது...? இங்கயே அழைச்சிட்டு வரியா...?"

"ம்ஹூம் வேணாம், அந்த இடம் சரிப்படாது. ஒரே பார்வையில் மிரண்டு போயிடும், அப்புறம் நம்ம ரேட் படியலேன்னாலும் வேற இடத்துக்குக் கூட்டிட்டுப் போறது கஷ்டமாயிடும். அதுக்குள்ள பொண்ணு உஷாராயிடுச்சானால் முதலுக்கே மோசமாயிடும்..."

"என்னை விட்டுட்டு வேற இடம் காட்றதாகக்கூட இருக்கியா..."

"நான் கேட்கிற பணத்தை நீ கொடுக்கலேன்னால்...?"

"பணத்தைப் பத்தியில்லேப்பா...சரக்கு நல்ல சரக்கானால் கொடுக்கிறதில் பிரச்சினையில்லை, அந்த அளவுக்கு ஒரு மாசத்துலயோ இரண்டு மாசத்துலயோ சம்பாதிச்சுக் கொடுத்தால் சரி..."

எத்தனை ஆசை உனக்கு என்று நினைத்துக் கொண்டே தங்கராசு "எல்லாம் சம்பாதிச்சுக் கொடுக்கும்" என்றான்.

"அப்படின்னா எங்கே பார்க்கிறது...?"

ஒரு ஓட்டல் பெயரைச் சொல்லி அங்கு வந்து பார்க்கும்படி கேட்டுக் கொண்டு தொலைபேசியை வைத்துவிட்டு வெளியில் வந்தான். நெடுநேரம் யாரோடு பேசினான் என்கிற சந்தேகம் எழுந்தாலும் கேட்கிற தைரியமற்று நின்று கொண்டிருந்த லட்சுமியைப் பார்த்து "வா போகலாம்" என்றான்.

"எங்கேங்க, வீட்டுக்குத்தானே...?"

"நான் அழைச்சிட்டுப் போற இடத்துக்கு வரணும்னு சொல்லலை...?"

"சரிங்க..." என்றாள் லட்சுமி பவ்யமாக.

சற்று வசதியான ஓட்டலிலேயே ஒரு அறை எடுத்தான் தங்கராசு. அறைக்குள் வந்து பெட்டியைப் போட்டு

கட்டிலில் சரிந்து காபிக்கு ஆர்டர் பண்ணினதும் மிரள மிரள நின்று கொண்டிருந்த லட்சுமியைப் பார்த்தான். குரலைச் சற்று கனிவாக்கிக் கொண்டு,

''ஏன் நிக்கற, உட்காரு...'' என்றான்.

ஆசிரியரின் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிகிற சாது மாணவனைப் போல் சட்டென்று உட்கார்ந்தாள் அவள்.

''இப்போ காபி வரும், குடிச்சிட்டு குளி...'' என்றான் தங்கராசு மீண்டும்.

அவள் கேட்கலாமா வேண்டாமா என்று தயங்கி மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''எங்க இது வீடுங்களா...?''

அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை லாவகமாக ஊதியபடி அவள் முகத்தைப் பாராமல் அலட்சியமாகப் பதிலளித்தான் :

''ம்ஹூம் ஓட்டல்...''

''ஏங்க, ஓட்டல்ல தங்கக்கூட முடியுமா...?''

''ம்...பெரிய ஓட்டலா இருந்தால் முடியும்...?''

''எதுக்குங்க இங்க வந்து தங்கியிருக்கோம்? நம்ம வீடு என்னாச்சு...?''

''வீடு இனிமேலதான் பார்க்கணும். குளிச்சு வேற புடவை கட்டி, தலைவாரி பளிச்சுனு இருந்தியானால் இப்போ ஒரு அம்மா—எனக்கு அக்கா மாதிரி—வருவாங்க... அவங்க கூட போயி வீடு பார்த்துட்டு வரலாம்....''

''சரிங்க....'' என்று இழுத்தவள்,

''ஏங்க இதுவரை நீங்க வீட்ல இல்லையா....?''

சடாரென்று தலை நிமிர்ந்த தங்கராசு குரலை உயர்த்திக் கத்தத் தொடங்கினான்.

''இதப்பாரு...தொண தொணன்னு இப்படி ஏதாச்சும் கேட்டுட்டே இருந்தே உன்னை இங்க இப்படியே உட்டுட்டு நான் எங்கயாச்சும் போயிடுவேன். அப்புறம்தான் உன் பாடு என்ன ஆகும்னு தெரியும்....''



''சரிங்க....இனிமேல் ஒண்ணும் கேட்கலீங்க....''
லட்சுமியின் குரல் மிகத் தழைந்து அமைதியாக வர—

தங்கராசு கட்டளை மாதிரி சொன்னான்.

''சீக்கிரம் குளிச்சு அழகா டிரஸ் பண்ணிக்க. அக்கா உன்னைப் பார்த்து திருப்தியா தலையாட்டணும்...''

அதற்கும் அவளிடமிருந்து சரி வெளிப்பட காபிவந்தது.

காபி குடித்து குளித்து தங்கராசு சொன்ன மாதிரி பளிச்சென்று உடைமாற்றி அலங்கரித்துக் கொண்டு வர தங்கராசு திருப்தியாய் கல்யாணத்திற்குப் பின் முதல் முறையாகப் புன்னகைத்தான்.

''ம்.... ரொம்ப நல்லா இருக்கே....அக்கா உன்னைப் பார்த்து சந்தோசமாய் சரி சொல்லும்....''

அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே அந்த ''அக்கா'' உள்ளே நுழைந்தாள். தன் கனத்த சரீரத்தைத் தூக்க முடியாதவளாக மேல் மூச்சு வாங்க நாற்காலியில் உட்கார்ந்து லட்சுமியை தலை முதல் கால் வரை அங்குல அங்குலமாகப் பார்க்க—

லட்சுமிக்கு முதல் பார்வையிலேயே அவளைப் பிடிக்காமல் போயிற்று. அந்த உடம்பும், முகத்தில் தெரிந்த குரூரமும், பார்வையின் பயங்கரமும், அந்த அலங்காரமும், உதட்டின் அழுத்தமான சாயமும்.

'இவளா.... இவரின் அக்கா. இந்த அக்கா ஏன் கல்யாணத்திற்கு வராமல் போனாள்...?'

அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே தங்கராசு வந்தவளின் முகத்திருப்தியைப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

''என்ன அக்கா....சந்தோஷம் தானே....''

''ம்....'' என்று அந்தப் பூதசரீரத்தின் தலை ஆடிற்று.

''அப்போ பத்துக்கு தயாரா வந்திருக்கியா....?''

''ம்....''

''எங்கே....''

அவள் தன் கைப்பையைத் திறந்து ஒரு துணிப்பையை எடுத்து நீட்ட அதை வாங்கிக் கொண்ட தங்கராசு.

''அப்போ நீ இவளைக் கூட்டிட்டுப்போய் வீட்டைக் காட்டுக்கா...'' என்றான். அதைக் கேட்டுப் பதறின லட்சுமி,

''எங்க, நான் மட்டும் தனியாகவா போகணும்....?'' என்று கேட்டாள்.

''இவங்க கூடப் போக உனக்கு என்ன பயம்....? ஒரு பொம்பளை கூடதானே அனுப்பறேன். போயி வீட்டைப் பார்த்துட்டு வா, உனக்குப் பிடிச்சிருந்தால் உடனே பிக்ஸ் பண்ணிடலாம். அதுக்குள்ள கொஞ்சம் ஆபீஸ் வேலை இருக்கு நான் முடிச்சுடறேன்...''

லட்சுமி இன்னமும் அதிகம் தயங்கி, ''நீங்களும் கூட வந்துடுங்களேன்....'' என்று கெஞ்ச,

''நான் உன்கூட வந்துட்டிருந்தால் என் வேலையை யார் கவனிப்பாங்க?''—என்று தங்கராசு கத்த—

லட்சுமி மனசே இல்லாமல் வந்தவளுடன் கிளம்பத் தயாரானாள்....

# 9. விலைக்கு வாங்கிட்டேன்!

''உன் பேர் என்ன...?'' கார் ஜன்னல் வழியாக பம்பாய் நகரின் பெரிய பெரிய கட்டிடங்களையும், அங்குலம் அங்குலமாக நகர்ந்த வாகனங்களையும், ஜன நெரிசலையும் ஒரு வித பிரமிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த லட்சுமி, அப்போதுதான் தன் நிலைமை புரிய சுய உணர்வு பெற்றவளாகத் திரும்பி ''அக்கா'' எனப்பட்ட கனத்த சரீரத்தைப் பார்த்தாள். அவளைப் பார்க்கிறபோதே ஊரில் ராமாயணக் கூத்து போடுகிற போது அதில் வரும் தாடகை, லங்கிணி இவர்களின் ஞாபகம் வந்தது. உள் மனசு இவள் நல்லவள் இல்லை என்று சொல்லிற்று; இவளுடன் சேர்ந்துத் தன்னை



அனுப்பிய கணவனை நொந்து கொண்டே போகப் பிடிக்காதவளாக— அவள் கேட்டது காதில் விழாத மாதிரி புருவங்களைச் சுருக்கி மெலிதாய் ''ம்...?'' என்றாள்.

அந்த ''உம்''ல் எரிச்சலடைந்த விமலா குரலைச் சற்று கடுமையாக்கிக் கொண்டு மீண்டும் கேட்டாள்:

''உம் பேரு என்னன்னு கேட்டேன்...?''

''லட்சுமி...''

''லட்சுமி...'' நல்லாத்தான் இருக்கு. ஆனால் என் வீட்டுக்கு வந்தப்புறம் இந்த மாதிரிப் பேரெல்லாம் சரிப்படாது. நீ பேரை மாத்திக்கணும்...''

''பேரை மாத்திக்கணுமா, ஏன்?''

''ஏன்னா...? கஸ்டமருக்கு அந்தப் பேரெல்லாம் பிடிக்காது. அழகா லீனா, ரீனான்னு எதுனா இருந்தாத் தான் பிடிக்கும்?''

''கஸ்டமருன்னா... அது யாரு....!''—என்று தெரியாத குழந்தையாகக் கேட்டாள் லட்சுமி.

''எல்லாம் வீட்டுக்கு வந்ததும் நீயே தெரிஞ்சுப்பே...'' என்ற விமலா சட்டென்று பேச்சை மாற்றினாள்.

''உனக்கு அம்மா அப்பா இருக்காங்களா...?''

''ம்...''

''கூடப் பொறந்தவங்க...!''

''ம்...''

''எத்தனை பேரு...?''

''ரெண்டு பேரு....''

''பெரியவங்களா, சின்னவங்களா...?''

''சின்னவங்க...எட்டு, பத்து வயசு...''

''ப்பூ...அவ்வளவு தானா...? ஆமா, நீ எப்படி தங்கராசுவைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட....?''

லட்சுமி விவரமாய் சொல்ல, கேட்டுக் கொண்டே விமலா வெற்றிலை போட்டுக் கொண்டாள். பொடிப் பொடியாக மிளகு மாதிரி தோற்றமளித்த கறுப்பு உருண்டைகளை ஒரு டப்பாவிலிருந்து உள்ளங்கையில் கொட்டி

வெற்றிலையுடன் சேர்த்து மென்றவள் கண்கள் லேசாய் செருக லட்சுமியிடம் கேட்டாள்,

''நீயும் வெற்றிலை போட்டுக்கறயா...?''

''ம்ஹூம் வேணாம், பழக்கமில்லே...?''

''எந்தப் பழக்கமும் கிடையாதா உனக்கு...?'' என்று சிரித்த போது மிக விகாரமாகத் தெரிந்தாள் விமலா. அதற்கு மேலும் அவளைப் பார்க்கிற பொறுமையற்று லட்சுமி முகத்தைத் திருப்பிக் கொண்ட போது அவளையும் அறியாமல் அம்மா ஞாபகம் வந்தது. அம்மாதான் இப்படி வெற்றிலை போட்டுக் கொள்வாள். வெற்றிலையுடன் புகையிலையும் வேண்டும். ஒரு நாள் முழுவதும் சாப்பாடு இல்லாமல் இருந்தாலும், இந்த வெற்றிலை, பாக்கு, புகையிலை இல்லாமல் அவளால் இருக்க முடியாது. அந்த ஒரு விஷயத்தை வைத்து இவளை அம்மாவுடன் ஒப்பிட முடியாது என்று தோன்றவே நினைவைக் கட்டுப் படுத்திக் கொண்டு திரும்பியபோது கார் ஒரு சிறிய தெருவினுள் நுழைய திடுக்கிட்டுப் போனாள் லட்சுமி.

அந்தத் தெரு வீடுகளின் வாசல்களிலும் ஜன்னல்களி லும் பாதி உடையுடனும், அபரிமிதமான பவுடர் பூசிய முகங்களுடன் நிறையப் பெண்கள் நின்றிருந்தனர். வெறுமனே நின்றிராமல் தெருவில் நடந்து போன ஆண்களைக் கையசைத்தும், கண்ணடித்தும், வேறுசில செய்கைகளின் மூலமும் கூப்பிட—

அதைப் பார்த்த லட்சுமிக்கு முதலில் பகீரென்றது. இப்படிக்கூட விவஸ்தை கெட்டுப் பெண்கள் உடை உடுப்பார்களா என்று தோன்றிற்று. மேல் தாவணி தன்னிச்சையாகச் சிறிது விலகினால் கூடக் கண்களை அகற்றி கோபமாய்ப் பார்க்கிற அம்மா நினைவுக்கு வந்தாள்.

''மேல் துணி விலகறதுகூட தெரியாமல் அப்படி என்ன வெட்டி முறிக்கிற...?'' என்கிற அவளுடைய சிடுசிடுப்பு நினைவுக்கு வந்தது. கை தானாகப் புடவைத் 



தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டபோது இந்தப் பெண்கள் இவ்வாறு அரை உடையும், கால் உடையுமாக நிற்கிறார்களே...அவர்களுக்கெல்லாம் அம்மா இருக்கமாட் டாளோ என்ற சந்தேகம் வந்தது. அடி வயிற்றில் புரண்ட அருவெறுப்பும் பயமும் கண்களில் கண்ணீராக முட்டி வெளிவர அந்தத் தெருக் கோடியின் கடைசி வீட்டின் முன் கார் நிற்பதைப் பார்த்து பதைத்துப் போனாள்.

'இந்த தெருவிலா வீடு பார்க்கத் தன்னை அனுப்பி யிருக்கிறார்' என்ற கேள்வி தொடர காரிலிருந்து கீழே இறங்கவே தயங்கினாள் அவள். தன் பக்கக் கதவைத் திறந்து கீழே இறங்கி விட்ட விமலா அத்தனை நேரம் காட்டிய சாதுத்தனத்திலிருந்து தன்னை முற்றிலும் விடு வித்துக் கொண்டவளாக அதட்டலாகச் சொன்னாள்.

''ம்....கீழே இறங்கு. இடம் வந்து விட்டது தெரியலை?''

அப்போதும் லட்சுமி இறங்கவில்லை. பயம், சந்தேகம் தடுமாற்றம் எல்லாம் நிறைந்த குரலில்,

''இங்கயா வீடு பார்த்திருக்கு...'' என்று கேட்க, விமலா சற்று பலமாகச் சிரித்தபடி அவளைப் பார்த்தாள்.

''ஏன், இதெல்லாம் வீடுங்களா தெரியலையா...?''

''இருக்கலாம், ஆனால் நல்ல மனுஷங்க வசிக்கிற இடமா தெரியலையே....?''

''நல்ல காலம், மனுசங்க வசிக்கிற இடமாகவாவது தெரிஞ்சுதே... அதுவே ரொம்ப சந்தோஷம்... இப்ப கீழே இறங்கப் போறியா இல்லையா....?''

''வேணாம்மா—'' என்று கெஞ்சின லட்சுமி உடனே அழத் துவங்கினாள்.

''இந்த இடத்துல வீடு வேணாம். அதை விட ஒரு குடிசையிலேயோ மர நிழல்லேயோ கூட இருக்க நான் தயாரா இருக்கேன்...''

''நீ தயாரா இருக்கலாம், ஆனால் அங்கேயெல்லாம் உன்னை அனுப்ப நான் தயாராயில்லையே, இந்தத் தெருவை விட்டு அங்க கொண்டு போய் வச்சு தொழில்

நடத்தினா போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போயிடுமே—நீ. நான் ரெண்டு பேருமே உள்ள போக வேண்டிவருமே—"

இப்போது தான் லட்சுமிக்கு எதுவோ லேசாகப் புரிகிற மாதிரித் தோன்றியது. இவர்கள் தொழில் என்பது சரியான எந்தத் தொழிலுமில்லை என்று பட்டது. ஒருவேளை தன் கணவன் ஏமாந்து போய் விட்டானோ—? வீடு காண்பிப்பதாகச் சொல்லி இவன் ஏமாத்தியிருப்பானோ—? இந்த இடத்தில் தான் வீடு என்பது தெரிந்திருந்தால் தன் கணவன் அனுப்பியே இருக்க மாட்டானோ கடவுளே! எப்படியாவது இங்கிருந்து புறப்பட்டு கணவர் இருக்கிற இடத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டால் போதும்—? எப்படிப் போவது—? எங்கே இருக்கிறது அந்த இடம்? ஒன்றும் தெரியாத இத்தனை பிரமாண்டமான பட்டணத்தில் எங்கிருந்து கண்டு பிடிப்பது? யார் வழி சொல்வார்கள்? முதலில் இந்தத் தாடகை தன்னைப் போக விடுவாளா—?

அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே விமலா மீண்டும் அதட்டினாள்.

"—கீழே இறங்குடி—"

சட்டென்று இரு கைகளையும் கூப்பி வேண்ட ஆரம்பித்தாள், லட்சுமி.

"அம்மா— எனக்கு இந்த மாதிரி இடத்துல வீடு வேணாம், உங்களைக் கெஞ்சி கேட்டுக்கிறேன். என்னை என் வீட்டுக்காரர்கிட்டே கொண்டு போய் விட்டுடுங்க—"

"இப்ப கீழே இறங்கப் போறியா இல்லையா—?"

"ம்ஹூம் மாட்டேன், நான் இங்கெல்லாம் இறங்கவே மாட்டேன்—"

"மாட்டியா—?"—விமலா அவள் மறுப்பினால் பாதிக்கப்படாதவளாக— சகஜமாகிப் போனவளாக வீட்டு வாசலில் நின்ற மற்ற பெண்கள் வேடிக்கை பார்ப்பதை லட்சியம் பண்ணாதவளாக பின்னால் திரும்பி ஒரு அரைகுறை உடைப் பெண்ணிடம் "ராம்லால் கோ புலாவ்—"



(ராம்லாலைக் கூப்பிடு) என்று இந்தியில் சொல்ல; அந்தப் பெண் தனக்கு நிகழ்ந்ததை ஞாபகப்படுத்திக் கொண்டு அந்தக் காட்சியை திரும்பிப் பார்க்கிற சுவாரஸ்யத்துடன் உள்ளே ஓடி, திரைப்படங்களில் வில்லன் கூட்டத்தை சேர்ந்த பயங்கரமான, நிடகாத்திரமான முரட்டு மனிதனை போன்றிருந்த வழுக்கைத் தலை ராம்லாலுடன் திரும்பி வர விமலா அவனிடம் மீண்டும் இந்தியில் சொன்னாள்.

"உஸ்கோ அந்தர் லேகா ஜாவ்."

(இவளை உள்ளே கொண்டுபோ...)

சொல்லிவிட்டு கொடுங்கோல் நாட்டு மகாராணி மாதிரி அவள் தன் கனத்த சரீரத்தை அசைத்து அசைத்து நடந்து உள்ளே போக—

ராம்லால் எனப்பட்டவன் காரின் அருகில் போய் பின் சீட்டில் சின்னக் கோழிக் குஞ்சாக ஒடுங்கிக் கிடந்த அவளை காகிதத்தைத் தூக்குவது போல் இரு கைகளாலும் அலட்சியமாகத் தூக்கிக் கொண்டு வந்து நடு அறையில் கிடத்த தரையில் போடப்பட்ட லட்சுமி ஆத்திரமும், அழுகையும், பயமும், ஒன்றாய்த் தாக்க நடுங்குகிற உடலும், மனமுமாக எதிரில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்த விமலாவைப் பார்த்துக் கத்தத் தொடங்கினாள்.

"அடிப்பாவி—வீடு காட்டறேன்னு எங்க வீட்டுக்காரரை ஏமாத்தி, அவர்கிட்ட பொய் சொல்லி என்னை இங்க கூட்டிட்டு வந்துட்டியே—அவருக்குத் தெரிந்தால் உன்னை சும்மாவுட மாட்டாரு— மொதல்ல என்னை அங்க அவருகிட்ட கொண்டு போயி விட்டுட்டு மறு வேலை பாரு—"

அவளுடைய கண்ணீரும் பதட்டமும் விமலாவை சிரிக்கவே வைத்தன. அலட்சியமாக ஒரு பக்கமாய் வாய் கோணச் சிரித்த அவள் லட்சுமியைப் பார்த்துக் கேலியாகக் கேட்டாள்.

''யாரு...யாருக்குத் தெரிந்தால் என்னை சும்மாவுட மாட்டாங்கன்னு சொன்னே....?''

''எங்க வீட்டுக்காரருக்குத்தான்.''

அதைக் கேட்டு இன்னமும் பெரிதாகச் சிரித்தாள் விமலா.

''உங்க வீட்டுக்காரனா....? தங்கராஜுவா....? அடப் பைத்தியம்! அவன் தானே உன்னைப் பத்தாயிரம் ரூபாய்க்கு என்கிட்ட வித்திருக்கான். விக்கணும் என்கிற துக்காகத்தானே கல்யாணம் பண்ணி ஏமாத்தி கூட்டி வந்திருக்கான். நீதானே ஒரு பை நிறைய நான் அவனுக்குப் பணம் கொடுத்ததைப் பார்த்தே.... இந்நேரம் பணத்தை எண்ணி மடியில் கட்டிக்கிட்டு ஓட்டல் ரூமைக் காலி பண்ணி வேற ஊருக்குப் பறந்திருப்பான். அது தெரியாம நீ பைத்தியக்காரிமாதிரி பேசற....''

''என்ன....என்ன?'' என்று பதறின லட்சுமி அந்த அதிர்ச்சியையும் நயவஞ்சகத்தையும் ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ள முடியாதவளாக மயங்கிக் கீழே சரிய—

விமலா ராம்லாலைப் பார்த்து ''ம்'' என்று தலை யசைக்க ராம்லால் கீழே குனிந்து அப்படியே அலுங்காமல் தூக்கிக் கொண்டு உள்ளே போனான்.

## 10. பணிந்து விடு

லட்சுமி கண் திறந்த போது அறை இருட்டாகக் கிடந்தது. கைக்கு எட்டாத மிக உயரத்தில் பாதி திறக்கப் பட்டிருந்த சாளரத்திலிருந்து லேசாய் வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அந்த மிகச் சிறிய வெளிச்சத்தை வைத்து இரவா, அல்லது பகலா என்பதைக்கூட கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது. ஒரு வினாடி தான் எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் போயிற்று லட்சுமிக்கு. ஒவ்வொன்றாய் நினைவிற்குக் கொண்டு வந்து யோசித்த



போது சட்டென்று விமலா சொன்ன வார்த்தைகள் நெஞ்சைத் தாக்க, தங்கராசுவால் கல்யாணம் செய்து கொள்ளப்பட்டு, இங்கே, இந்தப் பெயர் மறந்து போன பெரிய பட்டணத்தின் விலைமாதர் விடுதிக்கு. கட்டினவ னாலேயே விற்கப்படுகிற நிஜம் நெருப்பாய்ச் சுட சரேலென்று எழுந்து உட்கார்ந்து கொள்ள உடம்பில் ஆடைகள் எதுவுமின்றி நிர்வாணமாக இருப்பதை உணர்ந் தாள். அந்த இருட்டறையில் யாருமில்லை என்றாலும் காலம் காலமாக உடம்பில் ஊறிப் போன, பண்பாடு உந்தித் தள்ள புழுவாகத் துடித்துக் கொண்டே அறை மூலைக்கு ஓடினாள். ஓவென்று கதறி குத்துக் காலிட்டு உட்கார்ந்து உடம்பின் பெரும் பகுதியையும் இருகால்களாலேயே மறைத் துக் கொண்டு கண்ணீர் விட்டபோது அறைக்கதவு பெருத்த சத்தத்துடன் திறக்கப்பட அங்கு விமலாவும், ராம்லால் மாதிரி இன்னொருவனும் நின்று கொண்டிருப்பதைத் தலையை மட்டும் தூக்கிப் பார்த்த லட்சுமி இன்னமும் சத்தமிட்டுக் கதறினாள்.

''ஐயோ... அவனை வெளியே போகச் சொல்லுங்க. உங்களை கெஞ்சி கேட்டுக்கறேன். அவனை அப்படியே திருப்பி அனுப்பிடுங்க......''

லட்சுமியின் கெஞ்சலுக்கு இரக்கமற்றுச் சிரித்தாள் விமலா. ''இவன் தானே உன் உடம்பிலிருந்து துணிகளை உருவினவன், இவனையே வெளியில் போகச் சொன்னால் எப்படி...?''

லட்சுமி அதைக் கேட்டு இன்னமும் துடித்தாள். உடம்பிலும் மனதிலும் நெருப்பு பற்றிக் கொண்ட மாதிரி அனல் காய்ந்தது. அந்த அனலில் ஒவ்வொரு பாகமாக உருகிக் கரைந்து சாம்பலாகாதா என்று பதறித் தவித்து பரிதாபமாகக் கெஞ்சத் தொடங்கினாள்.

''அம்மா...உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். என் அம்மா மாதிரி நினைச்சுக் கேட்கறேன். முதல்ல என்

மானத்தைக் காப்பாற்றிக்க புடவை கொடுங்கம்மா...தயவு செஞ்சு இரக்கம் காட்டுங்கம்மா.''

''மானத்தைக் காப்பாற்றிக்கவா....?'' என்று கேட்டுச் சிரித்தாள் விமலா. ''இந்தத் தெருக்குள்ள நுழைஞ்சு விட்டுல அடைக்கலமானப்புறம் வெட்கம், மானம் எதுவும் இருக்கக் கூடாது. எல்லாம் விட்டுப் போயிடணும்னு தானே இந்தக் கோலத்துல வைக்கிறேன். இதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு லஷ் - இல்லே உன் பேரு இன்னிலேருந்து வந்தனா. அதனால அப்படியே கூப்படறேன். இங்க இந்த மாதிரி உடம்புத் துணியோட அடைச்சு வச்ச ஒரு பொண்ணு தன் புடவைத் தலைப்பால கழுத்தை இறுக்கிக் கட்டிக்கிட்டு தற்கொலை செய்துக் கிட்டா. அப்படி எந்த அசம்பாவிதமும் ஏற்படக் கூடாதுன்னுதான் இப்படி உள்ள அடைக்கிறேன். இதப்பாரு லஷ் - இல்லே வந்தனா இந்த மாதிரி அழுது ஆகாத்தியம் பண்ணி பிடிவாதம் பிடிக்கிறதில் ஒரு பிரயோஜனமும் இல்லே. வேணும்னால் வெளியே இருக்கிறவங்களைக் கேட்டுப்பாரு. அவங்களும் முதல்ல உன்னை மாதிரியே நடந்துக் கிட்டு பணிய மறுத்து பட்டினி கிடந்து அடி, உதை வாங்கி அதற்கும் சரிப்படலேன்னால் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடு வாங்கிக்கிட்டு, சரிப்படறேன்னு அடங்கிப் போனவங்கதான். இந்த இடத்துக்கு வந்தப்புறம் நான் சொல்றதைக் கேட்டுப் பணிஞ்சு நடக்கிறதைத் தவிர வேற வழி எதுவும் இடையாது. இங்கேயிருந்து தப்பிச்சுப் போறது முடியாத காரியம். தற்கொலை செய்துக்கிட்டு சாகிறதும் நடக்காது. அதுக்கு சந்தர்ப்பமே கொடுக்க மாட்டேன். இதோ பார்க்கிறியே இந்த விக்டர், அன்னிக்கு உன்னை கார்லேருந்து அலாக்காக தூக்கிட்டு வந்த ராம்லால் மாதிரி ஏழெட்டு அடியாட்கள், என் உப்பைத் தின்னுட்டு எனக்கு விசுவாசமா நடந்துக்கிறவங்க இருக்காங்க, அவங்க ராப் பகலா எல்லோரையும் கண் காணிச்சுட்டு இருக்காங்க.



அதனால அனாவசியமா முரண்டு பிடிக்காத லஷ்மி வந்தனா. இந்த மாதிரி முரட்டுத் தனமும், ஆவேசமும், பிடிவாதமும் முதல்ல தான் இருக்கும். அப்புறம் பழகப்பழக சகஜமாயிடும். கஸ்டமர் வராட்டி போனால் தான் கஷ்டமா இருக்கும். ஒரு வாரம் இப்படி தனி அறையில் விட்டப்புறம் மற்ற பொண்ணுங்களோட சேர்த்து விடுவேன். அப்போ நான் சொல்றது உண்மையா பொய்யான்னு நீயே அவங்களை கேட்டுப் பாரு...உன்னை நான் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துத்தான் வாங்கியிருக்கேன். அதை வட்டியோட சேர்த்து திருப்பி எடுக்காமல் விட மாட்டேன்.''

விமலா சொல்லி முடிக்கிற வரை முகத்தைக் கால்களில் பதித்து நீளமான தலை முடியை விரித்து அதையே ஆடையாக்கிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த லட்சுமி சடாரென்று தலையை மட்டும் உயர்த்தினாள்.

''வேணாம், என்னை விட்டுடு. உன்னை கெஞ்சிக் கேட்டுக்கிறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன் இப்படிப்பட்ட பாவியாக இருப்பான்னு நினைக்கலை. அவன் என் அழகுக்கு ஆசைப்பட்டு நிஜமாகத்தான் கட்டிக்கிறான்னு சந்தோஷப் பட்டேன். இப்படி கூட்டிட்டு வந்து அடிமையை விக்கிற மாதிரி விப்பான்னு நினைக்கலை. எங்க ஊர் கூத்துல திரௌபதியை நிக்கவச்ச மாதிரி என்னை நிக்க வச்சிருக்கீங்களே...அவளுக்காவது கிருஷ்ண பகவான் துணி கொடுத்தாரு. எனக்கு எந்த பகவான் கொடுப்பாரு... நீங்கக் கொடுங்கம்மா. உங்களை பகவானா நினைச்சுக்கறேன். மனசுக்குள்ள வச்சு சாமியா கும்பிடறேன். தயவு செய்து இரக்கம் காட்டுங்கம்மா.... கருணை காட்டுங்க. உங்க பொண்ணா நினைச்சு உதவி செய்யுங்க...''

பகபகவென்று சிரித்தாள் விமலா. ஒரு வினாடி சிரித்து பின் நிறுத்தி விட்டு லட்சுமியை கூர்மையாகப் பார்த்தவாறு சொன்னாள்.

''பொண்ணாகவா...? உனக்குத் தெரியுமா...? என் பொண்ணைக்கூட நான் இந்தத் தொழில்ல தான் விட்டிருக்கேன். இங்க இருக்கிற மற்ற பெண்களைவிட அவதான் நிறைய சம்பாதிக்கறா...''

''அடிப்பாவி'' என்று முனகினாள் லட்சுமி. பெற்ற பெண் என்றுகூடப் பாராதவள் தனக்கு நிச்சயம் கருணை காட்ட மாட்டாள் என்கிற உண்மை உறைக்க பேச்சிழந்து போனாள். இனி கெஞ்சுவதால் எந்தவிதப் பலனும் இருக்காது என்பது புரிய எப்படி அந்த இடத்திலிருந்து அவர்களிடமிருந்து தப்பிப்பது என்று யோசித்தாள். தப்பித்து எங்கே போவது? யாரைத் தெரியும்? யார் உதவி செய்வார்கள்? யாரிடமாவது உதவி கேட்கலாமென்றால் பாஷை கூடத் தெரியாதே. கையில் காலணாக் காசு கூட இல்லை. கல்யாணம் பண்ணிக் கொண்ட அந்தப் பாவியும் இதற்கு முந்தின பட்டணத்தில் பார்த்த பாவியும் ஒன்றாகச் சேர்ந்து நயவஞ்சகமாகக் காதில் இருந்த கம்மலையும் ஜிமிக்கியையும் கூடக் கழற்றி வாங்கிக் கொண்டு விட்டார்களே... அவை இரண்டும் இருந்திருந்தாவாவது இவளிடம் கழற்றிக் கொடுத்து தன்னை விட்டுவிடச் சொல்லிக் கேட்டிருக்கலாம்...''

அந்த நினைப்பில், முட்டாள் தனமும் கூடவே உறைத்தது. உடைகளைக் களைந்து எடுத்துக் கொண்டவர்கள் பொன் நகையை விட்டா வைப்பார்கள் என்று தோன்றியது. அப்படியே விட்டு வைத்திருந்தாலும் பத்தாயிரம் ரூபாய் எங்கே?... ஒரு சவரனுக்கும் சற்றுக் குறைவான தன் ஜிமிக்கியும் கம்மலும் எங்கே...? இரண்டாயிரம் ரூபாய் பெருமானத்துக்குப் பத்தாயிர ரூபாயையா விடுவாள்...? அதுவும் சொந்தப் பெண் என்றும் பாராமல் இந்த மாதிரி கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிற இந்த விமலாவா...? இப்படியெல்லாம் பணம் சம்பாதித்து என்ன செய்யப் போகிறார்கள்...மானம், கௌரவம் எல்லாவற்றையும் இழந்து...



''ம்... என்ன பேசாமல் இருக்கே லட்சுமி...? நான் சொல்ற மாதிரி நடக்கிறதுக்கு ஒப்புக்கிட்டியானால் நீ புத்திசாலி. இந்த இருட்டு ரூம், அடி உதை, எல்லாத்தையும் தவிர்த்துக்கலாம். இப்படி மூலைல முடங்கிக் கிடக்க வேணாம், மற்ற பொண்ணுங்க மாதிரி சுதந்திரமா வெளிய வரலாம். எல்லார் கிட்டேயும் பேசலாம், என்ன சொல்ற...?

''ம்...ஹூம்... முடியாது...என் உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் இதுக்கு என்னால சம்மதிக்க முடியாது...கூழ் குடிச்சாலும் மானமா வாழ்ந்தவ, குடிசைல இருந்தாலும் கௌரவமாக இருந்தவ...அந்த கௌரவத்தோடயும், மானத்தோடயும் செத்தாலும் சாவேனே தவிர இதுக்கு ஒரு போதும் உடன்பட மாட்டேன்...''

சட்டென்று முகம் இறுகிக் கண்கள் லேசாய் சுருங்க, பார்வை நெருப்பாய்ச் சுட அமைதியான குரலில் அழுத்தமாகக் கேட்டாள் விமலா.

''இது தான் தீர்மானமான பதிலா...?''

அந்தப் புலி பார்வையிலும், குரலின் இறுக்கத்திலும் பயந்து போன லட்சுமி பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்தாள்.

''என்ன...பேசாமல் இருக்கே? இதுதான் உன் முடிவான்னு கேட்டேனே...?''

''ஆ....ஆ... மாம்!''

''அப்படின்னா நானும் என் கைவரிசையைக் காட்ட வேண்டியது தான், சரி பகவான் தாஸ்... இனிமேல் கேட்டுக்கிட்டு நிற்கிறதில் பிரயோஜன மில்லை. நீ உன் பிரயோகத்தை ஆரம்பி...'' என்று அறைக் கதவை சாத்தி வெளிப்பக்கம் தாழிட்டுக் கொண்டு விளக்கை அணைக்காமல் விமலா வெளியேற—

தனக்கு இடப்பட்ட உத்தரவை நிறைவேற்றுகிற கடமையில் பகவான்தாஸ் என்று அழைக்கப்பட்ட அவன் ஒவ்வொரு அடியாக வைத்து அவளை நெருங்க—

"ஐயோ... வேணாம்டா... என்னை ஒண்ணும் செய்யாதடா. உன் பொண்ணு மாதிரிடா நான். பகவான் தானன்னு சாமி பேரை வச்சுக்கிட்டுத் தப்பு பண்ணாதேடா பாவி..."

பெரிதாய்க் கத்திக் கதறிக் கொண்டே அதே நிலையில் இன்னமும் சுவரோடு ஒட்டிக் இரு கைகளாலும் முகத்தை இறுக மூடிக் கொண்டு ஓவென்று அழத் துவங்கினாள் லட்சுமி...

## 11. அக்கா பட்டணம் போயிருக்குது!

அன்று காலையிலிருந்தே யசோதம்மாவிற்கு மனசு சரியில்லை. இன்னதென்று சொல்லத் தெரியாத ஒரு சங்கடம் வருத்திக் கொண்டிருந்தது. லட்சுமி கல்யாணமாகி வீட்டை விட்டுப் போனதிலிருந்தே ஒரு கை உடைந்த மாதிரி ஆகிப்போனாள் யசோதம்மா. சரளமாய்ப் பேச, அபிப்ராயம் கேட்க, கை வேலையைப் பகிர்ந்து கொள்ள யாருமில்லாமல் போயிற்று.

"ஏ லட்சுமி! அடுப்புல சோறு வேகுது...கொஞ்சம் பார்த்து கஞ்சி வடிச்சிடு. நா இதோ கொல்லை வரைக்கும் போயிட்டு வந்துடறேன்..." என்று ஒரு அவசரத்திற்கு ஒப்படைத்து விட்டுப் போக ஆளில்லை. சின்னப் பெண் சித்ர, வயசு பத்தானாலும் எந்த வேலைக்கும் லாயக் கற்றது. எதைச் சொன்னாலும் முகத்தைத் திருப்பும். காலைத் தரையில் "தப் தப்" பென்று உதைத்துக் கொண்டு நடக்கும். "போம்மா உனக்கு வேற வேலை யில்லை..." என்று முணுமுணுக்கும். "எனக்குப் படிக்க நிறையப் பாடம் இருக்குது. அடுப்பையும், மாட்டையும் பார்த்துக்கிட்டிருந்தா என் வேலையை யாரு செய்யறது.



வீட்டுக்கணக்குப் போடணும், தமிழ் எழுதணும். இதை யெல்லாம் நீயா செய்து தருவே...?" என்று முணுமுணுக்கும். அந்த முணுமுணுப்பிற்கு பயந்து யசோதம்மா அதனிடம் வேலை எதுவும் சொல்ல மாட்டாள். வழக்கமாக காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருப்பவள் லட்சுமி போனதிலிருந்து நான்கு மணிக்கே எழத் தொடங்கினாள். சோறாக்கி ஒரு குழம்பு செய்து வைத்துவிட்டுப் பின்னர் மாட்டுவேலைக்குப் போவாள். ஒரு நாள் தவறாமல் கடந்த இருபது நாட்களுக்கு மேல் ஓயாமல் செய்த வேலைகளில் சில சமயம் சலித்துப் போய் சின்னப் பெண்ணை கடிந்து கொள்வாள்.

"என்டி, உன் வயசுலே ஊர்ல எத்தனைப் பிள்ளைக சோறாக்கலை...நீ என்ன படிச்சு கலெக்டர் வேலையா பார்க்கப் போற...? ஒரு நேரம் இல்லாட்டி போனாலும் ஒரு நேரம் அம்மாவுக்கு ஒத்தாசையா இருக்கக் கூடாதா...? எப்போ பார்த்தாலும் இப்படி படிக்கறேன்னு சாக்கு சொல்லிட்டிருக்கியே...?"

"சரி. படிக்கலே...லட்சுமியக்கா மாதிரி வூட்டுலேயே உட்கார்ந்து சோறாக்கிட்டிருக்கேன். அதுக்கு அடிச்ச அதிர்ஷ்டம் மாதிரி எனக்கென்ன அதிர்ஷ்டமா அடிக்கப் போகுது? பட்டணத்துலேருந்து படிச்ச ஆபீசரு வந்து பைசா செலவில்லாம கொத்திக்கிட்டா போகப்போறான்...? நான் என்ன லட்சுமிக்காமாதிரி வெள்ளையா இருக்கனா...? அழகா இருக்கனா...? என்னை நீ உன்னை மாதிரி கறுப்பாத் தானே பெத்திருக்க...?"

"ஆமா...அக்காளைப் பார்த்து தங்கச்சி பொறாமைப் படு...ஊரே அவளுக்கு அடிச்ச அதிர்ஷ்டத்தைப் பார்த்து பொறாமைப்படுறது. பொறுமறது போதாதுன்னு நீயுங்கூட சேர்ந்துக்க..."

சுள்ளென்று சின்னப் பெண்ணிற்கு கோபம் தலைக்கு ஏறும்.

''அக்காளைப் பார்த்து நானா பொறாமைப்படப் போறேன்? ஏம்மா ஒரு பேச்சுக்கு சொன்னா இப்படிக் கோவிச்சுக்கறே...?''

லட்சுமியின் நினைப்பு வர யசோதம்மா சட்டென்று மௌனத்தில் ஆழ்ந்தாள். மனசு கனத்து கண்ணோரம் லேசாய் துளிர்த்தது. நெஞ்சு விம்மித் தணிந்தது. லட்சுமியைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமும், ஆசையும் அதிகரிக்க, அவள் உடைந்த குரலில் பேசினாள்,

''கொழந்த போயி இம்மா நாளாவுது. இன்னும் ஒரு வரிக் கடுதாசி போடலியே...புது ஊரு புது எடம் புது மனுசரு...நல்லாப் போய்ச் சேர்ந்தேன்னு கூட எழுதலியே? எனக்கென்னவோ பயமாயிருக்குடி சின்னப் பொண்ணு...''

''போம்மா நீ...'' என்று அலட்சியமாகச் சூள் கொட்டிற்று அது.

''அக்கா பட்டணமில்ல போய் இருக்குது. அங்க ஒவ்வொரு இடமா சுத்திப் பார்க்கவே பொழுது சரியா இருக்கும். பட்டணத்துல பார்க்க எத்தினி இடங்க இருக்குதாம் தெரியுமா...? உயிர் காலேஜு, செத்த காலேஜு, கண்ணாடி தொட்டிக்குள்ள கலர் கலரா மீனுங்க, சமுத்திரக்கரை ஓர மீனுங்க, சமுத்திரக் கரை ஓரமா அலை அடிக்கிற இடம்னு எத்தினி இல்ல...எல்லாம் பார்க்கிறதுக்கு நாளாவாதா? அதுவுமில்லாம அக்காவுக்கு எப்படிம்மா எழுதத் தெரியும்... அத்தான் தான் எழுதணும். அவருக்கு ஆபீஸ் போகணும். அக்காவை வெளிய கூட்டிட்டுப்போவணும். அதுவும் புதுசா கல்யாணம் கட்டிக்கிட்டவங்க. எப்படிம்மா நேரம் கிடைக்கும்...? எல்லாம் எழுதுவாங்க. கொஞ்சநாள் போயி எழுதுவாங்க...''

அதில் யசோதம்மா சமாதானமாகா விட்டாலும் சின்னப் பொண்ணு பெரிய மனுஷி மாதிரிப் பேசுவதைக் கேட்டு ஒரு பக்கம் சந்தோஷப்பட்டாள். ஆனாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சொன்னாள்,



''ஆமாண்டி...போய்ச் சேர்ந்தேன். சுகமாயிருக்கேன்னு எழுத எவ்வளவு நேரம் வேணும்...?''

''ஒரு வேளை தாமோதரமாமாவுக்கு அத்தான் லெட்டர் போட்டிருக்காரோ என்னவோ...?''

''அடடே...! இத்தனை நாள் இது தோணாமல் போயிடுச்சே எனக்கு... இதுக்குத்தான் படிச்சிருக்கணும்னு சொல்லறது...''

''ஏம்மா...இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடித் தானே படிச்சு என்ன செய்யப்போறே...பெரிய கலெக்டர் வேலையா செய்யப்போறேன்னு கேட்டே...இப்போ இப்படிச் சொல்றியே?''

''என்னவோ தெரியாமல் சொல்லிட்டேன்...நாளைக் காலம மொத வேலையா தாமோதரய்யாவைப் போய்ப் பார்த்துட்டு வரேன். அப்பத்தான் மனசு நிம்மதியாகும்...''

மறுநாள் பிற்பகல் வேலையெல்லாம் முடித்துக்கொண்டு தாமோதரனைப் பார்க்கப் போனாள் யசோதம்மா. அவள் போனபோது தாமோதரன் வாசல் கீற்றுக் கொட்டகையில நாடாக்கட்டிலை இழுத்துப்போட்டு வெயிலுக்கு இதமாகப் படுத்துக் கொண்டிருக்கவே யசோதம்மா தூணோரம் தயங்கி நின்றாள். ஆளரவம் கேட்டுக் கண்விழித்த தாமோதரன் தூண் பக்கத்தில் ஒதுங்கி நின்ற யசோதம்மாவைப் பார்த்தார்.

''யாரு....யசோதம்மாவா...?'' என்று மேல் துண்டால் முகத்தையும், மார்பையும் துடைத்தபடி எழுந்து உட்கார்ந்தார்.

''ஆமாங்கய்யா...'' என்று தயங்கினாள் அவள்.

''என்ன இந்த வெயில்லவந்திருக்க...?என்ன விசயம்...?''

''ஒண்ணுமில்லீங்க...'' என்று தலை நிமிர்ந்தவள் சட்டென்று சொன்னாள்.

''இந்தப்பொண்ணு போயி இத்தினி நாளாச்சுங்களே... இன்னும் ஒரு தகவலும் இல்லீங்களே அய்யா, அதான்

மனசுக்கு சங்கடமாக இருந்தது. உங்களுக்கு ஏதாவது விவரம் தெரியுமான்னு கேட்கத்தான் ஓடி வந்தேன்.''

அத்தனையும் கேட்டுக் கொண்டு தூக்கம் கலைந்த சலிப்பில்,

''எந்தப் பொண்ணு...?'' என்பதை நிதானமாகத் திருப்பிக் கேட்க யசோதம்மா இன்னமும் கவலைப்பட்டவளாகச் சொன்னாள்.

''என்னங்க எந்தப் பொண்ணுன்னு கேட்கறீங்க.... நம்ம லட்சுமி பொண்ணைத் தாங்க கேட்டேன்...''

''ஓ...ஹோ அவ கிட்டேயிருந்து கடுதாசி வரலைன்ற குறையா உனக்கு...? ஏன் யசோதம்மா, தெரியாமத்தான் கேட்கறேன் நீயும் அந்த வயசுல இருந்து தானே இந்த வயசுக்கு வந்திருக்கே...உனக்கு இது கூடவா புரியாது...? இளசுங்க, புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. அப்படித்தான் இருப்பாங்க. இன்னும் நாலு நாள் போனால் தானே கடுதாசி வரும்...இதுக்குப்போயி என்ன கவலை...?''

''இல்லீங்க...'' என்று மீண்டும் தலை குனிந்து கால் கட்டை விரலால் தரையில் கோலம் போட்ட யசோதம்மா அதே நிலையில் பேச்சைத் தொடர்ந்தாள்.

''ஊரு புதுசு... மனுசங்களும் புதுசுன்னுதாங்க கவலையா இருக்கு...''

''இதுல கவலைக்கு எங்க இடமிருக்கு, எல்லாருமே சொந்தத்துலயே— தெரிஞ்ச இடமாகவே கல்யாணம் பண்ணிக்கணும்னா நடக்குமா...?''

அதுக்குச் சொல்லலீங்க... பட்டணத்துல அவங்க குடியிருக்கிற வீட்டு விலாசம் கிடைச்சுச்சுன்னால் நானாவது சின்னப் பொண்ணை விட்டு ஒரு வரி எழுதிப் போடலாம்னு தாங்க வந்தேன்...''

''அவங்க விலாசமா...?'' என்று முகவாயைத் தடவியவர், ''என் கிட்ட இல்லியே...இரு. வீட்டுக்குள்ளார அவ கிட்ட இருக்குதான்னு கேட்டுப் பார்க்கறேன்...''



என்றவர் உள்ளே திரும்பி மனைவியைக் கூப்பிட்டார். வெளியில் வந்த அந்த அம்மாள் யசோதம்மாவைப் பார்த்துப் புன்னகைத்தாள், இயல்பாய்.

''வா யசோதம்மா... கல்யாணத்துக்கப்புறம் எங்க ஆளையே காணோம். பொண்ணு நல்லா இருக்காளா, கடுதாசி வந்துச்சா...?'' என்று கேட்க, தாமோதரன் குறுக் கிட்டார்.

''என்னடி நீ...? இன்னும் போய்ச் சேர்ந்த விவரம் தெரியலைன்னு அவளே கவலைபட்டுக் கிட்டு ஓடி வந் திருக்கா.... ஆமாம் உன் கிட்ட தங்கராசு வீட்டு விலாசம் கொடுத்தானா...?''

''என் கிட்டயா... இல்லீங்களே...'' என்று அவள் கையை விரிக்க அவர் சற்று நிதானமாய் யோசனை செய்துவிட்டுக் கேட்டார்.

''சரி, பட்டணத்துல அவன் எங்கே இருக்கான்ற விவரமாவது தெரியுமா...?''

''எனக்கென்னங்க தெரியும்; உங்களுக்குத்தானே அவனைப் பற்றி தெரியும்...''

''எனக்கு என்னடி தெரியும்...அவனாக வந்தான். தங்கினான். போனான், வேற என்ன தெரியும் எனக்கு அவனை பற்றி...?''

''சரி...சரி...இதையெல்லாம் பேசி யசோதம்மாவை இன்னமும் கலவரப்படுத்தாதீங்க... நல்ல வார்த்தை சொல்லி அனுப்புங்க...'' என்றவள் அவளே ஆறுதலாகப் பேசினாள்.

''ஒண்ணும் கவலைப்படாதே யசோதம்மா, நாளைக்கோ, நாளன்னிக்கோ கடுதாசி வரும். தங்கராசு பொறுப்பான பிள்ளைதான். நேரம் கிடைச்சிருக்காது அவ்வளவுதான். கவலைப் படாம போய்வா... எல்லாம் நல்ல செய்தியாகவே வரும்...''

''சரி'' என்று தலையாட்டிவிட்டுத் திரும்பிய யசோதம்மா பட்டணத்திலிருந்து கடிதம் வரும் என்ற எண்ணத்

தில் தினமும் தபால்காரரை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தொடங்கினாள்...

## 12. வேறு வழியில்லை !

ஒரே வாரத்தில் லட்சுமி உருக்குலைந்து போய் விட்டாள். பொன்நிறம் மங்கி, கண்கள் உள்ளுக்குள் இறங்கி சீவப்படாத தலையும், குளிக்காத உடம்பும், அழுதழுது ஓய்ந்து போய் இனி அழுவதற்கும் சக்தியற்ற மனமுமாக ஒடுங்கிப் போனாள். இந்த ஒரு வார அனுபவம் அவளை பலமாகத் தாக்கியிருந்தது. இப்படிக் கூட உலகம் இருக்கும் என்பதை தெரியப்படுத்திற்று. மனித உருவில் மிகப் பயங்கர மான மிருக மனங்கள் ஒளிந்து கொண்டிருக்கும் என்பது புரிய வந்தது. கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்த பெண்ணை தாலி கட்டிய மனைவியை விபச்சார விடுதிக்கு விற்கிற அதி கேவலமான ஆண் மிருகங்கள். பெண்ணைப் பெண்ணே விலை போட்டு வாங்கி அடித்து, உதைத்து தனி அறையில் அடைத்து வைத்து காசுக்காகக் கண்டவ விடம் போகச் சொல்கிற கொடிய பெண் மிருகங்கள், அந்தப் பெண் மிருகத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அதன் கர்ஜனைக்குப் பயந்து சொன்னதையெல்லாம் செய்கிற அடியாள் மிருகங்கள்...

இத்தனைக்கு நடுவில் பெயர் தெரியாத ஏதோ ஒரு நரகக் காட்டில் மருட்சியோடு சிக்கிக் கொண்ட மானாகத் தான் அகப்பட்டுக்கொண்டுவிட்ட கோரத்தை நினைத்தாள் லட்சுமி ராட்சஸிகளுக்கு இடையில் அசோகவனத்தில் அடைபட்டுக் கிடந்த சீதை மாதிரி அடைபட நேர்ந்த சோகத்தில் புலம்பினாள்.

இவை அத்தனைக்கும் காரணம் அம்மாவும், அப்பாவும் தான் என்று தோன்றியது. எப்படியாவது பொண்ணுக்குக்



கல்யாணமாகி விட்டால் போதும் என்று நினைக்கிற மனப் பாங்கு... பட்டிணத்திலிருந்து வந்து ஒருவன் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றால் யார் என்ன அவன்து, பின்னணி எது என்கிற எதையும் விசாரிக்காமல், உடனே கல்யாணத்தை முடித்து விடுவது... தங்களின் பாரம் நீங்கினதாக உணர்வது...

''இப்போ தவிக்கிறது யாரு.. மானத்துக்கும், உசுருக்கும் போராடறது யாரு...பசியோட இருட்டறையில் அடைபட்டிருக்கிறது யாரு...?இன்னும் எத்தனை நாளைக்கு உடம்பு இந்த அடி உதைகளைத் தாக்குப் பிடிக்கப் போகுதோ...? அடி வயிற்றில் கம்பியைக் காய்ச்சி இழுத்த சூடு புண்ணாகிக் கிடக்குது...இந்த மாதிரி இன்னும் ஒரு சூடு போட்டால் தாங்கவா முடியப் போவுது...?

கடவுளே...பட்டுனு என் உசிரைப் போக்கிடேன்... வேற ஆம்பிளை கையின் விரல் நகம் என் மேல் படறதுக்கு முன்னால் என்னைக் கொண்டு போயிடேன். அந்த மாதிரி மானம் போய் நான் உயிர் வாழ விரும்பலையே... கடவுளே என்னைக் கொண்டு போயிடேன்...''

ஆனால் அந்த விஷயத்திலும் கடவுள் அவளுக்கு மனமிரங்கவில்லை. உயிர் போவதற்குப் பதிலாக உயிருக் கும் மேலானதைப் போக்க விமலா ஏற்பாடு செய்தாள். அன்று வரை பொறுமையாக தானாக வழிக்கு வருவாள் என்று காத்திருந்து பார்த்துவிட்டு ராம்லாலைக் கூப்பிட் டாள்.

''மயிலே மயிலே இறகு போடுன்னு கெஞ்சிட்டிருந்தால் இனி போடாது ராம்லால், வெறும் அடி உதைகளுக்குப் பயந்தவள் இல்லை இவள். அவற்றால் இவளை சம்மதிக்க வைக்க முடியாது. ஏதோ கிராமத்துப் பெண்ணாக இருக்கே, பயந்து போய் வசப்பட்டு விடும்னு பார்த்தால் ஏழெட்டு நாளா முரண்டு பிடிச்சிட்டிருக்கு. இத்தனை நாளாக சம்பாதிக்க ஆரம்பிச்சிருந்தால் கணிசமா சம்பாதிச் சிருக்கலாம். அத்தனையும் விட்டாச்சு. இதுக்கு மேல்

கொடுத்த பணத்துக்கு நான் சும்மாயிருக்க முடியாது. ஒரு நாள் வட்டி என்ன ஆச்சு...? நாளையிலிருந்தாவது இவளுக்கு ரெகுலர் கஸ்டமர்ஸ் பிடிக்கணும். அதனால் இன்னிக்கு இவளை உன்கிட்டே விடறேன், நீ உன் வேலையை ஆரம்பி...எப்படியாவது காலையில் பொண்ணு தயாராயிடணும் என்ன...''

''ஜீ...ஹாங்...'' என்று ராம்லால் வேறு ஒருவனையும் உடன் அழைத்துக் கொண்டு லட்சுமி அடைக்கப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்...

அடுத்த அரை மணிநேரமும் அந்த அறையிலிருந்து லட்சுமியின் கதறல் ஒலியும் அழுகிற சப்தமும் கட்டிடத்தின் மேல் மாடி வரை எட்டிற்று. இது போன்ற ஈனமான கத்தல்களுக்குப் பழக்கப்பட்டுப்போயிருந்த மற்ற பெண்கள் ஒரு வினாடி லட்சுமியின் அறையை அனுதாபத்துடன் பார்த்து விட்டுப் பின்னர் இதையெல்லாம் கவனிக்க நேரமில்லை என்பது போல் தங்களின் வேலையில் இறங்கினர். அரை மணிக்குப் பின்னர் மெல்ல மெல்ல குறைந்து கொண்டே வந்த அலறல் லேசான முனகலாகத் தொடர்ந்து அதன் பின் முற்றிலுமாக நின்று போயிற்று.

மறுநாள் அதற்கும் மறுநாள் என்று அந்த அறையிலேயே பழகி மூன்றாம் நாள் லட்சுமியை வெளியே கொண்டு வந்து மற்ற பெண்களில் ஒருத்தியாய் விட்டு விட்டுப் போன போது விமலா அந்தப் பெண்களிடம் கண்டிப்பான உரத்த குரலில் இந்தியில் சொல்லிவிட்டுப் போனாள். ''இந்தப் பெண்கிட்டே பேசி நல்லபடியா நடந்துக்கச் சொல்லுங்க... இங்கேயிருந்து ஓடிப் போறதோ உயிரைப் போக்கிக்கிறதோ அத்தனை சுலபமில்லைன்னு தெரியப்படுத்துங்க...''

எல்லாப் பெண்களும் மௌனமாய் நிற்க விமலா ஒரு அதட்டு அதட்டினாள்.

''என்ன நிக்கறீங்க...? சொன்னது காதுல விழலை....?

''விழுந்தது...செய்யறோம்...''



''என்ன செய்வீங்களோ, எப்படிச் செய்வீங்களோ, நாளைக் காலைல நான் அனுப்பற கஸ்டமர் கிட்டே இவ சரியாக நடக்கணும். இல்லைன்னால் உங்களுக்கெல்லாம் சேர்த்து உதை விழும்...''

''ஐயயோ...வேணாம். நாங்க இவளை சரிப்படுத்தறோம்....'' அத்தனைபேரும் ஒரே குரலில் இந்தியில் வாக்குக் கொடுக்க விமலா நிம்மதியுடன் உள்ளே போனாள்.

அவள் தலை மறைந்ததும் அத்தனை பெண்களும் லட்சுமியைச் சுற்றி உட்கார்ந்து கொள்ள லட்சுமி தனக்கு ஏற்பட்ட இழப்பையும், அதிர்ச்சியையும் தாங்கிக் கொள்ள முடியாதவளாகக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்து ஒவ்வொருவராக இந்தியில் ஏதேதோ பேசத் தொடங்கினார்கள்.

மொழி புரியாத காரணத்தால் லட்சுமி மிரள மிரள விழித்தாள். அதில் ஒருத்தி அவளது சங்கடத்தைப் புரிந்து கொண்டு எழுந்து, மாடிக்கு ஓடி இன்னொரு பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து வந்தாள். புதிதாக வந்த அந்தப் பெண் மற்றவர்கள் சொன்னதை மொழி பெயர்த்ததோடு தானும் தமிழில் நிறைய புத்திமதிகள் சொன்னாள்.

''அழாதே...இந்த அழுகையினால் ஒரு பயனும் இல்லை....''

''இங்கு வந்து சேர்ந்த பின்பு தப்பி ஓடுவதோ இல்லை தற்கொலை செய்து கொள்வதோ முடியாத காரியம்...''

''எங்களில் நிறையப் பேர் உன்னை மாதிரி இங்கே மாட்டி கொண்டவர்கள்தான்....''

''நான் கூட முதலில் உன்னைப் போலத்தான் அடம் பிடித்தேன்....பின்பு வேறு வழியில்லை என்று பணிந்துபோய் விட்டேன்...''

''இதோ பார்த்தாயா, உனக்காவது ஒரு சூடு....எனக்கு இந்த மாதிரி மூன்று சூடுகள்...இனிமேல் நீ அடம் பிடிக்கிறதில் அர்த்தமில்லை. இந்த மூன்று நாட்களில் நாலைந்து

ஆண்களுக்கு நீ பலியாகி விட்டாய்...ஒருதரம் கெட்டால் என்ன, ஒன்பது தரம் கெட்டால் என்ன...பேசாமல் விமலா நிதிக்குப் பணிந்து போய் விடு....''

''இதற்கப்புறம் நீ கன்னிப்பெண் இல்லையே...இங்கிருந்து வெளியில் போனாலும் உன்னை யாரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையே...அப்படி இருக்க எதற்காக வீண் பிடிவாதம்...?''

''உன் அப்பா, அம்மா கூட இந்த இடத்திலிருந்து வந்தது தெரிந்தால் உன்னை ஒதுக்கித்தான் வைப்பார்கள். இதை விட்டு வெளியில் போனால் சமூக அந்தஸ்தோ பாதுகாப்போ கிடைக்கப் போவதில்லை. அதை விட இங்கேயே இருக்கலாம் இல்லையா...?''

''நாங்கள் எல்லோரும் இல்லையா...? எங்களில் ஒருத்தியாக இருக்க என்ன கஷ்டம் உனக்கு...?''

''ம்...எழுந்திரு விமலா. நிதி வருவதற்குள் முகம் கழுவி பவுடர் பூசி, தலைவாரி பொட்டிட்டு வேறு டிரஸ் கொடுப்பாங்க. மாற்றிட்டுத் தயாராக இரு... அதைப் பார்த்தால் அவள் சந்தோஷப் படுவாள்...''

''இதப் பாரு மதராஸி...முதலில் தான் கஷ்டமாக இருக்கும். அறுவறுப்பாக இருக்கும். அப்புறம் பழகிப்போய் விடும். நாளாக ஆக யார் அதிகம் சம்பாதிக்கிறார்கள் என்பதில் போட்டி கூட ஏற்பட்டு விடும்.

அவர்கள் சொல்லச் சொல்ல லட்சுமிக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது. அவர்கள் சொன்னதிலிருந்த நிஜம் நெஞ்சைத்தாக்கிற்று. ஒவ்வொரு முகமாகப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இன்னும் சிறிது நாளில் தன் முகமும் இது போலத்தான் மாறிப் போகும்.

மஞ்சள் பூசிக்குளித்த பளபளப்பும், பரிசுத்தமும் போய்—இவர்களின் முகத்தில் தெரிகிற மாதிரி பார்த்த உடனே கண்டுபிடிக்கக்கூடிய ''அந்தக்களை'' தட்டிவிடும்.



இப்போதே அவள் பரிசுத்தமானவள் இல்லை. பழைய லட்சுமி இல்லை... அந்த பட்டிக்காட்டு வெருளி லட்சுமி இல்லை...

இப்போது இவள் அசோக வனத்து சீதை... இல்லை... இல்லை...சீதையை ராவணன் தொடக் கூட இல்லை. தொடுகிற தைரியமோ, பலமோ இல்லை. காரணம்—சீதையிடமிருந்த அந்த அதீதமான சக்தி...

அந்த காலப் பெண்களிடமிருந்த அந்த சக்தி இப்போதையப் பெண்களிடம் ஏன் இல்லை...? பார்த்தவுடன் எரிக்கிற சக்தி— அந்நிய ஆடவனை அருகில் நெருங்க விடாமல் தடுக்கிற சக்தி - பலாத்காரமாக அடைய முடியாத சக்தி...

அந்த மாதிரி சக்தியற்ற காரணத்தினால் தானே இந்த அசோக வனத்தில் இத்தனை சீதைகள் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அன்றைய ஒரு ராவணனுக்குப் பதிலாக இன்று ஓராயிரம் ராவணன்கள். மேலும், ராவணன் ஓரளவு நல்லவன். சீதையின் சம்மதமின்றி அவளைத் தொடப் பயந்தவன். அதற்குக் காரணம் அவன் பெற்ற சாபம் என்பார்கள். விருப்பமற்ற பெண்ணைத் தீண்டினால் தலை சுக்கு நூறாக வெடித்துப் போகும் என்பார்கள்...

அதே போல ஒரு சாபம் இப்போதைய எல்லா ஆண்களுக்கு இருக்குமானால்...? இரண்டு நாட்களுக்கு முன்னர் கதறக் கதறத் தன்னைத் தீண்டிய ராம்லால், அவனுடன் வந்த அந்த இன்னொரு மனிதன். மறுநாள் வந்த விக்ரம் என்ற முரட்டு மனிதன்...அதன் பின் வந்த...

கடவுளே இவர்களின் தலைகள் ஏன் வெடித்துச் சிதறவில்லை...தன்னை வலுக் கட்டாயமாக அடிமைப்படுத்தி வெறும் முரட்டு உடல் வலிமையால் அனுபவிக்கிற ஆணின் தலைகள் வெடிக்க வேண்டுமென்ற ஒரு வரத்தை - அந்த ஒரு ஆயுதத்தை - அந்தப் பாதுகாப்பை மட்டுமாவது இப்போதைய பெண்களுக்கு கொடுப்பதற் கென்ன...?

எதற்காக எங்களை நிராயுதபாணியாக்கி இந்தக் காட்டு மிருகங்களுக்கிடையில் சிக்க வைத்தாய்... அசோக வனத்தில் அடைபட்ட சீதைக்காவது ராமன் வந்து காப்பாற்றி, விடுவித்து அழைத்துப் போவான் என்கிற நம்பிக்கை இருந்தது. எங்களுக்கு எந்த நம்பிக்கை இருக்கிறது...? எந்த ராமன் வந்து விடுவிக்கப் போகிறான்... ஒ...இப்போது ராமன் எங்கே இருக்கிறான்...? தங்கராக மாதிரி மாரீசன்களும், வெறும் ராவணர்களுமே நிறைந்த உலகமல்லவா இது...? இதைப் போன்ற அசோக வனத்தில் அகப்பட்டுக் கொண்ட என் போன்ற அப்பாவி அபாக்கிய வதிகளின் விடுதலை எப்போது...? யார் வந்து விடுவிப்பார்கள்; விடுதலை என்ற ஒன்று எங்களுக்கு உண்டா, இடையாதா...?

பதில் வராத – அல்லது தெரியாத அத்தனைக் கேள்விகளையும் இலக்கணமற்ற சாதாரணத் தமிழில் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு மீண்டும் லட்சுமி குமுறிக் குமுறி அழத் தொடங்க - மற்ற எல்லாப் பெண்களும் எதுவும் செய்ய வகையற்றஇயலாத்தனத்துடன் அவளையே பார்த்தபடி மௌனமாக நின்றிருக்க -

இமே விமலா அதே மாதிரி இன்னொரு பெண்ணைக் காரில் அழைத்துக் கொண்டு வர அவள் இறங்க மறுக்க ராம்லால் குண்டு கட்டாகத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான்.

அந்த அசோக வனத்துப் புதிய சீதையின் கதறலில் லட்சுமி என்கிற பழைய சீதையின் குமுறல் அடங்கித் தேய்ந்து தீனமாயிற்று...

(முற்றும்)

# கனகாம்பரப் பூக்கள்

## 1

தூங்கி இரண்டு நாட்களாயிற்று. அடி வயிற்றிலிருந்து பயம் பந்தாகக் கிளம்பி நெஞ்சை அடைத்தது. புரண்டு புரண்டு படுத்து விடிவிளக்கையும், ஜன்னல் வழியாகத் தெரிந்த வானத்தையும், பூதமாய் அசைந்த வேப்ப மரத்தையும் மாறி மாறி வெறித்துக் கொண்டிருந்தாள் ராஜேஸ்வரி. எல்லோரும் நிச்சிந்தையாய்த் தூங்கிக் கொண்டிருக்க, தான் மட்டும் விழித்தபடி மனதிற்குள் அல்லல் பட்டதில் பயம் அதிகமாயிற்று. அவளை அடுத்தடுத்த பாய்களில் வரிசையாக மூன்று தங்கைகளும், சுவர் ஓரம் அம்மாவும் படுத்திருந்தார்கள். சற்றுத் தள்ளி எதிர் அறையில் அப்பா அந்தப் பெரிய ஒற்றைப் பலகையில் பழைய பஞ்சு மெத்தையை விரித்துப் படுத்து குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்.

அப்பா படுத்திருந்த அந்த அறை இந்தக் கூடத்தின் அளவு இருக்கும். சுவர் ஓரம் அடுக்கப்பட்டிருந்த இரு டிரங்குப் பெட்டிகளும், வரிசையாய் நின்றிருந்த இரண்டு மூன்று அரிசி டப்பாக்களும் மற்ற சாமான்களுமாகச் சேர்ந்து இந்தக் கூடத்தை அந்தப் படுக்கை அறையை விடச் சிறியதாகக் காட்டின. அந்த இடத்தில் நான்கு பேர் படுப்பதே சிரமம் அம்மாவையும் சேர்த்து ஐவராக ஒண்டிக் கொண்டு படுத்திருந்தனர். அம்மா சற்று ஸ்தூல சரீரி. இடுக்கிக் கொண்டு படுப்பது அவளால் ஆகாத காரியம். புரண்டு ஒருக்களிக்கிற போது அவளுக்குத் தாராளமாக இருக்க வேண்டும் கையும், காலும், யார் மீதும் இடிக்கக் கூடாது.

''ஏண்டி விசாலா, ஜெய ஸ்ரீ, எல்லாத்துக்கும் தான் நம் வீட்டில் பற்றாத குறைன்னால் இடத்துக்கு என்ன பஞ்சம் வந்தது. கொஞ்சம் தள்ளி எனக்குத் தாராளமாக இடம் விட்டுத்தான் படுங்களேன்...''

''எங்கேம்மா தள்றது. இனிமேல் தள்ளினால் நாங்க பாக்யத்தை நெருக்க வேண்டியது தான். நாங்க அவளை நெருக்கினால் அவள் பெரியக்கா மேலே போய் விழுவாள். பாவம் ராஜேஸ்வரி அக்கா. தாங்கமாட்டாம்மா...''

''சரிடி... இந்தச் சின்ன அறையிலேயே ஒண்டிண்டு உடம்பைத் திருப்பக்கூட முடியாமல் திண்டாடுவானேன். யாராவது ஒருத்தி போய் அப்பா ரூமுல படுக்கக்கூடாதா...? அங்க தான் நிறைய இடமிருக்கே...''

''ஐயயோ... வேணாம்ப்பா...அங்க போறதைவிட இங்கே நெருக்கிண்டே படுக்கலாம். படுக்க இடமில் லேன்னால் உட்கார்ந்துண்டேயாவது தூங்குவோமே தவிர யாராவது அவர் ரூமுக்குப் போவாங்களா...?''

''இப்படி ஒருத்தியும் போகமாட்டேன்னால் என்னடி பண்றது...'.

''ஏம்மா...இத்தனை சொல்றியே... நீ தான் போயேன்''

''நான் தானே...?'' ஆற்றாமையும், வெறுப்பும், கோபமும் பொங்க மார்பில் அடித்துக் கொள்வாள் அவள்' முகம் சுறுசுறுவென்று மாறி கண்களில் சட்டென்று நெருப்புப் பற்றிக் கொள்ளும்.

''ஆமாம்...மத்தியானமெல்லாம் வாங்கிக் கட்டிக்கிறது போறாதுன்னு ராத்திரியும் போய் வாங்கிக் கட்டிக்கன்றியா.''

''இல்லம்மா...நீ பாட்டுக்கு ஒரு ஓரமாத்தானே படுத் துக்கப்போறே...?''

''ஆமாண்டி ஒண்ணுமே தெரியாதவ மாதிரி—தினம் தினம் இந்த வீட்டுல நடக்கிற ரகளை தெரியாதவமாதிரி பேசறா பாரு... என் வயிற்றில் பிறந்ததுகள் எல்லாம்



கூடப் பேசற நிலைமைக்கு ஆகிப் போச்சு... அந்த அளவுக்கு நான் தாழ்ந்தியாப் போயிட்டேன். கேலிப் பிண்டமா இருக்கேன். எல்லாத்துக்கும் அந்த மனுஷன்தான் காரணம். கட்டினவன் சரியா இருந்தால் நான் ஏன் இப்படி நிக்கப் போறேன்...''

சொன்னவள் பயந்து போனாள். அம்மாவின் கத்தல் அப்பாவின் காதுகளை எட்டி அந்த ராத்திரி நிசப்தத்தில் வழக்கப்படி அடி உதை என்று ரஸாபாஸமாகி இரவு முழுதும் தூக்கமற்று அத்தனைப் பேரும் அழுது கொண்டிருக்கும்படி நேர்ந்து விடப் போகிறதே என்கிற பதைபதைப்பில் குரலைத் தழைத்து கெஞ்சுகிற மாதிரி அம்மாவிடம் பேசுவாள்.

''ஐயோ...நான் இப்போ என்னம்மா சொல்லிட்டேன். எதுக்கு இப்படிக் கோபப்படறே...? அப்பா காதுல விழுந்து ரகளையாகப் போறதும்மா...''

''ரகளையில்லாமல் நம்ம வீடு எப்போ நிம்மதியா இருந்திருக்கு...''

''சரிம்மா...இப்போ ராத்திரி பத்து மணிக்கு ரகளை வேணாம்...பக்கத்துப் போர்ஷன், எதிர் போர்ஷன்காரா எல்லாரும் தூங்கறா...''

''ஆமாண்டி... நம்ம வீட்டு விஷயம் அவாளுக் கெல்லாம் தெரியாமலா இருக்கு...''

''ஆனாலும் இப்போ கத்தல் வேணாம்மா. தூங்கற இந்தக் கொஞ்ச நேரத்துலயாவது எங்களுக்கு நிம்மதி கிடைக்கட்டும். வாயை மூடிண்டு படுத்துக்கோம்மா. நான் எவ்வளவு நகரணுமோ நகர்ந்துக்கறேன். வீணான கலாட்டாவே வேணாம்...''

''எல்லாரும் சேர்ந்து வாயை மூடிக்கோ, வாயை மூடிக்கோன்னு என்னை அடக்க வாங்க, அப்பாகிட்டே போய் யாரும் ஒரு வார்த்தை கேட்காதீங்க. அங்க போய் கை கட்டி, வாய் பொத்தி அடிமை மாதிரி நில்லுங்க...''

இப்போ தங்கைக்குப் பரிந்து மற்ற மூவரும் பேசத் தொடங்குவார்கள்.

''ஏம்மா, உனக்காக நாங்க அப்பாகிட்டே சண்டையே போடலேன்னு சொல்லு. அடி வாங்கிக் கட்டிக்கலைன்னு சொல்லு. அப்பாகிட்டே அடி வாங்கிய விசாலத்துக்குக் காது கேட்கலை. கன்னத்துல அறைஞ்ச அவளுக்குக் காது போச்சு. ஜெயஸ்ரீக்கு எப்போ போகப் போறதோ தெரியலை. உங்க சண்டையைத் தடுக்க வந்து பாக்கியத் தோட வலது கை கண்டு விரல் வளைஞ்சு உபயோக மில்லாமல் நிற்கிறது. அப்புறம் என்னைப்பத்தி சொல்லவே வேண்டாம். உனக்கே தெரியும். இவை அத்தனையும் எதனால் வந்ததும்மா...? உனக்காக அப்பா உன்னை அடிக்கிற போது தடுத்து நாங்க சண்டை போட்டதால் தானே வந்தது. அப்படியிருந்தும் ஏம்மா எங்களைத் திட்டறே...?''

அதைக் கேட்ட பின் அம்மாவின் கோபம் லேசாய் உயரத் தொடங்கினதில் குரலும் சற்று உயரும்.

''ஏண்டி, என்ன திட்டிட்டேன் நான் உங்களை இப்போ...? பாவிங்களேன்னா, சனியன், பீடைன்னு சொன்னேனா. என்னடி சொன்னேன்...?''

''ஐயோ...ஒண்ணும் சொல்லலேம்மா, ஒன்னுமே சொல்லலை. எங்களை விடம்மா...ஏய் விசாலா நகர்ந்து அம்மாவுக்கு இடம் கொடுத்துட்டே இல்லே...''

''ஓ...எப்பவோ கொடுத்துட்டேங்கா...''

''அதை முதல்லயே கொடுத்துத் தொலைச்சிருந்தால் இத்தனை வாக்குவாதங்களும் தேவையே இல்லை, இல்லையா...''

''ஆமாண்டி, தொலைக்கிற நிலைமைக்கு வந்துட் டேன். என்ன செய்யறது... நாதியற்று நின்னால் நாய் கூடப் பேசத்தான் பேசும்...''

''என்னம்மா நீ எதைச் சொன்னாலும் பிடிச்சுக்கறே...?''

''பிடிச்சுக்கிறதுக்கு நான் என்ன பேயா பிசாசாடி...''



''போச்சுடா—'' என்று ராஜேஸ்வரி லேசாய் தலையில் அடித்துக் கொள்வாள். எதையோ சொல்ல வாயெடுக்கும் போது அப்பாவின் குரல் உள்ளேயிருந்து உறுமலாக வரும்.

''என்ன சத்தம் அங்கே...? வரவரப் பொம்மனாட்டி குரல் ஆம்பிளைக்கு மேல உயருது...''

''ஒன்னுமில்லேப்பா...'' என்கிற ஈனஸ்வரத்துடன் சட்டென்று அடங்கும். விளக்குகள் அணைக்கப்படும். எல்லார் உடம்பும் பாயில் ஒடுங்கும். ஆனாலும் அதற்குப் பின்னரும் அம்மா மட்டும் முணுமுணுவென்று அந்த அறையைவிட்டு வெளியில் போகாத குரலில் ஏதேதோ தனக்குள் முனகிக் கொண்டிருப்பாள்...

அம்மாவிற்கும் அப்பாவிற்குமிடையில் பெரிதாய் ஒரு பள்ளம் விழுந்து போயிருப்பது குழந்தைகள் அத்தனைப் பேருக்கும் தெரிந்துதான் இருந்தது. எதனால் இந்தப்பள்ளம் என்று எப்போதும் யோசிக்கிற மாதிரி அப்போதும் யோசித் தாள் ராஜேஸ்வரி. யோசிக்க யோசிக்க இது வெறும் பள்ள மில்லை என்பது புரிந்தது. சின்னதாக ஏற்பட்டுப் பின்னர் தானாக மூடிக்கொண்டு விடுகிற ரகமில்லை என்பது தெரிந் தது. இது ஒரு பெரிய இடைவெளி. பூகம்பம் காரணமாக ஏற்பட்ட ஆழமான பிளவு. கிட்டத்தட்ட தன்னுடைய பன்னிரெண்டாவது வயதிலிருந்து இந்தப் பிளவை இவள் உணர்ந்து வருகிறாள். அதன் காரணமும் தெரிந்துதான் இருந்தது.

அப்பா கிளம்பி பெங்களூர் போகிறபோதெல்லாம் இந்தப் பூகம்பம் வெடிக்கும். மாதம் ஒரு முறையாவது பெங்களூர் போக வேண்டும் அவருக்கு. அவளைப் பார்க்க வேண்டும். அந்தக் குழந்தையைக் கொஞ்ச வேண்டும். சட்டை, பாவாடை என்று எதையாவது வாங்கித் தந்தாக வேண்டும். அப்பா கிளம்புகிற செய்தி தெரிந்த உடனே அம்மா அடிபட்ட புலி மாதிரி உறுமத் தொடங்குவாள். புஸ்புஸ்ஸென்று சீற ஆரம்பிப்பாள்.

''ஒளம்பியாச்சு போல இருக்கே...ஒரு மாசமாயிடுத் தோல்னோ...உடம்புக்கு சுகம் வேணாமா...? அவளோட படுக்கைல உருண்டு பெரண்டுட்டு வந்தா எல்லாம் சரியாப் போயிடும்...''

''ஆமாம். சரியாத்தான் போகும். அதற்காகத்தான் போறேன். நீ என்ன பண்றியோ பண்ணிக்க...''—அப்பா வின் பதில் சீறல் மூர்க்கமாக வரும்.

''இந்தத் திமிரும் அகங்காரமும்தானே மனுஷனை ஆட்டிப்படைக்கிறது. சம்பாதிக்கிற திமிர். கைல நாலுகாசு வச்சுண்டிருக்கிற திமிர். இத்தனைப் பெண் குழந்தைகளை வச்சுண்டு பேசற பேச்சா இது...? நாலோட போவானேன். குறையா போன ரெண்டையும் சேர்த்துண்டா ஆறாகிறது. அதுக்கப்புறமுமா மனுஷனுக்கு வெறி அடங்காது...? ஆசை போகாது...? த்தூ...என்ன ஜென்மம் இது...? கட்டின பெண்டாட்டி கல்லாட்டம் இருக்க இன்னொன்னைத் தேடிண்டு ஓடற ஜென்மம் நாய் ஜென்மம்...''

''என்னடி சொன்னே...?''—அப்பாவின் கையில் அம்மா வின் தலைமுடி கொத்தாகப் புரளும்.

''நான் நாயா, நீ நாயா...? யார் இப்போ குலைக் கிறது...? அப்படித்தாண்டி போவேன். எனக்கு உடம்பு திமிருதான். இன்னும் அடங்கலை. போறலை. அதான் போறேன். அது என் இஷ்டம். போவேன். அதைக் கேக்க நீ யாருடி கையாலாகாத நாயே...''

''யாரு கையாலாகாதவ..? நானா...? கையலாகதவளா வரிசையா நாலு பெத்துத் தருவா...? உனக்கு ஊர் மேல ஓடற புத்தி, ஓடறே...யார் கிடைப்பான்னு அலையற புத்தி...அவளும் நீ வீசிப் போடற பணத்துக்கும், காசுக்கும் ரொட்டித்துண்டு நாயா அலையறா... சீ... வெட்கம், மானம், ரோஷம்கெட்ட ஜென்மங்கள்...''

அவ்வளவுதான். மடமடவென்று அம்மாவின் முகம், முதுகு, மார்பு என்று இடம்பாராமல் அடிகள் ஆக்ரோஷ மாய் விழ,



''யாரை நீ ஒருமையில் பேசற...? யாரை நீ—நீன்னு மரியாதை இல்லாமல் சொல்ற...? நான் அப்படித்தான் அலைவேன். நான் சம்பாதிக்கிறகாசு. என் இஷ்டப்படி செலவழிப்பேன். உங்க அப்பன் வீட்டுலேருந்து கொண்டு வந்தது ஒன்னுமில்லை...''

''எங்கப்பா எனக்குத்தான் தருவார், இந்த மாதிரி கண்ட கண்ட தேவடியாளைத் தேடிண்டு ஓடறதுக்குக் கூடவா தருவார்...?''

''என்னடி சொன்ன—யாரு தேவடியாவா... நீ...உன் குடும்பம்...அத்தனை பேரும் தேவடியாதான்...''

''ஐயோ...ஐயோ...'' என்று அலறுவாள் அம்மா. ''அடப் பாவி. உன் வாய் அழுகாதா...? இழுத்துண்டு போகாதா...? பணமெல்லாம் தொலைஞ்சு, நீ நிக்கிற காலம் வராதா...?''

ஒவ்வொரு வார்த்தைக்கும் மண்ணில் புரட்டப் படுவாள். காலால் உதைக்கப்படுவாள். கண், முகம், கன்னமெல்லாம் வீங்கி, உதட்டில் பல் குத்தி ரத்தம் வடியும். அத்தனையையும் வாங்கிக் கொண்டு அறை மூலையில் முடங்கி முனுமுனுப்பதை மட்டும் விட மாட்டாள்.

'பாவி நீ நன்னா இருப்பியா...'

'உன் கை உடையாதா...?'

'கண் அழிஞ்சு நிக்க மாட்டியா...'

'பணமெல்லாம் போய் தடுமாற மாட்டியா...?'

அம்மாவின் அந்தச் சாபம்தானோ என்னவோ அப்பா விற்கு வேலை போயிற்று. உடம்பு சரியில்லாமல் தள்ளிற்று. சின்னச் சின்னதாக ஆபரேஷன்கள் ஆயின. வீட்டை விட்டு வெளியூர் என்று எங்கும் நகர முடியாதபடி பணத் தாலும், உடம்பாலும் அடித்துப் போட அம்மா அப்போது அதைத் தனக்குக் கிடைத்த வெற்றியாக நினைத்துச் சொன்னாள்,

'பாத்தியா... நான் பதிவிரதை.. என்னைப் போய் கண்டபடி உளறினாம் தெய்வத்துக்குப் பொறுக்கலை. அடிச்சுப் போட்டுடுத்து...'

'சரிம்மா...விடு அவர்தான் இப்போ இப்படி இருக்காரே...இந்த நிலைமையில் என் திட்டற...?'— ராஜேஸ்வரியோ, பாக்யமோ ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும், பாட்டிலில் அடைப்பட்ட பூதம் கார்க்கைத் திறந்து வெளிவந்த மாதிரி வார்த்தைகள் சரமாரியாக வெளிவரும். அப்பாவை விட்டுவிட்டு இவர்களைப் பிடித்துக் கொண்டு விடுவாள்.

அதற்குப் பயந்தே இவள் அம்மாவிடம் எதற்கும் போவதில்லை. அதனால் அப்போதைய பயத்திற்கும், உள்ளுக்குள்ளிருந்து சங்கடப்படுத்தி, துக்கத்தைத் தவித்துக் கொள்ளவும் அம்மாவை எழுப்புவதில் என்ன பலன் இருக்கப்போகிறது என்று யோசித்தாள் ராஜேஸ்வரி. அம்மா எப்போதுமே பெற்றவளுக்குரிய பாசத்தோடும் பரிவோடும் நடந்து கொண்டதில்லை. எதற்கெடுத்தாலும் சிடுசிடுக்கத்தான் அவளுக்குத் தெரியும். வெடுவெடு வென்று பேசத்தெரியும். குற்றம் சொல்லவும், குறை கண்டு பிடிக்கவும்தான் தெரியும். இதமாகப் பேசவோ, மனதை வருடிக் கொடுக்கவோ தெரியவோ தெரியாது...

அப்பாவின் அடி உதைகளால் அம்மாவின் உடம்போடு மனதும் சேர்ந்து மரத்துப் போயிருக்க வேண்டும். பாச பந்தமற்று விடுபட்டிருக்க வேண்டும். வெறும் சமைக்கிற இயந்திரமாக மட்டும் தன்னை மாற்றிக் கொண்டு விட்டிருக்க வேண்டும்.

அதன் காரணமாகவே அன்று காலையில் அப்பா வந்து பெண் பார்க்க வருகிற செய்தியைச் சொன்னதும் யார் வீட்டிற்கோ, யாரோ வருகிற மாதிரி பேசாமல் இருந்தாள், அந்த அவமதிப்பில் உறுமத் தொடங்கினார் அப்பா.



"காதடைச்சா போச்சு. சொன்னது விழுலை...? இன்னிக்கு சாயந்திரம் நம்ம ராஜேஸ்வரியைப் பொண்ணு பார்க்க வராளாம்..."

அம்மா ஏதோ முணு முணுக்க அப்பா அதட்டினார்.

"முணுமுணுப்பு என்ன வேண்டிக்கிடக்கு. பல் அத்தனையும் தட்டி கைல கொடுத்துடுவேன்..."

"ஆமா நான் ஈன்னு வாயைத் திறந்து தட்டற வரைக்கும் காட்டிண்டிருப்பேன்..."

"என்னிக்காவது ஒரு நாள் தட்டி கைல கொடுக்கறேனா இல்லையா பாரு...நல்ல விஷயம் சொல்றபோது முணுமுணுப்பு என்ன வேண்டிக் கிடக்கு...?"

"ரொம்ப நல்ல விஷயம். இப்ப கல்யாணம் வேணும்னு அவ அழுதாளா...? பண்ணிண்டு நான் சீராட்டறது போறாதா?"

"சும்மா எதிர்த்துப் பேசிண்டிருந்தே அப்புறம் நடக்கறதே வேற...எழுந்து போய் வேலையைக் கவனி. உன் பொண்ணை இன்னிக்கு வேலைக்குப் போக வேணாம்னு சொல்லு. சாயங்காலமா அவா வறா.. பளிச்சுனு டிரஸ் பண்ணி ரெடியா இருக்கச் சொல்லு..."

"பளிச்சுனு டிரஸ் பண்ணிக்க என்ன இருக்கு...? நல்லதா ஒரு பட்டுப் புடவை, நகை ஏதாவது உண்டா...? நாலு பெத்திருக்கோமே, அதுகளுக்குச் செய்யணுமே என்கிற நினைப்பிருக்கா?...ஒரு திருகாணிகூட ஒருத்திக்கும் பொன்னுல கிடையாது. அழுது வடிஞ்சுண்டு கவரிங் நகையைப் போட்டுண்டு வளைய வருதுங்க, நமக்கு இந்தக் கவலை, அக்கறையெல்லாம் ஏது...? நாலு பணம் கைல கிடைச்சா நாய் ஓடற மாதிரி நாற்பது தரம் பெங்களூருக்கு ஓடியாறது. கைக் காசைத் தொலைச்சுட்டு வந்தாறது. அவ மினுக்கறா...நகையும், புடவையுமா?...இங்கே நானும் என் குழந்தைகளும் சாப்பாட்டுக்கே கதிகெட்டு நிக்கறோம்."

''இதுக்கு மேல இங்கே பேசிண்டு நின்னுண்டிருந்தே பெல்ட் முறிஞ்சுப் போயிடும் ராஸ்கல்...''

''முறியும், முறியும்...'' - அடிவாங்க சக்தியற்ற காரணமோ, அல்லது பயமோ, வெறுப்போ தெரியவில்லை, அம்மா எழுந்து வெளியில் வந்தாள்.

பெண் பார்க்க வரப்போகிற விஷயத்தை கரகரத்த குரலில் தெரியப்படுத்தினாள்...

''ராஜி, அப்பா சொன்னது காதுல விழுந்தது இல்லே... இன்னிக்கு யாரோ உன்னைப் பெண் பார்க்க வராளாம். அதனால ஸ்கூலுக்குப் போக வேணாம்னு சொல்லச் சொன்னார்...''

பள்ளிக் கூடத்திற்குப் போக காலையில் கட்டிக் கொண்டிருந்த பழைய புடவையை அவிழ்த்து கஞ்சி போட்டு இஸ்திரி பண்ணியிருந்த கைத்தறிப் புடவைக்கு மாறிக் கொண்டிருந்த ராஜேஸ்வரி ஒரு நிமிடம் தயங்கினாள். அந்தத் தயக்கத்துடன் அதிர்ச்சியும் எட்டிப் பார்த்தது. இது என்ன புதுப்பிரச்சினை என்று தோன்றிற்று. 'திடீரென்று இப்போது எதற்காகத் தன்னைப் பெண் பார்க்க வரவேண்டும்...? தனக்கு எதற்குக் கல்யாணம்...? கல்யாணம் பண்ணிக் கொள்கிற நிலைமையிலா தான் இருக்கிறோம்...? பணப்பிரச்சினை ஒரு பக்கம் இருக்கட்டும். டாக்டர்தான் கல்யாணமே கூடாது என்று சொல்லியிருக்கிறபோது அப்பா எதற்காக இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறார்...? யார் போய் அவரிடம் கேட்பது...? அம்மாவிடம் கேட்டால் பதில் வருமா...? தான் படுகிற இத்தனைக் கவலைகளையும் அந்த அம்மா அல்லவா பட்டிருக்க வேண்டும். ஆனால் அவள் தான் மிகச்சுலபமாக 'யாரோ பெண் பார்க்க வருகிறார்களாம்' என்று தனக்குச் சம்பந்தமில்லாதது போல் சொல்லிவிட்டுப் போகிறாளே...வரப் போகிறவர்கள் யார்? பிள்ளை என்ன செய்கிறான்... இதையாவது அம்மா தெரிந்து கொண்டாளா...?'



ராஜேஸ்வரி அம்மாவைத் தேடிக்கொண்டு பின்பக்கம் போய் மெதுவாக விசாரிக்கத் தொடங்கினாள்.

''எம்மா... யார் வரப்போகிறாளாம் தெரியுமா...?''

''பிள்ளை விட்டுக்காரா....?''

''பொண்ணு பார்க்கணும்னால் பிள்ளை வீட்டுக்காரா தான் வருவாம்மா... அது கூடவா தெரியாது...? அதைக் கேட்கலை நான், பிள்ளை யாரு...? என்ன படிச்சிருக்கார்? எந்த வேலையில் இருக்கார்? அப்பா, அம்மா இருக்காளா? கூடப் பிறந்தவா எத்தனை பேர்.... இதைத்தாம்மா கேட்டேன்...''

''ஏண்டி இத்தனை விவரமும் உங்கப்பா என் கிட்டே சொல்றாரா...? நீயே போய் கேளேண்டி...''

''நான் போய் கேட்கிறதா...? எம்மா அத்தனை விவஸ்தை இல்லாதவளா...? அதுவும் அப்பாகிட்ட கேட்க முடியுமா...? உன் கிட்டே சகஜமா கேட்கலாம்...''

''அப்பா சகஜமா சொன்னால் நான் உன்கிட்டே சகஜமா சொல்ல முடியும். ஏதோ எனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லாத மாதிரின்னா முறைக்கிறார். அதெல்லாம் உனக்கு எதுக்கு. எல்லாம் நான் விசாரிச்சு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதையெல்லாம் தெரிஞ்சுண்டு நீ என்ன பண்ணப் போறே...? பேசாமல் போய் உன் பெண்ணை இன்னிக்கு லீவு போடச் சொல்லு போன்னு சுள்ளுனு மூஞ்சிமேல விழுந்தால் எதைத் தெரிஞ்சுக்க முடியும்...?''

''அப்படின்னால் உனக்கும் ஒன்னும் தெரியாதாம்மா...?''

''விடுவேனா நான்...?இந்த வரனைக் கொண்டு வந்த சிவசு மாமா கிட்டே அப்பா வீட்டில் இல்லாத நேரமா பார்த்து விசாரிச்சேன். அவர் சொல்லித்தான் சில விவரங்கள் தெரிய வந்தது...''

''என்ன விவரம்மா...?''

''பிள்ளைக்கு முப்பது வயசாறதாம். வக்கீலா வேலை பார்க்கறானாம். மாசம் ஆயிரம், ஆயிரத்தைநூறுன்னு சம்பாதிக்கிறானாம். ஒரே பிள்ளைதானாம். கூடப் பிறந்தவா யாருமில்லையாம். பார்க்கவும் லட்சணமா இருக்கானாம்...இங்கே எங்கேயோ சொந்த வீடு இருக்காம்..''

''ஏம்மா, அப்படிப்பட்டவா ஏன் நம்ம வீட்டுல சம்பந்தம் பண்ண நினைக்கிறா...? நீ சொல்றதையெல்லாம் கேட்டால் அவாளுக்கும் நமக்கும் ஏணி வச்சால் கூட எட்டாதே...''

''இதையேதான் நானும் சிவசு மாமாகிட்டே கேட்டேன். அவர் அதுக்குத் தயங்கின மாதிரிப் பதில் சொன்னார்...''

''என்ன சொன்னார்...?''

''பையனுக்கு முதல் பொண்டாட்டி தவறிப் போய் விட்டாளாம். தவறி ஒரு வருஷம் கூட ஆகலையாம். கையில் ஒரு வருஷக் குழந்தை ஒன்னு இருக்காம். பெண் குழந்தையாம். அதை வளர்க்கணுமாம். அதனால் ஏழைப் பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லைன்னு - சம்மதிச்சுத்தான் வரானாம். ஆனால் நீ இந்த டீச்சர் வேலையை விட்டுடணுமாம்...''

வேலையை விடுவதா...? ராஜேஸ்வரி திடுக்கிட்ட மாதிரி தலையை உயர்த்தினாள். ''என்னம்மா இது...?'' என்று ஒரு பதட்டத்துடன் அம்மாவைப் பார்த்தாள். ''இந்த வேலை ஒன்னுதான் என் மனசுக்கு நிம்மதி தரக் கூடிய விஷயம்னு உனக்குத் தெரியாதாம்மா? என் அத்தனை கஷ்டங்களுக்கும் வடிகாலா இருக்கிறது இது தானேம்மா. டாக்டர்கூட என்னை வேலைக்கு அனுப்பச் சொல்லி எத்தனை தரம் சொன்னார்...? வீட்டுச் சூழ்நிலையை விட இப்படி நாலு பேரோடு போய் பழகறதும், பேசறதும் நல்லதுன்னுதானே வேலைக்கு அனுப்பணும்னு அடிச்சு அப்பா கிட்டே பேசினார். அதற்கப்புறம்



எத்தனை கஷ்டப்பட்டு எல்லாத்துக்கும் வசதின்னு இந்தப் பக்கத்துத் தெரு ஸ்கூல் வேலைகிடைச்சது. நானு வருஷமா நிம்மதியா போயிண்டிருக்கேன். வர்ற சம்பளம் கொஞ்சமானாலும் வீட்டுக்கு உதவியா இருக்கு. அந்த வேலையை எதற்காக விடணும்மா...?''

''ஏண்டி, அது கல்யாணம் பண்ணிக்கிறவா இஷ்டம். அவன் கை நிறைய சம்பாதிக்கிறவன். அப்படி இருக்க வரவளும் ஏன் வேலைக்குப் போகணும்னு நினைக்கலாம் இல்லே, வீட்டுலே இருந்து குழந்தையைப் பார்த்துண்டா போறும்னு அபிப்பிராயப்படலாம்...''

''ஆமாம்மா, அதுவும் ஒரு கௌரவமான ஆயா வேலை தானே...?''

அவள் குரலில் வெளிப்பட்ட விரக்தியும், சோகமும் ஜெயலட்சுமி அம்மாளைத் தாக்கத்தான் செய்தன. ஆனாலும் வேறு எதுவும் செய்ய இயலாத நிலையில் அவள் பேசாமல் நிற்க ராஜேஸ்வரி கேட்டாள்.

''ஏம்மா, எப்போ வரானாம் அவா...?''

''சாயங்காலம் அஞ்சு, அஞ்சரைக்குன்னு சொன்னாரே...?''

''அதற்கு இன்னிக்கு முழுசமா ஸ்கூலுக்கு லீவு போடணும்...? எதற்கும்மா தண்டமா வீட்டுல கிடக்கணும். சரியா நாலு மணிக்கு ஸ்கூல் விட்டதும் ஓடி வந்துடறேம்மா. இன்னிக்கு இரண்டு, மூணு கிளாசுக்கு டெஸ்ட்டுன்னு வேற சொல்லியிருக்கேன்...''

ஜெயலட்சுமி அம்மாள் யோசித்தாள். ராஜேஸ்வரி சொன்னதும் சரியாகப் பட்டது. இருந்தாலும் தானாக ஒரு முடிவிற்கு வருகிற தைரியமற்று, ''அதை அப்பாகிட்டே சொல்லிட்டு கிளம்பு. போ...எனக்கு இந்த வீட்டில் என்ன அதிகாரமிருக்கு...?''

அப்பாவிடம் கெஞ்சிக் கேட்டு பள்ளிக் கூடத்திற்குப் போய் சரியாக நான்கு பத்திற்கு வீடு திரும்பினாள் அவள்...

# 2

அன்று காலையில் சற்று நேரம் கழித்துத்தான் எழுந்தான் சத்தியமூர்த்தி. பல் தேய்த்து, முகம் கழுவிக்கொண்டு குளியல் அறையை விட்டு வெளியில் வந்தபோது இரேழ குழந்தை கவிதா வீறிடுவது கேட்டது. கூடவே அவனது அம்மாவின் கெஞ்சுகிற குரலும் வந்தது.

''என்னடி இப்படிப் படுத்தற...ஒரு வாய் பால் குடிச்சுட்டு மீதியைக் குடிக்க மாட்டேங்கற. கொஞ்ச நேரமானால் பசி வெறி பிடிச்சு மறுபடியும் கத்தப் போற...கவி நல்லபொண்ணு இல்லே...இந்தப்பாலைக் குடிச்சிடுமாம்...''

''மாத்தேன்...போ...''

''சமுத்து இல்லே...வாம்மா...குடிம்மா...''

''ம்ஹூம்...''

''ஏன்னா... கொஞ்சம் வந்து இந்தக் குட்டிப் பிசாசைப் பாருங்க. பால் குடிக்காமல் ஆட்டம் காட்டறது. இந்த வயசல அவ பின்னால என்னால் ஓட முடியலை. இந்த வாண்டு என் கைக்கு அகப்படமாட்டேன்றது. பெத்தவ பொறுப்பை என் தலையில சுமத்திட்டு நிச்சிந்தையா கண்ணை மூடிட்டா...பிள்ளையாண்டானுக்கு என் கஷ்டம் புரியமாட்டேன்றது. அவன் பாட்டுக்கு போறான், வரான், தூங்கறான். எந்தப் பிடிப்பும் இல்லாமல் சந்நியாசி மாதிரி வாழ்க்கை நடத்தறான்... இதையெல்லாம் பார்க்கப் பார்க்க என் வயிறு தான் எரியறது...''- அந்த அம்மாள் ஆற்றாமையால் அழத்துவங்க,

''என்ன மீனாட்சி காலைலை ஆரம்பிச்சுட்டே...?'' என்றவாறு சங்கரலிங்கம் உள்ளே வந்தார். மனைவியின் அழுகையைத் தாங்க முடியாதவராக அருகில் போய் தோளில் கை வைத்து இதமாகச் சொன்னார்.

''நீ கூட குழந்தையா மீனாட்சி...? கவிதாவா..., குழந்தைன்னால் அப்படித்தான் படுத்தும். அது தெரியாதா உனக்கு...? இதுக்குப் போயி யாரும் அழுவாளா...?''



அந்த அம்மாள் முகத்தைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்:

''அதுக்கு மட்டும் அழலேன்னா நான். நம்ம சத்தியாவுக்கும் சேர்த்து அழறேன். அவனைப் பார்க்கப் பார்க்க பெத்த வயிறு பிச்சறது...எப்படி நிக்கறான்... இந்த வயசல எல்லாரும் எப்படி இருக்கா...? ஏன்னா... போனவளை நினைச்சுண்டே பொழுதைக் கழிச்சுடப் போறான்னா இவன்...? இப்படியே நிற்க வைக்கறதுதான் உங்க உத்தேசமா...?''

''யாருடி இவ... எனக்கு மட்டும் அவன் மேல் அக்கறை யில்லேன்னா நினைக்கிறே...? அவனுக்குப் பெண் கொடுக்க நிறைய பேர் வருவா...ஆனால் வர்றவ அந்தக் குழந்தைக்கும் அம்மாவா நடந்துக்கணும். அப்படி நடந்துக்கணும்னால் கொஞ்சம் வசதிகுறைஞ்ச சாதாரண இடத்துலேருந்து பெண் எடுக்கணும். அதைத்தான் நான் பார்த்துண்டிருக்கேன். அந்த மாதிரி இடமா நாலைஞ்சு கைல வச்சுண்டிருக்கேன். அதுல ராஜேஸ்வரின்ற பொண்ணோட ஜாதகம் இவனுடையதோட நன்னாப் பொருந்தறது...''

சட்டென்று முகம் பளிச்சிட்டது அந்த அம்மாளிற்கு. குரலில் புதிய தெம்பு வந்தது.

சந்தோஷச் சிரிப்புடன் கணவனை ஏறிட்டுக் கேட்டாள்.

''ஏன்னா...பொண்ணு யாரு...?''

''நம்ப குருமூர்த்தி மாமாதான் ஜாதகம் கொண்டு வந்து தந்தார். யாரோ ராமசாமின்றவரோட பெண்ணாம், அவர் ரிடையர் ஆயிட்டாராம். இந்தப் பொண்ணு ஸ்கூல் டீச்சரா சம்பாதிக்கிறதாம். பார்க்க நன்னா இருக்குமாம். நன்னான்னால் பெரிய அழகு இல்லை. குடும்பப் பாங்கா இருக்குமாம். நமக்கு ஏத்த பொண்ணுன்னு குருமூர்த்தி சொல்றான்...''

''அப்படீன்னா முடிச்சுடலாமேன்னா...''

''முடிச்சுடலாம்டி. உன் பிள்ளையை கேட்க வேண்டாமா...? ஏழைக் குடும்பம். அதிகம் ஒண்ணும் செய்ய மாட்டா...கல்யாணம் பண்ணிக் கொடுத்தாலே பெரிசு...''

''என்ன செய்யணும் நமக்கு...? அவ கொண்டு வந்து நிறையணுமா என்ன...? மூத்தவ கொண்டு வந்ததையே நாம் திருப்பித் தானே கொடுத்தோம்...''

''திரும்பித் திரும்பி ஏன் மூத்தவ சங்கதியை இழுக்கறே...? இப்போ இந்த விஷயத்துக்கு வா. மங்கல காரியம் பேசறபோது நடுநடுவில் அந்தப் பேச்சை ஏன் எடுக்கறே....?''

''சரின்னா... தப்புத்தான். இனிமேல பேசலை. எப்போ பொண் பார்க்கப் போகலாம்னு கேளுங்க...''

''நான் கேட்கிறது இருக்கட்டும். முதல்ல நீ உன் பிள்ளையைக் கேட்டுச் சொல்லு...''

''இதோ இப்பவே போய் கேட்கறேன்.''

''இந்த அவசரம் தான் வேணாங்கிறது. மெதுவா அவன் மூட் எப்படி இருக்குன்னு பார்த்து கேளுடி...''

''மூட் என்னன்னா பெரிய மூட்... இவன் என்ன கதையா எழுதறான். இதையெல்லாம் ஆறப் போடக் கூடாது. உடனே கேட்டு தீர்மானிச்சுடணும். அதனால நீங்க பேசாமல் உங்க பேத்தியைத் தேடிப் பிடிச்சு இந்தப் பாலை கொடுங்கோ... நான் இதோ இப்பவே போய் அவனைக் கேட்டுண்டு வரேன்...''

பால் டம்ளரை அவரிடம் கொடுத்துவிட்டு படியேறி மாடிக்கு வந்தாள் அந்த அம்மாள். அவள் வருவதை உணர்ந்த சத்தியமூர்த்தி படித்துக் கொண்டிருந்த ஆங்கிலச் செய்தித் தாளை முகத்தை விட்டுத் தழைத்து அம்மாவைப் பார்த்தான். ஒன்றும் தெரியாத மாதிரி ''என்னம்மா...?'' என்று கேட்டான்.

''ஏண்டா, நீ இன்னும் காபி சாப்பிடலை...?''

''இல்லைம்மா...''



''ஏண்டா...கீழே இறங்கி வந்து குடிச்சுட்டுப் போகக் கூடாதா...? இந்த வயசுல என்னால படியேறி வர முடியலை...''

''உன்னை யாரும்மா ஏறி வரச்சொன்னது? நானே கீழே வரேன்...''

''இப்போ நான் முக்கியமான ஒரு விஷயம் பேசத்தான் ஏறி வந்திருக்கேன்....''

''என்ன விஷயம்மா...?''

''அப்பா சொன்னதெல்லாம் காதுல விழலை...?''

அவன் பேசாமல் இருந்தான். அவள் அவனெதிரில் நாற்காலியில் உட்கார்ந்து ஆரம்பித்தாள்.

''சத்தியம்...இப்படியே இருந்துட முடியாதுடா...கிழம் கட்டை நாங்க எல்லாரும் சந்தோஷமா இருக்கிறபோது உன்னை இப்படியே விட்டுட முடியாது. குழந்தைக்காக மட்டுமில்லாமல் உனக்காகவும் சேர்த்தே நீ கல்யாணம் பண்ணிண்டாகணும். இதுக்கு மேல நீ வேணாம்னு பிடிவாதம் பிடிச்சே நான் கிளம்பி எங்கேயாவது போயிடுவேன்...''

''என்னம்மா நீ...?''

''பின்னே என்னடா...? சந்தோஷமா இருக்கிற வயசுல சந்நியாசி மாதிரி இருந்தா எங்களுக்கு எப்படி இருக்கும்... குருமூர்த்தி மாமா ஒரு வரன் கொண்டு வந்திருக்காராம். பொண்ணு நன்னாத்தான் இருக்காம். பேரு ராஜேஸ்வரியாம். ஏதோ சின்ன ஸ்கூல்லே டீச்சரா வேலை பார்க்கிறாளாம்...''

''ஏம்மா வேலைல இருக்கிற பொண்ணு சரிப்படுமா? அப்புறம் வீட்டுவேலை, கவிதாவையெல்லாம் கவனிச்சுக்கறது எப்போ....?''

''வேலையை விட்டுடச் சொன்னால் போறது. அதுவா ஒரு பெரிய விஷயம். முதல்ல நீ வர ஒப்புக்கோ. அது போறும் எங்களுக்கு....''

''சரி வரேம்மா...''

''அப்பாடா...'' என்று நிறைவாகச் சிரித்தாள் அந்த அம்மாள். ''இது போறும்டா எனக்கு. அந்தப்பெண்ணோட அதிர்ஷ்டம் போல இருக்கு. உடனே ஒத்துண்டுட்டே. நாளைக்கே பொண்ணு பார்க்க வரோம்னு சொல்லி அனுப்பிடறேன். என்ன, சரியா...?''

''சரிம்மா...''

''அப்புறம் இன்னொரு விஷயம். பொண்ணு சாதாரண இடம்தான். அப்பா ரிடையர் ஆகி வீட்டுலே இருக்காராம்...''

''ப்சு...அதைப் பத்தி என்னம்மா? நாமே செலவழிச்சு கூட பண்ணிண்டு வந்துடலாம். கவிதாவை நன்னா பார்த்துக்கணும். உன்னையும், அப்பாவையும் கவனிச்சுக்கணும். குடும்பத்தைத் திறமையா நடத்தத் தெரியணும். இது போறும்மா எனக்கு...''

''அதையெல்லாம் விட உனக்கு பெண்டாட்டியா, உன்னை சந்தோஷப்படுத்தறவளா இருக்கணும். அதுதான் எங்களுக்கு முக்கியம். நான் இப்பவே அப்பாகிட்டே போய் சொல்றேன். நாளைக்கே போய் பெண்ணைப் பார்த்து, பிடிச்சிருந்தால் சரி சொல்லிடலாம். அப்புறம் என் தலையிலிருந்து பெரிய பாரம் இறங்கின மாதிரி நிம்மதி ஏற்படும். நீ கீழே இறங்கிவா. அப்பா உன்கிட்டேயிருந்தே நேரிடையே சம்மதத்தை எதிர்பார்ப்பார். அவர் கிட்டேயும் சொல்லிடு. காபி கலக்கிறேன் வந்து சாப்பிட்டுட்டுப் போ...''

''நீ போம்மா, இதோ வரேன்...''

அந்த அம்மாள் உற்சாகமும் சந்தோஷமும் பொங்க குழந்தை மாதிரி படியிறங்கிக் கணவனிடம் ஓடி வந்தாள்.

வெகு நாட்களுக்குப் பின் அன்றிரவு ஓரளவு மனநிம்மதி ஏற்பட படுக்கப் போனான் சத்தியமூர்த்தி. பார்த்தே இராத அந்த ராஜேஸ்வரி பற்றி நினைத்துக் கொண்டான். 'எப்படி இருப்பாள் அவள்...' என்கிற கேள்வி எழுந்தது. 'வெள்ளையா, கறுப்பா...? உயரமா, குள்ளமா...? தலைமயிர் நீளமாக இருக்குமா...? பாடுவாளா...? வீணை வாசிக்கத் தெரியுமா...?



எப்படியிருந்தாலும் இவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். அப்பாதான் காலையிலேயே சொன்னாரே...பொண்ணு அழகாகத்தான் இருக்குமாம். அழகுன்னால் ரொம்ப பெரிய அழகில்லை. ரதி, ரம்பையில்லை. குடும்பத்துக்கு ஏற்ற அடக்கமான அழகு என்றாரே...அதிக அழகாக இருந்தவள்தான் போய்ச் சேர்ந்துவிட்டாளே...இனி அந்த மாதிரி அழகு வேண்டாம். சாதாரணமாக இருந்தால் போதும். குரூபி என்றில்லாமல், உடல் ஊனம் எதுவுமின்றி [illegible] குடும்பம் நடத்தத் தெரிந்தால் போ[illegible] [illegible] அம்மாவாக, எனக்கு மனைவியாக...

மனைவி...!

எனக்கு மனைவி!'

18641—
347915

சட்டென்று உடல் அந்தத் தேவையைப் புரிந்துகொண்ட மாதிரி சிலிர்த்துப் போயிற்று. மனதிற்குள் மயக்கமாகக் கவிழ்ந்து கொண்டது. அந்த அண்மைக்கு அதி தீவிரமாக ஏக்கப்படத் தொடங்கிற்று. இத்தனை நாட்களும் எத்தனையோ இரவுகள் அந்த ஏக்கம் நெஞ்சைச் சூழ்ந்து கொண்டு எரித்ததுண்டு. நினைவுகள் நெருப்பாகக் காய்ந்ததுண்டு. அப்படித் தவித்தபோதெல்லாம் புரண்டு புரண்டு படுத்திருக்கிறான். புஸ்புஸ்ஸென்று பெருமூச்சு விட்டிருக்கிறான். தாங்க இயலாதபோது நேரம் பாராமல் ஷவரின் அடியில் நின்றிருக்கிறான். ஊசி ஊசியாக சில்லென்று தலையில் இறங்கின குளிர்ந்த நீரின் தகதகப்பு அடங்கி, மன சஞ்சலம் ஓய்ந்து ஒரு ஆழமான பெருமூச்சில் அத்தனையும் அடக்கி மூலையில் ஒதுக்கித் தள்ளிவிட்டு ''அப்பாடா...'' என்கிற நிம்மதியுடன் வெளியில் வந்திருக்கிறான். பின்பு குழந்தையின் மீது கைபோட்டு அணைத்து இவனும் ஒரு குழந்தையாகத் தூங்கிப் போயிருக்கிறான்.

இவன் இப்படிக் குளித்துவிட்டு வருகிற மறுநாள் காலை அம்மா கேட்டிருக்கிறாள்.

''என்னடா சத்தியம், பாதி ராத்திரியில குளிச்சாப் போல இருக்கே...அப்போ என்னடா குளியல் வேண்டிக் கிடக்கு...?''

''இல்லேம்மா. உடம்பு கணகணன்னு காயற மாதிரி இருந்தது. அதான் சில்லுனு தண்ணி கொட்டிண்டேன்....''

''சூடாப் போயிருக்கும். அதான் கணச்சூடு கண்டிருக்கு. இந்த ஞாயிற்றுக்கிழமை எண்ணெயைக் காய்ச்சித் தரேன். தேய்ச்சுக்கோடா.''

இவன் சிரித்துக் கொள்வான். அம்மா உடம்புச் சூட்டை சொல்கிறாள். ஆனால் தன் தவிப்பு மனச்சூட்டினால்தானே என்று நினைத்துக்கொள்வான்.

இனி அப்படித் தலையில் தண்ணீர் இறைத்துக்கொள்ள தேவையில்லை. பாதி ராத்திரியில் குளிக்க வேண்டிய அவசியமில்லை.ராஜேஸ்வரி இருப்பாள்.பக்கத்தில் படுத்துக் கொள்வாள். தேவை அறிந்து நடந்து கொள்வாள். இதமாய், இனிமையாய்,அன்பாய், ஆதரவாய்...அமைதியாய்...

ரா...ஜேஸ்வரி...!

அந்தப் பெயர் நாவில் இனிமையாகத் தங்கிப் போக, புரண்டு கவிதாவை மென்மையாக அணைத்து தலைமுடியை ஒதுக்கியவாறு சொல்லிக் கொண்டான்.

'கவிக்குட்டி...உனக்கு அம்மா வராடா...உன்னோட அம்மா மாதிரியே புதுசா, நல்ல அம்மாவா வரப் போறாடா...'

குழந்தை தூக்கத்தில் எதைப் பார்த்ததோ...தானாகச் சிரித்துக் கொள்ள, இவன் அதைக்கண்டு புன்னகைத்துப் படுக்க, கண் இமைகள் கனத்து மூடிக்கொண்டன...



# 3

சொன்ன மாதிரி ஐந்தரைக்கு பிள்ளை வீட்டார்கள் வந்து இறங்கினார்கள். ஒரு சின்ன பியட் காரில் வந்திருந்தனர். அம்மா, அப்பா, பட்டுப்பாவாடை, சட்டையுடன் அந்தக் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் சத்தியமூர்த்தி என்கிற அந்த இளைஞன். நல்ல உயரமாய் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு மீசை வைத்திருந்தான். வெள்ளையில் சேர்த்தியான நிறம். முகம் புன்னகையை மறந்து வெகுநாளானதைத் தெரிவித்தாலும் அமைதியாக இருக்கிற மாதிரிதான்தோன்றியது.

சமையலறைக் கதவிடுக்கின் வழியாக வந்தவர்களைப் பார்த்த ராஜேஸ்வரிக்கு உள்ளுக்குள் ஒரு நடுக்கம் தோன்றியது. அவர்களின் கம்பீரமும் சற்று உயர்ந்த நடுத்தர வர்க்கத்துக் களையும் மருட்டிற்று. இந்த நல்ல மனிதர்கள் வீட்டிலா சம்பந்தம் என்கிற கேள்வி எழுந்து பயமுறுத்திற்று. 'ஏற்கெனவே ஒரு முறை மனைவியை இழந்து வாடிப் போயிருக்கிற இந்த இளைஞனுக்குத் தன்னை மனைவியாக்குகிற எண்ணம் இந்த அப்பாவிற்கு எப்படித் தோன்றியது...? இதற்கு எவ்வாறு மனம் துணிந்தார் அவர்...? தன் பிள்ளையாக இருந்தால் இப்படிப்பட்ட பெண்ணைப் பார்த்திருப்பாரா...? அவர்களிடம் உண்மையைச் சொல்வாரா அல்லது மறைத்து வைத்து கல்யாணத்தை முடித்து விடுவாரா...? ஒருவ்வளை தனக்கு மனைவி தேவையில்லை. குழந்தைக்குத் தாயாக இருந்தால் மட்டும்போதும் என்று சொல்லியிருப்பாரோஅவர்...?''

அப்படிச் சொல்லியிருக்கிற பட்சத்தில் இவளுக்கும் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. சந்தோஷமாக அதற்கு சம்மதிப்பாள். எத்தனையோ குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் கட்டி மேய்க்கிறவளுக்கு இந்த ஒரு வயதுக் குழந்தை பிரச்னையே இல்லை. நன்றாக அதை

வளர்க்க இவனால் முடியும். அது பெரிய விஷயமே இல்லை. ஆனால் முப்பத்தைந்து வயது இளைஞன் மனைவியின் அவசியம் தேவையில்லை என்று ஒதுக்க அவன் சந்நியாசி இல்லையே... குறை உள்ளவனில்லையே... அந்த மாதிரி மனசைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையில்லையே...பின் எதற்காக இந்தக் குறை உள்ளவளைத் தேடி வந்திருக்கிறான்.

தன் குறை இவனிடம் தெரிவிக்கப்பட்டதா இல்லையா...? தெரிவிக்கப் போகிறார்களா இல்லையா...? இல்லாவிட்டால் மறைத்து வைத்து கல்யாணத்தை முடித்துவிடுகிற உத்தேசமா...?

கடவுளே! எதற்காக இந்த வீண் குழப்பமெல்லாம்...? தான் உண்டு; தன் பள்ளிக்கூட வேலை உண்டு என்றிருந்தவளுக்கு ஏன் இப்படிப்பட்ட பிரச்சனையெல்லாம் உண்டாக்குகிறார்கள்...?

எண்ணற்ற விடை தெரியாத கேள்விகளும், பயமும், சங்கடமும் நிறைந்த கனமான மனமுமாக நின்றிருந்தவளை உள்ளே வந்து அம்மா கூட்டிக்கொண்டு போனாள். இவளும் வசியப் படுத்தப்பட்ட மாதிரி அம்மாவின் பின்னாலேயே போய் நமஸ்கரித்து ஒதுங்கி நின்றபோது கை கால்களில் மெலிதாய் ஒரு நடுக்கம் தோன்றியது. அடி வயிற்றிலிருந்து பந்தாக உருண்டு நெஞ்சை அடைத்தது. கண் இருண்டு கீழே விழுந்துவிடக் கூடாதே என்று ரகசியமாக அவள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தபோது,

பிள்ளையின் அம்மா, மெல்லிய குரலில், "உட்காரேம்மா..." என்றாள். இவள் பாயின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொள்ள அந்த அம்மா தொடர்ந்து கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

"என்ன படிச்சிருக்கேம்மா...?"

"ஸ்கூல் ஃபைனல்..."

"எங்கே படிச்சே...?"



பள்ளிக்கூடத்தின் பெயரைச் சொன்னாள்.

"எந்த ஸ்கூல்ல டீச்சரா வேலை பார்க்கிறே...?"

அதையும் சொன்னாள்.

"அப்புறம் வேலையை விடறதுக்கு சம்மதம்தானே...?"

இதற்குச் சடாரென்று முந்திக்கொண்டு ஜெயலட்சுமியம்மாவின் பதில் வந்தது.

"வேணாம்னு நீங்க அபிப்பிராயப்பட்டால் விட்டுட வேண்டியதுதானே மாமி...சொந்தமா ஒரு அபிப்பிராயம் வச்சுக்கிற அளவுக்கு என் பெண்கள் யாரும் இல்லை..."

அதைக் கேட்டு அந்த அம்மாவின் முகத்தில் புன்னகை ஒன்று படர்ந்தது. கறுப்பானாலும் லட்சணமான அந்த முகத்திற்கு வெள்ளைப் புன்னகை பளிச்சிட்டது.

"அதுக்கில்லே... வளர்ந்த பொண்ணு. இத்தனை நாளும் சுய சம்பாத்தியத்திற்குப் பழக்கப்பட்டவள். நாளைக்கு நம்மை வேலையிலிருந்து நிறுத்திட்டார்களே என்று ஆதங்கப்படக் கூடாது பாருங்கள்..."

"அந்த மாதிரி எந்த ஆதங்கமும் இவளுக்கு ஏற்படாது. அவளுக்கே வேலைக்கு போறதில் இஷ்டமில்லை. நான்தான் வீட்டுல உட்கார்ந்து என்னம்மா செய்யப் போறே...? எத்தனை நேரம் பொழுது போகாமல் தவிக்கப் போறே...? அதனால் கல்யாணம் ஆகிறவரைக்கும் போய் விட்டு வாம்மான்னு வற்புறுத்தி அனுப்பினேனே தவிர அவளுக்கு வேலையில் ஒரு பிடிப்பும் இல்லை..."—மிக அழுத்தமாக—இது பொய் என்று தெரியாத வகையில் ஓரே போடாகப் போட்டு விட்டார் அப்பா.

'எத்தனை இயல்பாகப் பொய் சொல்கிறார் இந்த அப்பா!" என்று உள்ளுக்குள் அயர்ந்து போனாள் ராஜேஸ்வரி. அந்தப் பொய்களின் எண்ணிக்கை உயர உயர அவளுக்குள் ஏற்பட்டிருந்த சங்கடமும் அதிகமாயிற்று. 'இவர்கள் சொல்வதைப் பார்த்தால் நிச்சயம் தன்னைப் பற்றின உண்மையைச் சொல்லப் போவதில்லை' என்கிற தீர்மானமான முடிவு ஏற்பட அதன் விளைவுகளை

நினைத்துக் குமுறத் தொடங்கினாள். அதன் பின் அந்த அம்மாளின் கேள்விகள் நேராக இவளது அம்மாவிடமே திரும்பின.

''சமைக்க வருமா உங்க பொண்ணுக்கு...?''

''பத்து நிமிஷம் இருந்தேனனா வடை, பருப்பு, பாயசத்தோட கல்யாணச் சாப்பாடே பண்ணிப் போடச் சொல்றேன்...?''

''பாடுவாளோ...''

''இல்லைம்மா...சொல்லி வைக்கலை. கேள்வி ஞானம் கொஞ்சம் உண்டு.''

''அப்படியா...?'' என்று தயங்கிய அந்த அம்மாள் தன் கணவரின் முகத்தையும், பிள்ளையின் முகத்தையும் ஏறிட்டு அவற்றின் திருப்திகரமான பாவத்தைப் புரிந்து கொண்டு ஒரு நிமிட மௌனத்திற்குப்பின் நிதானமாக ஆரம்பித்தாள்.

''இதோ பாருங்கம்மா. உங்க பெண்ணை எங்களுக்குப் பிடிச்சிருக்கு. எங்களுக்குப் பணம் காசு தேவையில்லை. குடும்பத்திற்கு அடக்கமான நல்ல பெண்ணாக இருந்தால் போதும். உங்க செய்வினை எதையும் நாங்க எதிர்பார்க்கலை. நீங்களா பிரியப்பட்டு உங்க பெண்ணிற்கு எது செய்தாலும் சரி. செய்யாமற் போனாலும் எங்களுக்கு சந்தோஷமே. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நாங்க எதிர்பார்க்கிறோம். எங்க சத்தியமூர்த்தி பாவம். முதல் கல்யாணத்துல அதிகம் சுகப்படலை. சந்தோஷத்தைப் பார்க்கலை. இந்தக் கல்யாணமும் அப்படி அமைஞ்சுடக் கூடாதேன்றதுதான் எங்க கவலை. அவன் ஒரே பையன் எங்களுக்கு. அவன் முகத்துல எல்லாரையும் மாதிரி சிரிப்பையும் சந்தோஷத்தையும் பார்க்கணும்ன்றதுதான் எங்க ஆசை. அப்புறம் இந்தக் குழந்தையை — தாயற்ற குழந்தையைத் தன் குழந்தை மாதிரி வளர்க்கணும். இவளுக்கு நாளைக்குப் பிறக்கப்போகிற குழந்தைகளில் ஒன்றா பாவிச்சு எல்லாம் செய்யணும். எந்த வித்தியாசமும் பாராட்டக் கூடாது. இவ்வளவுதாம்மா எங்க கோரிக்கை



நாங்க உங்ககிட்ட எதையும் மறைக்கலை. ஒளிச்சுப் பேசலை. பொய் சொல்லலை. உள்ளதை உள்ளபடியே சொல்லிட்டோம். இனி உங்க அபிப்பிராயம் எதுவோ அதைத் தெரியப்படுத்தினால் நல்லது...''

அதற்காகவே காத்திருந்தவரைப் போல முகம் மலர, காது வரை சிரிப்பு நீள அப்பா உடனே பேச்சைத் தொடங்கினார்.

''என்ன சம்பந்தியம்மா இது... நாங்க காத்துண்டிருக்கோம். உங்க பதில் எங்க வயத்துல பால் வார்த்த மாதிரி இறங்கித்து. நான் ரிடையர் ஆன ஒரு யு. டி. சி. கிளார்க். எனக்கு இன்னும் கல்யாணத்துக்கு மூணு பெண்கள் இருக்கா. மூத்தவ இவள் நகர்ந்தால் அப்புறம் அதுகளுக்கு இதே மாதிரி தானாக ஒரு வழி பிறக்கும். அதுவும் இவளுக்கு அடுத்த இரண்டாவது பெண் பாக்கியம் இப்பவே இவள் தோளுக்கு வளர்ந்து நிக்கறாள். இவளைவிட ஒருவயசு தான் சின்னவள். இவள் கல்யாணம் முடிஞ்ச கையோட அவளுக்கும் பண்ணிடணும். எனக்குக் கூடமாட ஒத்தாசை பண்ண யாரும் கிடையாது. தலைக்கு ஏத்த பிள்ளையோ, அண்ணன், தம்பின்னோ யாருமில்லை. பண உதவிக்கும் மனுஷா கிடையாது. சேர்த்து வைக்கிற அளவு எனக்கு சம்பளம் வரலை. வந்த பணம் ஆறுபேர் வாய்க்கும், கைக்குமே சரியாகப் போயிடுத்து—''

''இப்போ நாங்க உங்களைப் பணத்தால் செய்யச் சொல்லிக் கேட்கலையே''—அந்த அம்மாள் சட்டென்று அப்பாவை இடைமறித்துச் சொல்ல, அப்பா அவசரமாகத் தொடர்ந்தார்.

''இல்லைம்மா...நீங்க சொன்ன மாதிரி நானும் என் நிலைமையைச் சொல்லணும் இல்லையா...? பணத்தால் மனஸ்தாபம் ஏற்படக் கூடாதே...''

''அது எப்பவும் எங்ககிட்டேயிருந்து ஏற்படாது. பணத்தை மதிக்கிறவா இல்லே நாங்க...''

''அப்படிச் சொல்லலைம்மா. நீங்க விளக்கின மாதிரி நானும் விளக்க ஆசைப்படறேன்...''

Raju

''சரி சொல்லுங்க...''

''அதனால் என்னால் அதிகம் நகை, சீர்னு செய்து தர முடியாது. காதுக்குத் தோடு, கழுத்துக்கு மெலிசா ஒரு சங்கிலி இரண்டும்தான் போட முடியும். கைக்கு வளையல் கூட...''

''அதனால் என்ன, நாங்க செய்து போட்டுக்கறோம்...''

''அப்புறம் புடவை கூட பட்டுல ஒன்னுதான்—''

''கூறை, விளையாடல், நிச்சயதார்த்தம் எல்லாம் நாங்கதான் வாங்கப் போறோமே...''

''சத்திரம் கூட பெரிசா பார்க்க முடியாது...''

''வேணாம், சுச்சிதமா முடித்தால் போதும்...''

''அம்மா...ரொம்ப சந்தோஷம்மா. உங்களை மாதிரி நல்ல மனுஷாளைப் பார்க்கிறது கஷ்டம்மா... நாங்க எப்பவோ செஞ்ச புண்ணியம், பூர்வ ஜென்ம சுகிருதம்...''

''உங்க பொண்ணு எங்ககிட்டே நடந்துக்கிற விதத்தைப் பார்த்து பின்னால் நாங்களும் இதையே சொல்லணும்...''

''சொல்லப் போறீங்களா இல்லையா பாருங்க...''

''சரி, அப்போ எப்ப கல்யாணத்தை வச்சுக்கலாம்...?''

''எங்க சாஸ்திரிகளை வரவழைச்சு நாள் பார்க்கச் சொல்றேன்...''

''இந்த மாசமே கல்யாண மாசம்தான். இதுலயே ஒரு நல்ல முகூர்த்தம்மா பார்த்துடச் சொல்லுங்கோ...''

''சரிம்மா...''

''எங்கே எங்க மாட்டுப் பொண்ணு. அதற்குள் உள்ளே போயிட்டாளா... கூப்பிடுங்கோ சொல்லிண்டு போறோம்...''

அத்தனையும் கேட்டு சமையலறை மூலையில் பதறிக் கொண்டு நின்றிருந்த ராஜேஸ்வரியின் காதில் அந்தக் குரலும்



விழுந்தது. வியர்த்துப் போயிருந்த முகத்தைத் துடைத்த படி அம்மா கூப்பிட்ட பின்னரே வெளியில் வந்தாள். யார் முகத்தையும் ஏறிடுகிற தைரியமற்று தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். உள் மனசு 'நாங்க உங்களை ஏமாற்று கிறோம்... ஒரு நல்ல மனுஷனின் வாழ்க்கை மறுபடி என்னால் பாழாகப் போறது...' என்று சொல்லிக் கொண்டிருந்ததை வெளியில் கத்தி உரக்கச் சொல்கிற தைரியமற்று பேசாமலிருக்க,

''என்னம்மா ராஜேஸ்வரி, நாங்க வரட்டுமா...?'' என்று அவளருகில் வந்து கையைத் தொட்டுக் கேட்டாள் அந்த அம்மாள்.

இவள் தலை நிமிர்ந்து மெலிசாய் புன்னகை செய்ய முயன்றவாறு 'சரி' என்று தலையசைக்க,

''சீக்கிரம் வந்து சேரம்மா...'' என்றவாறு அந்தம்மாள் நகர, அத்தனை பேரும் புறப்பட்டுப் போனபின், கார் வரை போய் திரும்பின அம்மா, அப்பாவைப் பார்த்து முதல் முறையாகச் சற்று குரலை உயர்த்திக் கேட்டாள்,

''ஏம்ப்பா... அவாகிட்டே என்னைப் பற்றின விஷயத்தைச் சொல்லிட்டீங்களா...?''

உள்ளே வந்த ராமசாமி, அத்தனை தைரியமாகக் கேள்வி வரவே நின்று சடாரென்று திரும்பி அவளைப் பார்த்தார். முகம் ஜிவுஜிவுத்தது. கண்கள் கோபத்தில் இடுங்கின. மூக்கு லேசாய் விடைக்க, ராஜேஸ்வரியை முறைத்தபடி சொன்னார்.

''என்னைக் கேள்வி கேட்கிற அளவுக்குத் தைரியம் வந்துடுத்தா உனக்கு...? ம்...? இந்த விஷயத்துல எல்லாம் நீ தலையிட வேணாம். எனக்கு என்ன செய்யணும், எப்ப செய்யணும் என்கிறதெல்லாம் தெரியும். அதனால் நீ வாயை மூடிக்கொண்டு பேசாமல் இரு. அதிகப்பிரசங்கித்தனமா ஒன்னும் சொல்லாதே...''

பின் அவனையோ, மற்றவர்களையோ திரும்பிக் கூடப் பார்க்காமல் அறைக்குள் நுழைய ராஜேஸ்வரி நீண்ட நேரம் செயலற்று நின்றிருந்தாள்...

# 4

அப்பாவின் அந்த அதட்டலுக்குப்பின் ராஜேஸ்வரியால் எதையும் எதிர்க்க முடியவில்லை. மறுபேச்சு பேசுகிற தைரியம் வரவில்லை. உள்ளுக்குள் 'இது ரொம்ப அநியாயம்' என்று தோன்றிற்று. ஏற்கெனவே மனைவியை இழந்தவனுக்கு இரண்டாவது முறையும் மனைவியாக இருக்க இயலாதவளைத் திருமணம் செய்து கொடுப்பது ஒரு பெரிய துரோகம். அதிலும் உண்மையை மறைத்து நல்லவர்களாக வேஷம் போடுவது இன்னமும் கொடுமை.

அப்பாவைக் கேட்க முடியாததைச் சேர்த்துவைத்து அம்மாவிடம் கேட்டபோது ஜெயலட்சுமியம்மாள் மகா இறுக்கமாகப் பதில் சொன்னாள்.

''ஆமாண்டி. உனக்கு இப்பவே வயசு இருபத்தெட்டு. பாக்யாவிற்கு இருபத்தி ஆறு. நீதான் மூத்த பெண். உனக்கு முடியலேன்ற காரணத்துக்காகக் கல்யாணம் பண்ணாமல் வீட்டோடு வச்சுண்டிருந்தால் கீழே இருக்கிறதுகள் போகிற கதி என்ன...நீ கல்யாணம் பண்ணிக்கலைன்னால் அவாளை யாரு பண்ணிப்பா...? ஏன் மூத்தவளை விட்டுவிட்டு இளையவளுக்குப் பண்றீங்கன்னு பிச்சு எடுத்துட மாட்டாளா...? நிஜமான காரணத்தைச் சொன்னால் அவள் கல்யாணமும் நின்னுப்போடும். அப்புறம் இந்த வீடு கல்யாணத்தை மறந்துட வேண்டியதுதான். இல்லைன்னால் 'மூத்தவளுக்குக் கல்யாணத்துல இஷ்டமில்லை. அவ பண்ணிக்க மாட்டேன்'னுட்டான்னு சொன்னாலும் உலகம் ஒத்துக்காதே... அதனால்தான் இப்படி



உண்மையை மறைச்சு கல்யாணம் பண்ணவேண்டியிருக்கு. ஆயிரம் பொய் சொல்லியாவது கல்யாணம் பண்ணச் சொல்லுவா. நாங்க அதைச் செய்யலியே...ஒரே ஒரு உண்மையை சொல்லாமல் மறைச்சுத்தானே கல்யாணம் பண்றோம்...''

''ஆமாம்மா. அந்த ஒரு உண்மை, 'எப்படிப்பட்ட பயங்கரமான உண்மை...?''

''இதுல பெரிசா என்ன பயங்கரம் வந்துடுத்து. ஊர் உலகத்துல இந்தமாதிரி விஷயம் நடக்கிறதே இல்லையா...? அம்மா அப்பா மறைச்சு வச்சு கல்யாணம் பண்றதில்லையா...?என்னமோ நம்ம வீட்டுல மட்டும் புதுசா நடக்கிற விஷயம் மாதிரி பேசிண்டே இருக்கியே...?''

''சரிம்மா, டாக்டர் எனக்குக் கல்யாணம் கூடாதுன்னு அடிச்சுச் சொல்லலை...?''

''இந்தக் கால டாக்டர்களுக்கு என்ன தெரியும்...? வெறும் கற்றுக்குட்டிங்க. இந்த மாதிரி இருக்கிறவாளுக்கெல்லாம் உடனே கல்யாணம் பண்ணி வைக்கணும். எத்தனை பேருக்குக் கல்யாணத்துக்கு 'அப்புறம் எல்லாம் சரியாப் போயிருக்கு தெரியுமா...?''

''கல்யாணத்துக்கு அப்புறம் அவங்களுக்கு விஷயம் தெரியாமல் போயிடும்னா நினைக்கிறே...''

''தெரியவராதபடி சாமர்த்தியமா நடந்துக்கிறது உன் பொறுப்பு. அதற்குக்கூட நாங்க துணைக்கு வரமுடியுமா? அதையெல்லாம் நீதான் மூடி மறைச்சு வச்சுக்கணும்...''

''எப்படிம்மா முடியும்...?''

''ஏண்டி. .இத்தனைக் குடித்தனக்காரா இருக்காளே சுற்றி. ஒருத்தருக்காவது விஷயம் தெரியுமா?மூச்சுவிட்டிருப்பேனா? எத்தனை வருஷமா நாமும் இங்கே இருக்கோம்... ஒரு வார்த்தை வெளியில் போயிருக்கா, உங்க அப்பா கத்தலைத் தவிர...?''

''அதுவேற விஷயம்மா. குடித்தனக்காரர்கள் வீட்டுக்கு வெளியேதான் இருக்கிறார்களே தவிர உள்ளே இல்லே...''

''சும்மா இடக்காகப் பேசிண்டிருக்காதே ராஜி. நீ நினைக்கிறமாதிரி கல்யாணமே இல்லாமல் இருக்கமுடியாது. ஏழு தங்கைகள் இல்லாது போனாலும் ஏதோ சாத்தியம்னு சொல்லலாம். இப்போ அதெல்லாம் சாத்தியமில்லை. அந்த மனுஷா நல்லவானா தெரியறா. நல்லது நடக்கணும்னு வேண்டிண்டு ஆகவேண்டிய வேலையைப் பாரு. அப்பா உன்னை ராஜினாமாக் கடிதம் எழுதி வைக்கச் சொன்னார். அவரே கொண்டுபோய் பள்ளிக்கூடத்துல கொடுத்து சொல்லிட்டு வராராம். வெளியில் போயிருக்கிற மனுஷர் திரும்பி வர்றதுக்குள் எழுதி வச்சிடு. இல்லைன்னால் கத்துவார்...''

வேலையற்று வீட்டில் இருந்ததில், மனதில் குவிந்து கிடந்த வேதனையிலும், வருத்தத்திலும் இரண்டு மூன்று முறை உடம்பு சரியில்லாமற் போயிற்று. டாக்டரிடமிருந்து கல்யாண விஷயமும் வேலையிலிருந்து விலகின விஷயமும் மறைக்கப்பட்டு விட்டன. பின்னை வீட்டிலிருந்து புடவைகளைத் தூக்கிக் கொண்டு அந்த அம்மாள் வந்து, ''ராஜி எங்கே... புடவைகள் பிடிச்சிருக்கான்னு காட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்...'' என்றபோது கூட,

''வாங்கோ மாமி, உட்கார்ந்துக்கோங்கோ...'' என்று வாயார உபசரித்தார்கள். நல்ல டிகாக்ஷன் இறக்கி காபி கலந்துகொடுத்தார்கள். புடவைகளைப்பார்த்து சந்தோஷப் பட்டார்கள். ஆனால் சமையலறை மூலையில் படுத்திருந்த ராஜேஸ்வரியை மட்டும் எழுப்பவே இல்லை. அந்த அம்மாள் இரண்டாவது முறையாகக் கேட்டதும்,

''அவ எங்கேயோ சிநேகிதி வீடு வரை போயிட்டு வரேன்னு இப்போதான் போனாள். வீடு பக்கத்துலதான். ஆளனுப்பி அழைச்சுண்டு வரச் சொல்லட்டுமா...?''

''வேணாம். புடவைகள் இங்கேயே இருக்கட்டும். அவ வந்ததும் காட்டிட்டு யார் மூலமாகவாவது கொடுத்தனுப்புங்கோ...மாத்தணும்னாலும் மாத்திடலாம்...''

''சரி...''



''பத்திரிகை அச்சடிக்க வந்தாச்சா...? எங்க பத்திரிகை வந்திருக்கு. நாளைக்குக் கொடுத்தனுப்பறேன்...''

''பத்திரிகைக்காகத்தான் இவர் பிரஸ்ஸுக்குப் போயிருக்கார் போல இருக்கு. வந்ததும் முதல்ல உங்க வீட்டுக்குத் தானே வருவோம்...''

''அது சரி...'' என்றவாறு தரையில் கையூன்றி எழுந்து கொண்டாள் அந்த அம்மாள். ''அப்போ நான் கிளம்பறேன்...''

''குங்குமம் எடுத்துக்கோங்கோ...''

காரில் ஏறுவதற்கு முன் சற்றுத் தயங்கியவாறு சொன்னாள் அந்த அம்மாள்.

''கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரம்கூட இல்லை இனிமேல் அவளை வெளியில் அனுப்பாதீங்கோ. நாலு பேர் பார்த்தால் ஏதாவது சொல்லுவா...''

''நீங்க சொல்றது ரொம்ப சரி மாமி. நானும் அப்படியெல்லாம் அனுப்பறவள் இல்லே...கல்யாணத்துக்கு அப்புறம் ஃபிரெண்ட் வீட்டுக்கெல்லாம் போகமுடியறதோ இல்லையோ, இப்பவே போயிட்டு வந்துடறேம்மான்னு கேட்டாள். சரின்னு அனுப்பினேன்...''

''இப்போ அனுப்பினதில் தப்பு இல்லை. இனிமேல் அனுப்ப வேணாம். அதுவும் விளக்கு வெச்சப்புறம் எங்கேயும் போக வேணாம்...''

''சரி...அனுப்பலை...''

''வரட்டுமா... குழந்தை பாலுக்கு அழறானோ என்னவோ?''

''இன்னும் ஒரே வாரம். அப்புறம் ராஜிவந்து குழந்தை, வீடு, எல்லாத்தையும் கவனிச்சுக்கப் போறாள்...''

''நானும் அதுக்குத்தான் காத்துண்டு இருக்கேன். அவ கிட்டே பொறுப்பை ஒப்படைச்சுட்டு நிம்மதியா காசி, பத்ரி, கேதார்னு போகலாம்னு நினைச்சுண்டு இருக்கேன்...''

"என்னையும் அழைச்சுண்டு போங்கோ மாமி, நானும் வரேன்..."

"தாராளமா வாங்களேன். ஆனால் வயசுக்கு வந்த பெண் குழந்தைகளைத் தனியா விட்டுட்டு வருவீங்களா, மனசு கேட்குமா...?"

"அதெல்லாம் இங்கே பயம் ஒண்ணுமில்லை. சுற்றி குடித்தனக்காரா இருக்கா...என் பெண்களும் எல்லாத்தையும் நன்னா கவனிச்சுப்பா...நான் வேணும்கிற அவசியமில்லை.."

"அப்போ சரி..."

கார் அகன்றதும் ஜெயலட்சுமியம்மாள் உள்ளே ஓடி வந்து மூலையில் நினைவு தெரியாமல் படுத்திருந்த ராஜேஸ்வரியின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். ஜுரம் இல்லை. ஸ்பரிசம் பட்டதும் ராஜேஸ்வரி கண்களைத் திறந்து பார்த்தாள். தணலாகச் சிவந்துகிடக்க புண்ணாகிப் போயிருந்த உதடுகளை நாக்கால் தடவி ஈரப்படுத்திக் கொண்டே ஈனஸ்வரத்தில் பேசினாள்.

"ஏம்மா...இந்த நிலைமையில் எனக்குக் கல்யாணம் அவசியமா? பேசாமல் அவர்களைக் கூப்பிட்டு உண்மையைச் சொல்லி நிறுத்திடுங்கம்மா..."

"சீ! பைத்தியம்! அபசகுனம் மாதிரி பேசக்கூடாது. இப்போ என்ன ஆயிடுத்து. வழக்கமா வர்றதுதானே...? இரண்டு நாள் பெட் ரெஸ்டுல இருந்தா மூணாவது நாள் தானாக எழுந்து வேலை செய்யப் போறே...அதுக்கா இப்படி கஷ்டப்படறது...?"

அம்மா போனபின் இவளது கண்கள் தானாக மூடிக் கொண்டன. இரு ஓரங்களிலிருந்தும் நிற்காமல் ஜலம் வடிந்தது. தன்னை எப்படியாவது கல்யாணம் பண்ணிக் கொடுத்து அம்மாவும், அப்பாவும் தங்களின் பொறுப்பிலிருந்து கழன்றுகொள்ள நினைப்பது புரிந்தது. 'தன் வாழ்க்கையின் நிம்மதி பற்றியோ, சந்தோஷம் பற்றியோ அவர்களுக்கு அக்கறை இல்லை. வெறும் கடமையை



நிறைவேற்றப் பிறந்த இயந்திரங்கள். வெறும் சாப்பாடு தூக்கம், பிள்ளை பெறுதல் என்கிற சாதாரண நினைவுகளில் மட்டும் சுழலுகிற ஜென்மங்கள். மற்றவர்களின் எண்ணங்களை மதிக்கத் தெரியாத ஜடங்கள்...

போகட்டும். இவர்கள் ஜடங்களாக இருந்து தொலைக்கட்டும். அதற்காக மற்றவர்களையும் ஜடமாக்க நினைப்பது எதற்காக? தான் உண்டு, தன் வேலை உண்டு என்றிருந்தவளை ஏன் இப்படிப்பட்ட சிக்கலில் மாட்டி விடவேண்டும். இவர்களுக்குத் திருப்தி அளிக்கிறது என்பதற்காகத் தான் ஏன் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்...?

பெண் பார்க்க வந்த அன்று சொல்லியிருக்கலாம். இல்லை, அந்த அம்மாள் எத்தனை முறை வீடு தேடி வந்திருந்தாள், அப்போது சொல்லி இருக்கலாம். அதுவுமில்லாவிட்டால் ஒரு அடியில் இருக்கிற மந்தைவெளியில் அவர்கள் வீட்டை விசாரித்துக் கொண்டு போயாவது தெரிவித்திருக்க வேண்டும்.

ஏன் பேசாமல் இருந்தேன்...? இதற்குக் காரணம் என்ன? அம்மா, அப்பாவை மீறக் கூடாது என்பதா...? அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்கிற ஆசையா...? இல்லை, நிச்சயமாக இல்லை. அவர்களிடம் ஏற்பட்டிருந்த பய உணர்வுதான் காரணம். அப்படி ஏதாவது செய்து கல்யாணம் நின்று போனால் அப்பா பெல்ட்டை எடுத்து விளாசி விடுவார். அம்மா முணுமுணுவென்று தீய்த்துக் கொட்டுவாள். யாரையோ சொல்கிற மாதிரி சாக்கிட்டுத் திட்டுவாள். ஓவென்று ஒப்பாரி வைப்பாள்...வீடு நரகமாகி விடும்.

தான் மட்டுமின்றி தங்கைகளும் சேர்ந்து கஷ்டப்படுவார்கள். பாதி நாட்கள் சாப்பாடு கூட கிடைக்காமற் போகும். அடிதடி சண்டையில் அழுதழுது சாப்பிடப் பிடிக்காது.

இவற்றை விட 'எது நடக்கிறதோ நடக்கட்டும்' என்று மௌனமாகப் போவதுதான் நல்லது என்கிற முடிவில் மௌனமானாள் அவள். அப்பா அம்மா சொல்வதை

ஏற்றுக்கொண்டு பேசாமல் இருந்தால் விளைவுகளுக்கு அவர்கள் பொறுப்பாவார்கள். அந்தப் பாதுகாப்பு உணர்வு மட்டுமாவது மிஞ்சும். அதை விட்டு அவர்களைப் பகைத்துக் கொண்டால் இப்போது கிடைக்கிற இந்த மருத்துவ உதவி கூட மறுக்கப் படலாம்' அதனால் விதியின் மீது நம்பிக்கை வைத்து உள்ளுக்குள் பொருமுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமின்றி மௌனமானாள் அவள்....

## 5

அடுத்த மூன்று நாட்களில் உடம்பு தேறி பழைய நிலைக்கு வந்து விட்டாள் ரஜேஸ்வரி. கல்யாணச் சத்திரத்தில் போய் இறங்கின போது படுத்துக் கொண்டிருந்ததற்கான அடையாளம் எதுவுமில்லை கண்களின் சிவப்பும், உதட்டுப் புண்களும் மறைந்திருந்தன. முகத்தில் தெளிவிருந்தாலும் கலவரமும், பயமும் மீதமிருந்தன. எந்த நேரத்திலும்எதுவும் நிகழலாம் என்கிற எதிர்பார்ப்பிருந்தது. அந்த எதிர்பார்ப்பில் சின்ன சத்தத்திற்கெல்லாம் உடம்பு தூக்கிப்போட்டது. நடுமுதுகு சொடுக்கிற்று.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது முதல் நிச்சய தார்த்தம் நடை பெறுகிற வரை மௌனமாய் இருந்தவளால் அதற்கு மேல் அப்படி இருக்க முடியவில்லை. சாப்பாடு இறங்கவில்லை. குடித்த காபி முழுதும் வாந்தியாக வெளியேறிவிட்டது. மறுநாள் காலை முகூர்த்தத்திற்கு சத்திரம் தயாராகிக் கொண்டிருந்த போது, அவள் தன் இடத்தை விட்டு மெல்ல எழுந்து போய் அம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள். அந்தக் கரங்களின் நடுக்கத்தை உணர்ந்து கொண்ட ஜெயலட்சுமி ''என்னடி...?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டாள்.

''பயம்மா இருக்கும்மா...''



''சீ! எதுக்குப் பயம்...? எல்லாம் நல்லபடியா நடக்கும். போய் நிம்மதியா படுத்துக்கோ. காலைல சீக்கிரம் எழுந்திருக்கணும். மனசை அனாவஸ்யமா போட்டு அலட்டின்டால் திரும்பவும் உடம்புக்கு வரும். அதனால் நிச்சிந்தையா கொஞ்ச நேரம் தூங்கு. போ...''

அம்மா சொன்ன மாதிரி முகூர்த்தம் எந்த விதத் தடங்கலும் இன்றி நடந்து விட்டது. ஒன்பது கஜப் புடவையும், கழுத்தில் புது மஞ்சள் பளபளப்பில் மாங்கல்யமும், கால்மெட்டியுமாக ராஜேஸ்வரி அழகாக இருந்தாள். புதிதாய் முகத்தில் ஒரு களை தெரிந்தது. ஒட்டியிருந்த கன்னங்களில் கூட மினுமினுப்பு வந்திருந்தது. திருமாங்கல்ய தாரணம் ஆன பின்னர் மனசுக்குள்ளும் ஒரு நிம்மதி தோன்ற தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

'நல்ல வேளையாக இத்தனைப் பேர் எதிரில் ஒன்றும் நிகழவில்லை' என்கிற திருப்தியில் உதட்டோரத்தில் சிரிப்பு கூட ஓடிற்று.

அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் ஒருவித சந்தோஷத்துடனே கலந்து கொண்டாள். விவரம் தெரிந்த வயதிலிருந்து தான் அனுபவிக்கிற முதல் சந்தோஷம் இதுவாகத்தான் இருக்கும் என்று தோன்றிற்று. கூடவே இந்த சந்தோஷத்திற்கு தீர்க்காயுசு ஏற்படுமா, அல்லது அற்பாயுசாக மடிந்து போகுமா என்ற கேள்வி எழுந்து நெஞ்சினுள் சின்ன வேதனையையும் வலியையும் ஏற்படுத்த. அதை மறைக்கப் பாடுபட்டு வலியதோர் சிரிப்பை நிறுத்திக் கொண்டாள்.

பகல் சாப்பாடு முடிந்து. மாலை வரவேற்பிற்குப் பின்னர் இரவு சடங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சத்திரத்தின் மாடியிலிருந்த தனி அறையையே அலங்கரித்திருந்தனர். பத்துமணி வாக்கில் சத்தியமூர்த்தி முதலில் உள்ளே போய் காத்திருக்க, பின்புஅவள் அனுப்பப்பட்டாள். தலைக்குப் பின்னால் கதவு மூடப்பட்ட சத்தத்திலேயே அவளுக்கு உடம்பும், மனசும் நடுங்கிற்று. விறுவிறுவென்று தலைமுதல் கால்வரை ஏதோ ஓடிற்று. இதயத் துடிப்பு

அதிகமாகி, கண்களில் கொஞ்சம் கொஞ்சமாக சிவப்பு படரத் தொடங்கிற்று. அசாதாரண வேகத்தில் வாயில் உமிழ் நீர் சுரந்து உதட்டின் கோடியிலிருந்து வெளிவர-

அவள் புரிந்து கொண்டாள்.

எதை நினைத்துப் பயந்தாளோ அந்தத் தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எந்த சந்தோஷம் நிலைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாளோ அது அழியப்போகிறது. அம்மாவும், அப்பாவும் மறைத்து வைத்த உண்மை சில நிமிடங்களில் வெளிப்படப்போகிறது.

அவளது மாறுதல்களை உணராத சத்தியமூர்த்தி மெதுவாக எழுந்து அவளருகில் வந்தான். கண்களிலும், உடம்பிலும் பொங்கிய தாபத்தை மறைக்க இயலாதவனாக அவளது தோளில் மெதுவாகக் கைவைத்து அழுத்தி,

''வா, ராஜி...'' என்ற மறுவினாடி கை கால்கள் விறைத்துக் கொள்ள சரேலென்று கீழே விழுந்தாள் ராஜேஸ்வரி. விழுந்த வேகத்தில் தலை கட்டிலின் காலில் மோதிற்று. கைகளும் கால்களும் கோணல் கோணலாக இழுக்க, கண்கள் செருகி, வாயிலிருந்து நுரையும் ரத்தமும் தள்ள —

அதிர்ச்சியிலும், பயத்திலும் நெஞ்சைக் கைகளால் பற்றிக் கொண்டவனாக அப்படியே நின்றான் அவன். ஒரு வினாடி ஒன்றும் தோன்றவில்லை. பின்புதான் என்ன செய்ய வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது. ஓடிப்போய் தன் சாவிக்கொத்திற்காக அலைந்தான். கிடைக்கவில்லை. வேறு ஏதாவது இரும்பு கிடைக்காதா என்று தேடினான். எதுவும் அகப்படவில்லை. அதிலேயே ஓரிரு நிமிடங்கள் ஓடிப்போக அவன் மீண்டும் அவளருகில் வந்த போது வலிப்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து அடங்கிக் கொண்டே வந்து அடுத்த சில நிமிடங்களில் முற்றிலும் நின்று போய் வாயிலிருந்து வழிந்த ரத்தமும் நுரையும் தரையை நனைக்க சுயநினைவற்றுக் கட்டை மாதிரிக் கிடந்தாள் அவள்.



பக்கத்தில் பிரமை பிடித்த மாதிரி அப்படியே நின்று கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

வலிப்பு வந்து ஓய்ந்தபின் மூன்று நான்கு மணி நேரங்களுக்குக் கட்டை மாதிரி கிடந்தாள் ராஜேஸ்வரி. மிகுந்த மனிதாபிமானத்துடன் அவளைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினான் சத்தியமூர்த்தி. வாயிலிருந்து நுரையும், ரத்தமுமாகத் தள்ளி தரையில் ஓடியிருந்ததை, தலைகாணியின் உறையைக் கழற்றித் துடைத்து மூலையில் போட்டான். வலிப்பு வந்தபோது பற்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்ட நாக்கு கடிபட்டதில் வெளிவந்திருக்கிற ரத்தம் என்பதைப் புரிந்து கொண்டான். அவளருகில் நின்று அந்த முகத்தை சில வினாடிகள் பரிதாபத்துடன் பார்த்தான்.

அந்தப் பரிதாபம் வினாடிகளுக்குத்தான் அவள்மீது நிலைத்தது. பின்னர் தன் மீதே திரும்பியது. அவளருகில் ஒரு ஓரமாகக் கட்டிலில் உட்கார்ந்து ஒடுங்கிப் போனான். தனக்கு எவ்வளவுபெரிய துரோகமாகச் செய்திருக்கிறார்கள் என்று குமுறினான். எத்தனை பெரிய விஷயத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள். சாதாரண உடம்பா இது...? இன்று வந்து நாளை போய்விடுகிற வியாதியா...? இதன் கொடூரத்தைப் புரிந்து கொண்டிருப்பவன் அவன். அவனுடன் ஜூனியராகப் பணிபுரிகிற இன்னொரு நண்பனுக்கு இந்த வியாதி உண்டு. ஆபீஸிலேயே அவன் கீழே விழுந்து கைகால்கள் இழுக்கப்படுகிற கோரத்தைப் பார்த்திருக்கிறான். பற்களுக்கிடையில் நாக்கு அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க அவன் சட்டைப் பையில் எப்போதும் தயாராக வைத்துக் கொண்டிருக்கிற மரக்கட்டையை எடுத்து வாயில் செருகியிருக்கிறான். சிவராமன் என்கிற அந்த நண்பன் இதன் காரணமாகவே தனியாக எங்கும் போவதில்லை. ஆறு, ஏரி, குளம், கிணறு இவற்றை நெருங்குவதில்லை. நாற்பது வயதிலும் கல்யாணம்

பண்ணிக் கொள்ளவில்லை. இவன்கூட அவன் நிலை கண்டு உருக்கப்பட்டுக் கேட்டிருக்கிறான்.

''ஏன் சிவராமா, ஒரு நல்ல டாக்டரா பார்த்துக் காட்டக்கூடாதா?''

''இந்த வியாதிக்கெல்லாம் மருந்தேது சந்தியா...? நானும் என்னோட பத்தாவது வயசுலேருந்து இப்படித் தான் கீழே விழுந்து இழுத்துட்டிருக்கேன். அந்தந்த நேரத் துக்கு மருந்து தராங்க. கார்டினால் கொடுத்து தூங்க வைக் கிறாங்க. அவ்வளவுதானே தவிர நிரந்தரமா குணமாக ஒரு வழியும் இல்லையே....?''

''எத்தனையோ வியாதிக்கு மருந்து கண்டு பிடிச்ச வங்க இதுக்கு மட்டும் கண்டுபிடிக்காமலா இருப்பாங்க...?''

''ப்ரு! ஏதோ என்னுடைய துரதிருஷ்டம்னு வச்சிக் கோயேன்...சில சமயங்களில் ஏண்டா உயிர் வாழறோம்னு வேதனையாக்கூட இருக்கு. தானாபோக்கிக்கிற தைரிய மும் ஏற்படலை...''

''என்ன சிவராமா இப்படியெல்லாம் பேசற...? எதையோ கேட்டால் ஏதோ பதில் சொல்ற....? பேசாமல் ஒன்னு செய்யேன். இப்படித் தனியா இருந்து கஷ்டப் படறதுக்கு கல்யாணம் பண்ணிக்கோயேன். துணையா, உதவியா இருக்கும்.''

''என்ன சொன்னே, என்ன சொன்னே...?'' என்று அதிர்ச்சியாய் ஏதோ கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டு விட்ட மாதிரி பார்த்தான் அவன்.

''என்னப்பா அப்படி அதிசயமா பார்க்கறே...? கல்யாணம் பண்ணிக்கோன்னு ஆலோசனை சொல்றது தப்பா...?''

''ம்ஹூ, தப்பு இல்லே. ஆனால் யாருக்கு சொல்லணும் யார் கிட்டே சொல்லணும் என்கிற நியதியெல்லாம் இருக்கு இல்லையா...? என்னை மாதிரி இருக்கிறவனுக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடா....? டாக்டரே, கல்யாணம் பண்ணிக் கிறதோ, உடல் சம்பந்தமா உறவு வச்சிக்கிறதோ கூடவே



கூடாதுன்னு சொல்லியிருக்கார். இந்த வியாதிக்காரா கல்யாணம் பண்ணிக்கக் கூடாதாம், இந்த மாதிரி ஒரு உண்மையையும் தெரிஞ்சுக்கிட்டு அதை மறைச்சு வச்சு கல்யாணம் பண்ணிக்கிறதை விடப் பாவம் வேற இருக்கா? அனாவஸ்யமா ஒரு பெண்ணோட வாழ்க்கையைக் கெடுக் கணுமா...? காலம் முழுதும் அவகிட்டேயிருந்து சாபம் வாங்கிக்கணுமா? வேணாம் சாமி...! அந்த நரகத்தை விட இந்த நரகமே தேவலை. ஏற்கெனவே என்ன பாவம் செய்தேனோ இப்படித் தவிக்கிறேன். அது கூட கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்த பாவத்தை வேற செய்யணுமா—?''

இப்போது அதெல்லாம் நினைவிற்கு வந்தன. இவர்கள் எதற்காக இந்தப் பாவத்தைத் தனக்குச் செய்திருக் கிறார்கள் என்று தோன்றிற்று. 'இப்படிப்பட்ட வியாதி திடீரென்று வந்திருக்க முடியாது. அப்படி வருவதல்ல இது நீண்ட வருடங்களாக இருந்து கொண்டிருக்க வேண்டும். இவனுடைய டாக்டரும் சிவராமனிடம் சொன்னமாதிரி கல் யாணம் கூடாது என்று அடித்துச் சொல்லியிருக்கவேண்டும். அது இவனுக்கும் இவனுடைய பெற்றோர்களுக்கும் தெரிந் திருக்க வேண்டும். பின் ஏன் திருமணம் செய்து வைத்தார் கள்? அதற்குக் காரணம் என்ன? இந்தக் காரணத்தினால் தான் இந்தப் பெண் கல்யாணப் பந்தலில்கூட சந்தோஷமாக இல்லையா? முகத்தில் ஒரு களையே இல்லாமல் கிடந்தானா? சாதாரணமாகப் புதுக் கல்யாணப் பெண்ணிடம் ஏற்படக் கூடிய துடிப்பு, எதிர்பார்ப்பு சிரிப்பு எதுவுமற்றிருந் தானா....?

இப்போது இதெல்லாம் பூதாகாரமாகத் தோன்றுபவை காலையில் ஏன் கண்ணிற்படவில்லை...? இதுதான் விதியோ...? விதி குறுக்கிடும்போது மாயை நம் கண்களை மறைத்து விடுமோ....?

யோசித்து யோசித்து களைப்படைந்திருந்தான் அவன். கிட்டத்தட்ட ஒரு வருட காலமாகப் பெண் வாசனையைத் துறந்திருந்தவன் எத்தனை எதிர்பார்ப்பில் இருந்தான். முதல் மனைவி பிரிவினால் மூன்று மாதகாலம் பாதிக்கப்

பட்டவன் இப்போதைய ஏமாற்றத்தினால் இன்னும் எத்தனை பாதிப்பிற்கு ஆளாகப் போகிறோமோ என்கிற பயம் ஏற்பட்டது. மீண்டும் மீண்டும் தன்னை துரதிருஷ்டம் சுற்றி வருவதாக உணர்ந்தான். எது சுற்றி வந்தாலும் இப்போதைய பிரச்னைக்குத் தீர்வு காண்கிற வழிகளை யோசித்தான்.

நிச்சயமாக இவளால் தனக்கு மனைவியாக இருக்க முடியாது. இந்த உடம்போடு எது செய்வதும் இயலாத காரியம். ஆபீஸில் ஸீனியர் சிவராமனுக்கு அலுங்காத வேலைகளாகத்தான் கொடுப்பார். அதிகம் மூளையை வேலை செய்ய வைக்கமாட்டார். யோசிக்க விடமாட்டார். கேட்டால் ''உங்களுக்குத் தெரியாது. இந்த வலிப்பு வியாதிக்கு மென்டல் டென்ஷன், ஃபிஸிகல் டென்ஷன் இரண்டு எமன்'' என்பார். அதனால் இவளுக்கும் அவை கூடாது. வெறும் பொம்மையாக மனைவியை வைத்துக் கொள்வதும் சிரமம். அதற்காக அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. இப்போது அவனது பிரச்னையெல்லாம் சட்டத்தின் துணையை நாடுவதா? அல்லது சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதா என்பதுதான். எதற்கும் இவள் இந்த மயக்கம் கலைந்து எழுந்திருக்கட்டும். பேசிப்பார்த்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று அமைதியாகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் சத்தியமூர்த்தி......

ராஜேஸ்வரி மெல்ல கண் திறந்து சில வினாடிகள் மிரள மிரள விழித்தாள். வழக்கம் போல் நினைவு திரும்பச் சிறிது நேரமாயிற்று. உடம்பு முழுவதும் அடித்துப் போட்ட மாதிரி வலியெடுத்தது. எச்சிலைக் கூட்டி விழுங்க முடியாத வாறு தொண்டைக்குள் ஊசிகளாகக் குத்தின. தண்ணீர் குடிக்க வேண்டுமென்று தோன்ற மெதுவாக எழுந்து கட்டிலில் உட்கார்ந்த போதுதான் சத்தியமூர்த்தி கண்ணில் பட்டான்.

சட்டென்று ஒவ்வொன்றாக நினைவிற்கு வர, பயம் கண்ணிலும், நெஞ்சிலும் தங்கிப்போக குற்றவாளியின் குறுகுறுப்புடன் தலையைக் குனிந்து கொண்டாள்.



சத்தியமூர்த்தி கட்டிலின் ஓரத்தைவிட்டுக் கீழே இறங்கி அவளருகில் வந்து நின்று தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டாத குரலில் கேட்டான்.

''குடிக்க ஜலம் வேணுமா?''

அவள் பேசாமல் இருக்க அவனே எதிரில் வைக்கப் பட்டிருந்த தண்ணீர் ஜாடியிலிருந்து டம்ளரில் நீர் ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தபோது ராஜேஸ்வரியின் கை நடுங்குவதைக் கவனித்தான்.

'பாவம் பயந்து போயிருக்கிறாள். சற்று நிதானமாகப் பேச வேண்டும்......தன் ஏமாற்றம், கோபம் எதையும் வெளிக்காட்டக் கூடாது' என்று தீர்மானித்து ''ம்—ஜலம் குடி...'' என்றான். அவள் மௌனமாக அவன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து காலி டம்ளரைப் பக்கத்தில் வைத்ததும், சத்தியமூர்த்தி சற்று தள்ளி அதேகட்டிலில் உட்கார்ந்து எப்படிப் பேச வேண்டும் என்பதைத் தீர்மானித்தவனாக ஆரம்பித்தான்.

''மாத்திரை ஏதாவது வச்சிருக்கியா...?''

''ம்...''

''எங்கே இருக்கு...?''

''அம்மா கிட்டே...இல்லைன்னால் தங்கைகள் யார் கிட்டேயாவது இருக்கும்''—அவள் பேசுவதற்கே சிரமப் பட்டாள்.

அவன் ஒரு வினாடி மௌனமாக இருந்தான். இப்போது இவளிடம் கேட்கலாமா, அல்லது அப்புறம் கேட்டுக் கொள்ளலாமா என்று யோசித்தான். அவளது களைப்பான முகமும், தழுதழுத்த பேச்சுமே அவ்வாறு தயங்க வைத்தன. இப்போது எது கேட்டும் இவளை சிரமப்படுத்த வேண்டாமே என்று அபிப்பிராயப்பட்டு பின் மாற்றிக்கொண்டான். அவனது தார்மீகக் கோபம் உடனடியாக 'எதற்காக இப்படிப்பட்ட ஒரு துரோகத்தைச் செய்தீர்கள்...?' என்கிற கேள்வி கேட்டு விடை தெரிந்து கொள்ளத் துடித்தது. அதனால் மெல்ல தன் கேள்வியைத் தொடர்ந்தான்.

''நான் சில கேள்விகள் கேட்கப்போறேன். உண்மையான பதிலைச் சொல்வாயா...?''

சொல்வதாகத் தலையாட்டினாள் அவள்.

''உனக்கு இந்த மாதிரி வலிப்பு வர்றது முதல் தடவை இல்லையே...?''

'இல்லை' என்று அவள் தலை மீண்டும் ஆடியது.

''எப்போதிலிருந்து இப்படி வர்றது...?''

''பனிரெண்டு, பதிமூணு வயசிலேருந்து நான் பெரியவளானதிலிருந்து வந்துண்டிருக்கு...''

''அப்போதிலிருந்தே இருக்கா...?''

''ஆமாம்...ஆரம்பத்துல கொஞ்சமா வந்துண்டிருந்தது. அப்புறம் அப்பா அம்மா சண்டையைப் பார்க்கப் பார்க்க அதிகமாயிடுத்து...''

''உங்க அப்பா அம்மா சண்டை போடுவார்களா...?''

''நிறைய...?''

''அடிதடியெல்லாம் உண்டா...?''

''ம்...அம்மா அடிவாங்கறப்போ, நாங்கதான் ஓடிப் போய்த் தடுப்போம். எங்களுக்கும் நாலு விழும்...''

''இதைப் பார்க்கிறப்போ அதிகமா வர ஆரம்பிச்சதா...?''

''டாக்டர் அப்படித்தான் அபிப்பிராயப்பட்டார்...''

''உனக்கு இந்த மாதிரி உடம்புக்கு வர்றதுக்கு நாங்கதான் காரணம்னு உணர்ந்தப்புறம் அவங்க சண்டை போடறதை நிறுத்திட்டாங்க இல்லையா?''

''ம்ஹூம். அதுதான் இல்லே...நான் தப்பினாலும் தப்பும் அவங்க சண்டை மட்டும் தப்பறதே இல்லை...''

''அதுக்குக் காரணம்...?''

''தெரியலே...அம்மா அப்பாவை எதிர்த்தெதிர்த்துப் பேசுவாள். அதுதான் காரணமா இருக்கணும்...''

சத்தியமூர்த்தி 'அதுமட்டுமா காரணம்?' என்கிறாற் போல் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.



''உனக்கு இந்த மாதிரி வர்றதுக்கு காரணம் எதுன்னு நான் இப்போ ஆராய்ச்சி நடத்தப் போறதில்லை. ஆனால் இந்த வியாதி இருக்கு. அதுவும் பதின்மூன்று வயசிலேருந்து தொடர்ந்திட்டு வருதுன்னு உங்க எல்லோர்க்கும் நன்னாத் தெரியும். இந்த வியாதிக்குக் கல்யாணம் பண்ணக் கூடாதுங்கறதை டாக்டரும் உங்ககிட்டே சொல்லியிருப்பார். அப்படி இருக்கிறபோது எதற்காக உண்மையை மறைச்சு இப்படி ஒரு காரியம் பண்ணினீங்க. நாங்க உங்களுக்கு என்ன கெடுதல் செய்தோம்? அதுவும் எங்கம்மா அன்னிக்கே விவரமா எடுத்துச் சொல்லலை...?' என் பையன் ஏற்கெனவே ஒரு முறை கல்யாணம் பண்ணி மனைவியை இழந்திட்டு நிக்கறான். அவன் சந்தோஷமா இருக்கணும், அவனுடைய குழந்தைக்குத் தாயாக இருந்து கவனிக்கணும், அது போதும், வேறு எதுவும் வேண்டாம்'னு சொல்லலை?...பணம் காசு, நகை, சீர்னு எதையும் எதிர்பார்க்கலைன்னு சொல்லலை...? ஏழை இடமாக இருந்தாலும் நல்ல பெண்ணாக வேணும்னு ஆசைப் பட்டதைத் தெரிவிக்கலை...? புடவையும் நகையையும் வாங்கிக் கொண்டு வரலை...? கல்யாண சாப்பாட்டுச் செலவில், பத்திரிகை செலவில், சத்திர செலவில் பாதி ஏத்துக்கலை...? அப்படிப்பட்ட எங்களுக்கு இந்தக் காரியத்தைச் செய்யலாமா...? மனைவி வேணும்னுதானே கல்யாணம் பண்ணிக்கவே சம்மதிச்சேன். இல்லைன்னால் இருத்திகாவை கவனிக்க ஒரு ஆயா ஏற்பாடு பண்ணியிருக்க மாட்டேனா...? மனைவியைப் பறிகொடுத்து ஒரு வருஷமா சந்நியாசி வாழ்க்கை வாழ்ந்தவனுக்கு எதிர்பார்ப்புகள் இருக்காதா? ஆசைகள் இருக்காதா? தேவைகள் இருக்காதா...? அவை அத்தனையையும் குழிதோண்டிப் புதைக்கிற மாதிரி நடந்து கொள்ள இப்படி அழுத்தமா ஒரு காரியத்தைச் செய்ய—மனசாட்சியே இல்லாமல் இந்த மாதிரி ஒரு பெரிய விஷயத்தை மறைத்து வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க எப்படித் துணிந்தீங்க...? எங்கிருந்து இப்படிப்பட்ட

தைரியம் வந்தது...? இதற்கெல்லாம் என்ன காரணம்? எனக்கு இந்தத் துரோகம் நடந்ததுக்கு யார் காரணம்...? எது காரணம்—சொல்லு... இப்போவாவது மறைக்காமல் முழு உண்மையையும் சொல்லு...''

மெதுவாக ஆரம்பித்து அவன் குரலில் அழுத்தமும், கோபமும், ஒரு வேகமும் ஏறிக் கொண்டே போக ராஜேஸ்வரி அவமானத்தால் குறுகி குற்ற உணர்ச்சி தாங்காமல் கரகரவென்று கண்ணீர் வடிக்கத் தொடங்கினாள்.

''தப்புதான்...உங்களை இந்த மாதிரி ஏமாற்றினது மகாபாவம்தான். ஒரு பெரிய நம்பிக்கைத் துரோகம். எங்க அம்மாவும், அப்பாவும் சேர்ந்து செய்து வச்ச துரோகம். ஆரம்பத்திலேருந்தே எனக்கு இதுல இஷ்டமில்லை. நான் பயந்துண்டே இருந்தேன். நீங்க பெண் பார்க்க வந்த அன்னிக்கே அப்பாகிட்டே கேட்டேன். 'எம்ப்பா எனக்கு இந்த மாதிரி இருக்குன்னு சொன்னீங்களா'ன்னு...? ஒரு வார்த்தை கேட்டதற்கே அவருக்குக் கோபம் வந்துடுத்து. கத்த ஆரம்பிச்சார். அம்மாகிட்டே போய் அழுததற்கு அவளும் கத்தினாள். 'உனக்குக் கல்யாணம் ஆகலைன்னால் கீழே இருக்கிற மத்த மூணு பேருக்கும் எப்படி ஆகும்? ஆயிரம் பொய் சொல்லித்தான் ஒரு கல்யாணம் பண்ணனும். அதனால் நீ இதில் தலையிடாதே. பேசாமல் போ'ன்னு அதட்டினார். அவங்களை மீறி என்னாலேயும் ஒன்றும் சொல்லமுடியாமற் போச்சு. எப்படியாவது உங்ககிட்டே இந்த விஷயத்தைச் சொல்லி கல்யாணத்தை நிறுத்திடணும்னு நான் ஆசைப் பட்டது நடக்கலே... அவர்களை மீறி சொல்ல முடியாமற் போச்சி. அப்படிச் சொல்லியிருந்தால் என்னை வீட்டுல வச்சுண்டிருக்க மாட்டா... அதற்குப் பயந்து நானும் பேசாமல் இதற்கு உடன்பட்டது தப்புதான். துரோகம் தான். என்னை மன்னிச்சுடுங்கோ. இந்தத் தப்புக்கு நீங்க எந்தத் தண்டனை கொடுத்தாலும் நான் ஏத்துக்கறேன்.



தயவு செய்து மன்னிச்சுடுங்க, மன்னிச்சுடுங்க, மன்னிச்சுடுங்க...''

அவள் கதறிக்கதறி அழத் தொடங்க, அழட்டும் என்று அரை மணிக்குமேல் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான் சத்தியமூர்த்தி. அவள் சொன்னதில் பொய் எதுவும் தெரியவில்லை. சத்திய வார்த்தைகளாகத் தான் பட்டன. ஆனாலும் தன்னுடைய இழப்பை எதனாலும் ஈடுசெய்ய முடியாது என்ற கோபத்தில் அவள் மீது இரக்கம் எழவில்லை. அவளை மன்னிக்கிற மார்க்கம் தெரியவில்லை. என்ன செய்யலாம், இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை யோசித்துக் கொண்டிருந்தபோது—

மீண்டும் மயங்கி விழுந்தாள் ராஜேஸ்வரி. இரண்டாவது முறையாக முன்பு வந்ததை விடவும் பலமான தாக்குதலாக மீண்டும் வந்து கோணலாகக் கைகால்கள் இழுக்கத் தொடங்க-

அந்தக் கோரத்தைக் காண்கிற சக்தியற்று கண்களை மூடிக்கொண்டு விட்டான் சத்தியமூர்த்தி...

மறுநாள் காலை கதவு திறக்கப்பட்டதும் ராஜேஸ்வரிக்குப் பதிலாக சத்தியமூர்த்திதான் முதலில் வெளியேறினான். வெளியில் போய் யாரிடம் என்ன சொல்வது என்பது புரியாதவனாகச் சிறிது நேரம் தவித்தான்.

''என்ன மாப்பிளே... காபி சாப்பிடறேளா, அனுப்பட்டுமா...?'' என்ற ராமசாமியின் முகத்தைப் பார்க்கக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. எத்தனை நெஞ்சழுத்தம் இவருக்கு என்று தோன்றிற்று. அப்படிப்பட்ட மகளுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டு மாப்பிள்ளை உறவு வேறு கொண்டாடுகிறாரே என்கிற கோபம் வந்தது. ஒரு வினாடி பனியனைப்பற்றி இழுத்து கீழே தள்ளி மிதிக்க வேண்டுமென்ற வெறி ஏற்பட்டது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். சத்திரத்தில் தங்கியிருக்கிற

கொஞ்சம் உறவினர்களும் போகட்டும் என்று நினைத்துக் கொண்டான். நேராகத் தன் பெற்றோரிடம் வந்து சொன்னான்,

''அப்பா, நம் பக்க உறவினர்கள் யார் இருந்தாலும் உடனடியாக மூட்டை கட்டிக் கொண்டு போகச் சொல்லுங்கள்......''

''என்ன மூர்த்தி திடீர்னு, சம்பந்தி விருந்து முடிந்து கிளம்பிடலாமே...''

''சம்பந்தியும் வேணாம்... விருந்தும் வேணாம். புறப்படுங்கப்பா...''

அப்போதுதான் அவன் குரலில் தெரிந்த தீவிர வெறுப்பையும் கோபத்தையும் கவனித்த சங்கரலிங்கம் பதறிப் போனார். ஒரு வினாடி அவன் முகத்தையே கூர்ந்து கவனித்துவிட்டு மனைவியைக் கூப்பிட்டார்.

''மீனாட்சி...ஏ, மீனாட்சி...சித்த இங்க வா...''

உள்ளே கைவேலையாக இருந்த அந்த அம்மாள் ''கொஞ்சம் இருங்கோ, இதோ வந்துடறேன்...'' என்று நிதானமாகக் குரல் கொடுக்க இவர் ஓர் அதட்டல் போட்டார்.

''என்ன வேலையானாலும் அப்படியே விட்டுட்டு வாடி... முக்கியமான விஷயமாய் பேசணும்...''

மனைவி வந்ததும், சத்தியமூர்த்தியை ஒரு மூலையாக யாரும் வராத இடமாகப் பார்த்து அழைத்துக்கொண்டு போய் நெஞ்சு பதறக் கேட்டார்.

''ஏண்டா, என்ன ஆச்சு? ராத்திரி அந்தப் பொண்ணு சரியா நடந்துக்கலையா...?''

இவன் மௌனமாய் எதை எப்படிச் சொல்லலாம் என்கிற தீவிர யோசனையில் தலைகுனிந்து நிற்க, அவர் மீண்டும் அழுத்தமாக கேட்டார்.

''ஏதாவது தப்பு நடந்து போச்சாடா...? சொல் லேண்டா...?''



''இல்லேப்பா. எனக்கு இந்தப் பொண்ணு வேணாம். தயவு செய்து இவளை இவள் வீட்டிலேயே கொண்டு போய் விட்டுட்டு வந்துடுங்க...''

''கொண்டு போய் விடறதா...? என்னடா உளர்றே...'' அம்மா பதறி அடிவயிறு கலங்கக் கேட்டாள்.

''கொண்டு போய் விடவேண்டிய அவசியம் கூட இல்லேம்மா...இதோ சத்திரத்தைக் காலி பண்ணும்போது இப்படியே அவளுடைய அம்மா, அப்பா கூடவே போயிடட்டும்...''

''ஏண்டா இப்படியெல்லாம் பேசற...? என்ன நடந்துன்னுதான் சொல்லேன்...''

''சொல்லும்படி ஒன்னும் நடக்கலே...''

''பின்னே ஏன் அவளை அனுப்பச் சொல்றே...?''

''எனக்கு பிடிக்கலே...''

''என்ன பிடிக்கலை''

''அவளைப் பிடிக்கலை...''

''என்னடா இப்படிச் சொல்றே...? இப்போ வந்து சொன்னால் என்னடா அர்த்தம்...? இதை கல்யாணத்துக்கு முன்னால இல்லே சொல்லியிருக்கணும். அன்னிக்குப் பொண்ணு பிடிச்சிருக்குன்னு தலையாட்டிட்டு, கல்யாணம், சாந்தி முகூர்த்தமெல்லாம் முடிஞ்சு இப்போ வந்து சொல்றியே, என்ன நியாயம்...?''

''அன்னிக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாதேம்மா... நேற்று ராத்திரிதானே தெரிய வந்தது...''

''அதான் என்ன விஷயம்னு அப்போதிலிருந்து கேட்கறோம்...''

''ஒன்னுமில்லேம்மா... போய் அவங்க அம்மா அப்பா கிட்டே சொல்லி அவங்க பொண்ணை அவங்களையே கூட்டிட்டுப் போகச் சொல்லிடுங்க...''

''எப்படிடா இப்பா போய் சொல்றது...அவா தப்பா நினைச்சுக்கமாட்டாளா...?''

"அவங்க பண்ண வேலைக்கு நாம் பண்றது எவ்வளவோ உத்தமம். திருப்பி நம்மை எது கேட்கவும் அவங்களுக்கு வாய் கிடையாதும்மா. வாய் என்ன, நிமிர்ந்து பார்க்க மூஞ்சிகூட கிடையாது. அதனால் தைரியமா அடிச்சுப் பேசிட்டு வா. உங்க பெண்ணை நீங்களே வச்சுக்கோங்கன்னு சொல்லு... உனக்கு தயக்கமா இருந்தால் அப்பா சொல்லட்டும்...என்னப்பா...?"

அதைக் கேட்டதும் சங்கரலிங்கத்தின் கோபம் அதிகமாயிற்று.

"என்னடா நினைச்சுப் பேசற நீ...? ஒரு பொண்ணோட வாழ்க்கைன்றது சாதாரண விஷயமில்லேடா. அதுவும் கல்யாணமான மறுநாளே இப்படி ஒதுக்கித் தள்றதுக்கு ஆழமான காரணம் இருக்கணும். இல்லேன்னால் அவா கோர்ட் வரை போய் நம்மை சந்தி சிரிக்க வச்சுடுவாடா..."

வேதனையாகவும், வெறுப்பாகவும் சிரித்தான் சத்தியமூர்த்தி.

"அந்த அளவிற்கு அவா போகமாட்டாப்பா...அப்படிப் போனாலும் எனக்குக் கவலையில்லை. என்ன காரணம் என்பதை நான் கோர்ட்டுல போய் சொல்லிக்கறேன்..."

"ஏண்டா, கோர்ட்டுல போய் சொன்னாலும் சொல்லுவே. எங்கிட்ட சொல்லமாட்டியா....?"

"அப்பா... கோர்ட்டுக்கு நானாகப் போகப் போறதில்லை. அப்படியே வாங்கினாலும் மியூச்சுவல் டைவர்ஸா, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வாங்குவேனே தவிர, நாலு பேருக்குத்தெரியறபடி ஒருபோதும் செய்யமாட்டேன். உங்களுக்குத் தெரியப் படுத்தாததற்குக் காரணம் என் கஷ்டம் என்னோடு போகட்டும். தெரிந்து நீங்களும் மனசு நோக வேண்டாமென்றதுதான். ஏற்கனவே உங்களுக்குள் நிறைய வேதனைகள் இருக்கு. சங்கடங்கள் இருக்கு. ஒரே பையனுடைய வாழ்க்கை முதல் முறையே இருட்டான சோகம் நெஞ்சைக் கவ்விக் கொண்டிருக்கு. இரண்டாவது முறையும் அப்படி ஆகிப் போச்சு என்றால் அது என் விதி.



அவ்வளவுதான். அதோடு விட்டுவிடுங்கப்பா. துருவித் துருவிக்கேட்காதிங்க. எவ்வளவு கேட்டாலும் நான் சொல்ல மாட்டேன். ஆனால் நான் ஒரு முடிவு எடுத்தால் அதற்கு நியாயமான காரணம் ஒன்று இருக்கும் என்பதை மட்டும் நம்புங்க, போதும். அநியாயமா ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையைக் கெடுக்கிற அயோக்கியனில்லை நான். அதுவும் மனப்பூர்வமா சம்மதிச்சு கல்யாணம் பண்ணிக்கொண்ட பின்பு தள்ளி வைக்கிற கொடுமைக்காரனில்லை. அது உங்களுக்கே தெரியும். அதனால் தயவு செய்து போய் சொல்லி விட்டு வாங்க..."

அதன்பின்பும் அவர் தயங்கவே அவன் விருட்டென்று எழுந்து கொண்டான்.

"சரிப்பா...போய் சொல்வதில் உங்களுக்கு சங்கடம் இருக்குமானால் நானே போய் சொல்லிட்டு வரேன். அதற்குள் சாமான்களையெல்லாம் பாக் பண்ணிண்டு தயாரா இருங்க. அதற்கப்புறம் நாம் ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்கக்கூடாது. புறப்பட்டு விடணும் என்ன...?"

சொல்லிவிட்டு சத்தியமூர்த்தி எதிர்ப்புறமிருந்த பெண் வீட்டுப் பகுதிக்குச் சென்றான். ராமசாமியையும், ஜெயலட்சுமி அம்மாளையும் தனியாகக் கூப்பிட்டான். அவர்கள் முகங்களில் அப்போதே மிகுந்த கலவரம் தெரிந்தது. குற்ற உணர்வு பிரதிபலித்தது. பலி ஆடுகளைப் போல் அவனைப் பின்தொடர்ந்து போய் மௌனமாய் தலை குனிந்து நிற்க, சத்தியமூர்த்தி கத்தாமல், கோபப்பட்டுப் பேசாமல் நிதானமாக—ஆனால் உறுதி குறையாத குரலில் ஆரம்பித்தான்.

"உங்க பெண்ணிற்கு நேற்று ராத்திரியே இரண்டுதரம் வலிப்பு வந்து வாயிலிருந்து நுரையும், ரத்தமுமாகத் தள்ளிற்று. நினைவு வந்த பின்பு அவள் நிதானமா எல்லா விஷயத்தையும் சொன்னாள். இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை மறைச்சு வச்சு கல்யாணம் பண்ண உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கணும்...? அதுவும் அந்த

வியாதிக்குக் கல்யாணமே கூடாது என்பது தெரிஞ்சும் செய்திருக்கீங்களே, இது எப்படிப்பட்ட கொடுமை...? அதற்குண்டான பாவத்தை நீங்களே அனுபவியுங்க. இப்போ உங்க பெண்ணையும் உங்க கூடவே கூட்டிண்டு போங்க. அப்புறம் நான் விவாகரத்து காகிதங்களைக் கொண்டு வரேன். இந்த இடத்தில் நானாக இருக்கவே சத்தப்படுத்தாமல் போறேன் வேறு யாராவது இருந்திருந்தால் தெரிந்திருக்கும் உங்களுக்கு. இதைக்கூட அந்த அப்பாவிப் பெண்ணுக்காகத்தான் செய்யறேன். வேறு யாருக்காகவும் இல்லை. சீ! நீங்களும் ஒரு தாயார் தகப்பனாரா...? மனுஷத் தன்மை என்பதே இல்லாத ஜென்மங்கள். சுயநலப் பிசாசுகள். போங்கள். இன்னும் பதினைந்தே நிமிடங்களில் சத்திரத்தைக் காலி பண்ணிட்டுப் போயிடறோம். அதுவரை எங்க யார் கண்ணிலும் படாமல் ஒதுங்கி இருங்கள்...''

சொல்லிவிட்டு அதே வேகத்தில் திரும்பி வந்தான். அப்பா, அம்மாவை ஒரு சத்தம் போட்டு கிளப்ப வைத்தான். மடமடவென்று துணிகளை இழுத்து சூட்கேஸ்களில் அழுத்தினான். உறவினர்களைக் கிளம்பிப் போகச் சொன்னான். ராஜேஸ்வரியின் பெற்றோர் எடுத்திருந்த முகூர்த்த வேஷ்டியை சுருட்டி மூலையில் எறிந்தான். சூட்கேஸ்களைக் காரின் டிக்கியில் அடுக்கிவிட்டு ''போகலாமா...?'' என்று அதட்ட அவனது அம்மாவும், அப்பாவும் மறுபேச்சின்றி கிருத்திகாவுடன் போய் காரில் ஏறிக்கொள்ள—யாரையும் திரும்பிப் பார்க்காமல் முகத்தின் கடுப்பு மாறாமல் வேகமாகப் போய் டிரைவர் ஆசனத்தில் அமர்ந்து தானே காரைக் கிளப்பினான் அவன்.

மறுவினாடி கார் சீறிக் கொண்டு மறைய, சத்திரத்தினுள் மயான அமைதி நிலவிற்று.

உள்ளேயிருந்து ராஜேஸ்வரியின் தீனமான விசும்பல் மட்டும் ஹீனமாய் மிகமெல்லியதாய், சோகமான பின்னணியாகக் கேட்டது.



## 6

வீட்டில் யாருடனும் பேசவில்லை சத்தியமூர்த்தி. கல்யாணச் சத்திரத்திலிருந்து வந்தவன் தன் அறைக்குள்ளாகவே அடைபட்டுக் கிடந்தான். சாப்பிடக்கூட கீழே இறங்கி வருவதில்லை. கல்யாணத்திற்காகவும் அதன்பின் ஹனிமூன் போகவேண்டுமென்றும் எடுத்த விடுமுறை நாள் முழுதும் அவனை மருட்டிற்று. 'அந்த முதல் இரவும், அதன் கசப்பான அனுபவங்களும், கீழே சரிந்த அவளுடம்பும், கோணல் கோணலாக இழுக்கத் தொடங்கிய கைகால்களும், மேலே செருகிய கண்களும், நுரையும், ரத்தமுமாக வடிந்த உதட்டோரமும்...அம்மா...! எத்தனை பயங்கரமான தோற்றம், அந்த நேரத்தில் அனுதாபம் தோன்றினாலும் அப்புறம் எத்தனை அருவெறுப்பை ஏற்படுத்துகிறது...இதையா மறைத்து வைத்தார்கள்...! அந்த வியாதியையா...? அழகு வேண்டாம், பணம்வேண்டாம், ஆரோக்கியமாகக் குடும்பம் நடத்துகிறவளாக இருந்தால் போதுமென்று நினைத்தது இதற்குத்தானா...? இத்தனை நாள் காத்திருந்ததும் இதற்குத்தானா...? இந்தப் பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தது இதற்குத்தானா...? ஒன்று தவறி இன்னொன்று கிடைத்ததென்று சந்தோஷப்பட்டதெல்லாம் இதற்குத்தானா...?

கடவுளே...! எதற்காக இந்தத் தண்டனை? எத்தனைக் கோரமான காட்சி. நிச்சயமாய் ஒரு பெண்ணிற்கு வரக்கூடாத வியாதி. அதுவும் முதல் நாள் ராத்திரி வரவே கூடாது...

படுக்கையில் படுத்து அவன் குமுறிக் கொண்டிருந்தபோது குழந்தை மெதுவாகக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தது. கட்டிலின் அருகில் நின்று அப்பா... அப்பா....! என்றது. இவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்து குழந்தையைத் தூக்கி மடியில் இருத்திக் கொண்டான்.

சோகமாய் முன்நெற்றி முடியை ஒதுக்கி முத்தமிட்டு 'என்னடா கவி...?' என்றான்.

''ப்பா அம்மா...ம்மா...'' என்றது.

இவனுக்குச் சுருக்கென்று தைத்தது. 'மனைவி இல்லாவிட்டால் போகட்டும். இதற்கு அம்மாகூட இல்லையென்றாகிவிட்டதே...யார் துரதிர்ஷ்டக்கட்டை? தானா—இந்தக் குழந்தையா? தன் பாவம் இதைத் தாயற்று அடிக்கிறதா...? அல்லது இதற்கு அம்மா இருக்கக்கூடாது என்கிற விதி தன்னைத் துரத்துகிறதா....? எத்தனை கனவுகள் கண்டான்...! இனி தனிமை இல்லை. ராத்திரி ஷவரைத் திருப்பி உடம்பை நனைத்துக்கொள்ள வேண்டாம். நெஞ்சின் நெருப்பை அணைத்துக் கொள்ளப் பாடுபட வேண்டாம். இதமாய், இனிமையாய், இளமையாய், அன்பாய், அமைதியாய், அருகாமையில் ராஜேஸ்வரி. அண்மையான அணைப்பில் ரா...ஜேஸ்...

ஓ! எத்தனை பெரிய துரோகம். ஏமாற்று வேலை... அவர்களுக்கு நான் என்ன செய்தேன்....? இத்தனை பெரிய ஏமாற்று வேலைக்கு என்னை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்.. ? ஆயிரமாயிரம் இளைஞர்கள் இருக்க ஒருதரம் பந்தயத்தில் தோற்றுப்போன என்னைத்தான் திரும்ப தோற்கடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்—முன் யோசனையில்தான் செய்திருப்பார்களோ...? புதிதாய் இன்னொருவனை ஏன் தோற்கடிக்க வேண்டும், இவனே போதும் என்ற முடிவிற்கு வந்திருப்பார்களோ....'

இவன் உள்ளுக்குள் அறுந்து போன பல்லியின் வாலாக துடிக்க, குழந்தை அவன் முகத்தைத்திருப்பி கன்னங்களைத் தடைத்தபடி மீண்டும் கேட்டது.

''அப்பா...அம்மாப்பா...''

''அம்மாதானே...அதோ பாருடா என் கண்ணா...''

சத்தியமூர்த்தி குழந்தையைத் தன் முகத்தோடுசேர்த்து அணைத்து எதிர் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த அம்பாள் படத்தைக் காட்டினான்.



''இனிமேல் இவதான் உனக்கு அம்மா...''

குழந்தை படத்தைப் பார்த்து புரியாமல் விழிக்க, புரிந்த இவன் ஆழமாய் பெருமூச்சு விட்டான்......

# 7

கல்யாணமான கையோடு ராஜேஸ்வரி திரும்ப வந்து விட்ட விவரம் அந்தத் தெரு முழுதிற்கும் தெரிந்து போயிற்று. இட்டத் தட்ட ஒரு வாரத்திற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் எல்லா வாய்களுக்கும் பிடி அவல் கிடைத்தது. மென்று ஓய்ந்து பின்னர் ஒவ்வொருவராக வீட்டிற்கு வந்து துக்கம் மாதிரி விசாரிக்கத் தொடங்கினர்.

''என்ன ஜெயம்மா...உன் பெண்ணை கல்யாணம் ஆன கையோடு திருப்பி அனுப்பி வச்சுட்டாளாமே? இப்படிக்கூட நடக்குமா லோகத்துலே....! என்ன காரணம் சொன்னாடி அவா...?''

ஜெயலட்சுமியம்மாள் அழுதவாறு நிஜமான காரணத்தைத் தெரியப்படுத்துகிற சக்தியற்று நிறையவே பொய் சொல்லலானாள்.

''ஏதாவது சொன்னால் தானே மாமி தெரியும்.''

''.......''

''ஒன்னுமே சொல்லாமலா அனுப்பியிருக்கா?''

''ஆமாம் மாமி...''

''நீயும் உங்காத்து மாமாவும் காரணம் கேட்காமலே அழைச்சுண்டு வந்துட்டேளா...?''

''வேற என்ன செய்யறது...?''

''என்னடி இப்படி பதில் சொல்றே....? இது என்ன சாதாரண ரூபா, அணா விஷயம்னா நினைச்சுண்டிருக்கே...? போனால் சம்பாதிச்சுக்கலாம்னு தைரியமாருக்க. ஒரு பொண்ணோட வாழ்க்கை. அதுலேயும் உன்னோட பொண்ணு மூத்த பொண்ணுடி...''

''மூத்த பொண்ணு தான். இப்படி சீர்படறாளேன்னு நினைச்சால் கண்ணுல ரத்தம் வடியறது...''

''சரி. ரத்தம் வடிஞ்சால் சரியாப் போயிடுத்தா...? என்ன ஏதுன்னு விசாரிக்க வேணாமா...? அவா அழைச்சுண்டு போன்னு சொன்னால் வாயைத் திறக்காமல் அழைச்சுண்டு வந்துவிட்டால் ஊர் என்ன சொல்லும்...? இவ ஏன் பேசாமல் இருக்கா, தப்பு இவா பேர்லதானோன்னு சந்தேகப்படாதா...?''

''என் பொண்களைப் பத்தி உங்க எல்லாருக்கும் நன்னாவே தெரியுமே மாமி.. குனிஞ்ச தலை நிமிர்ந்திருப்பாளா அவா...? சொல்லுங்கோ...''

''அது சரிடியம்மா. எங்களுக்குத் தெரிஞ்சு என்ன உபயோகம். மாப்பிள்ளைக்கு இல்லே தெரியணும். அவர் கிட்டே இல்லே கேட்டிருக்கணும்.''

''என்னத்தை மாமி கேட்கிறது. கேட்கிற சந்தர்ப்பமே தரலையே...?''

''சரி. உன் பொண்ணையாவது கூப்பிட்டுக் கேளேன், என்ன நடந்தது என்று...''

''கேட்டாச்சு மாமி. அது ஒண்ணுமே நடக்கலைன்னு சொல்லி அழறா. பார்க்க சகிக்கலை...''

''சாந்தி முகூர்த்தத்துக்கு கொண்டு விட்டேளோன்னோ?''

''ஆமா... அன்னி ராத்திரியே விட்டாச்சு...''

''இவ சரியா நடந்துண்டாளான்னு விசாரிச்சியா...?''

''ம்...''

''என்ன சொன்னா...?''

''எல்லாம் சரியாத்தான் நடந்துண்டேன்னு சொல்றா...''

''அப்படியா...? எங்கே கூப்பிடு ராஜியை, நான் கேட்கறேன். உன்கிட்டே சொல்ல வெட்கப்பட்டுண்டு பேசாமல் இருக்காளோ என்னமோ...!''



''ம்ஹூம் வரமாட்டா மாமி, அவ அன்னிலேருந்து வெளியில் வர்றதே இல்லை. யார் மூஞ்சியிலும் விழிக்கறதில்லை. யாரோடும் பேசறதில்லை. சமையல்கட்டு மூலையில் பாயைப் போட்டுண்டு சதாகாலமும் அழுதுண்டிருக்கா...''

''இவ தப்பு பண்ணலைன்னா ஏண்டி அழணும்? நகரு. நானே உள்ள போய் சமாதானப்படுத்திட்டுப் போறேன்...''

ஆவேசம் வந்த மாதிரி வந்தவர் சமையலறைக்குள் நுழைய முயல, ஜெயலட்சுமி வாசல் படியில் நின்று கதவில் கைவைத்துத் தடுத்தவாறு சொன்னாள்.

''வேண்டாம் மாமி. பேசாமல் போங்கோ. மனுஷாளைப் பார்க்கவே அவள் பிரியப்படலை, சொந்தக்காரா ஆறுதல் சொல்ல நெருங்கினாலே கத்தறா. அழுதழுது வேற ஒடுங்கிப் போயிருக்கா. இப்போதான் நிம்மதியா தூங்க ஆரம்பிச்சிருக்காள். அதனால் இப்போ போய் தொந்தரவு பண்ண வேண்டாம் மாமி...''

''நான் ஏன் தொந்தரவு பண்றேன். ஏதோ ஆதங்கத்துல கேட்டேன். வேணாம்னா பேசாமல் போயிடறேன். எனக்கென்ன வந்தது...?'' சந்தேகமும், கோபமுமாக அந்த அம்மாள் வெளியேறிப் போய் சும்மா இருக்கவில்லை. ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி பற்ற வைக்க, தெரு முழுதும் குபுகுபுவென்று ராஜியின் விஷயம் எரியத் தொடங்கிற்று. வீடு வீடாகப் புகைய ஆரம்பித்தது.

'காரணம் இல்லாமலா கட்டுண்ட மறுநாளே திருப்பி அனுப்புவான்...? ஏதோ விஷயமிருக்கு. இவங்க மறைக்கிறாங்க...'

'விஷயம் வேறு ஒன்றுமில்லே சகுந்தலா, சாந்திக் கல்யாண ரூமிலேயே வாந்தி எடுத்தாளாம். டாக்டர் வந்து பார்த்து மூணுமாச கர்ப்பம்னு சர்டிபிகேட் கொடுத்துட்டுப் போயிட்டாராம்...'

''இது என்ன புது விஷயமா இருக்கு சியாமளா....?''

''சீச்சீ! சும்மா சொல்லாதீங்க. அந்தப் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணுடி. பரம சாது. குனிந்த தலை நிமிராது. அது ஸ்கூலுக்குப் போறபோது நான் எத்தனை தரம் பார்த்திருக்கேன் ...'

'உனக்குத் தெரியாது பூரணி. சாது மாதிரி தெரியற பெண்கள் தான் இந்த விஷயத்தில் ரொம்ப வேகமா செயல் படுங்கள்.'

''இருக்காது. நான் நம்பத் தயாராக இல்லை....'

''சரி, நீ நம்ப வேணாம். ஆனால் இவங்க ஏன் அழைச்சிட்டு போன்னு சொன்ன உடனே ஒரு வார்த்தை கூடப் பேசாமல் பெண்ணை அழைச்சிட்டு வந்துட்டாங் களாம். 'எம்பா, என் பொண்ணு என்ன தப்பு பண்ணினா' ன்னு திருப்பிக் கேட்கலையாம்...?'

'ஆமாம்.... ஏன் கேட்கலை....? சாதாரண விஷயத் துக்கே சண்டைக்குப் போகிற ஜெயலட்சுமியம்மா இதற்கு சும்மாவா வந்திடுவாங்க....'

'அதானே.... அப்படி வந்தாங்கன்னால் என்ன அர்த்தம்? தப்பு இவங்க பேர்ல இருக்குன்னு அர்த்தம். கேட்க மூஞ்சியில்லேன்னு அர்த்தம்....'

'அந்தப் பொண்ணுக்கு அது வேலை பண்ற ஸ்கூல் ஹெட் மாஸ்டரோட தொடர்பாம். அவனும் சின்னப் பையன் தானாம். ஆனால் ஏற்கெனவே கல்யாணமாகி ஒரு குழந்தை இருக்காம். இவங்க ஜாதியில்லையாம். ரெண்டு பேரும் ஸ்கூல் விட்டு எல்லாரும் போனதற்கப்புறம் அறைக்குள் போய் கதவை மூடிப்பாங்களாம்...'

'ஐயோ, அந்தப் பொண்ணா அப்படி செஞ்சது...?'

'அதேதான்.'

'உங்களுக்கு எப்படித் தெரியும் வத்சலாம்மா...?'

'அவ கூட வேலை செய்ற இன்னொரு டீச்சர் சொன்னா. அப்போ அதை நம்பலை, இப்போ நம்பறேன்...'



'அதான் தள்ளி வச்சிருக்கான். இல்லைன்னால் வேணும்னு கல்யாணம் பண்ணிக்கிட்டு, தாங்களே நகை போட்டு, புடவை எடுத்து ஆசையா செஞ்சவங்க மறுநாளே ஒதுக்குவாங்களா...?'

'அதானே... பார்த்தீங்களா...? ஜெயலட்சுமியம்மா சாமர்த்தியமா மறைச்சு வச்சு கல்யாணத்தை முடிச் சிருக்கா. விஷயம் தானா வெளிப்பட்டு இப்போ இந்த நிலைமையில் நிக்கறது...'

'கல்யாணம் பண்ணினவ கலைச்சுட்டாவது பண்ணி யிருக்கக் கூடாது...?'

'பாவம் பார்த்திருப்பா...'

'இது மட்டும் பாவமில்லையா...?'

'இன்னும் மூணு பொண்கள் இருக்கே... அதுகளுக்கு எப்படி கல்யாணமாகும்...?'

'அக்கா போன வழியில் அதுகளும் போறதுகள்....'

இப்படிக் களிமண்ணைப் பிசைந்து உருவம் செய்கிற பொம்மைக்காரனை விட மிக நேர்த்தியாகக் கண், காது, மூக்கு பொருத்தி முழு உருவமாக்கினர். அப்பொம்மை களைத் தெருதெருவாக எடுத்துப் போய் காசு வாங்காமல் விற்பனையும் செய்தனர். அந்த விற்பனை அவர்கள் வீட்டைத் தேடியும் வந்தது. நேரிடையாக ராஜேஸ்வரியிடமே விற்பனை செய்ய முயன்று சந்திக்க நினைத்த நினைப்பில் ஜெயலட்சுமியம்மாள் குறுக்கிட்டுத் தடுத்ததில் தோல்வி கண்டவர்கள் தங்களின் பேச்சுக்கள் அனைத்தையும் நிஜமாக உறுதிப்படுத்திக் கொண்டு திரும்ப—

சத்தியமூர்த்தி தானே விவாகரத்துத் தாள்களை எடுத்துக் கொண்டு ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தான். அவனை நடையிலேயே நிறுத்தி ராமசாமி கத்தத் தொடங்கினார்.

''கையெழுத்தும் போட முடியாது, ஒன்றும் செய்ய முடியாது. படியை விட்டுக் கீழே இறங்குடா...'' என்று

ஏக வசனத்தில் ஆரம்பிக்க ஒவ்வொரு வீட்டு வாசலிலும், ஜன்னல்களிலும் வேடிக்கைப் பார்க்கத் தலை தலையாய் முளைக்கத் தொடங்கின.

அந்தப் பேச்சிற்கு அப்புறமும் பொறுமை இழக்காமல் நிதானமாகவே சொன்னான் அவன்.

''சார்...வழக்கு உங்க கூட இல்லை. உங்க பொண்ணு கூட. அவளைக் கூப்பிடுங்க, நீங்க அனாவசியமா பேச வேண்டாம். அதிலும் மரியாதைக் குறைச்சலா ஒருமையில் கூப்பிட வேண்டாம்...''

''அப்படித்தாண்டா கூப்பிடுவேன். எங்க போய் என்ன செய்யணுமோ செய்துக்க. பேசாமல் அவள் பாட்டுக்கு ஸ்கூல் வேலைக்குப் போயிண்டிருந்தவளை வேலையை விடச்சொல்லி, கல்யாணம் பண்ணிக்கறேன்னு வந்து இப்போ இப்படி ஊர் சிரிக்கிற நிலைமையில் விட்டு விட்டுப் போனவனை உள்ளே கூப்பிட்டுத் தாம்பூலமா கொடுப்பாங்க....?''

''தப்பு உங்க பேர்ல சார். உங்க பெண் பேர்ல. எங்க பேர்ல இல்லை. நாங்க வேணும்னு ஆசைப்பட்டுத் தான் கல்யாணம் பண்ணிண்டோம். ஆனால் ஆனால் உங்க பெண்...அது உங்களுக்கே தெரியும். நான் சொல்ல வேணாம்...''

''நீ என்னடா சொல்ல இருக்கு...? வேணாம்னு உதறிட்டுப் போனவனுக்கு பேச்சு ஒரு கேடா....?''

''அதையே நான் திருப்பி கேட்கணும். படிச்ச படிப்பும், மனிதாபிமானமும் என்னை உங்களை மாதிரி பேசவிடலை. இந்த மாதிரிப் பொண்ணுக்கு கல்யாணம் செய்து வச்சது உங்க குற்றம்.''

''என்னடா குற்றம்....? நீ பெண்டாட்டி வேணும்னா வந்தே...? உன் குழந்தைக்கு அம்மாவா இருக்க ஒரு பெண் தேவைன்னுதானே ஓடி வந்தே—?''

''அபாண்டமா பழியை என் மேல் திருப்பாதிங்க. என் குழந்தையை வளர்க்க மட்டும் ஒரு பெண் தேவைன்னால்



நான் ஏன் உங்க வீட்டுப் படியை ஏறி வந்திருக்கப் போறேன். பேப்பர்ல விளம்பரம் கொடுத்து ஆயாவாக இருக்க ஒருத்தியை ஏற்பாடு செய்திருப்பேன். அவளுக்கு நகை, புடவை, சத்திரச் செலவுன்னு ஏகப்பட்ட பணம் வீணாக்கியிருக்க மாட்டேன்....''

''உன்னுடைய நகை, புடவை எல்லாத்தையும்தான் திருப்பி அனுப்பிவிட்டோமே...''

''அதுவா இப்போ பிரச்சினை.... அதற்கா நான் வந்திருக்கேன்...? அதையெல்லாம் திருப்பித் தந்த மாதிரி நாலு பேர் நடுவில் 'அவள் என் மனைவி' என்றாகிப் போன அந்தப் பெயரைத் திருப்பி வாங்கிக்க வந்திருக்கேன். மீதியெல்லாம் தந்த மாதிரி அதையும் திருப்பித் தந்துடுங்க...''

''அது என்ன கைம்மாறா வாங்கின பணம்னா நினைச்சே....கேட்ட உடனே திருப்பித் தர...?''

''அப்படி கலபமா நினைச்சுத்தானே, அத்தனையையும் மறைச்சு நீங்க கல்யாணத்தை நடத்தியிருக்கிங்க?''

''கல்யாணம் பண்ணினதில் என்னடா தப்பு....? ஊர் உலகத்துல எல்லாரும் பண்றதைத்தானே நானும் பண்ணினேன்—''

''ஆனால் ஊர் உலகத்துப் பொண்ணு மாதிரி உங்க பொண்ணு இல்லையே...?''

''என் பொண்ணுக்கு என்னடா குறை? என்ன குறை—?''

சத்தியமூர்த்தி பொறுமை இழந்து, முகம் முழுவதும் ரத்தமாய் சிவக்க ஏதோ சொல்ல வாயைத் திறந்தபோது—

வாசற் கதவைப் பிடித்துக்கொண்டு நிற்க முடியாத பலஹீனத்துடன் ராஜேஸ்வரி நின்று கொண்டிருந்தாள். குரலே எழும்பாத நடுக்கத்தில் ''அப்...பா...'' என்று அதட்டினாள்.

திரும்பிப் பார்த்த ராமசாமி அவளைச் சற்றும் எதிர் பார்க்காதவராகக் கத்தினார்.

''நீ உள்ள போடின்னால் போ... இது எனக்கும் அவனுக்கும் உள்ள பிரச்சினை...''

அவரது கத்தலையும், கோபத்தையும் பொருட்படுத்தாது, புதிதாய் ஏற்பட்ட தைரியத்துடன் ராஜேஸ்வரி பேச ஆரம்பித்தாள்.

''நான் போகமாட்டேம்ப்பா. ஆரம்பத்திலேயே இந்த தைரியம் எனக்கு இருந்திருந்தால் இத்தனை கஷ்டமும் ஏற்பட்டிருக்காது. உங்களுக்குப் பயந்து ஒடுங்கி ஒடுங்கியே நியாயமான விஷயத்துக்குக் கூட தைரியமில்லாமல் போச்சு. தப்பு மொத்தம் நம் பேர்ல இருக்க, அவர்மேல் ஏன் விழறீங்க....? அவரை ஏன் மரியாதைக் குறைச்சலா பேசறீங்க? அவரை உள்ளே விடுங்....''

அவள் முடிப்பதற்குள் கையை ஓங்கிக்கொண்டு அவள் மீது பாய்ந்தார் ராமசாமி. தன் இயலாமையையும் வயிற்றெரிச்சலையும் அவளது முதுகில் இறக்கினார். கூந்தலைப் பிடித்திழுத்து ஓங்கி ஒரு அறை வைத்து விட்டுக் கத்தினார்.

''நன்றி கெட்ட நாயே....இன்னமும் சோறு போடறவன் அப்பன்தாண்டி. அவனை எதிர்த்தா பேசற... அதுவும் தாலி கட்டின நேரத்துல அவிழ்த்து எடுத்துண்டு போக வந்திருக்கானே, அவனுக்கா பரிஞ்சு பேசி உள்ள கூப்பிடறே—''

இன்னொரு அறை முதுகிலும், கன்னத்திலும் இறங்க, உள்ளேயிருந்து ஜெயலட்சுமி அம்மாளும், தங்கைகளும் பதறிக் கொண்டு ஓடிவந்து தடுக்க முயன்ற அதே சமயத்தில்—

தெரு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது எதை மறைக்க இத்தனை காலமும் முயன்றார்களோ எதன் காரணமாக சத்தியமூர்த்தி அவளைத் திருப்பி அனுப்பினானோ— எந்தக் காரணம் புரியாமல் ஊர் அவளைத் தப்பாகப் பேசியதோ அந்தக் காரணம் அந்த இடத்தில் நிகழ்ந்தது. சீதை தன் புனிதத் தன்மையை



நிரூபிக்க நெருப்பில் இறங்கின மாதிரி ராஜேஸ்வரி நடையின் கீழே விழுந்து கைகால்கள் கோணல் கோணலாக இழுக்க, கண்கள் மேலே செருக, வாய் ஓரமிருந்து ரத்தமும், நுரையும் தள்ள தன் புனிதத்தை நிரூபித்துக் கொண்டிருந்தாள்.

ஜன்னல் தலைகளும், வாசற்படி உடல்களும் அதிர்ச்சியிலும், பரிதாபத்திலும் அப்படியே நிற்க, சத்தியமூர்த்தியும், ஜெயலட்சுமியம்மாளும் மட்டும் அவளருகில் ஓடினார்கள். விலகின புடைவையை சரி பண்ணியபடி ஜெயலட்சுமியம்மாள் கதறினாள்.

''இதற்குத்தான் அவளை அடிக்காதீங்கன்னு முட்டிக்கறேன். கேட்கறேளா... அந்தப் பத்தாவது வயசில என்னிக்கு அவளைக் கைநீட்டி அடிக்க ஆரம்பிச்சேளோ அன்னிலேருந்து என் குழந்தை இப்படி காயறாளே... என் வயிறு பற்றி எரியறதே...இது தெரியாமல் அவா, அவா வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசறாளே...என் குழந்தை வயத்தில வாங்கிண்டு வந்துட்டான்னு கதை கட்டறாளே... இத்தனைக்கு அப்புறம் கூடவா உங்க வெறியும், பேய்த்தனமும் அடங்கலை... இதையெல்லாம்விட இந்தக் குழந்தையின் உயிர் பட்டுனு போயிடக் கூடாதா....!''

புலம்பிக் கொண்டே அந்த அம்மாள் அவள் கைகளையும், சத்தியமூர்த்தி கால்களையும் லேசாகப் பற்றிக்கொள்ள பத்து நிமிடங்களுக்குப் பின் இழுப்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ராஜேஸ்வரி நினைவற்று மரமாகக் கிடக்க-

தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மெதுவாக எழுந்தவள் சத்தியமூர்த்தியைப் பார்த்தாள்.

''மாப்பிள்ளே, இதை மறைச்சுவச்சு உங்களுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தது தப்புத்தான். சாந்தி முகூர்த்த ராத்திரியில் இவளுக்கு இந்த மாதிரி வலிப்பு வந்த காரணத்தினால்தான் எங்க கூடவே அனுப்பி வச்சீங்கன்ற உண்மையை இதோ ஜன்னல்லேயும், வாசல்லேயும் நீட்டிண்டிருக்கிற இந்த முண்டங்களுக்குச் சொல்லுங்க...

அதற்கப்புறமாவது சாக்கடை நாற்றமா வீசற அந்த வாய்கள் மூடிக்கட்டும்...''

இவை அத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த சத்தியமூர்த்தி ஒரு வடிவிற்கு வந்தவனாக நிதானமாக எழுந்தான். அவளிடம் கையெழுத்து வாங்குவதற்காகத் தான் கொண்டு வந்திருந்த காகிதங்களைக் கிழித்து வீசினான்.' பின் ஜெயலட்சுமி அம்மாளைக் பார்த்து சற்று உரத்தகுரலில், எதிர்த்தலைகளுக்கும், உள்ளேயிருந்த ராமசாமிக்கும் கேட்க வேண்டுமென்று அழுத்திப் பேசினான்.

''அம்மா... நீங்க கவலைப்படாதீங்க. நானும் இந்த விஷயத்துல கொஞ்சம் அவசரப்பட்டு முட்டாள் தனமாக நடந்துண்டுட்டேன். அன்னிக்கு ராத்திரி இந்த நிலைமையில் இவளைப் பார்த்த அதிர்ச்சியிலும், ஏமாற்றத்திலும் நானும் மனுஷத்தனத்தை இழந்துட்டேன். உங்க பொண்ணு மல்லிகைப் பூமாதிரி, செண்பகம், மனோரஞ்சிதம் மாதிரி என் மனைவியா- வாசனையடிக்கணும்னு எதிர்பார்த்தேன். ஆனால் அவள் வாசனைப் பூ இல்லை. மனைவின்னு நெருங்க முடியாத வெறும் கனகாம்பரம்னு தெரிஞ்சுண்ட ஆத்திரத்துல அவளை உங்ககூட அனுப்பிட்டேன். கனகாம்பரம்னாலும் பூ—பூதான். அந்தப் பூவை இந்த வீட்டுலே உள்ளவங்களே இப்படிக் கசக்கிப் பிய்த்து எறிவாங்கன்னு நினைக்கல்லே. அதை நேர்ல பார்த்தப்புறம் கனகாம்பரமானாலும் பரவாயில்லை, என் வீட்டுத் தொட்டியில் வளரட்டும்னு தோணிடுத்து. அதனால் அவளை என் கூடவே அழைச்சுண்டு போறேன். தயவு செய்து ஒரு கை கொடுங்க, அவளைப் பிடித்து கார்ல படுக்கவைக்கலாம்...''

ஜெயலட்சுமியம்மாள், கண்கலங்கினபடி நினைவற்றுக் கிடந்த ராஜேஸ்வரியை கால் பக்கம் பிடித்துத் தூக்கி காரின் பின்ஸீட்டில் படுக்க வைத்தாள். கதவை மூடின சத்திய



மூர்த்தி பொதுவாகக் கைகூப்பி விடைபெற்று டிரைவர் ஆசனத்தில் அமர்ந்து வண்டியைக் கிளப்ப—

எதிர்ப்பக்கத் தலைகள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்க, ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் ஜெயலட்சுமி அம்மாளும் உள்ளே வந்தாள்......

—முற்றும்—

# திசை தேடும்...

## 1

மூன்றாவது முறையாகக் கந்தசஷ்டி கவசத்தை மீண்டும் முதலிலிருந்து சொல்ல ஆரம்பித்தாள் காவேரியம்மாள். முதல் இரண்டு முறைகளும் பாதியிலேயே தடைப் பட்டுப் போயிற்று. இடையிடையில் 'ஜோதி இந்த வரனை யாவது ஒப்புக் கொள்வாளா...?' என்ற கேள்வியிலும், அதைத் தொடர்ந்த நிலைவோட்டத்திலும் ஸ்லோகம் தடைப்பட்டது. இதுவரை ஜோதிக்காக ஐந்தாறு மாப் பிள்ளைகளின் ஜாதகங்கள் வந்தன. பெண் கேட்டு வந்து போயினர். அவர்கள் வழக்கப்படி பிள்ளை வீட்டுக் காரர்கள் தாங்களாகப் பெண் வீட்டாரைத் தேடி வர வேண்டுமே தவிர, இவர்களாக மாப்பிள்ளை தேடிப் போக முடியாது. அப்படிப் போனால் மதிப்பு இருக்காது. ஆயிரம் கேள்விகள் எழும். கல்யாணமும் நிச்சயமாகாது. நிச்சயப்படவும் விடமாட்டார்கள்.

தானாகத் தேடி நாலைந்து வரன்கள் வரவும் காவேரி யம்மாள் சந்தோஷப்பட்டுப் போனாள்.

''மூத்த பெண் கல்யாணிக்கு என் தம்பியையே முடிச் சுட்டேங்க. வீட்டோடு வளர்ந்த பிள்ளை, அவன் பிறந்த உடனே நிச்சயிக்கப்பட்ட கல்யாணம். ஒன்னுக்குள் ஒன்னு நெருங்கின சொந்தமானதால், பிரச்சினை எதுவும் ஏற்படலை. அதுவுமில்லாமல் அப்போ என்னுடைய வீட்டுக் காரர் இருந்தார். குறை எதுவுமில்லாமல் நடத்தி வச்சார். இப்போ எல்லாம் பெரிய பையன் மணிதாங்க செய்யணும். பாவம், வயசு இருபத்தெட்டாகலை. மொத்தப் பொறுப்பை யும் ஏத்துக்கணும். ஜோதி கல்யாணம் முடிஞ்சதும், அவன்



கல்யாணத்தையும் கையோட முடிச்சிடலாம்னு பார்க்க றேன்...''

வந்தவர்களில் ஒருத்தி—வயதிற்கு வந்த பெண்ணை வைத்துக் கொண்டிருப்பவள்—ஆர்வமாகக் கேட்பாள்:

''ஏங்க, அவுரு எங்கே வேலை செய்யறாருங்க...?''

பல்லாவரத்தின் அருகில் இருக்கும் தனியார் கம்பெனி ஒன்றின் பெயரைச் சொல்லிக் காவேரியம்மாள் மேலே தொடர்வாள்.

''அங்கதான் ஃபாக்டரிக்குள் வேலை, பெரிய கம்பெனின்னு சொல்லிக்கறாங்க...''

''உங்க பையன் அதுல என்னவா இருக்காரு...''

''பிட்டரோ...போர்மேனோ... என்னவோ சொல்லு வான். அதெல்லாம் யாருக்குங்க ஞாபகம் இருக்கு...?''

''அது சரி...என்ன சம்பாதிக்கிறாரு தெரியுமா...?''

''அறுநூற்றுச் சில்லரை கைல வருது. அப்படியே கொண்டாந்து கவரோட என் கைலதான் கொடுப்பான். அப்புறம் செலவுக்கு என்னைக் கேட்டுத்தாங்க வாங்கிட்டுப் போவான். தங்கமான பிள்ளை. இந்தக் காலத்துப் பிள்ளைங்க மாதிரி ஒரு சிகரெட்டு, பீடின்னு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. சினிமாகூடப் போகமாட்டான். என் பசங்க யாருக்குமே எந்தப் பழக்கமும் கிடையாதுங்க. அவுங்க உண்டு, வேலை உண்டுன்னு இருப்பாங்க...''

''எத்தினி பசங்க உங்களுக்கு?''

''மூத்தவ கல்யாணி-அவளைத் தம்பிக்கே கொடுத் திருக்கிறதாகச் சொன்னேனே....அவங்க திருவள்ளூர்கிட்ட இருக்காங்க. அவங்களுக்கு ஒரு பொண்ணு, ஒரு பிள்ளை. அடுத்தவன்தான் இப்ப நான் சொல்லிட்டிருக்கிற மணி. மூணாவது ஜோதி. அவளுக்குத்தான் நீங்க ஜாதகம் கொண்டு தந்திருக்கீங்க. அவளுக்கப்புறம் புஷ்பான்னு பதினெட்டு வயசுல ஒருத்தி. எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சு மேல படிக்க வைக்கிற வசதியில்லேன்னு வீட்டுலயே இருக்கா. வேலைக்குப் போடின்னால் கேட்க மாட்டேன்றா.

தையல் எம்பிராய்டரின்னு எது எதுவோ கத்துக்கறா. அவளுக்குப் பின் சந்திரா, மோகன்னு ரெண்டுபேர், ஸ்கூல் படிக்கறாங்க. இப்போ வீட்டுல நாங்க மொத்தம் ஆறு பேருங்க...''

''ஆறு பேருக்கும் உங்க பையன் ஒருத்தரது சம்பாத்தியம்தானா...?''

''ஏங்க...ஜோதி சம்பாதிக்கிறாளே...அவ ஒரு ஐந்நூறு ரூபா கொண்டு வருவா. வீடு சொந்த வீடு. அவரு இருக்கிற போதே போர்ஷன் போர்ஷனா கட்டி வாடகைக்கு விட்டாரு. அந்த வாடகைப் பணம் வேற வருது...''

''எத்தனை குடித்தனம் விட்டிருக்கீங்க...?''

''நாலு குடித்தனக்காரருங்க. நாலு பேரும் நம்ம இனம் தான். அதுலயே வாடகையா ஆயிரம் ரூபாய்க்கு வருதுங்களே...''

''அப்படின்னா கஷ்டமில்லேன்னு சொல்லுங்க...ஆமா. வீடு உங்க பேர்லதானே இருக்கு...?''

''என் பேர்ல இருந்தாலும் அத்தனை பசங்களுக்கும் சம பாகம் உண்டுங்க...''

''பொம்பளைப் பிள்ளைங்களுக்குக் கூடவா...?''

''ஆமாங்க, இப்போ சட்டம் அப்படித்தானுங்களே... ஆம்பிளைப் பிள்ளைங்களுக்குச் சமமா பொம்பளைப் பிள்ளைங்களும் வராங்களே...எங்க ஜோதி பாருங்க, மணிக்குச் சமானமா வேலைக்குப் போறா...சம்பாதிக்கறா...அப்படி இருக்கிற போது பொம்பளைன்னு தள்ளி வைக்க முடியுமா?...அதெல்லாம் நம்ம காலத்தோட மலையேறிடுச்சுங்க...''

''அது சரி...'' என்று பிள்ளையைப் பெற்றவளுடன் வந்தவள் தன் பெண்ணைத் தள்ளிவிட வழி ஏதும் கிடைக்குமா என்ற ஆர்வத்தில், ஆனாலும் அதை வெளிக்காட்டாத உள்ளடங்கிய சாமர்த்தியத்துடன், கேட்பாள்.

''ஏங்க...பிள்ளைக்கும் சேர்த்தே கல்யாணத்தை முடிச்சுடப் போறீங்களா...?''



''ம்ஹூம் இல்லீங்க. இப்போ பெண்ணுக்குச் செய்திட்டு. அடுத்த வருஷம்தான் அவனுக்குச் செய்யணும். ஏன் கேட்கறீங்க...?''

''இல்லே...எனக்கு ஒரு பொண்ணு இருக்கா... அதான்...''

''அப்படிங்களா...? ஆனால் அவனுக்கு என் அண்ணன் பொண்ணுஒருத்தி இருக்கா...பத்தாவது படிச்சுட்டிருக்கா.. அவளையே முடிச்சுடலாம்னு இருக்காங்களே.''

''அப்படியா'' என்று முகம்மாறச் சொன்னவள், உடன் வந்தவளிடம், ''என்னங்க, போகலாங்களா?'' என்று அங்கே அதற்கு மேல் உட்கார்ந்திருப்பது வீண் என்பதாக உணர்ந்து கேட்க, தன் பையனின் ஜாதகத்தைக் கொடுக்க வந்த அந்த அம்மாள் தரையில் கையை ஊன்றி ஸ்தூல சரீரத்தைத் தாங்கி எழுந்து நின்றாள்.

''அப்போ நான் வரட்டுங்களா? நீங்க பொருத்தம் பார்த்துச் சொன்னீங்கன்னா, நாங்க பொண்ணு பார்க்க வரோம். எல்லாம் ஒத்துப் போனால் இந்தத் தை மாசத்துல கல்யாணத்தை முடிச்சுடலாம். ஆமா, உங்க வீட்டுக்காரரு என்னவா இருந்தாருன்னு சொல்லவே இல்லீங்களே?''

''அவரு எவாஸில்வர் கம்பெனியில் இருந்தாருங்க. இப்போ ரெண்டு வருஷத்துக்கு முன்னால்தான் கம்பெனியிலேருந்து வந்து மார் வலின்னு படுத்தவரு எழுந்திருக்கவே இல்லீங்க. அவரு இருந்தார்னா எனக்கு எந்தக் கவலையும் இருந்திருக்காது. ஒரு அதட்டுப் போட்டு பிள்ளைகளைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கவச்சிருப்பாரு. இப்போ அவங்க சம்மதத்திற்கு ஏற்ற மாதிரி நான் தலையாட்ட வேண்டியதாக இருக்கு.''

''ஆமாம்.'' என்று தலையாட்டி விட்டு வந்தவர்கள் இளம்பிப்போக, காவேரியம்மாளைக் கவலை ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது. கணவர் போன பின்னர் அவளுக்குக் கவலையும், பொறுப்பும் அதி[illegible]வது வீட்டுப் பிரச்சனைகள் வெறும் [illegible]ப்பாகத்தான் இருக்கும்.

18641
3479158

பாகத்தான் இருக்கும். மணிக்கும் ஜோதிக்கும் அடிக்கடி உரசல்கள் ஏற்படும். குமாரசாமி ஒரு அதட்டல் போட்டா ரானால் சட்டென்று அடங்கிப் போகும்.

''என்னடா அங்க சத்தம்? டேய் மணி, ஏண்டா குரல் உரக்க வருது?''

''ஒன்னுமில்லேப்பா!'' என்று குரல் கொடுப்பான் அவன்.

''ஒன்னுமில்லாததற்கா அத்தனை சத்தம் கேட்டுச்சு?''

''இல்லப்பா. நான் குளிக்கறதுக்குத் தண்ணி அடிச்சு வச்சிருந்தால், ஜோதி குடுகுடுன்னு உள்ள ஓடிப்போய் மொண்டு கொட்டி குளிச்சிட்டு வந்திட்டாப்பா.''

''அப்படியா...ஏய் ஜோதி, வா இப்படி.''

அவசர அவசரமாகப் புடவையைச் சுற்றிக் கொண்டு அப்பாவின் எதிரில் வந்து தலைகுனிந்து நிற்பாள் அவள்.

''ஏய்... அண்ணன் அடிச்சு வச்சிருந்த தண்ணியைக் கொட்டிக் குளிச்சிட்டு வந்திட்டியா...?''

''வந்துப்பா... இன்னிக்கு ஸ்கூலுக்குக் கொஞ்சம் சீக்கிரம் போகணும். அதனால தண்ணி அடிக்க நேர மில்லேன்னு குளிச்சேம்பா....''

''நேரமில்லேன்னா, அவன் அடிச்சு வச்ச தண்ணியை எடுத்துக்கறதா...? கொஞ்சம் முன்னால எழுந்து தண்ணி யடிச்சு வச்சுக்கணும்....''

''ராத்திரி முழுசும் நோட்ஸ் திருத்தினதில அசந்து தூங்கிப் போயிட்டேன்...''

''அதனாலதான் பொம்பளைங்க வேலைக்குப் போகக் கூடாதுன்றது. வீட்டு வேலையோடு நிற்கணுங்கிறது. இல்லாட்டிப் போனா தன் வேலையைக்கூடத் தானே செய்துக்க முடியாது.''

''இல்லேப்பா...இப்பவே ஒரு வாளி அடிச்சுக் கொடுத் துடறேன்...''

''ம்...போ...போய்ச் செய்...''



நேரமாவதை உணர்ந்து, கடிகாரத்தைப் பார்த்துப் புஷ்பாவிடம் ரகசியமாகக் கெஞ்சுவான்.

ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சுடி. கொஞ்சம் தண்ணி அடிச்சுக் கொடுடி...''

''பெரிய மகாராணி... உனக்கு நான் வேலைக்காரியா என்ன...? எல்லாம் நீயே அடிச்சுக்கோ, போ...''

''ீ... ஒரு நாள் நேரமாயிருச்சுன்னுதானே கேட்க றேன்...''

''என்ன நேரமாயிருச்சு. மணி எட்டுதானே ஆவுது. நீயே போய் அடிச்சுக்க...''

''ீ... ப்ளீஸ்டி...நீ வீட்லதானே இருக்க. இந்த உதவி...''

''வீட்ல இருக்கேன்னா, உனக்கு அத்தனை அலட்சி யமா...? வெளிய போய்ச் சம்பாதிக்கிறதால் நீ ஒஸ்தி ஆயிடு வியா...? என்ன நினைச்சுப் பேசற நீ-''

''அம்மாடி தாயே...நீ தண்ணியே அடிக்க வாணாம். விட்டுடு...''

இப்படிச் சின்னதாக ஆரம்பித்துப் புகைந்து பெரிதாக வளர வேண்டிய சண்டைகள் எல்லாம் குமாரசாமி இல்லாத தால், பெரிதாகவே தொடங்குகின்றன. வாய்ச்சண்டை முற்றிக் கைகலப்பில் முடிகிறது. அப்பா போனபின், மணி தனக்குப் பெரிதாகப் பதவி வந்துவிட்டதாக நினைத்து அதிகம் அலட்டிக் கொள்கிறான். தங்கைகளை அதட்டு கிறான். அளவிற்கு அதிகமாக அதிகாரம் பண்ணுகிறான். சில சமயங்களில் கை நீட்டி அடிக்கவும் செய்கிறான்.

''என் கிழ்தான் நீங்க எல்லாரும் நிக்கறீங்கன்றதை ஞாபகம் வச்சுக்கோங்க. நான்தான் உங்க அத்தனை பேரையும் காப்பாத்தணும் என்பதை மறக்காதிங்க...''

''நீ என்னடா காப்பாத்தறது...?'' என்று பாய்வாள் ஜோதி.

''எங்களை எங்களுக்குக் காப்பாற்றிக்கத் தெரி யாதா...? என் சம்பளம் இல்லியா...?''

"சம்பளம் இருக்கலாம். ஆனால் நான் முன் நின்னு தானே உனக்குக் கல்யாணம் செய்து தாறணும், நான் இல்லேன்னா உனக்குக் கல்யாணம் நடந்துடுமோ...?"

"போடா..." என்று அலட்சியமாகச் சூள் கொட்டுவாள் ஜோதி.

"அப்படிப்பட்ட கல்யாணமே எனக்கு வேணாம்...உன் தயவு இல்லாமல் என்னை யார் கல்யாணம் செய்துக்கறாங்களோ, அப்போ செய்துக்கறேன்..."

"அப்படின்னா உனக்கு ஔவையார் கல்யாணம் தான் நடக்கும்..."

"டேய்...டேய்..." என்று பதறுவாள் காவேரியம்மாள். மனசு கலங்கித் துடிக்கும்.

"என்ன பேச்சடா பேசற...? அவ அப்படி நின்னா உனக்குச் சந்தோஷமாடா...?"

"பின்னே அவ மட்டும் என்னை எடுத்தெறிந்து பேசலாமாம்மா...? அண்ணன் என்கிற மரியாதை கொஞ்சமாவது இருக்கா அவளுக்கு...?"

"ஏய் ஜோதி, பொம்பளைப் பொண்ணா லட்சணமா இருக்க மாட்டே...? அண்ணனை எதிர்த்து என்ன பேச்சு உனக்கு...?"

"போம்மா... பொம்பளை பொம்பளைன்னு, இப்படி அடக்கி அடக்கி வச்சுத்தான் நம்ம வர்க்கமே தலை குனிஞ்சு நிக்குது. இவனுடைய இந்த மிரட்டல் எல்லாம் என்கிட்ட நடக்காது. நீ, புஷ்பா, தம்பி, தங்கையெல்லாம் வேணும்னா சலாம் போடுங்க. நான் என் சொந்தக் காலில நிக்கறவ. சுய சம்பாத்தியம் உள்ளவ. நான் ஏன் அனாவசியமா அடங்கணும்...?"

கேட்டு விட்டுச் செருப்பை மாட்டிக்கொண்டு, அவள் தரையைக் காலால் உதைத்துக் கொண்டு போவதைப் பார்த்துக் காவேரி தனக்குள் முனகிக் கொள்வாள்.

"வரவரப் பெற்ற தாய்க்கே அடங்காமல் பேசறவள். அண்ணனுக்கா அடங்குவாள்...?"



காவேரியம்மாளுக்குத் தன் நிலைமை மிக நன்றாகப் புரிந்தே இருந்தது. மணிதான் தற்போதைய கொழு கொம்பு என்பதை உணர்ந்திருந்தாள். அவனை விட்டால் ஜோதி, புஷ்பா, சந்திரா என்கிற கொடிகளைப் படர விட முடியாது. மோகனைப் படிக்க வைக்க முடியாது. ஆண் பிள்ளையற்ற குடும்பத்திற்குச் சரியான கௌரவம் ஏற்படாது என்பதைத் தெரிந்து நடந்தாள். மணியின் மனசு கோணாமல் நடக்கப் பழகிக் கொண்டவளுக்கு, ஜோதியிடம் அழுத்தமான ஒரு கோபமும் லேசான வெறுப்பும் ஏற்பட்டுச் சில மாதங்களாகியிருந்தன. அதே போல் ஜோதிக்கும் அம்மா மீதிருந்த பிரியமும், நல்லபிப்பிராயமும் குறைந்து, மணிக்கும் மற்றவர்களுக்கும் தான் அவள் எல்லாம் செய்வாள் என்கிற எண்ணம் தோன்றி, மெல்ல மெல்ல அந்த எண்ணம் அழுத்தமாயிற்று......

## 2

இந்த நிலைமையிலும், எப்படியும் இந்த வருடம் ஜோதியின் கல்யாணத்தை முடித்து விடவேண்டும் என்கிற அவசரத்திலும், தூக்கமின்றித் தவித்தாள் காவேரி. ஜோதி எவ்வளவு சீக்கிரம் வீட்டைவிட்டுப் போகிறாளோ அவ்வளவு நல்லது என்கிற நினைப்பு காவேரியம்மாளுக்கு ஏற்பட, இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, இப்போதே பதினெட்டு வயதாகி, ஜோதியை விட உயரமாகவும், பெரிய மனுஷித் தோற்றத்திலும் நிற்கிற புஷ்பாவிற்கு அடுத்து கல்யாணம் பண்ணிவிட வேண்டும். இரண்டாவதாக எலியும், பூனையுமாக மணிக்கும், ஜோதிக்கும் நடக்கிற சண்டைகள் நாளுக்கு நாள் அதிகமாகி ரசாபாசமாகின்றன. 'அண்ணனிடம் வாயாடாதே' என்றால் இவளுக்குக் கோபம் புறுபுறுவென்று வருகிறது. அம்மாவிடம் பாய்கிறாள். பின்னர் இவர்கள் இரண்டு பேருக்கும்

வார்த்தை தடிக்கிறது. விடே அழுகையில் முடிகிறது. ஜோதி நகர்ந்தால் அத்தனை சண்டைகளும் கூடவே நகரும் என்பதால் காவேரியம்மாள் இந்தக் கல்யாணத்தில் அக்கறை காட்டினாள்.

ஏற்கெனவே இரண்டு மூன்று வரன்களை அலட்சியப் படுத்தி ஒதுக்கிவிட்டாள் அவள்.

''ஏம்மா... நான் ஸ்கூல் டீச்சரா இருக்கிறதால், இவளுக்கு 'மேட்ச்' சாக இருக்கட்டும்னு, அதே மாதிரி எஸ் எஸ். எல். சி. படிச்சு டிரெய்னிங் எடுத்த இன்னொரு ஸ்கூல் மாஸ்டரைப் பார்த்திட்டியா...? ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கிட்டு குடும்பம் நடத்தறதுக்குப் பதிலாக ஒரு கிண்டர் கார்டன் ஸ்கூல் வச்சு நடத்தறோம், என்ன...?'' என்று கன்னென்று எரிந்து விழுந்தாள்.

காவேரியம்மாள் அவளது கோபத்தைக் கண்டு பயந்து மெலிசான குரலில் சொன்னாள்.

''ஸ்கூல் வாத்தியாரா இருந்தால் உனக்கு சௌகரியமா இருக்கும்னு தான்—',

''அப்படின்னு மணி சொல்லிட்டானா, உடனே உனக்கு வேத வாக்காகப் பட்டிருக்குமே...?''

''இதப் பாரு. உனக்கு வேணாம்னா விடு. அனாவஸ்யமா அண்ணனை ஏன் வம்புக்கு இழுக்கறே...?''

''ஏம்மா, இந்த மாதிரி அவன் என் வம்புக்கு வர்ற போது கேட்கறியா நீ...?''

''எல்லாரையும் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்...''

''கேட்பியே...நல்லா கேட்பே... கேட்க, திட்ட, சபிக்க எல்லாத்துக்கும் உனக்கு நான்தான் கிடைப்பேன். நான் உனக்குச் சுண்ணாம்புதானே...? மணி, புஷ்பா, சந்திரா, மோகன் எல்லாரும் வெண்ணெய். ஏன், பெரியக்கா கூடத் தேவலாம்...''

''சரி, இப்போ நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. நாளைக்கு அவங்க வருவாங்களே...என்ன பதில் சொல்ல...

''எதையாவது சொல்லித் திருப்பி அனுப்பு...''



''திருப்பி அனுப்பறதா...? ஏண்டி, உனக்குப் பிடிக்கலை...?''

''இல்லை, இல்லை, இல்லை...!''

''அதான் ஏன்னு கேட்கறேன்?''

இந்த மாதிரி ஸ்கூல் வாத்தியாரு, டிரில் மாஸ்டரு, டிராயிங் மாஸ்டருன்னு பார்த்தால் நான் கட்டிக்க மாட்டேன்...''

''பின்னே எப்படி இருந்தால் கட்டிப்பே...??'

''என்னை விட அதிகம் படிச்சிருக்கணும், நல்ல உத்தியோகத்தில் இருக்கணும், எனக்கு மேல சம்பாதிக்கணும். அவ்வளவுதான்.''

''ஐயோ, அப்படியெல்லாம் பார்த்தால் எப்படி...?''

''எப்படின்னா—வேணும்ன்ற மாதிரி தேடித் தந்தால் செய்துக்கறேன். இல்லாட்டிப் போனால் இப்படியே இருக்கேன்...''

அவள் சொன்னது மாதிரிச் செய்து காட்டிவிடப் போகிறாளே என்ற பயத்தில் காவேரியம்மாள் இன்னும் தீவிரமாக வரன் வருமா என்று காத்திருந்தபோது, இந்த வரன் வந்தது. அந்த அம்மாள் வீட்டினுள் நுழைந்த உடனேயே காவேரி கேட்ட கேள்வி இதுதான்.

''ஏங்க, பிள்ளை என்ன படிச்சிருக்காரு?''

''அதிகம் ஒன்னுமில்லீங்க. பி. யு. சி, பாஸ் பண்ணிட்டு அப்பா கூட வியாபாரத்தைக் கவனிச்சுக்கறான்.''

''என்ன வியாபாரங்க?''

''இரும்புக் கடை வச்சிருக்காங்க.''

''இரும்புக் கடையா?'' என்று காவேரியம்மாள் இழுத்த வாறே நிமிர்ந்ததும், அந்த அம்மாள் பரபரவென்று பேசத் தொடங்கினாள்,

''இரும்புக் கடையானால் என்னங்க, வியாபாரம் என்னமா ஆகுது. மாசம் கைல ஆயிரக் கணக்கில நிக்குது சொந்தமா சிந்தாதிரிப்பேட்டையில் வீடு, போக வரக் காரு எல்லாம் இருக்குதுங்களே!''

''இருக்கலாம், எல்லாம் இருக்கலாம். ஆனால், ஜோதி சம்மதிக்கணுமே''

அந்த அம்மாளிடம் அவள் அதைச் சொல்லவில்லை. ஆனால், இப்போது நினைத்துக் கொண்டாள். இந்த வரனையாவது ஜோதி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைத்தபோது சட்டென்று அவள் நிராகரித்த அத்தனை வரன்களும் நினைவிற்கு வர, சொல்லிக் கொண்டிருந்த கந்த சஷ்டி கவசம் தடுமாறிற்று. நினைவுகள் அலைக்கழிய அதற்கு மேல் தொடருகிற சக்தியற்றவளாக சுலோகத்தை நிறுத்தினாள். இப்படியெல்லாம் கை புளிக் கரைப்பிலும், கன் காஸ் அடுப்பில் வைத்த பாலிலும், மனசு ஜோதியின் கல்யாணத்திலுமாக உழல, வெறும் உதடு மட்டும் முருகனைக் காக்க அழைத்து என்ன பயன் என்று தோன்றிற்று. தனியாய்ப் பூஜை அறையில் உட்கார வேண்டும். கைகள் இரண்டையும் கூப்பி, மனசு லயிக்க லயிக்க, ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும். கண்களை மூடி முருகனைப் பார்வைக்குள் சிறைப்படுத்த வேண்டும்...

பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது காவேரியம்மாளிடமிருந்து. இதற்கெல்லாம் தனக்கு நேரம் எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்ற ஏக்கம் தோன்றிற்று. காலை ஐந்து மணிக்கு அலாரம் வைத்து எழுந்தால், பகல் இரண்டு மணி வரை ஓய்வு இருக்காது. இரண்டு மணி சாப்பாட்டிற்குப் பின்னர் சிறிது படுத்து எழுந்தால், மீண்டும் இரவு பத்து மணி வரை வேலை. இத்தனைக்கும் புஷ்பா பாதி வேலைகளைக் கவனித்துக் கொண்டு விடுகிறாள். வெளிவேலை முழுவதையும் அவள்தான் பார்க்கிறாள். வீடு பெருக்கி, துணி துவைத்து, பாத்திரம் துலக்கி, மாவாட்டி... இத்தனையும் சேர்த்துச் செய்வதனால், ராத்திரியெல்லாம் ஓய்விருக்காது. இதன் நடுவில் பூஜைக்கு எங்கே உட்கார முடியப் போகிறது...? வேலைகளுக்கு இடையில் இப்படி முணுமுணுப்பாக விநாயகர் அகவலோ,



சஷ்டி கவசமோ சொன்னால்தான் உண்டு. அதிலும் இது போல் ஜோதியின் கல்யாணக் கவலையோ, அடுத்து புஷ்பா நிற்கிறாளே என்கிற வருத்தமோ குறுக்கிட்டால் தடை ஏற்பட்டு விடுகிறது. மேலே சொல்ல எழாத வகையில் நாக்குத் தடுமாறுகிறது. மனம் லயிக்காமல் தப்பு தப்பாகச் சொல்வதைவிடப் பேசாமல் இருப்பதே நல்லது...

சுலோகத்தை நிறுத்தி, அடுப்பில் பாலை ஏற்றி விட்டுத் திரும்பியபோது, புஷ்பா பல் துலக்கி, தாவணித் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள். அவளைப் பார்த்த காவேரியம்மாள் சலிப்பு இழையோடிய குரலில் கேட்டாள்.

''ஏண்டி, உங்கக்கா எழுந்திருக்கலே...?''

''இன்னும் இல்லேம்மா...''

''ஸ்கூலுக்கு நேரமாகலே...?''

''அது அவளுக்கில்லே இருக்கணும்...''

''எழுப்புடி. அப்புறம் அதுக்கும் கத்தப் போறா...''

''ப்ரு...போம்மா. எதுக்குத்தான் கத்தலை அவ? இதுக்குப் போயி நீ ஏன் கவலைப்படறே? ஸ்கூலுக்கு நேரமாயிருச்சுன்னா அவ பதில் சொல்லிக்கறா...''

''அதுக்கில்லேடி...அவளும் எழுந்தா ஒன்னாக் காபி கலக்கலாம்னு பார்த்தேன். தனித்தனியா எத்தனை பேருக்குக் கலக்கிறது... அதுவுமில்லாமல் நேற்று அந்த அம்மாள் ஜாதகம் கொண்டு வந்து தந்த விஷயத்தைச் சொல்லலாம்னு பார்க்கிறேன்...''

புஷ்பா அம்மாவைப் பரிதாபமாகப்பார்த்தாள். மனதிற்குள் எல்லையற்ற இரக்கம் தோன்றியது. வேண்டுமென்றே ஜோதி அம்மாவை அலைக்கழிப்பதாகப்பட்டது. 'பெரிய மகாராணி! எங்கிருந்தோ இவளுக்கு ஒரு மகாராஜா குதிரையில் வந்து குதிக்கப் போகிறான்...ஏதோ நிலைமையையும், தகுதியையும் உணர்ந்து அம்மா சொல்கிற இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொண்டு போகாமல் இது

என்ன பிடிவாதம்...? அவன் கேட்கிற மாதிரி இடம் பார்த்தால் செய்து கொடுக்கிற வசதி வேண்டாமா? இருபது, இருபத்தைந்து சவரன் நகை கேட்டால்...? ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் என்று வாங்கித் தரச் சொன்னால்...? அதற்கெல்லாம் அம்மா எங்கே போவாள்...? மணி செய்ய மாட்டானே... அவனது பணத்திலிருந்து பைசா எடுக்கக்கூட அழுவானே...அப்பா பணமானாலும் செலவழிக்க விட மாட்டானே.... பணமில்லாமல் பெரிய இடம் எங்கிருந்து கிடைக்கும்....? இப்படியே போனால் எந்த வயதில் இவளுக்குக் கல்யாணமாவது...? மணி வேறு கல்யாணத்திற்குக் காத்துக் கொண்டு நிற்கிறான். பெரிய மாமா வீட்டிற்கு நடையாக நடக்கிறார். தன் பெண்ணின் கல்யாணத்திற்கு அவசரப்படுகிறார். பத்தாவது படிக்கிற பெண்ணிற்கு இப்போதே கல்யாணம் வேண்டுமாம்.

''என்ன காவேரி... கோமதிக்கு வயசு ஏறிக்கிட்டே போவுதுன்னு அவ அம்மா கவலைப்படறா—உன் பொண்ணுக்குக் கல்யாணமானாதான் இவங்க கல்யாணம் நடக்கணும்னு பார்த்தியானால் அறுபதாம் கல்யாணம் தான் நடக்கும்...''

''இல்லேண்ணா... இதோ இந்தத் தை மாசத்துல எப்படியும் முடிச்சுடணும்னு தீர்மானமா இருக்கேன்.''

''இதையே நீயும் சொல்லிட்டிருக்கே...நீ தீர்மானமாக இருந்தால் மட்டும் போதுமா? உன் பொண்ணுக்கு அப்படி எந்தத் தீர்மானமும் இருக்கிறதாகத் தெரியலையே...''

''..........''

''சரி, பொறுத்ததைப் பொறுத்தேன். இன்னும் இரண்டு மாசம் பொறுத்துக்கறேன், அப்படியும் உன் பெண்ணுக்கு எதுவும் நிச்சயமாகாட்டி, நான் சும்மா இருக்க மாட்டேன். பையனை அழைச்சிட்டுப் போய் திருப்பதியில் தாலி கட்டச் சொல்லி அழைச்சிட்டு வந்துடுவேன்...''



''சரிண்ணா...'' என்று தலையாட்டி யிருந்தாள் அம்மா.

அதெல்லாம் நினைவிற்கு வந்து இவளை மேலும் சங்கடப் படுத்தின. தான் இதுபோல் அம்மாவைக் கஷ்டப் படுத்தக் கூடாது என்ற முடிவில், மெதுவாக அம்மாவின் அருகில்போய், அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். மெல்லக் குனிந்து, அம்மாவின் காதருகில் போய், நிதானமாகச் சொன்னாள்.

''அம்மா...இந்த ஜோதிக்கு மத்தவங்க கஷ்டமே புரிய மாட்டேங்குது? தன் சுகமே பெரிசுன்னு இருக்கா...?''

காவேரியம்மாள் பதில் சொல்லாமல், மௌனமாகக் கண் கலங்கி நிற்க, புஷ்பா அவள் முகத்தை உயர்த்திக் கண்ணீரைத் துடைத்தாள்.

''அம்மா நீ அழாதேம்மா...நான் உன்னை இப்படியெல் லாம் கஷ்டப்படுத்த மாட்டேன். நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றியோ அவனைச் சந்தோஷமாகப் பண்ணிப்பேன். கூன், குருடு, நொண்டி, முடம் யாரானாலும் பரவாயில்லேம்மா...''

சொல்லி முடித்ததும், அவளை இழுத்துச் சரேலென்று அணைத்து இறுக்கிக் கொண்டாள் காவேரியம்மாள். மனதிற்குள் பொங்கிப் பொங்கி வந்தது.

''இது போறும்மா எனக்கு. இந்த வார்த்தைங்களே என்னை ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுத்துது. காபி ஆறுது...எடுத்துக்கம்மா...''

கூடத்தில் ஜோதி தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து கொள்வதைப் பார்த்து அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் காபி கலக்க முனைந்தாள் அந்த அம்மாள்...

# 3

காபி கலந்து அளவாகச் சர்க்கரை இட்டு ஆற்றி ஜோதியின் முன் வைத்து விட்டுத் தயங்கி நின்றாள் காவேரி. காபி குடித்து, டபரா டம்ளரைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்த ஜோதி அம்மாவின் தயக்கத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''என்னம்மா...?''

''ஒன்னுமில்லே...நேத்து ஒரு வரன் வந்திருக்கு...''

ஜோதி ஒன்றும் சொல்லவில்லை. அம்மாவே பேசட்டுமென்று அவள் முகத்தைப் பார்த்தபடி, மௌனமாக இருந்தாள். அதனால் காவேரியம்மாள் தொடர்ந்தாள்.

''......யாரோ உன்னைப் பத்தி அவங்கிட்டே சொன்னாங்களாம். பொண்ணு லட்சணமா இருக்கும்னு வந்தாங்க ஜாதகம் தந்திட்டுப் போயிருக்காங்க. பொருத்தமாக இருந்தால் சொல்லி அனுப்பினால், பொண்ணு பார்க்க வராங்களாம்...''

''அது சரிம்மா...படிப்பு என்ன, வேலை என்னென்னு விசாரிச்சியா...?''

''......படிப்பு...பி.யு.சின்னு சொன்னாங்க...சொந்தமா வியாபாரம் செய்யறானாம். ஆயிரக் கணக்கில் வருதாம். சிந்தாதிரிப்பேட்டையில் வீடு, காரு எல்லாம் இருக்காம்...''

''ஆமா, நான் வீட்டையும், காரையுமா கட்டிக்கப் போறேன்...''

''நகை, பணம் எதுவும் கண்டிஷனா கேட்கலை. நாம போடறதை ஒப்புக்குவாங்க போலத் தெரியுது...''

''அதுக்காக வெறும் பி.யு.சி. படிச்சவனைக் கட்டிக்க முடியுமா...?''



சுளீரென்று கோபம் வந்தது காவேரியம்மாளுக்கு. அத்தனை நாட்களாகக் கட்டிக் காத்த பொறுமையைக் கைவிட்டுக் கேட்டாள்.

''என்னடி...படிப்பு போறலை, உசந்த வேலையில்லை, பார்க்க நல்லாயில்லைன்னே வர்ர வரனையெல்லாம் தட்டிக் கழிச்சால் என்ன அர்த்தம்...?''

''என் இஷ்டப்படி வரன் பார்க்கணும்னு அர்த்தம்...?''

''உன் இஷ்டப்படியெல்லாம் பார்க்கிற சக்தி எங்களுக்கு இல்லை. விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் எங்களால் வீங்க முடியும். நீ சொல்ற மாதிரி, பெரிய பெரிய படிப்பும் ஆபீஸர் வேலையுமாகப் பார்த்தால், அதற்குத் தகுந்த எதிர்பார்ப்பு அவங்க கிட்டேயும் இருக்குமில்லை...? அவங்களும் பொண்ணு நல்ல பணக்கார இடத்திலேருந்து வரணும், வெள்ளை வெளேர்னு இருக்கணும்னு நினைப்பாங்க இல்லே...?''

''சரி, நினைக்கட்டும். அப்படின்னா நான் கல்யாணமே இல்லாமல் இருக்கேன். இப்படியே வாழ்ந்துட்டுப் போறேன்.''

''நீ சொல்றது உனக்கே நியாயமா இருக்கா, ஜோதி...? நீ ஒரே பொண்ணுதான்னா அப்படி இருக்கலாம். கடைசிப் பொண்ணுன்னாலும் கல்யாணம் வேண்டாம்னு நிக்கலாம். உனக்குப் பின்னால், உனக்கு மேல் பெரிசா வளர்ந்து நிக்கற புஷ்பா, அடுத்து சந்திரா, இவங்க ரெண்டு பேரையும் நான் கட்டிக்கொடுக்க வேண்டாமா? சந்திரா சின்னப்பொண்ணு, அவசரமில்லேன்னாலும் புஷ்பா இருக்கறாளே...?''

''அவ்வளவு அவசரம்னா இந்த வரனை அவளுக்கு முடியேன்...''

''அக்கா இருக்க, தங்கைக்கு எப்படி முடிக்கமுடியும்...? வரவங்க ஏன் அக்காவுக்குச் செய்யலைன்னு கேட்க மாட்டாங்களா?''

''கேட்டால், அக்காவுக்குக் கல்யாணத்துல இஷ்டமில்லை, அவள் செய்துக்க மாட்டேன்றான்னு சொல்லிடு!''

''என்னடி இது, குதர்க்க வாதம் பேசிக்கிட்டு...''

''குதர்க்கமில்லேம்மா...நிஜமாகத்தான் சொல்றேன். ஏதோ கல்யாணம்னு பண்ணிக்கிட்டு என்னால வாழ முடியாது. நீயும் உன் பாரம் குறைந்தால் போதும்னு தள்ளி விட்டுவிடுவாய். அந்த மாதிரி வாழ்க்கை எனக்குத் தேவை இல்லை. இனி எனக்காக வரன் தேடாதே. நான் கல்யாணம் செய்துக்கப் போறதில்லை. இது சத்தியமான பேச்சு. எனக்கு வேலை இருக்கு. வர்ர சம்பளம் என் ஒருத்திக்குத் தாராளமாகப் போதும். அதனால், இப்படியே இருக்கிறதாக முடிவு செய்துட்டேன். அதனால், என்னைவிட்டு இனி நீ புஷ்பா கல்யாணத்தை முடிக்கப் பாரு. சொல்லிட்டேன். இனிமேல் என்னைத் தொந்தரவு செய்யாதே...''

சடாரென்று எழுந்து ஜோதி வெளியில் போக, காவேரியம்மாள் உட்கார்ந்து அழத் தொடங்க, வாசலில் இருந்து மணியும், பின்பக்கக் குழாயடியிலிருந்து புஷ்பாவும் ஓடிவந்தார்கள். அம்மா அழுவதைப் பார்த்துப் பதறிப்போய் அருகில் உட்கார்ந்து அம்மாவின் தோளில் கை வைத்து ஆதரவாகக் கேட்டார்கள்.

''ஏம்மா, என்ன ஆச்சு? எதுக்கு இப்படி அழுவற?''

''இன்னும் என்ன ஆகணும்? பாருடா மணி. ஜோதி, கல்யாணம் செய்துக்கப் போறதில்லையாம். இப்படியே இருக்கப்போறாளாம். வேணும்னா மணிக்கும், புஷ்பாவுக்கும் கல்யாணம் செய்துக்கன்னு பிடிவாதமா சொல்லிட்டுப் போறா.''

''அதுக்கா இப்படி அழுவற? ஐயோ அம்மா, அதெல்லாம் சும்மா பேசற பேச்சு. இப்படிப் பயமுறுத்திப் பார்க்கலாம்னு நினைச்சுட்டிருக்கா அவ.''



அதைக் கேட்டுக் கொண்டே வந்த ஜோதியின் முகம் தணலாகச் சிவந்தது. வார்த்தைகள் காந்தலாக வெளி வந்தன.

''ஏய் மணி, என்னையும் உன்னை மாதிரியே நினைச்சுக்கிட்டியா? நீதான் பயமுறுத்தலாப் பேசுவே. உன்னை விட்டால் எங்களுக்கெல்லாம் கதியே கிடையாதுன்னு சொல்லுவே. நான் அப்படியெல்லாம் பேசறவ இல்லை. மனசுக்குப் பட்டதைப் பளிச்சுனு சொல்றவ. திரும்பவும் உன் கிட்டேயும் சொல்றேன் - எனக்குக் கல்யாணம் வேண்டாம். நான் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை. எனக்காக யாரும் காத்துக்கிட்டிருக்க வேணாம். தங்கள் கல்யாணத்தைத் தள்ளிப் போட வேணாம், அப்புறம் என் மீது பழி போடவும் வேணாம். நீ, புஷ்பா இரண்டு பேரும் தாராளமாகப் பண்ணிக்கலாம். நாளைக்கே வேணும்னாலும் பண்ணிக்கிங்க. நான் யாருக்கும் எதற்கும் குறுக்கே நிக்கலை. புரியுதா? இனி மேல் என்னைத் தொந்தரவு செய்யாதீங்க. எனக்கு மாப்பிள்ளை பார்க்கிற வேலை வச்சுக்காதீங்க சொல்லிட்டேன். இனிமேல் என் வம்புக்கு வரவும் வராதீங்க, புரியுதா? ஆளை விடுங்க, நான் வரேன். எனக்கு ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சு.''

''சாப்பாடுடி, எதுவும் சாப்பிடாமல் போறியே?''— காவேரியம்மாள் அத்தனைக் கலவரத்திற்கிடையிலும் கண்களைத் துடைத்துக் கொண்டு பரபரத்து எழுந்து கொள்ள, ஜோதி நிற்காமல் பேசிக் கொண்டே போனாள் :

''வேணாம், நீ சாப்பிடு. உன் செல்லப் பெண்ணிற்கும் பிள்ளைக்கும் போடு. என்னைப் பற்றி ஏன் அனாவஸ்யமா கவலைப் படற மாதிரி நடிக்கறே...?''

''பார்ரா, எப்படிப் பேசிட்டுப் போறா, பாரு...''என்று காவேரியம்மாள் மீண்டும் கண் கலங்க, மணி அழுத்தமான குரலில் சொன்னான்.

''போனால் போகட்டும், விடும்மா. அவதான் சொல்லிட்டாள்லே. இனிமேல் அவளுடைய கல்யாணத்தைப்பற்றி மறந்துட்டு வந்த வரனைப் புஷ்பாவுக்குப் பேசி நிச்சயம் பண்ணிடு. புஷ்பா கல்யாணம் முடிந்த கையோடு மாமா கிட்ட பேசி என் கல்யாணத்துக்குத் தேதி குறிச்சுடு...''

''அப்படின்னா ஜோதியோட கதி?''

''கதி என்னம்மா, அவ அவ்வளவு திமிராப் பேசறா, தைரியமாகச் சொல்றா. சுயமா நிக்கறா. சொந்தமா சம்பாதிக்கறா. இப்போ சம்பளம் வேற ஏறப் போவுது. அவளுக்குப் போய்க் கதி என்ன கதி, கல்யாணம் வேணாம்னு பிடிவாதம் பிடிக்கிறவளைக் கட்டாயப் படுத்த முடியுமா என்ன? அவ இஷ்டப்படி விடறதைத் தவிர வேற என்ன வழி? ஏம்மா, அவளுக்காக நாங்க இப்படியே நிக்க முடியுமா? கல்யாணம் வேணாம்னு இருக்க முடியுமா....? என்ன செய்யலாம் சொல்லு...?''

''அதில்லே மணி, அக்காவைவிட்டு, தங்கைக்குக் கல்யாணம் முடிக்கிறது நம்ம குடும்பத்துப் பழக்கமில்லையே...''

''ஏம்மா...பொண்ணை வேலைக்கு அனுப்பறது நம்ம குடும்பத்துப் பழக்கமா...? அவ அண்ணனையும், பெற்ற அம்மாவையும் எதிர்த்துப் பேசறது நம்ம குடும்பத்துப் பழக்கமா...? இப்படித்தான் மாப்பிள்ளை வேணும்னு கண்டிஷன் போடறது குடும்பப் பழக்கமா....? எது குடும்பத்துப் பழக்கம், சொல்லும்மா....?''

காவேரியம்மாள் பதில் சொல்ல வகையற்று ஒரு வினாடி பேசாமல் நின்று பின்னர் தழைந்த குரலில் பேசினாள்,

''இல்லே மணி... கடைசிவரை இதே மாதிரி ஒண்டிக் கட்டையாகவே நின்றுவிடப் போகிறாளேன்னுதான் கவலையாக இருக்கு...''

''அந்தக் கவலை அவளுக்குத்தானே இருக்கணும்...?''



''சரி, அவளுக்கு இல்லை, அதுக்காக நான் கவலைப் படாமல் இருக்க முடியுமா...? எனக்கு ஐந்து விரலும் ஒன்னு தானேப்பா!''

அந்தப் பேச்சில் சலித்துப் போனான் மணி. சுள்ளென்று கோபம் வர அம்மாவைப் பார்த்தான்.

''யார் இல்லேன்னாங்க...அதுக்காக இப்போ எங்களை என்ன செய்யச் சொல்றே சொல்லு?''

''ஒன்னுமில்லேப்பா...யார் என்ன செய்ய முடியும்...? அவங்கவங்களுக்கு எழுதின தலைவிதியை யார் மாற்ற முடியும்? சாமி மேல் பாரத்தைப் போட்டுட்டு இன்னிக்கு அந்தம்மா வந்தாங்கன்னா விஷயத்தைச் சொல்றேன். ஜோதிக்குப் பதில் புஷ்பாவிற்குப் பார்க்கலாமான்னு கேட்கறேன். சரின்னு சொன்னாங்கன்னா ஐயருகிட்ட ஜாதகங்களைக் காட்டறேன். பொருத்தமா இருக்குதுன்னு சொன்னார்னா பேசி முடிச்சிடுவோம். என்ன?''

''சரிம்மா.''

யாருமே எதிர் பார்க்காத வகையில் மடமடவென்று வேலைகள் நடந்தன. அந்த இடமே புஷ்பாவிற்கு நிச்சயமாயிற்று. மாப்பிள்ளை தங்கத்துரை சற்றுக் கறுப்பு. புஷ்பாவோடு நிற்க வைத்தால் உயரம் கூடக் குறைச்சலாகத் தெரியும். அத்தனை லட்சணமான முகம் என்றும் சொல்ல முடியாது. ஆனாலும் புஷ்பா ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் பெண் பார்த்து விட்டுப் போய்ச் சம்மதம் தெரிவித்ததும் காவேரியம்மாள் அவளைத் தனியாக அழைத்துப் போய்க் கேட்டாள். ''ஏம்மா, உனக்குப் பிள்ளையைப் பிடிச்சிருக்குதா....?''

புஷ்பா பதில் சொல்லாமல் தலை குனிந்து நிற்க, மீண்டும் அந்த அம்மாளே கேட்டாள்.

''என்னம்மா... தயங்காமல் சொல்லு...இந்த இடம் பிடிக்காட்டிப் போனால்—''

சட்டென்று இடைமறித்தாள் புஷ்பா.

''அதில்லேம்மா...பேசாமல் இருந்தால் பிடிக்க லேன்னா அர்த்தம்? நான்தான் முன்னாலயே சொன் னேனே....எந்த இடமானாலும் எனக்குச் சரி. எப்படிப் பட்ட மாப்பிள்ளையானாலும் கட்டிக்கறேன்னு. இவருக்கு என்ன குறைச்சல்...? கொஞ்சம் கறுப்பா இருக்காரேன்னு வேணாம்னு சொல்ல முடியும். அப்படிப் பார்த்தால் அப்பா கூடக் கறுப்புதானே...? நீ கட்டிக்கலை? சந்தோஷமா இல்லை....? சந்தோஷம்ன்றது நிறத்துல இல்லேம்மா. மனசுல இருக்குது. நான் தயங்கினதற்குக் காரணம் அதெல்லாம் இல்லேம்மா, அக்காவைப் பற்றித் தான்...''

''யாரு பெரியக்காவா?''

''ம்ஹூம் அவளுக்கென்ன குறைச்சல்? நல்லாத் தானே இருக்கா. ஜோதி அக்காவைச் சொல்றேன். பின்னால் தனக்குப் பார்த்த இடம். நான் கட்டிக்கிட்டதா அது வருத்தப்படக் கூடாது பாரும்மா...''

''இதப்பாரு புஷ்பா...இந்த விஷயத்துல என்னைவிட வேற யாருக்கும் அதிக வருத்தம் இருக்க முடியாது. நானே என் மனதைத் தேற்றிக்கிட்டு வேலை பார்க்கிறேன். யார் மாப்பிள்ளையையும் வேற யாரும் கட்டிக்கிட்டுப் போயிட முடியாது. அவுங்கவுங்களுக்குன்னு விதிச்சதுதான் நடக்கும். அன்னிக்கிப் பேசினதோடு நான் ஜோதியை அப்படியே விட்டுட்டேன்னா நினைக்கிறே? இதோடு நூறுதரம் கேட்டுப் பார்த்தாச்சு. எத்தனையோ புத்திமதி சொல்லியாச்சு. அவ கேட்கலைன்னா என்னால் மட்டும் என்ன செய்ய முடியும்...? அதனால இதையெல்லாம் மறந்துட்டு நீ சந்தோஷமா கல்யாணம் கட்டிக்கிட்டுப் போகணும். அவளுக்காக வருத்தப்பட்டு நீ உன் வாழ்க்கையைப் பாழாக்கிக்கக் கூடாது...''

''இல்லேம்மா...''

''அப்படின்னா அண்ணன் கிட்ட நிச்சயம் பண்ணிடச் சொல்லட்டுமா...?''



''சரிம்மா...''

''அடுத்த மாசம் இருபத்து ஏழாம்தேதி நாள் குறிக்க லாமான்னு கேட்கறாங்க. உனக்கு எந்த அசௌகரியமும் இல்லையே...?''

''ம்ஹூம், இல்லை.''.

''குறிச்சுடச் சொல்லலாமில்லே?''

''ம்...''

காவேரியம்மாள், சந்தோஷமாக நகர, புஷ்பா எழுந்து உள்ளே போனாள்.

# 1

புஷ்பாவின் கல்யாணத்திற்கு வந்த ஒருவர் விடாமல் ஜோதியிடம் சென்று துக்கம் மாதிரி விசாரித்து விட்டுப் போய் விட்டார்கள். சிலர் உரிமை எடுத்துக் கொண்டு புத்தி கூடச் சொன்னார்கள்.

''கல்யாணம் வேணாமின்னு சொல்லிட்டியாமே? என்ன பைத்தியக்காரத்தனம் இது? இப்படிக்கூட யாரும் சொல்லுவாங்களா? உன் தங்கச்சிபாரு, புத்திசாலித்தனமா உனக்கு வந்த இடத்தைத் தட்டிப் பறிச்சுக்கிட்டா. காலம் முழுசும் உங்கண்ணன் உன்னை வச்சுக் காப்பாத்துவான்னா நினைச்சுக்கிட்டிருக்கே? போடி பைத்தியம்!''

''அண்ணன் எதுக்கு மாமி என்னைக் காப்பாத்தணும்? நானே என்னைக் காப்பாத்திக்கறேன்.''

''இப்போ இளம் வயது. என்ன வயசாகுது உனக்கு? இருபத்து ஆறா ஏழா? இன்னும் நாலைஞ்சு வருஷம் போனால் நீயே உன் முடிவுக்கு வருத்தப்படப் போறே. இந்த மாதிரிப் பேசினவங்க எத்தனி பேரை நான் பார்க் கலை. பேசாமல் உங்கம்மாகிட்ட சொல்லிக் கல்யாணம் பண்ணிக்க. இல்லாட்டிப் போனால் பின்னால நீ தான் ரொம்பக் கஷ்டப்படுவே.''

''இப்பவே நீ செய்தது சரியில்லே ஜோதி. அக்கா இருக்க தங்கச்சியைக் கட்டிக் கொடுத்தது ரொம்பத் தப்பு. உங்கம்மாவுக்கு இப்படிச் செய்ய எப்படித்தான் மனசு வந்துச்சோ, தெரியலை. என் பெண்ணானால் நான் செய்திருக்க மாட்டேன். இனிமேல வரன் தேடறதுன்னாக் கூட கஷ்டம்தான். யாரும் சுலபமா வர மாட்டாங்க. தங்கச்சிக்குக் கல்யாணமாயிருச்சா? ஏன் அக்காளுக்கு ஆகலைன்னு கேள்வி மேல் கேள்வி கேட்பாங்க. எல்லா வித சந்தேகமும் படுவாங்க. எல்லாம் தெரிந்தும் உங்கம்மா இப்படிச் செய்திட்டாளே. இப்பக்கூடப் பரவாயில்லை. இந்தக் கல்யாணம் முடிந்த சூட்டோடு சூடாக உன் கல்யாணத்தையும் முடிச்சுடச் சொல்லு. என்ன?''

ஜோதி பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தாளே தவிர உள்ளுக்குள் லேசாய்க் கலக்கம் ஏற்பட்டது. முதல் முறையாகத் தான் செய்தது தப்புதானோ என்கிற எண்ணம் வந்தது. கல்யாணத்திற்கு வந்திருந்த இத்தனை பேர் பார்வைகளும் ஒரு மாதிரித் தன் மேல் பதிந்தது நினைவுக்கு வந்தது. ரகசியமாக அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டது ஞாபகத்தில் பதிந்தது.

''இவ பெண்ணுக்கு அக்காளாம்! இன்னும் கல்யாணமாகலேன்னாங்க.''

''ஏன் சித்தி? என்ன விஷயமாம்?''

''யாரு கண்டாங்க? இந்தக் குப்பை யெல்லாம் கிளறிட்டிருந்தால் என்ன வருமோ?''

''இல்லீங்க, அது டீச்சரா வேலை பார்க்கிற இடத்துல எட்மாஸ்டரு ஒருத்தரு இருக்காராம். அவருகூடத் தொடர்பு வச்சிட்டிருக்காம்.''

''அடக் கண்றாவியே. அதான் கல்யாணம் வேணான்னது போல இருக்கு.''

இவற்றில் ஓரளவு ஜோதியின் காதுகளையும் எட்டின. ''அடிப் பாவிகளா?'' என்று குமுறிக் கொண்டிருந்தபோது தான் மாமியும் பெரியம்மாவும் தைரியமாக அருகில் வந்து



புத்தி சொல்லிவிட்டுப் போக,மெதுவாக யோசிக்க ஆரம்பித்தாள் அவள். அதற்கு மேல் கல்யாணச் சத்திரத்தில் இருக்கப் பிடிக்காதவளாக மெல்ல நழுவி வீட்டிற்கு வந்தாள். யாருமற்ற வீட்டில் தனியாகப் படுத்துக் கொண்டு யோசித்த போது சற்றே பயம் ஏற்பட்டது. தான் கல்யாணம் செய்து கொள்ளாமல், தங்கையைச் செய்து கொள்ளச் சொன்ன காரணத்தினாலேயே, தன் நடத்தையில் களங்கம் கற்பித்து, இல்லாத பழியெல்லாம் சுமத்தி விடுவார்களோ என்று தோன்றிற்று. இதைத்தான் அம்மா அன்று திரும்பத் திரும்பத் தன்னைத் தனியாக அழைத்துப் போய்ச் சொன்னாளா?

எவ்வளவு தூரம் சொன்னாள் அம்மா. 'வேணாம்டி. கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லாதே. ஒரு பொண்ணு தனியா வாழறது கஷ்டம். என் காலத்துக்கு அப்புறம் உனக்கு ஆதரவு இருக்காது. மணி உனக்காக ஒண்ணும் செய்ய மாட்டான். இப்பவே உனக்கும், அவனுக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகலை. அவனுக்குன்னு ஒருத்தி வந்துட்டா இன்னும் மாறிப் போயிடுவான். என்ன தான் கோமதி அண்ணன் பொண்ணுன்னாலும் அப்படியே இருப்பாள்னு நினைக்காதே. கல்யாணம் ஆகாமல் கூடவே வீட்டில் இருக்கும் நாத்திக்கு மதிப்பு கிடைக்காது. கல்யாணியும், புஷ்பாவும் கௌரவமா வந்திட்டுப் போகும் போது நீ ஒதுங்கி நின்னா எனக்கு இன்னும் கஷ்டமாக இருக்கும். அதுவுமில்லாமல் உலகம் சும்மா இருக்காது. நீ கல்யாணம் வேணாமின்னு நிக்கறது புரியாமல் வீணாக உன் மேல் கதை கட்டி விடும். நீ நினைக்கிற மாதிரி வாழ்க்கை அத்தனை சுலபமானதில்லை.''

அப்போது அவள் அம்மாவைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள். வெறுமனே பூச்சி காட்டுவதாக நினைத்தாள். எப்படியாவது தன்னைக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைக்கப் பயமுறுத்தல் வார்த்தைகளைச் சொல்வதாக அலட்சியப் படுத்தினாள்.

ஆனால் இப்போதுதான் எல்லாம் தெரிந்தது. அவை பயமுறுத்தல் வார்த்தைகள் இல்லை என்பதை உணர முடிந்தது. அனுபவம் அவளை பேச வைத்திருக்கிறது. அகம்பாவம் தன் கண்களை மறைத்திருக்கிறது என்பது புரிய, மெல்ல அழத் தொடங்கினாள். அழுகை பெரிதாகி கேவல் கேவலாக வெளிப்பட்டு, சிறிது நேரத்திற்குப் பின் அடங்க ஆரம்பித்த போது, நிதானமாகச் சிந்திக்கும் சக்தி ஏற்பட்டது.

இனி என்ன செய்வது? கல்யாணம் வேண்டாமென்று இத்தனை பிடிவாதமாகப் பேசி அலட்சியப் படுத்திய பின் எப்படிப் போய் மீண்டும் கல்யாணப் பேச்சை எடுக்க முடியும்? எந்த முகத்தோடு கேட்க முடியும்? அதை விட கொஞ்ச நாட்கள் பேசாமல் இருந்து பின்னர் அந்தப் பேச்சை எடுத்தால் என்ன?

அதுதான் சரி என்று தோன்றிற்று. ஓரிரு மாதங்கள் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் இருந்து பின்னர் மெல்ல அம்மாவிடம் சொல்ல வேண்டும். எப்படியும் மணியின் கல்யாணத்திற்கு முன் தன் கல்யாணத்தை நடத்திக் கொண்டு விடவேண்டும் என்கிற திடமான முடிவில் அப்படியே தூங்கிப் போனாள்.

ஆனால் ஜோதி நினைத்த மாதிரி, புஷ்பாவின் கல்யாணம் முடிந்த உடனே அம்மா ஓடிவந்து அவள் கல்யாணத்தைப் பற்றின பேச்சு எதையும் எடுக்கவில்லை. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகியும் ஜோதி என்கிற பெரிய பெண்ணிற்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்பதையே மறந்து போனவளாக நடந்து கொண்டாள். பெரியக்கா கல்யாணி தன் வீட்டுக்காரருடன் வருவதும், புஷ்பா கணவருடன் வருவதுமாக வீடு அமர்க்களப்பட்டது. இனிப்பும், தின்பண்டங்களுமாக நிறைந்து போயிற்று. சிரிப்பும், பேச்சுமாய் எதிரொலித்தது. பள்ளிக்கூடம் முடிந்து நோட்டுப் புத்தகங்களைத் திருத்தி வைத்துவிட்டு களைப்பும், வெறுப்புமாக வீட்டுக்குள் நுழைகிறபோது



எல்லோருமாகக் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். சில சமயம் அந்தக் கூட்டத்தில் மணியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெரிய மாமாவின் பெண் கோமதியும் இருப்பாள். இப்போதே அவளைத் தங்களில் ஒருத்தியாக அங்கீகரித்து விட்ட திருப்தியும், சந்தோஷமும் அவர்களின் முகங்களில் தெரியும். ஆனால் ஜோதி உள்ளே நுழைவதைப் பார்த்த உடனேயே சட்டென்று பேச்சும் சிரிப்பும் மறையும். இந்த சந்தோஷங்களில் உனக்கு எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்கிற மாதிரி நடந்து கொள்வார்கள். முதலில் காபி கலக்கிற சாக்கில் காவேரியம்மாள் எழுந்ததும் கூடவே ஒவ்வொருவராகக் கலைந்து போவார்கள். ஒப்புக்குக் கல்யாணியும், புஷ்பாவும் மட்டும் ''வா ஜோதி!'' என்று கூப்பிடுவார்கள். மெலிதாய்த் தயங்கியபடியே ஒரு புன்னகை வெளிவரும். பின் மெல்ல எழுந்து நகர்ந்து விடுவார்கள், 'இது கல்யாணமானவர்கள் கூட்டம். இதில் உனக்கு இடமில்லை' என்பதாக அவர்களின் செய்கை வெளிப்படும்.

கோமதியும் கல்யாணமாகாதவள் தானே என்று நினைத்தால் அவளுக்குத்தான் எப்போதோ நிச்சயப்படுத்தியாகி விட்டதே இன்னும் இரண்டு மூன்று மாதம் போனால் அவள் மணியின் மனைவி என்றுதான் பதில் வரும் என்பது இவளுக்குத் தெரியும்.

அவள் மணியின் மனைவியாக வீட்டிற்குள் நுழைவதற்கு முன் தான் ஒரு மனைவியாக வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்கிற எண்ணம் உறுதிப்பட அதற்கு மேலும் தாமதிக்கக் கூடாது என்பதால் அன்று அம்மாவிடம் பேசிவிடுகிற முடிவுடன் அவள் வீட்டிற்குள் நுழைந்தபோது கூடத்தில் மாக்கோலம் போடப்பட்டு விரிக்கப்பட்டிருந்த பாய்களிலும், ஜமுக்காளத்திலும் நிறையப் பேர்கள் உட்கார்ந்திருந்தனர். ஐயர் ஒருவர் எதையோ எழுதிக் கொண்டிருக்க எதிரில் பெரிய கரையிட்ட பட்டுப் புடவையில் மாமியும், சரிகை வேஷ்டியில்

மாமாவும் நாத்தனாரிகளும் அமர்ந்திருந்தனர். சற்றுத் தள்ளித் தலை நிறையப் பூவும், நகைகளுமாகக் கோமதி. அருகிலேயே மாப்பிள்ளைத் தோற்றத்தில் மணி இருந்தான். பெரியக்காவும் புஷ்பாவும், அவர்களின் கணவரும் ஓடி ஓடி வந்திருந்தவர்களை விசாரிக்க, ஒரு வினாடி ஜோதிக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டில் என்ன விசேஷம் என்று தெரியாமல் தடுமாறினாள். காலையில் பள்ளிக்குப் புறப்படுகிற போது கூட அம்மா ஒன்றும் சொல்லவில்லை என்கிற எண்ணத்தில் நடையில் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே நுழைந்ததும் மாமா மட்டும் அவளைப் பார்த்து, "வாம்மா!" என்றார். மாமி வெறுமனே புன்னகை செய்தாள். ஒரு தட்டு நிறையக் காபி டம்ளர்களை ஏந்திக் கொண்டு வந்த புஷ்பா ஒரு டம்ளரை எடுத்து அவளிடம் நீட்டி, "காபி சாப்பிடு, ஜோதி!" என்று சிரிக்க, மறுக்க முடியாமல் இவள் டம்ளரை வாங்கிக் கொண்டாள். 'என்ன நடக்கிறது இங்கே' என்ற நெருடல் குறையாமல் வேண்டா வெறுப்பாகக் காபி குடித்து முடித்த சமயம் அவளுக்குப் பதில் சொல்கிறவராக அய்யர் எழுதினதைப் படிக்கத் தொடங்கினார்.

"லக்னப் பத்திரிகையைப் படிக்கிறேன், கேட்கறேளா?"

அவர் படிக்கப் படிக்க மணிக்கும், கோமதிக்கும் கல்யாணத்திற்கு நாள் குறித்திருப்பதாகத் தெரிய வந்தது. அது நிச்சய தாம்பூலம் என்பதும், அம்மாவும் மாமாவும் தாம்பூலம் மாற்றிக் கொள்கிறார்கள் என்பதும் புரிய வந்தது. கல்யாணத்திற்கு இன்னும் எண்ணி முப்பதே நாட்கள், ஒரே மாதம்தான் இருக்கிறது என்கிற உண்மை சட்டென்று பிடிபட, எல்லோரும் சேர்ந்து வேண்டுமென்றே தன்னைப் பழி வாங்குவதாகவும், அலட்சியப் படுத்துவதாகவும், ஒதுக்கித் தள்ளுவதாகவும் உணர்ந்து மிகப் பெரிய ஏமாற்றத்தில் துக்கம் நெஞ்சைப் பந்தாக அடைக்க அதை மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக் கொள்ள முயன்றாள் அவள்.



# 5

இன்னும் ஒரே மாதத்தில் கல்யாணம் என்பதால் கல்யாணியும் அவள் கணவனும் குழந்தைகளும் அங்கேயே தங்கிவிட்டார்கள். புஷ்பாவும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தன் வீட்டிற்குப் போய் எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பினாள். அவளது கணவன் தினமும் மாலை நேரத்தில் வந்து அவளை எங்காவது வெளியில் அழைத்துக் கொண்டு போனான். வெளிர் நீல பியட் காரில் அவன் வந்து இறங்குவதால் மதிப்பு அதிகமாக இருந்தது. ஓடி ஓடி விசாரித்தார்கள். ஸ்பெஷல் காபி கலந்து தந்தார்கள்.

"மாப்பிள்ளை, இன்னிக்கு இங்கதான் சாப்பாடு. சாப்பிட்டுத்தான் போகணும்!" என்று கெஞ்சினார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கிறபோது ஜோதிக்கு நெஞ்சை அடைத்தது. இது தனக்கு வர வேண்டியது. தான் விட்டுக் கொடுத்தது என்று தோன்றி கண்களைக் கலங்க வைத்தது. தன்னை விட்டு விட்டு அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்வது தெரிய வந்தது. எல்லோரும் போய்ப் புடவை எடுத்தார்கள். நகை ஆர்டர் பண்ணினார்கள். எவர்சில்வர் கடைக்குள் நுழைந்து வெளி வந்தார்கள். எதற்கும் இவளைக் கூப்பிடவில்லை. இவளைப் பொருட்படுத்தவில்லை. வாங்கிக் கொண்டு வந்தவைகளை ஒருத்தி காட்டுகிறபோது இன்னொருத்தி சொல்வாள்.

"ஜோதிக்கு இதெல்லாம் என்ன தெரியும்? அவகிட்ட அபிப்பிராயம் கேட்டாள் என்ன சொல்வாள்?"

அந்தப் பதிலின் அடி நெஞ்சைப் பலமாகத் தாக்கி இவளைச் சுருளச் செய்யும். கல்யாணமாகாத ஒரே காரணத்தினால் மனுஷியே இல்லை போல் ஒதுக்கி

வைக்கப்பட்டிருக்கும் தன் நிலை உணர்ந்து அதற்கு மேலும் தாங்க முடியாதவளாக எழுந்து அம்மாவிடம் ஓடினாள். உள்ளே மாப்பிள்ளைகளுக்காகத் தனியாகச் சமைத்துக் கொண்டிருந்த காவேரியம்மாள் இவள் வரவைக் கவனிக்காததால் இவளே சற்று அழுத்தமாகக் கூப்பிட அவள் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன?''

''உன்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''பேசேன்?''

''இங்க இல்லை, தனியாகப் பேசணும்.''

''அப்படின்னா கொஞ்சம் இரு. புஷ்பா வீட்டுக்காரருக்காகக் கீரைத் துவட்டல் செய்துட்டிருக்கேன், முடிச்சுட்டு வந்துடறேன்.''

சட்டென்று உடம்பு ரத்தம் முழுதும் தலைக்கு ஏறின உணர்வில் குரலை உயர்த்திக் கத்த ஆரம்பித்தாள் ஜோதி.

''புஷ்பா வீட்டுக்காரருமாச்சு, மண்ணாங்கட்டியுமாச்சு. நான் போட்ட பிச்சையில் வாழறவங்க, இப்போ என்னைப் பார்க்கா அலட்சியம் செய்யறீங்க. நான் விட்டுக் கொடுக்காட்டிப் போனால் கல்யாணமாகி இருக்குமா அவளுக்கு? இந்த மாதிரி வீட்டுக்காரர் பெருமையடிச்சுக்க முடியுமா? கார்ல ஏறிக்கிட்டு சினிமா, டிராமான்னு சந்தோஷமா ஊர் சுற்ற முடியுமா? நான் செய்ததை மறந்திட்டு இன்னிக்கு ஜோதியா, அவளுக்கு என்ன தெரியும்னா பேசறீங்க?''

பயந்துபோன காவேரியம்மாள் அவளைச் சமாதானப் படுத்துகிற முயற்சியில் இறங்கினாள்.

''ஷ். அவரு காதுல விழப் போவுதுடி. கத்தாதே!''

''விழட்டுமே. நல்லா விழட்டும். விழணும்னுதானே நானும் கத்தறேன்.''

''உனக்கென்ன பைத்தியம் பிடிச்சுடுச்சா ஜோதி? நீதானே கல்யாணம் வேணாம்னு பிடிவாதம் பிடிச்சே.



அப்பவே நான் எவ்வளவு தூரம் புத்தி சொன்னேன் கேட்க மாட்டேனுட்ட. அதுக்கப்புறம் தானே நான் அவளுக்கு முடிச்சேன்?''

''அது சரி. நான் வேணாம்னு சொன்னது உனக்கும் வசதியாகப் போச்சு-இல்லே?''

அயர்ந்து போய்க் காவேரியம்மாள் அவளைப் பார்த்தாள்.

''என்னடி இப்படிப் பேசற?''

''பின்னே, வேற எப்படிப் பேசணும்னு எதிர்பார்க்கிறே? ஏம்மா, நான் தான் ஏதோ வேகத்துல வேணாம்னு சொல்லிட்டா அப்படியே விட்டுடறதா? உடனே மட மடன்னு பின்னைக்கு நிச்சயம் செய்துடறதா? அவளுக்கும் கல்யாணமாயிடுச்சுன்னா அதுக்கப்புறம் என்னை யாரு கட்டிப்பாங்க?''

''என்ன, என்ன! நீ கல்யாணம் பண்ணிக்கிறதாகவா சொல்றே?''

''ஆமாம்.''

''நிஜமாகவாடி?'?

''சத்தியமா, அதுவும் மணியின் கல்யாணத்துக்கு முன்னால் மாப்பிள்ளை பார்த்து என் கல்யாணத்தை முடிக்கணும்னு சொல்றேன்.

''என்னது! அவனுடைய கல்யாணத்துக்கு முன்னாலியா? அது எப்படி முடியும்? அவன் கல்யாணத்துக்கு இன்னும் ஒரு மாசம் கூட இல்லையே?''

''அது என்ன செய்வியோ, தெரியாது. என் கல்யாணத்தை முடிச்சுட்டு அவனுக்குச் செய்து வை.''

அதைக் கேட்டுக் கொண்டே வந்த மணியின் முகம் வெந்தது. உதடுகள் அசங்கி வார்த்தை உஷ்ணமாக வெளிவந்தது.

''இப்போ என் கல்யாணத்தை நிறுத்தணும்னு கங்கணம் கட்டிட்டு வந்து நிக்கறியா?''

"நான் ஒன்னும் உன் கல்யாணத்தை நிறுத்தணும்னு வரலை. அதுக்கு முன்னால எனக்குச் செய்துவைன்னு கேட்கத்தான் வந்தேன்."

"திடீர்னு இப்போ அதுக்கு என்ன அவசரம் வந்தது?"

"அப்புறம் எனக்குக் கல்யாணமே ஆகாதுன்னு தோணுது."

"இப்பத்தான் அது புத்திக்கு எட்டிச்சோ, அம்மாவும் நானும் சொன்ன போது எட்டலையோ?"

"இப்பத்தான் எட்டிச்சின்னு வச்சுக்க."

"சரி, ரொம்ப சந்தோஷம். இப்போ நாங்க என்ன செய்யணும்னு சொல்ற?"

"வேற ஒன்னும் செய்ய வேணாம். என் கல்யாணத்தை முடிச்சிட்டு நீ பண்ணிக்கன்னு சொல்றேன்."

"அது நடக்காத காரியம். தாம்பூலம் மாற்றி, நாள் குறிச்சு பத்திரிகை அச்சடிக்கக் கொடுத்தப்புறம் கல்யாணத்தை நிறுத்துன்னா எப்படி முடியும்...?"

"உன்னை யாரு கல்யாணத்தை நிறுத்தச் சொன்னது? அதுக்கு முன்னால எனக்கும் மாப்பிள்ளை பார்த்து முடின்னுதானே கேட்கறேன்!"

"மாப்பிள்ளை கடைல விக்கிறதாக நினைப்பா உனக்கு? வாங்கிக் கொண்டு வந்து பந்தல்ல உட்கார வச்சிட முடியுமா?"

"அப்படி வாங்க முடியுமனால் நான் ஏன் உன்கிட்ட கேட்கறேன்? நானே வாங்கிக்கொண்டு வந்து முடிச்சுக்கிட மாட்டேனா?"

"இந்தத் திமிர்தான் உன்னை இப்படி நிற்க வச்சிருக்கு. இதப் பாரு. இனிமேல் உன் கல்யாண விஷயத்துல நான் தலையிட மாட்டேன். இவ்வளவு பேசற உனக்கு மாப்பிள்ளையா தேடிக்கத் தெரியாது? ஒரு மாப்பிள்ளை என்ன, ஒன்பது மாப்பிள்ளை தேடிப்பாயே!"

அவன் முடிப்பதற்குள், "டேய், என்னடா சொன்னே...?" என்று யாரும் எதிர் பார்க்காத வகையில்



அவன் கன்னத்தில் பளாரென்று ஓர் அறை அறைந்தாள் ஜோதி. அதில் ஒரு வினாடி ஆடிப் போய் நின்றாலும் மறு வினாடியே ஆக்ரோஷத்திலும் ஆத்திரத்திலும் தூண்டப் பட்ட மணி, "என்னையா கை நீட்டி அடிக்கிறே...?" என்ற கத்தலுடன் அவள் தலை முடியைப் பிடித்திழுத்து, முகத்திலும், முதுகிலும் அறைய ஆரம்பிக்க காவேரியம் மாளும், கல்யாணியும், புஷ்பாவும், புது மாப்பிள்ளையும் ஓடி வந்து தடுத்து ஜோதியை அவனது பிடியிலிருந்து அகற்றினர். அவள் அவமானத்தினாலும், இயலாமையி னாலும் முகத்தை மூடிக்கொண்டு அழ,

கணி இன்னமும் ஆவேசம் அடங்காதவனாகக் கத்தினான்,

"கல்யாணமா கேக்குது உன் மூஞ்சிக்கு? எவன் வந்து கட்டிப்பான்னு நினைக்கிறே? வந்த வரனையெல்லாம் அகம்பாவத்திலும், சம்பாதிக்கிற திமிரிலும் தட்டிக்கழிச் சிட்டு இப்போ வந்து நிக்கறியா? இனிமேல் நான் முன்ன நின்னு உனக்குக் கல்யாணம் செய்வேன்னு கனவு கூடக் காணாதே! நான் செய்யாத வேலையை அம்மாவும் செய்ய மாட்டாங்க. அக்காவும், தங்கச்சியும் செய்ய முன் வர மாட்டாங்க. எப்படி நீ செய்துக்கறேன்னு நானும் பார்த்துடறேன்."

திமிறிக் கொண்டு ஓடி ஓடி வந்து அவன் பேச 'டேய்! நீ போடா' 'வாங்கண்ணா நீங்க...' 'மணி சும்மா வா மணி' என்று அம்மாவும் கல்யாணியும், புஷ்பாவும் கைகளைப் பிடித்து இழுத்ததற்கு அடங்காதவன்,

"என்ன சார் நீங்க, வாங்க சார்," என்ற மாப்பிள்ளையின் குரலுக்குக் கட்டுப்பட்டு முன் அறைக்குப் போக-

வீட்டின் அத்தனை சந்தோஷமும் அடங்கி வெறுமை யான அமைதி ஆட்கொள்ள இரவு நீண்ட நேரம் வரை ஜோதியின் விசும்பல் சத்தம் மட்டும் தனியாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

# 6

அன்றைய நிகழ்ச்சிக்குப் பின்னர் ஜோதி வீட்டில் யாருடனும் பேசுவதைத் தவிர்த்தாள். யார் முகத்தையும் எதிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்தாள். ஒரு முறை கல்யாணியின் கணவன் வந்திருந்தபோது மட்டும் அவனிடம் அழுதுகொண்டே கேட்டாள்.

''நீங்க வெறும் அக்காள் வீட்டுக்காரராக மட்டும் இருந்திருந்தால், உங்க கிட்டே கேட்க மாட்டேன். மாமான்ற முறையிலேயும், எங்க வீட்டுல ஒருத்தரா வளர்ந்ததாலும், கேட்கறேன், என்னை இப்படி நிற்க வச்சிட்டு, இவங்க அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து மணியோட கல்யாணத்தை நடத்தறது சரியா?''

இவன் அவள் மீது பரிதாபப் படுவதைத் தவிர வேறு எது செய்யவும் வழியற்றவனாக நிதானமாகப் பேசினான்.

''இதற்கெல்லாம் காரணம் நீதானேம்மா! தப்பு உன் மேலதானே இருக்கு.''

''இருக்கட்டும் மாமா, ஏதோ பிடிவாதத்துல கல்யாணம் வேணாம்னு மறுத்திட்டேன். அது தப்புன்னு உணர்ந்து இப்போதான் செய்து வைக்கச் சொல்றேனே?''

''இப்போதானே சொல்லி இருக்கே. மணியோட கல்யாணம் முடிந்துதானே உனக்குப் பார்க்கணும்.''

''அவனுடைய கல்யாணமும் முடிஞ்சுடுச்சானால் எனக்கு எங்கேயிருந்து வரன் வரும் மாமா? அண்ணனுக்கும் தங்கைக்கும் ஆயிடுச்சே, இவளுக்கு ஏன் ஆகலைன்னு சந்தேகப்பட்டு ஆயிரம் கேள்விகள் கேட்க மாட்டாங்களா மாமா?''

''வாஸ்தவம்மா! இதையெல்லாம் நீ முன்னாடி இல்லே யோசனை செய்திருக்கணும்? கல்யாணத்துக்குப் பத்து நாள் இல்லே, இப்போ வந்து இப்படிக் கேட்டால் அது நல்லாவா



இருக்கும்? பொறாமையாலும், வயிற்றெரிச்சல் காரணமாகவும் நீ சுத்தறதாகத்தானே எல்லோரும் நினைப்பாங்க?''

அந்தப் பேச்சில் இருந்த நிஜத்தை உணர்ந்து அவள் அமைதியாகத் தலை குனிந்து நிற்க, அவனே அந்தப் பிரச்சினைக்குத் தற்காலிகமாக முடிவு ஒன்று சொன்னான்.

''கொஞ்சம் பொறுமையாக இரு ஜோதி. இந்தக் கல்யாணம் முடியட்டும். மணி கிட்டே பேசி நானே மாப்பிள்ளை பார்க்கச் சொல்றேன். கூடிய சீக்கிரம் உன் கல்யாணத்தையும் நடத்தி வைக்கச் சொல்றேன். என்ன?''

சரி என்று தலையாட்டுவதைத் தவிர அந்த நேரத்திற்கு ஜோதிக்கு வேறு வழி ஒன்றும் இருக்கவில்லை.

மணியின் கல்யாணத்திற்கு அவள் போகவில்லை. அதற்காகக் கல்யாணம் ஒன்றும் நின்று போய்விடவில்லை. பெரிய மாமா பணத்தை வாரி இறைத்து விமரிசையாக நடத்தி முடித்து விட்டார். கோமதியும் அவனும் கொடைக்கானல் ஹனிமூன் போய்த் திரும்பி வந்து கல்யாணச் சந்தடி அடங்கி நான்கு மாதங்களுக்கு மேல் ஆக—

ஜோதியின் கல்யாணப் பேச்சை யாருமே எடுக்கவில்லை.

கோமதி இரண்டு மாதங்கள் முழுகாமல் இருக்கிற சேதியில் வீடு மீண்டும் அமர்க்களப்பட்டதே தவிர—

இவளுக்கு மாப்பிள்ளை தேட யாரும் முன்வரவில்லை.

கல்யாணியின் கணவன்கூட வாக்களித்த மாதிரி ஒன்றும் செய்யவில்லை. மாறாக ஜோதி இல்லாத நேரத்தில் வீட்டிற்கு வந்து அவள் பள்ளிக்கூடம் விட்டுத் திரும்புமுன் போய்விடுகிறான்.

அப்படியும் ஒரு நாள் தலைவலி என்று ஜோதி அரை நாள் லீவில் வீடு திரும்பியபோது அவனிடம் மாட்டிக் கொள்ள,

"என்னம்மா செய்யறது? வரன் எதுவும் வரமாட்டேனுதே...நாமாகத் தேடிப் போகவும் முடியாதே! என்னை என்ன செய்யச் சொல்றே?" என்று கையை விரித்துவிட, அந்த நம்பிக்கையையும் இழந்து அவள் அம்மாவிடம் போய் நின்றாள்—

காவேரியும்—

"முன்னேயாவது நாலு இடத்துலேருந்து ஜாதகம் வந்தது. மனுசங்க வந்தாங்க. இப்போ யாரு வராங்க ஜோதி? யாருமே பெண் கேட்க முன் வரலயேம்மா. நானாகத் தேடிப் போனாலும் ஒரு மாதிரிப் பார்க்கறாங்களே. 'ஏங்க இத்தினி நாள் கல்யாணம் செய்யாமல் வச்சிட்டிருந்தீங்க? தங்கச்சிக்கு ஆயிடுச்சு, அண்ணனும் கல்யாணம் கட்டிக்கிட்டான். இவளுக்கு மட்டும் ஏன் ஆகலை'ன்னு கேள்வி மேல் கேள்வியா கேட்கறாங்க. என்னவோ அப்போ அந்தப் பொண்ணு கல்யாணம் வேணாம்னு சொல்லிருச்சு என்றாலும் சந்தேகமாகப் பார்க்கறாங்களே அம்மா."

மௌனமாய் வாய் மூடித் திரும்பிய ஜோதி இன்னும் நாலைந்து மாதங்கள் பார்த்துவிட்டுப் பின்னர் அம்மாவிடம் சொன்னாள்.

"ரெண்டாம் தாரம்னாலும் பரவாயில்லேம்மா. எங்கேயாவது பாரும்மா."

"என்னது! ரெண்டாம் தாரமாகவா?"

"இப்படி எல்லோருக்கும் அலட்சியமாக நிக்கறதுக்கு அது தேவலைம்மா."

தலை குனிந்து லேசாய்க் கண் கலங்க நின்ற காவேரியம்மாள்,

"சரிம்மா, பார்க்கறேன்" என்றபோது குரல் கரகரத்தது. மகளை நிமிர்ந்து பார்க்காமல்—பார்க்கிற சக்தியற்றுச் சடாரென்று திரும்பிச் சமையலறைக்குள்போக...



ஜோதி பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பினாள்.

அம்மாவிடம் அதைச் சொல்லியும் ஐந்தாறு மாதங்களுக்கு மேல் ஆயின. கோமதி தன் குழந்தைக்குத் தொட்டிலிட்டு சரவணன் என்று பெயரிட்டாள். அதற்கு வீடு முழுதும் பெரிய மாமாவின் வீட்டிற்குக் கிளம்பிப்போயிற்று. அடுத்த பத்து நாட்களுக்கெல்லாம் புஷ்பாவிற்கு வலி எடுத்து பக்கத்தில் இருந்த மிஷன் ஆஸ்பத்திரியில் சேர்த்துப் பெண் குழந்தை பிறந்தது. ஏழாம்நாள் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். பெரிய மாமா தன் பேரனுக்குப் போட்ட மாதிரி காவேரியும் இந்தப் பேத்திக்குக் கைக்குத் தங்கக் காப்பும், கழுத்திற்குச் சங்கிலியும் இடுப்பிற்கு அரைஞாணும் செய்து போட வேண்டுமென்று மணியிடம் சண்டை பிடித்தாள். மணி கல்யாணியின் குழந்தைக்குச் செய்தது போல் காப்பும், அரைஞாணும் மட்டுமே செய்துபோட்டான். இந்தக் குழந்தையையும் தொட்டிலில் போட்டுத் தெருவில் உள்ளவர்களை அழைத்து சந்தியா என்று பெயர் வைத்தார்கள்.

ஐந்தாம் மாதம் புஷ்பா கிளம்பி அவளது வீட்டிற்குப் போனதும், ஏழாம் மாதம் கோமதி குழந்தையுடன் வந்து சேர—

காவேரியம்மாளுக்குக் குழந்தையைக் குளிப்பாட்டவும், புட்டியில் பால் புகட்டவும், டாக்டர் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு ஓடவும், இதெல்லாம் அற்ற நேரத்தில் புஷ்பாவையும் அந்தக் குழந்தையையும் போய்ப் பார்த்துவிட்டு வரவும், திருவள்ளூர்போய் இரண்டு நாட்கள் கல்யாணியின் வீட்டில் தங்கி விட்டு வரவுமே நேரம் சரியாக இருக்க—

இரண்டாம் தாரமானாலும் மாப்பிள்ளை பார்க்கச் சொன்ன ஜோதியின் வேண்டுகோளைக் கவனிக்க நேரம் கிடைக்கவில்லை. அது பற்றி அவள் மறந்தே கூடப் போய் விட்டாள் என்றும் சொல்லலாம். போகிற இடங்களில்

யாராவது கேட்டால் மட்டும், ''என்னங்க செய்யறது. அதது காலா காலத்திலே ஆகணுங்க. அப்போ அந்தப் பொண்ணு மூர்க்கமா பிடிவாதம் பிடிச்சுக் கல்யாணமே வேணாம்னு சொல்லிடுச்சு. இப்போ தேடினாலும் இடம் கிடைக்க வில்லை. அதுக்கு என்னங்க செய்ய முடியும்? யார் தலை எழுத்தை யார் மாற்ற முடியும் சொல்லுங்க?'' என்று திருப்பிக் கேட்டு, அவர்கள் வாயை அடக்கி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

அம்மா வரன் தேடுவாளா, உடன் வேலை செய்கிற பள்ளி ஆசிரியைகள் பார்த்துத் தருவார்களா, அல்லது எங்காவது வானத்திலிருந்து யாராவது ஒருவன் வந்து குதிக்க மாட்டானா என்கிற ஏக்கத்திலும், ஏமாற்றத்திலும் யாரிடமும் எதையும் வெளிப்படுத்த இயலாத சோகத்திலும் திசையைத் தவற விட்ட பறவை மாதிரி உள்ளுக்குள்ளேயே அலைந்து உடல் இளைத்து, முன் தலை முடிகள் நரைக்கத் தொடங்கி இருபத்தெட்டு வயதில் முப்பத்தெட்டு முதுமையுடன் பள்ளிக்கூடம் போவதும் வீட்டிற்குத் திரும்புவதுமாக என்றாவது ஒருநாள் தனக்கும் கல்யாணமாகும் என்கிற நம்பிக்கையைக் கைவிடாதவளாக இன்னமும் ஓர் எதிர்பார்ப்பில் காலத்தைத் தள்ளிக் கொண்டுதான் இருக்கிறாள் ஜோதி.

முற்றும்

18647
3479156